# வல்வைப் புயல்



வல்வை ஆனந்தன்





# வல்லைவப் புயல்

- வீரம் நிறைந்த மண் வீறு கொண்ட வரலாறு

வல்வை ஆனந்தன்

N.Anantharaj
B.A (Hons),M.A.
Dip-In-Edu, Dip-In Journ
SLPS, SLEAS

வெளியீடு

ekuruvi.com

# நூல் விபரப்பட்டியல்

நூலின் பெயர் : வல்லைப் புயல்

ஆசிரியர் : வல்லை ஆனந்தன்

முகவரி : தெணியம்பை, வல்வெட்டித்துறை, சிறிலங்கா

மின்னஞ்சல்: ekuruvi@gmail.com

பதிப்புரிமை : ஆசிரியருக்கே

வகை : விவரணச் சித்திரம் -வரலாற்று நூல்

பதிப்பு : முதலாம் பதிப்பு 20.01.2015

பக்கங்கள் : 165

அளவு : 1/8 டிமை ( 14 cm X 21 cm )

அட்டை வடிவமைப்பு : திரு. கருணா வின்சன்ற், மோகன் ஆட்ஸ்

வெளியீடு : ekuruvi.com கனடா

அச்சுப் பதிப்பு: JJ Print, Canada

ISBN : 978-955-96845-9-6
Bar Code No. : 9 789559 684596

சங்க காலத்தில் இருந்து வாழ்ந்த அரசர்களினதும்,சாதாரண பாமர மக்களினதும் வாழ்க்கை முறைகள் எவ்வாறு இருந்தன. அவர்களிடையே இருந்த காதல் உணர்வுகளையும் வீரத்தின் வெளிப்பாட்டையும் இன்று எத்தனையோ ஆண்டுகளின் பின்னர், நாம் அறிந்து கொள்ளவும், எமது இனத்தின் வரலாறையும் தெரிந்து கொள்ளவும், அக்காலத்தில் வாழ்ந்த புலவர்களும் எழுத்தாளர்களும் அன்றைய வாழ்க்கை முறையை ஆவணப் படுத்தியமையினால், இன்றைய சந்ததி அவற்றை அறிந்து எமது பண்டைய இலக்கியப் பாரம்பரியத்தைத் தெரிந்து கொள்ளமுடிகின்றது. அந்த வகையில் 1991 ஆம் ஆண்டு எமது மண்ணில் இடம் பெற்ற சோக வரலாறுகள் இன்னும் நூறு ஆண்டுகளுக்குப் பின்னரும், “ஒப்பரேசன் வல்வைப்புயல்” மூலம், நிலைத்து நின்று எதிர்காலத்தில் இலக்கியம் படைப்போருக்கான ஒரு வழிகாட்டி நூலாகத் திகழ வேண்டும். **வல்லை ஆனந்தன்**

# காணிக்கை

வல்வெட்டித்துறையில் 1991 ஆம் ஆண்டு
ஜனவரி மாதத்தில் நான்கு நாட்களாக
இடம்பெற்ற சிறிலங்கா அரசாங்கத்தின்
விமானப் படையினரதும், கடற்படையினரதும்
மிலேச்சத் தனமான தாக்குதலில் பத்துக்கும் மேற்பட்ட
அப்பாவிப் பொதுமக்கள் அநியாயமாகக்
கொல்லப்பட்டனர். மதிய உணவின் பின்னரான
குட்டித் தூக்கத்தில் இருந்தவர்களையும்,
வகுப்பறைகளில் கற்றுக் கொண்டிருந்தவர்களையும்,
ஆலயங்களில் வழிபாடுகளை மேற்
கொண்டிருந்தவர்களையும், வீதிகளில் விளையாடிக்
கொண்டிருந்த சிறுவர்களையும் சற்றுமே
எதிர்பார்க்காத வகையில், ஒரு கணத்தினுள்
நூற்றுக்கணக்கான குண்டுகளை வீசிக் கொன்று
அழிக்க முயன்ற சிறிலங்கா அரசாங்கம்
"அகிம்சையைப் போதிக்கும் நாடு" என்று
வர்ணிக்கப்படுமானால் உண்மையான "அகிம்சை"
என்பதற்கு என்ன "அர்த்தம்" என்று புரியாது
தவிக்கும் நாகரிகமுள்ள உலக மக்களுக்கும்,
சிறிலங்கா இந்த அழிப்பு நடவடிக்கையில் தம்
உயிர்களை நீத்த அப்பாவிப் பொது மக்களுக்கும்,
தமது அவயவங்களை இழந்து இன்றும்
அல்லல்படும் மக்களுக்கும்,
தமது சொத்துக்களை இழந்து
ஏதிலிகளாக்கப்பட்டவர்களுக்கும்
இந்நூலைக்
காணிக்கையாக்குகின்றேன்.

# என்னுரை

வல்வெட்டித்துறையில் 1968 ஆம் ஆண்டில் இருந்து மேற்கொள்ளப்பட்டு வந்த பல்வேறு இராணுவ நடவடிக்கைகளின் ஒரு உச்சக்கட்டமாக,1991 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 20 ஆம், 21ஆம், 22ஆம், 23ஆம் திகதிகளில் ஸ்ரீலங்கா அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட "ஒப்பரேசன் வல்வைப்புயல்" என்ற முக்கூட்டு இராணுவ நடவடிக்கை அமைந்திருந்தது.

1949 ஆம் அண்டின் ஜெனிவா உடன்படிக்கையின் படியும்,1977 ம் ஆண்டின் கடப்பாடின் படியும், சர்வதேச மனிதாபிமானச் சட்டங்கள் போரின் போதும்,போரை ஒத்த சூழ் நிலையிலும் (War and war like situation) இயைபுடையதாகின்றன. அதன்படி ஹேக் விதிகளின் 25 ஆவது சரத்தின்படி, "நகரங்கள், கிராமங்கள், கட்டடங்கள், குடியிருப்புக்கள் மீது தாக்குதலோ, குண்டு வீச்சுககளோ எந்த வகையிலும் செய்லாகாது. போரில் ஈடுபடும் எந்த ஒரு தரப்பும் குடிமக்க ளையோ, குடி மக்ககளுடைய மக்களுக்குரிய சாதனங்களையோ (Civilians or civilian objects) தாக்குதலில் இருந்து தவிர்ப்பதற்கான எல்லாவிதமான முன்னேற்பாடுகளையும் செய்திருக்க வேண்டும்." (Additional protocol 1,Article 58)

இத்தகைய சர்வதேச சட்டங்களையும்,மனிதாபிமான சட்டங்களையும் மீறியுள்ள நிலையிலேயே ஸ்ரீலங்கா அரசாங்கம் வல்வெட்டித்துறையின் மீதும்,வல்வெட்டித்துறை மக்களின் மீதும் மிக மோசமான தாக்குதல்களை மேற்கொண்டிருந்தன என்பதற்குப் போதியளவு சான்றுகள் உள்ளபோதும் அவை எல்லாமே சர்வதேச அமைப்புக்களால் மூடிமறைக்கப்பட்டுவிட்டன.

உடல் ரீதியாகவும்,உள ரீதியாகவும் எமது மக்களின் மனோபலத்தைச் சிதைத்து அவர்களது வினைத்திறன் மிக்க செயற்பாடுகளை முடக்குவதில் அரசு வெற்றியடைந்தார் என்றால் அதுவுமில்லை.! அந்த வகையில் இலங்கை மக்களின் அபிவிருத்திக்கும், அடிப்படைத் தேவைகளுக்கும் பயன்படுத்தப்பட்ட வேண்டிய பல கோடிக்கணக்கான ரூபாக்களைக் கொட்டி ஆயுதங்களையும்,எரிகுண்டுகளையும், எறிகுண்டுகளையும் கொள்முதல் செய்து, வல்வெட்டித்துறையில் நான்கு நாட்களாக மேற்கொள்ளப்பட்ட விமானத் தாக்குதலில் அரசு சாதித்தது எதுவுமே இல்லை. ஆனால் எமது வரலாறுகளும் வாழ்ந்த வாழ்க்கை முறைகளும் எதிர்காலச் சந்ததியினர் அறிந்து கொள்ளும் வகையில் ஆவணப்படுத்தப்பட வேண்டும் என்பதற்காக, "வல்வைப்புயல்" என்ற எனது நூலை வெளியிட்டு வைக்கின்றேன்.

1991 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 20 ஆம் திகதியில் இருந்து 23 ஆம் திகதி வரை வல்வெட்டித்துறையில் இருந்து மக்களை ஒட்டு மொத்தமாக இடம் பெயருமாறு விமானங்கள் மூலம் துண்டுப் பிரசுரங்களை வீசி எறிந்து விட்டுப் போதிய அவகாசங்களை வழங்காது, மிலேச்சத்தனமாக வல்வெட்டித்துறையைத் தாக்கி அழித்த வரலாற்றை எவரும் மறந்து விட முடியாது.

இந்த மிலேச்சத் தனமான தாக்குதல்கள் முடிவடைந்து, வல்வெட்டித்துறை நகரமே உறைந்து போய் இருந்த நிலையில், திடீரென தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் அவர்களால், வல்வெட்டித்துறையின் பிரஜைகள் குழுவினர்,கடற்றொழில் சங்கத்தின் பிரதிநிதிகள்,சனசமுக நிலையங்களின் பிரதிநிதிகள், புத்திஜீவிகள் ஆகியோரைக் கொண்ட நூற்றுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் அழைக்கப்பட்டுஅவரால் வைக்கப்பட்ட ஒரு கலந்துரையாடலில், அவரைச் சந்தித்தோம்.அங்கு எங்கள் முன்னிலையில் அவர் உரையாற்றும் பொழுது, அவருடைய கண்கள் கலங்கிப்போய் இருந்ததை அவதானித்திருந்தோம். அவர் அங்கு குழுமியிருந்த பொது மக்கள் முன்னிலையில், குறிப்பிடும் பொழுது, “என்னைப் பழிவாங்க வேண்டுமென்பதற்காக எனது ஊரையும், உங்களையும் இப்படி வகைதொகையின்றி வதைத்திருக்கின்றார்கள்.... நாங்களும் இவர்களைப் போன்று அநாகரிகமான மனிதர்களாக இருந்தால், எங்களாலும் அப்பாவிச் சிங்கள மக்கள் மீதும் தாக்குதலை மேற்கொண்டிருக்கலாம். ஆனால் நாகரீகமுள்ள ஒரு இனத்தின் வழி வந்தவர்கள் என்பதால் அப்படியான மிலேச்சத்தனமான செயல்களில் இறங்கவில்லை... ஆனாலும், இது ஒரு தற்காலிகமான அவலம் விரைவில் இதற்கான முடிவைக் காண்போம்” என்று கூறி, என்னைத் தனியாக அழைத்து, வல்வைப் படுகொலைகள் புத்தகத்தைப் போன்று இந்தச் சம்பவத்தையும் ஒரு ஆவணமாக்கி வெளியிடுங்கள்” என்று கேட்டுக் கொண்ட பொழுது எனது நெஞ்சம் கனத்தது.

இதனை ஒரு சிற்நத வரலாற்று ஆவணமாக்கி, நான் எழுதிய “வல்வைப் புயல்” என்ற தலைப்பில் வெவ்வேறு உப தலைப்புக்களில், “உதயன்” பத்திரிகையில் தொடராக பதினைந்து நாட்கள் வெளியிடப்பட்ட பொழுது பலரதும் நெஞ்சை உருக்கி நெகிழவைத்தது என்பதை வாசகர்களின் பல நூற்றுக்கணக்கான கடிதங்கள் மூலம் அறிந்து என் மனமும் நெகிழ்ந்து போனது.

தமிழ் மக்களினது, போர்க்கால இலக்கியங்கள் பிற்காலத்து வரலாறுகளாக நிலைத்து நிற்கவேண்டும் ' என்ற நோக்கில் 1991 ஆம் ஆண்டு வல்வெட்டித்துறையில் தொடர்ச்சியாக நான்கு நாட்களுக்கும் உத்தியோக பூர்வமற்ற ஊரடங்குச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தி, வல்வெட்டித்துறை மக்களை அந்தந்த இடத்தில் இருந்து வெளியேற விடாது தடுத்துவிட்டு,அவர்கள் மீதும் அவர்களுடைய குடியிருப்புக்கள் மீதும் மூர்க்கத்தனமாக மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் நடவடிக்கையாக இருந்த

சம்பவங்களைத் தொகுத்து "ஒப்பிரேசன் வல்வைப்புயல்" என்ற பெயரில் "உதயன்" 16 நாட்களாக பத்திரிகையில் வெளிவந்த விடயங்களை மேலும் மெருகுபடுத்தி "வல்வைப்புயல்" என்ற நூலாக்கி உங்கள் கரங்களில் தந்திருக்கின்றேன். இந்நூலை வெளியிடுவதில் எல்லாவகைகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய என் உறவுகளுக்கும், இதனை வெளியிட்டு வைத்து சிறந்த ஆவணமாக்க உதவிய உதயன் பத்திரிகை நிறுவனத்தினருக்கும் எனது இதயங் கனிந்த நன்றி..!

அதேவேளை இந்த விவரணச்சித்திரத்தை நூலாக வெளியிட வேண்டுமென்ற இக்குருவி இணையத் தளத்தினருக்கும், எனது நண்பர்களுக்கும், இதற்கான அட்டைப் படத்தை வடிவமைத்துத் தந்த மோகன் ஆட்ஸ் அவர்களுக்கும், இதனை குறிகிய நாட்களுக்குள் அழகான முறையில் அச்சிட்டுத் தந்த கனடா ரொரன்றோ ஜெ. ஜெ பதிப்பகத்தாருக்கும் எமது நன்றிகள். இந்நூல் வெளியீடு தொடர்பாக விளம்பரங்களைச் செய்து உதவிய அனைத்து ஊடகங்களுக்கும் எனது நன்றி.

வல்வை ஆனந்தன் B.A.(Hons.). M.A.
Dip-In-Edu., Dip-In-Journalism
SLPS,SLEAS

# பொருளடக்கம்


| இல | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 01 | வல்வெட்டித்துறை வரலாற்றுப்பார்வை — ஒரு நோக்கு | 01 |
| 02 | ஸ்ரீலங்கா அரசின் எச்சரிக்கை | 10 |
| 03 | வல்வைப் பிரஜைகளின் பொறுப்பும் கடமையும் | 16 |
| 04 | வல்வைக் கல்வி மன்றத்தின் மீது குண்டு வீச்சு | 23 |
| 05 | இந்து ஆலயங்களை நோக்கியும் குண்டுத் தாக்குதல்கள் | 34 |
| 06 | சிவன் கோயிலின் மீதான திட்டமிட்ட தாக்குதல்கள் | 40 |
| 07 | மக்களின் ஒன்றுபட்ட சின்னமான சிறுவர் பூங்கா | 47 |
| 08 | வல்வையைத் தாக்கிய எரிகுண்டுகளும். எறிகுண்டுகளும் | 52 |
| 09 | முதலுதவித் தொண்டர்களின் மனிதாபிமானம் | 63 |
| 10 | முதல் நாள் மட்டும் 93 குண்டுகள் | 70 |
| 11 | போர் என்றால் போர் - பிரகடனம் | 81 |
| 12 | பிரிந்து நின்றவர்களை ஒன்றுபடுத்திய விவேகம் | 88 |
| 13 | சோரம் போகாது வீரம் வளர்த்த வல்வை | 92 |
| 14 | சிவஞானசுந்தரம் படுகொலை | 102 |
| 15 | தொடரும் இன அழிப்பு | 109 |
| 16 | கிறிஸ்தவ தேவாலயத்தின் மீதும் தாக்குதல் | 123 |
| 17 | அவலங்களுக்குள்ளாகும் ஆதிகோயிலடி | 127 |
| 18 | சிவகுருவித்தியாலயமும் முற்றாக அழிப்பு | 133 |
| 19 | வல்வையை வதைத்த அரசு சாதித்தது என்ன.? | 146 |
| 20 | ஸ்ரீலங்கா விமானப்படையால் ஏற்படுத்தப்பட்ட இழப்புக்களின் விபரம் | 163 |

# 01. வல்வெட்டித்துறை வரலாற்றுப் பார்வை... ஒரு நோக்கு

வளைகுடாவில் திடீரென அமெரிக்க இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டு பல அழிவுகளை ஏற்படுத்திய "பாலைவனப்புயல்" இராணுவநடவடிக்கையோ என யாரும் கற்பனை செய்து பார்க்க வேண்டாம். அந்த முக்கூட்டு இராணுவ நடவடிக்கையை விட ஸ்ரீலங்கா அரச படைகளினால் பிரகடனப்படுத்தப்பட்ட மிக மோசமான அழிவுப் போராக வல்வெட்டித்துறை மண்ணின் மீதும், மக்களின் மீதும் மேற்கொள்ளப்பட்ட முக்கூட்டு இராணுவ நடவடிக்கை அமைந்திருந்தது. ஒரே நாட்டில் சுயநிர்ணய உரிமையைக் கொண்டுள்ள ஒரு தேசிய இனத்திற்கு எதிராக, அதே நாட்டைச் சேர்ந்த அரச படைகளினால் மேற்கொள்ளப்பட்ட முற்றுகைப் போராக, உலக நாடுகளினால் "வல்வைப் புயல்" என வர்ணிக்கப்பட்ட ஒரு இராணுவ நடவடிக்கையையே இங்கு நீங்கள் பார்க்கப்போகின்றீர்கள்..!

வளைகுடாவில் மிகக் கொடூரமான முறையில் மேற்கொள்ளப்பட்ட "பாலைவனப் புயல்" இராணுவ நடவடிக்கையின் பொழுது, பல்லாயிரக்கணக்கான அப்பாவிப் பொதுமக்கள் அழிக்கப்பட்டுக் கொண்டிருந்தனர். இந்தக் கொடூரமான சித்திரவதைகளைக்கண்டு மனம் வருந்திய ஸ்ரீலங்காவின் ஜனாதிபதி, புனிதமான பௌத்த தர்மத்தைப் பின்பற்றும் நாட்டின், ஜனாதிபதி என்ற முறையில் அப்போதைய யூகோஸ்லவிய ஜனாதிபதி அலிகானுக்கு எழுதிய கடிதத்தில்,

> "இலங்கை ஒரு அகிம்சை நாடு. பௌத்த தர்மத்தை கடைப்பிடிக்கும் நாடு. அகிம்சையை உலகுக்குப் போதிப்பவர்கள்.. வளைகுடாவில் அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்படுவது எமக்கு மிகுந்த வேதனையை அளிக்கின்றது."

என்று குறிப்பிட்டதானது, உலகின் சமாதானத்தையும் அமைதியையும் விரும்பும் நாடுகளையும், அகிம்சா தத்துவததையும், புனிதமான பௌத்த தர்மத்தையும் களங்கப்படுத்துவது போல் அல்லவா அமைந்துள்ளது.!

மிகவும் கொடூரமான முறையில், நிராயுதபாணிகளாக இருந்த அப்பாவி மக்களை அவர்களின் குடியிருப்புக்களில் இருந்தும் ஒரே இரவில் வேரோடு இடம்பெயரச் செய்து விட்டு, அவர்கள் எழும்பி பாதுகாப்பான ஒரு இடத்தில் போய் இருப்பதற்கு முன்னரே கண்மூடித்தனமாகக் குண்டுகளை வீசிக் கொன்றழித்தும், அவர்களின் பூர்வீகச் சொத்துக்களை அழித்தும் கோர தாண்டவமாடிய அந்த முப்படைகளினதும் கூட்டு இராணுவ நடவடிக்கையாகவே "ஸ்ரீ லங்காவின் வல்வைப்புயல்" என்ற இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

ஆம்! வல்வெட்டித்துறை என்பது ஒரு சிறிய துறைமுக நகரமாகத் தொன்று தொட்டு விளங்கியதால், வல்வெட்டித்துறை, துறை முகத்தில் நங்கூரமிடப்பட்டிருந்த பாய்மரக் கப்பல்கள், 18 ஆம் நூற்றாண்டுகளில் இருந்தே, இலங்கை மக்களுக்குத் தேவையான பொருட்களை ஏற்றி இறக்கும் வர்த்தகத்தில் ஈடுபட்டு வந்தன. அது மட்டுமல்லாது, பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளுக்கு எதிராக இலங்கையை மீட்டெடுக்கும் அகிம்சைப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த சிங்களத் தலைவர்களான பிலிப் குணவர்த்தனா, போன்ற இடதுசாரித் தலைவர்களை அழிப்பதற்கான முயற்சிகளை பிரித்தானிய படைகள் மேற்கொண்டிருந்த பொழுது, அவர்கள் அத்தனை பேரையும் மிகவும் பாதுகாப்பாக வல்வெட்டித்துறையில் இருந்து, கப்பல்கள் மூலம், இந்தியாவுக்குக் கொண்டுபோய்ச் சேர்த்தமையினால், அவர்கள் உயிர் தப்பியமைக்கும் வல்வெட்டித்துறை மக்களின் கடலோடிப் பாரம்பரியமே காரணமாக இருந்தது.

வல்வெட்டித்துறை (Valvettiturai) - இலங்கையின் வடகிழக்குக் கரையில், யாழ்ப்பாண மாவட்டத்தில் அமைந்துள்ள நகரம். இது யாழ்ப்பாணத்தில் இருந்து வடக்கே 16 மைல் தூரத்திலும், கிழக்கே 9 மைல் தூரத்திலும் மேற்கே 5 மைல் தூரத்திலும், தென்னிந்தியாவில் இருந்து, தெற்கே கடல் மார்க்கமாக 30 மைல் தூரத்திலுமாக அமைந்துள்ள ஒரு துறைமுகப்பட்டினம். இதன் பரப்பளவு, ஒன்றே முக்கால் சதுர மைல்.

இலங்கையின் வடபாகத்தின் கடற்கரையோரத்தில், கிழக்கே ஊறணியில் இருந்து.மேற்கே ஊரிக்காடு வரையும் தெற்கே வல்வெட்டி, கம்பர்மலை கிராமங்களும் உள்ளடக்கப்பட்ட 250 ஏக்கர் விஸ்தீரணமுள்ளதாக இருந்த சிறிய பட்டினம், இங்குள்ள ஒவ்வொரு கிராமமும் தமக்கென்று சில பாரம்பரிய கலாசாரம், அரசியல் பண்பாடுகளைக் கொண்ட கதைகளையும் வரலாறுகளையும் தாங்கியுள்ளது.

இங்கு வசிப்பவர்கள் இலங்கைத் தமிழர்கள் ஆவர். 99 வீதத்திற்கும் அதிகமானவர்கள் இந்துக்களாகவும், ஏனையோர் கத்தோலிக்க மதத்தைச் சார்ந்தவர்களாகவும் இருக்கின்றனர். விவசாயம், கடற்றொழில், மற்றும் வணிகம் போன்ற தொழில் துறைகளில் ஈடுபாடு கொண்டவர்கள். இங்குள்ளவர்கள் பல நூற்றுக்கணக்கான பாய்க்கப்பல்களை வைத்திருந்ததால் அன்று வேதாரணியம், கோடியாக்கரை போன்ற பகுதிகளுடன் கப்பல் தொடர்புகளைப் பேணி வந்த போதும், இப்போது நிலவும் சூழ்நிலைகளால், இத்தொடர்புகள் மிகவும் குறைந்துள்ளன. இங்கிருந்தே, உள்ளூரில் பெறப்பட்ட வேப்ப மரங்களைக் கொண்டு, தயாரிக்கப்பட்ட “அன்னபூரணி அம்மாள்“ என்ற பாய்க்கப்பல், 1933 ஆம் ஆண்டில், அத்திலாந்திக் பெருங்கடலைக் கடந்து, அமெரிக்காவின் மசாசூசெட்சைச் சென்றடைந்தது.

வல்வெட்டித்துறை அன்று தொட்டு இன்று வரை பல்வேறு துறைகளிலும் சாதனை படைத்து, பெருமை பெற்ற ஊராக விளங்கியமையை வெளிநாட்டு அறிஞர்கள், வரலாற்று ஆய்வாளர்கள், மற்றும் ஆன்மீக வாதிகளினால் வெளியிடப்பட்ட கூற்றுக்களைக் கொண்டு புரிந்து கொள்ளலாம்.

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில், 1941 இல், தேசாதிபதியாக இருந்தவரும், வரலாற்று நூல் எழுத்தாளருமான றொபேட் நொக்ஸ் என்பவர், கடல் மார்க்கமாக நாடுகள் எங்கும் பயணம் செய்த வகையில், இலங்கைக்கும் வந்திருந்தார். அங்கு தங்கியிருந்த காலப்பகுதியில், இலங்கையின் புவியியல் பின்னணி, மக்களின் வாழ்க்கை முறைகள், பண்பாடு ஆகியவற்றை அறிவதற்கான வாய்ப்புகள் ஏற்பட்டது. அவர் ஒரு சிறந்த வரலாற்று எழுத்தாளராக இருப்பதால், அந்தக் காலப்பகுதியில் தனக்கு ஏற்பட்ட பயண அனுபவங்களைத் தொகுத்து, ஒரு நூலாக வெளியிட்டிருந்தார். றொபேட் நொக்ஸ், இலங்கையில் தங்கியிருந்த காலத்தில், கண்டி, மற்றும் மன்னார் மாவட்டத்தில் உள்ள அரிப்பு, யாழ்ப்பாணத்தில் உள்ள கரையோரக் கிராமங்களுக்கும் விஜயம் செய்த பொழுது, கடல் மார்க்கமாக வல்வெட்டித்துறை, துறை முகப்பட்டினத்திற்கும் வந்திருந்தார். அந்த ஊரின் அமைப்பு மற்றும் மக்களின் வாழ்க்கை முறைகள் பண்பாடுகள் ஆகியவற்றைப் பார்வையிட்டுச் சென்ற றொபேட் நொக்ஸ், வல்வெட்டித்துறையில் உள்ள பெண்கள் தொடர்பாக தனது அவதானத்தை வெளிப்படுத்தும் வகையில், தனது நாட் குறிப்பேட்டில், பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

“நான் இலங்கையின் பல பாகங்களுக்கும் சென்றிருக்கின்றேன் ஆனால் மற்றைய இடத்து மக்களை விட வல்வெட்டித்துறை மக்கள் நாகரிகத்திலும் மேம்பட்டவர்களாகவே விளங்குகின்றனர். வல்வெட்டித்துறைப் பெண்கள் பளபளக்கும் குடங்களில் நீர் அள்ளிக் கொண்டு, அழகாகவும் அடக்கமாகவும் செல்வதைப் பார்த்தால், இவர்கள் நாகரிகத்தின் சின்னங்கள் என்றுதான் சொல்ல வேண்டும்” (உதயன் : 30.12.1993)

இலங்கையில் அப்பொழுது தேசாதிபதியாக இருந்த சேர்.ஹென்றி பிளேக் (Sir Henry Blake) 1905 ஆம் ஆண்டில் வடக்கே உள்ள துறைமுகங்களைப் பார்க்க வந்தபோது, வல்வெட்டித்துறையின், துறைமுகத்திற்கும் விஜயம் செய்தபொழுது, மலைத்துப் போய் நின்று விட்டார். அந்த வருடம், நடைபெற்ற அம்மன்கோயிலின் சித்திரா பௌர்ணமித் தீர்த்தத் திருவிழாவின் பொழுது, வல்வெட்டித்துறை ஊறணித் தீர்த்தக் கடலில் மட்டும், 30 கப்பல்களுக்கு மேலாக, அழகிய வர்ணக் கொடிகள் பறக்க மிதந்து கொண்டிருந்தன. அக்கப்பல்களைப் பார்த்த தேசாதிபதி ஹென்றி பிளேக்,

“கொழும்பு, திருகோணமலைத் துறைமுகங்களைத் தவிர இவ்வாறான பெருந்தொகையான கப்பல்களை வல்வெட்டித் துறைமுகத்தைத் தவிர வேறு எந்தத் துறைமுகங்களிலும், நான் பார்க்கவில்லை”

என்று வல்வெட்டித்துறை "ரேவடிக்" கடற்கரை மைதானத்தில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் தெரிவித்தார்.

இந்திய சுதந்திரப் போராட்டத்தை முன்னின்று நடத்தி வந்த காந்தி அடிகள் நிதி சேகரிப்பதற்காகவும், மக்களை விழிப்பூட்டுவதற்காகவும் 1927 ஆம் ஆண்டு இலங்கைக்கு விஜயம் செய்தபொழுது யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளுக்கும் சென்று சொற்பொழிவுகளை நிகழ்த்தியிருந்தார். அப்பொழுது அவரும் அவருடைய குழுவினரும் வல்வெட்டித்துறைக்கும் வருகை தந்த பொழுது முத்துமாரி அம்மன் கோயில் வீதியில் வைத்து இந்திய சுதந்திர போராட்டத்திற்கான தமது ஆதரவைத் தெரிவிக்கும் வகையில் அவருக்கு வரவேற்பு அழித்து பணமுடிப்பும் வழங்கப்பட்டது. வல்வை மக்களால் அன்று ரூபா 870.25 வழங்கப்பட்டது. அவரது விஜயத்தை நினைவு கூரும் வகையில் வல்வெட்டித்துறை சிவன் கோயில் இராஜகோபுரம் 1930 ஆம் ஆண்டில் வல்வைப் பெரியவர் அமரர் சி.செல்லத்துரை பிள்ளை அவர்களால் கட்டப்பட்ட பொழுது, கோபுரத்தின் தென் திசையில் மகாத்மா காந்தியின் சிலையும் அமைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத் தக்கது.

இத்தகைய பெருமைக்கும் கௌரவத்திற்கும் உரிய ஊராகப் புகழ் பெற்ற வல்வெட்டித்துறை பிரித்தானியர் காலத்தில் இருந்தே, இன்று வரை அன்னிய ஏகாதிபத்திய இராணுவத்தினராலும், அரசுகளினாலும் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டுக் கொண்டே வந்திருக்கின்றது. வல்வெட்டித்துறை நகரத்திற்கு எதிராக பல்வேறு வகைகளில் மிலேச்சத்தனமான தாக்குதல்கள் நடத்தப்பட்ட போதெல்லாம், ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், எமது மக்கள் "விழ விழ எழுவோம்" என்ற உறுதியுடன் தலைநிமிர்ந்து வாழ முயற்சிக்கும் போதுதான் மீண்டும் 1991 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 20 ஆம் திகதி ஸ்ரீலங்கா விமானப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட கொடூரமான வான் தாக்குதல்கள் அந்த மக்களை மீண்டும் ஒரு தடவை நிலை குலைய வைத்தது.

ஸ்ரீலங்காவில் பாரம்பரியமாக வாழ்ந்து வருகின்ற தமிழ் மக்கள், தனித்துவமான பண்புகள், விழுமியங்கள் மற்றும் கலாசாரத்தைக் கொண்ட ஒரு தேசிய இனமாக இருந்த போதிலும் அந்த மக்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்படுகின்ற வன்முறைகள் 1948 ஆம் ஆண்டில் இருந்தே தொடர்ந்தும் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. அவற்றுள் பல சம்பவங்கள் இரத்தத்தை உறைய வைக்கின்ற அளவுக்கு மிகக் கொடூரமானவையாக அவற்றின் மூலம் பாதிக்கப்பட்ட மக்களினால், இலகுவில் மறந்து விட முடியாத நிகழ்வுகளாக இருக்கின்றன.

அத்தகைய சோகமும் வீரமும் நிறைந்த வரலாறுகள் பெரும்பாலும் வாய்வழியாகவே இன்றும் கூறப்பட்டு வருகின்றமையால் இன்னும் சில வருடங்களில் அவை மறக்கடிக்கப்படலாம், அல்லது இருட்டடிப்புச் செய்யப்படலாம். அவை எழுத்து வடிவில் ஆவணப் படுத்தப்படாதமையால்

பிற்காலச் சந்ததியினர் மட்டுமல்லாது, இலங்கையில் தமிழ் மக்களின் வகிபாகம் பற்றிய ஆய்வுகளை மேற்கொள்ள முயற்சிப்பவர்களும் கூட அவற்றை அறிந்து கொள்ளமுடியாது போய்விடும். எனவே அந்தக் காலத்தில் நடைபெற்ற நிகழ்வுகள், எமது போராளிகளின் வீரம் செறிந்த வரலாறுகள், அப்பாவி மக்களின் அவலங்கள் என்பன அந்த மக்கள் வாழ்ந்த காலச்சூழலிலும் வாழ்க்கை முறைகளிலும், பேச்சு வழக்கிலும் வைத்தே ஆவணப்படுத்தப்பட வேண்டும்.

தமிழரசுத் தந்தை எஸ்.ஜே.வி. செல்வவிநாயகம் அவர்களினால் 1961 ஆம் ஆண்டில் இருந்து, முன்னெடுக்கப்பட்ட அகிம்சைப் போராட்ட காலத்தில் இருந்து இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழ் தலைவர்களுக்கும் இடையில் இடம் பெற்ற பல பேச்சுவார்த்தைகள், ஒப்பந்தங்கள் கிழித்தெறியப்பட்டதுடன், அவை எல்லாமே தோல்வி அடைந்ததால், தமிழ் அரசியல் கட்சிகளினால் எதுவுமே மேற்கொள்ள முடியாத ஒரு சூழ்நிலையில், தமிழ் இளைஞர் இயக்கங்களின் வருகையினால் முகிழ்த்தெழுந்த ஆயுதப் போராட்டம் வரையிலான பல நிகழ்வுகள், போராட்ட கால இலக்கியங்கள் என்ற வரையறைக்குள் வைத்து ஆவணப்படுத்தப்பட வேண்டும்.
ஈழத்துத் தமிழ் இலக்கியங்களையும் போராட்ட வரலாறுகளையும் மூன்று காலகட்டங்களாக வகைப்படுத்திப் பார்த்தால் தமிழ் மக்கள் வெவ்வேறு காலகட்டங்களில் எவ்வாறான பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்தனர் என்பதை அறிய முடியும்:

1. போருக்கு முந்திய காலம் - 1977க்கு முந்திய காலம்
2. போர்க்காலம் - 1977க்கும் 2009 க்கும் இடைப்பட்ட காலம்
3. போருக்குப் பிந்திய காலம் - 2009 க்குப் பிந்திய காலம் என்ற வகையினுள் உள்ளடக்கிப் பார்க்கும் பொழுது, அக்காலத்திற்குரிய இலக்கியங்களினூடாக மக்களின் வாழ்க்கை முறைகளையும் அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

போருக்கு முந்திய காலம் என்பது, 1978 ஆம் ஆண்டுக்கு முந்திய காலத்தைக் குறிக்கும், தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தாத இந்தக் காலப்பகுதியில் தமிழ் மக்கள் மத்தியில் புரையோடிப் போய் இருந்த சாதிய ஒடுக்கு முறைகள், முதலாளித்துவ அடக்கு முறைகள்,வர்க்க முரண்பாடுகள், ஆணாதிக்கம் என்ற பெயரிலான சீதனக் கொடுமைகள், போன்ற சமுகக் கொடுமைகளுக்கும், கல்வியின் மீதான தரப்படுத்தல் கொள்கை,அரசியல் ரீதியான இன ஒடுக்குமுறைகளுக்கும் எதிராக இளைஞர்களும், புத்திஜீவிகளும் போராட வேண்டிய தேவை இருந்ததால், அக்காலத்தில் எழுந்த இலக்கியங்களும் இவற்றை மையப்படுத்தியே தோற்றம் பெற்றன. இக்காலப்பகுதியில் இவற்றைக் களமாகக் கொண்ட பல நூற்றுக்கணக்கான இலக்கியங்கள் படைக்கப்பட்டதால், அவை யாவும் ஆவணப்படுத்தப்பட்ட இலக்கியங்களாக இன்றைய சந்ததியினருக்குக் கையளிக்கப்பட்டுள்ளன.

போர்க்காலம் எனப்படும் 1977க்கும் 2009க்கும் இடைப்பட்ட காலத்தில் தமிழ் இயக்கங்கள் தோற்றம் பெற்று ஆதிக்கம் செலுத்திய காலத்தைக் குறிக்கும்.

1977 ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் முதல் தடவையாக வல்வெட்டித்துறையில் ஒற்றுமைப்படுத்தப்பட்டு "தமிழர் விடுதலைக் கூட்டணியாக" தோற்றம் பெற்று வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டு "தமிழர் பிரச்சினைக்கு தமிழீழமே தீர்வு" என்பதனை தேர்தல் விஞ்ஞாபனத்தில் முன்வைத்து, உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்டதால், 99 வீதத்திற்கும் அதிகமான தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்று, முதல் தடவையாகவும், கடைசித் தடவையாகவும் இலங்கைப் பாராளுமன்றத்தில் தமிழர் ஒருவர் எதிர்க்கட்சித் தலைவராக வந்தமை இலங்கையின் அரசியல் வரலாற்றில் முக்கியமான ஒரு காலகட்டமாகும். 1977 ஆம் ஆண்டு தேர்தல் வெற்றியைக் கொண்டாடும் வகையில் வடக்கு கிழக்கில் இருந்து தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் வெற்றி பெற்ற பதினெட்டு பாராளுமன்ற உறுப்பினர்களும், கட்சிகளின் தலைவர்களும் கலந்து கொண்ட வெற்றிவிழா வல்வெட்டித்துறை ரேவடி கடற்கரை மைதானத்தில் நடைபெற்றது. அதில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளரும், எதிர்க்கட்சித் தலைவருமாக தெரிவு செய்யப்பட்ட அமரர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம், அங்கு கூடியிருந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் முன்னிலையில் பேசும் பொழுது,

> "இன்று நாங்கள் பெற்ற வெற்றி மக்களின் வெற்றி.. தமிழீழத்திற்கான நீங்கள் தந்த ஆணை அந்த ஆணையில் இருந்து நாங்கள் ஒரு போதும் விலகிச் செல்ல மாட்டோம் .. சாத்வீகமான முறையில் இதனை அடைவது என்பது முடியாத காரியம் மகாத்மா சாந்தியின் சாத்வீகமான போராட்டத்தில் சுபாஸ் சந்திரபோஸ் எவ்வாறு போராடினாரோ அதே போன்ற அணுகு முறையை நாங்களும் கைக் கொள்ளவேண்டும். அதற்கான "சரக்கு" இங்கேதான் இருக்கின்றது. உங்களில் இருந்து 5000 இளைஞர்கள் ஆயுதம் எந்தத் தயாராகுவீர்கள் ஆனால் நாங்கள் எமது பதவிக் காலத்திற்குள் தமிழீழத்தைப் பெற்றுத் தருவோம்"

என்று அ.அமிர்தலிங்கம் அவர்கள் பேசிய உணர்ச்சியூட்டும் வீரவசனங்களைக் கேட்டதும், அந்தக் கடற்கரையில் கூடியிருந்த மக்களிடம் இருந்து எழுந்த கரகோசமும், மகிழ்ச்சியும் வானைப் பிளந்ததை அன்று அங்கே இருந்தவர்கள் மறந்திருக்க மாட்டார்கள். அவரை அடுத்து உரையாற்றிய உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன்,
"நாங்கள் சிங்கள பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியாக இருக்கப் போவதில்லை. எதிரிக்கட்சியாகவே இருக்கப் போகின்றோம். இன்றைய இளைஞர்கள் எங்களுடைய வழியைப் பின்பற்றினால், தமிழீழம் என்பது தூரத்தில் இல்லை."

உணர்ச்சி மிக்க பாடல்களினால்,தமிழ் மக்களின் நெஞ்சத்தில் இடம் பிடித்த ஒரு கவிஞர் என்ற வகையில் அவரது உரை இளைஞர்களின் உணர்ச்சியைத் தூண்டிவிட்டது. அவரது வீரமிக்க துணிச்சலான உரையைக் கேட்டதும்,கம்பர்மலையைச் சேர்ந்த இரவீந்திரன் என்ற இளைஞன் திடீரென மேடையில் ஏறி,தான்வைத்திருந்த சிறிய வில்லுக் கத்தியினால், தனது விரலைக் கீறி, கவிஞர் காசி ஆனந்தனின் நெற்றியில் இரத்தத் திலகமிட்டு தனது மகிழ்ச்சியைத் தெரிவித்தார். அன்று தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களின் வீரமிக்க உரைகளினால் தூண்டப்பட்ட அந்த இளைஞன் தான் பிற்காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முக்கியமான ஒரு போராளியாகத் திகழ்ந்து, வீரச்சாவடைந்த "கப்டன் பண்டிதர்" ஆவர்.

ஆக தமிழ் இளைஞர்களைத் தூண்டி, ஆயுதம் ஏந்த வைத்து தனக்குக் கீழ் ஒரு "கூலிப்படையாக" வைத்திருக்க விரும்பிய தமிழரசுக் கட்சியின் தலைவர் அ.அமிர்தலிங்கம், அவர்கள் நினைத்தது ஒன்று நடந்ததோ வேறோன்றாக இருந்ததால், தமிழினம் அந்த நேரம் எந்த அன்னிய சக்திகளுக்கும் அடிமையாகாது இருந்தது. அந்த நேரம் வெற்றிக் களிப்பில் மிதந்த தமிழ் தலைவர்கள் தமிழர்களின் பிரச்சினைகளும், அவற்றிற்கான தீர்வுகளும், தமது கரங்களை விட்டுக் கைமாறும் என்பதை அப்போது நினைத்துப் பார்க்கவில்லை. ஆனால், தமிழ் உணர்வு மிக்க இளைஞர்களின் எதிர்பார்க்கைகள், அன்றைய தமிழ் தலைவர்களின் அபிலாசைகளில் இருந்தும் முற்றாகவே வேறுபட்டதாக இருந்ததால், இளைஞர்கள் அவர்களிடம் இருந்து விலகிச் செல்லத் தொடங்கினர். அவர்களிடையே தனித்துவமான தலைமைத்துவத்தைக் கொண்டதாக தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்திப் போராடமுன் வந்தமைக்கு, அன்றைய தமிழ் தலைவர்களின் தூண்டுதலே காரணமாக இருந்தது என்பது தான் யாதார்த்தம்!.


இத்தகைய தமிழ் தலைவர்களின் அன்றைய செயற்பாடுகள் உட்பட இந்தக் காலத்தில் இடம்பெற்ற இராணுவத் தாக்குதல்கள், அவலங்கள் மற்றும் இடப் பெயர்வுகள் போன்றவற்றால் தமிழ் மக்கள் பட்ட துயரங்கள் தான், இலக்கியங்களாகத் தோற்றம் பெற்றன. ஆனால் இந்த மண்ணிலே இடம் பெற்ற கொடுரங்கள் முழுமையாக ஆவணப்படுத்தப்படவில்லை. பாலஸ்தீனத்திலும், வியட்நாமிலும் போர்க்காலத்தில் இடம் பெற்ற ஒவ்வொரு சிறிய சம்பவமும், அவை மிகச் சிறந்த இலக்கியங்களாக ஆவணப்படுத்தப்பட்டுள்ளதால், அக்காலத்தை தெளிவு படுத்தும் காலக் கண்ணாடியாக, அந்த இலக்கியங்கள் இன்றும் காணப்படுகின்றன. ஆனால் இலங்கையில் தமிழ் மக்கள் பட்ட அவலங்கள் மூடி மறைக்கப்பட்டதாலோ அல்லது, அச்சம் காரணமாகவோ அவை ஆவணமாக்கப் படாமலேயே மறைந்து கொண்டு போய்விட்டமை துர்ப்பாக்கியமான ஒரு நிகழ்வாகும்.
அந்த வகையில் 1987 - 1989 காலத்தில், இந்திய அரசினாலும், இந்திய ஆக்கிரமிபபு இராணுவத்தினராலும், அவர்களுடன் சேர்ந்து இயங்கிய தமிழ்

ஆயுதக் குழுக்களினாலும் தமிழ் மக்கள் அனுபவித்த துயரங்களை ஏற்கனவே "வல்வைப் படுகொலைகள்" என்ற நூலினூடாக தமிழிலும், "Indiya's Mylai" என்ற நூலாக ஆங்கிலத்திலும் எழுதப்பட்ட வரலாற்று ஆவணம் மூலம், இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்தின் கொடுரங்கள், அவர்களினால் ஈழத் தமிழர்கள் அனுபவித்த அவலங்கள் என்பன, சர்வதேச மயப்படுத்தப்பட்டன. இந்த நூல் இந்தியாவில் பரபரப்பை ஏற்படுத்தியமைக்கு அதன் உள்ளடக்கம் மட்டுமல்லாது, பின்னாளில் இந்திய பாதுகாப்பு அமைச்சராக இருந்த ஜோர்ஜ் பெர்னான்டஸ் அவர்கள் வழங்கிய அணிந்துரையும் ஒரு காரணியாக இருந்தது

இந்த நூல்கள் இரண்டும் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்ததால், 1990 ஆம் ஆண்டு இந்திய இராணுவம், இலங்கையை விட்டே வெளியேற வேண்டுமென்ற கோசம் வலுப்பெறத் தொடங்கின. இந்த நிலையில், இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் சூத்திரதாரியான முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் ஆட்சிக் காலம் முடிந்து, பிரேமதாசா ஜனாதிபதியாக வந்ததைத் தொடர்ந்து, இந்தியரை இந்த மண்ணில் இருந்து வெளியேற்றுவதற்கான முயற்சிகளை எடுத்தமையாலும், சர்வதேசத்தின் எதிர்ப்பின் காரணமாகவும், இந்திய இராணுவம் தான் சாதிக்க நினைத்ததைச் செயற்படுத்த முடியாத நிலையில், இந்த மண்ணை விட்டு வெளியேறிச் சென்றது. அல்லாவிட்டால், இங்கு வருகை தரும் பொழுதே, இந்திய இராணுவத் தளபதி,

" நாங்கள் இன்னும் 100 வருடங்களுக்கு இலங்கையில் இருக்கப்போகின்றோம்."

என்று சூளுரைத்த நிலையில், இரண்டு வருடங்களில் தங்களை விட்டால் போதும் என்று இந்த மண்ணை விட்டு வெளியேறியமையானது, இந்தியாவுக்குக் கிடைத்த மிகப்பெரிய அவமானமாகவே உலக விமர்சகர்களால் பார்க்கப்பட்டது.




இந்திய இராணுவத்தினர், வல்வெட்டித்துறையில் மேற்கொண்ட தாக்குதல்கள் தொடர்பான விவரணச்சித்திரம், தமிழிலும், ஆங்கிலத்திலும் வெளியிடப்பட்டது.

அதே போன்று மிகக் குறுகிய காலத்திற்குள், ஸ்ரீலங்கா அரசாங்கத்தினாலும் இராணுவத்தினராலும், மேற்கொள்ளப்பட்ட இராணுவநடவடிக்கைகளினால், எமது மக்கள் பட்ட அவலங்களின் ஒரு சிறு பகுதியை "வல்வைப் புயல்" என்ற இந்த நூலினூடாக ஆவணப்படுத்தியுள்ளேன். இவற்றால் எவருக்கும் எந்தத் தாக்கமும் ஏற்படப் போவதில்லை என்பதும் எனக்குத் தெரியும்.ஆனால் அன்று நடைபெற்ற அந்தக் கோர நிகழ்வுகள், நாளைய எமது சந்ததியினரும் அறிந்து கொள்ள வேண்டுமென்பதற்காகவே இந்த நூலை ஆவணமாக்கியுள்ளேன்... ஈழத்தில் தமக்கென உள்ள தாயக பூமியில், சுயநிர்ணய உரிமை கொண்ட மக்களாக, தமிழர்கள் வாழ்ந்தார்கள்... வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்..... வாழப் போகின்றவர்கள் என்பதற்கான ஒரு ஆதாரமாக இந்த நூல் விளங்கும் என்பது மட்டும் நிதர்சனம்...!

இவ்வாறான ஒரு மிலேச்சத்தனமான தாக்குதலை 1994ம் ஆண்டு சிறிலங்கா வான்படைகள் வியூகம் அமைத்து நாகர்கோவில் மகாவித்தியாலயத்தின் மீது ஒரே நாளில் தொடர்சியாக 4 வான்படை விமானங்கள் மூலம் தாக்குதலை மேற்கொண்டதில் 41 மாணவர்கள் உடல் சிதறிப் பலியாகிய அந்த துயர நிகழ்வை "உதிரம் உறைந்த மண்" என்ற நூலின் மூலமும் வெளிப்படுத்தப்பட்ட போது இலங்கையின் கோரமுகம் சர்வதேசத்திற்கு வெளிப்படுத்தப்பட்டது.

# 02. ஸ்ரீலங்கா அரசின் எச்சரிக்கை

1991 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 20 ஆம் திகதி, நண்பகல் 12.40 மணி...

எழில் மிகுந்த வல்வெட்டித்துறை நகரத்தை அந்த உச்சி வெயில் தக தகவென ஒளியூட்டி அழகுபடுத்திக் கொண்டிருந்தது. ஆம்! தென்னிந்தியக் கலாசாரத்தின் அழகும், திரைகடலோடித் திரவியம் தேடிய வாணிபத்தின் மேன்மையும், வீரத்தின் பெருமையும், கல்வியின் சிறப்பும் ஒருங்கே அமையப் பெற்ற வல்வை மாநகரை அணிசெய்யும் காவல் தெய்வங்களாக மேற்கே செல்வச் சந்நிதியானும், வல்வை வைத்தீஸ்வரரும், அன்னை முத்துமாரி அம்மனும் கம்பீரமாக வானளாவ எழுந்து நிற்க கிழக்கே கந்தவனக் கடவைக் கந்தப்பெருமானும், நெடியகாட்டு திருச்சிற்றம்பலப் பிள்ளையாரும், வேவில் விநாயகரும் அமைந்திருக்கும் பொழுது ஔவையார் கூறியது போல் "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பதற்கு இணங்க, ஒரு கோயில் நகரமாகவே வல்வெட்டித்துறை திகழ்கின்றது. புழும் பெருமை மிக்க 28 இந்து ஆலயங்களும், ஒரு கிறிஸ்தவ தேவாலயமும் கொண்ட பக்திச் சிறப்பு மிக்க ஒரு கடலோரக் கிராமமாக விளங்குவது தான் வல்வெட்டித்துறை என்ற துறைமுகப்பட்டினம்..!

சுமார் 12,000 மக்களைத் தன்னகத்தே கொண்டுள்ள வல்வெட்டித்துறை மண்ணின் மீது, சிறிலங்கா படைகளுக்கு மட்டுமல்லாது அன்னிய ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பாளர்களுக்கும் எப்பொழுதும் ஒரு கண் இருந்து வருகின்றது.

வழமை போன்று அன்றும், மிகவும் தாளப் பறந்த நிலையில் உலங்கு வானூர்தி ஒன்று பெருத்த ஓசையுடன், வல்வெட்டித்துறையைச் சுற்றிச் சுற்றி வட்டமிட்டபடி பறந்து கொண்டிருந்தது.!

"சுடப் போறான் போல இருக்கு. நவஜீ, தேவகி, கலி. ஓடிப்போய்ப் பிளாற்றுக்குக் கீழை நில்லுங்கோ.."

நான் எனது பிள்ளைகளிடம் எச்சரித்து விட்டு, இன்றும் கூட என்ன தாக்குதலைச் செய்யப் போகின்றானோ தெரியவில்லை என்று நினைக்கும் பொழுதே,. "ஆ... அங்கை ஏதோ நோட்டீசு போலக் கிடக்கு, போட்டுக் கொண்டிருக்கிறான். எல்லாம் எங்கடை ஊருக்குள்ளை தான் விழுகுது." எங்களுடைய வீட்டிற்கு அயல் வீட்டில் இருந்து விளையாடிக் கொண்டு நின்ற பிள்ளைகளின் கூச்சல் காதைப் பிளந்து கொண்டிருந்தது. சிறிது நேரத்தில் எனது பத்து வயது மகள் கல்யாணி,

"ஆ... அப்பா!..... வல்வெட்டித்துறைச் சனங்கள் எல்லாரையும் ஊரை விட்டு எழும்பிப் போகட்டுமாம் என்று கெலியிலை இருந்து நோட்டீஸ்

போட்டிருக்கிறாங்களாம்." என்று சிரித்துக் கொண்டே கூறியபடி எனக்கு அருகில் வந்தாள். அவளுடைய பகிடியான பேச்சுக்கள் எனக்குச் சிரிப்பைத் தான் தந்தது.

"என்ன கல்யாணி!... விளையாடிறயோ..? ஓடிப்போய் பக்கத்து வீட்டிலை ஆரிட்டையாவது ஒரு நோட்டீஸ் வாங்கிக் கொண்டு வா பார்ப்பம்."

வானத்தில் தொடர்ச்சியாக வட்டமிட்டுப் பறந்தபடி விமானப் படையினரால் போடப்பட்ட துண்டுப் பிரசுரம் என்னவாக இருக்கும் என்ற ஆவலில் எனது மகளை அதட்டி அனுப்பினேன்.

"ஓம் அப்பா..! உண்மையாத் தான் 48 மணித்தியாலத்துக்குள்ளை எல்லாச் சாமான்களையும் எடுத்துக் கொண்டு எங்கடை ஊரை விட்டு எல்லாரையும் எழும்பிப் போகட்டுமாம்"

இதற்கு மேலும் அந்தப் பிள்ளை வேண்டுமென்று விளையாட்டாகவோ அல்லது பகிடிக்காகவோ இதனைச் சொல்லியிருக்க முடியாது என்று மனதிற்குள் நினைத்தபடி,நான் உடனடியாகவே வீட்டிற்கு வெளியே வந்து,தெணியம்பை ஒழுங்கையில் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்ற ஒரு சிறுவனிடம் இருந்த மிகச் சிறிய துண்டுப் பிரசுரத்தை வாங்கிப் பார்த்தேன்.

## "வல்வெட்டித்துறையில் வசிக்கும் மக்களுக்கு எச்சரிக்கை!

**வல்வெட்டித்துறையில் வசிக்கும் மக்கள் அனைவரும் தமது பொருட்களை எடுத்துக்கொண்டு நாளை பின்னேரத்துக் கிடையில் (48 மணித்தியாலம்) வல்வெட்டித்துறையை விட்டு வெளியேற வேண்டும் என்று எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்."**

நல்ல முத்து முத்தான எழுத்தில் கையினால் எழுதி றோணியோ செய்யப்பட்ட அந்தத் துண்டுப்பிரசுரத்தைப் பார்த்ததும் உள்ளூர என மனம் சிறிது பதட்டம் அடைந்தது.

"என்னப்பா! நாங்களும் எங்கையாவது போவமோ?" வழக்கமாகவே ஒரு சிறிய சத்தத்திற்கே பரபரப்பு அடைகின்ற என் மனைவியின் பதட்டமான குரல் எனக்கு ஆச்சரியத்தைத் தரவில்லை.

"48 மணித்தியால அவகாசம் தந்திருக்கிறான்கள் தானை" ஏன் இப்பவே அவசரப்படுகிறாய்? இவங்கள் என்னத்தைப் பெரிசா வெட்டிக் கிழிக்கப்போறாங்களோ பார்ப்பம். பொம்மரைக் கொண்டு வந்து கண்மூடித்தனமாக் குண்டுகளைத் தள்ளிப் போட்டு ஓடிவிடுவாங்கள்.

விடுதலைப் புலிகளோடை நேருக்கு நேர் நின்று போராட முடியவில்லை. இஞ்சை வந்து அப்பாவிச் சனங்களைக் கொல்லுறது தானை இவங்கடை வேலை"

எனது எரிச்சலையும், வெறுப்பையும் கொட்டித் தீர்த்து விட்டு குளிப்பதற்காகக் கிணற்றடியை நோக்கிச் சென்றேன். இலங்கையில் எங்காவது ஏதாவது ஒரு தாக்குதல் நடந்துவிட்டால் போதும், அடுத்த நிமிடமே வல்வெட்டித்துறையின் மீதுதான் ஒன்றில் விமானத்தாக்குதலோ அல்லது, எறிகணைத்தாக்குதலோ அல்லது கடலில் தரித்துநிற்கும், போர்க்கப்பல்களில் இருந்து பீரங்கித் தாக்குதல்களோ நிகழும். இதற்குப் பழக்கப்பட்டுப் போன எங்களுடைய மக்களுக்கு, இது ஒன்றும் புதிய விடயமாக இருக்காது.

"சிலவேளை ஐந்தாறு பொம்மர்கள், கெலி, சகடை விமானங்களைக் கொண்டு வந்து விமானத் தாக்குதல் செய்தபடி கடல் வழியாலை இறங்கப் போறாங்களோ?"

என்னதான் வெளிப்படையாக என்னுடைய மனத் துணிவைக் காட்டிக் கொண்டாலும், நடைபெறப் போகும் அனர்த்தங்களை எண்ணிச் சிறிது சஞ்சலம் அடைந்தது. அன்று ஞாயிற்றுக் கிழமையானதால், நேரத்துடன் எங்களுடைய மதிய உணவை முடித்து விட்டு இருக்கும் பொழுது, சக்திவடிவேல் ஆசிரியர், மனம் பதைபதைத்த நிலையில் ஓடிவந்தார்.

" நோட்டீஸ் பார்த்தனியள் தானை!...,என்ன செய்வம்?....ஏதோ தாக்குதல் செய்யப்போறாங்கள் போல கிடக்கு.வீட்டிலை இருக்கப்பயமாக் கிடக்கு, நாங்கள் நாளைக்குக் காலையிலேயே எங்கையாவது போகலாம் என்று யோசிக்கிறன்."

வல்வெட்டித்துறையின் பிரபலமான கணித ஆசிரியரான சக்திவடிவேல் மாஸ்ரர் அனைத்து மாணவர்களாலும் நேசிக்கப்பட்ட ஒருவர். மாணவர்களின் கல்விமேம்பாட்டில் தன்னை அர்ப்பணித்து வருகின்ற அவரால் இராணுவத்தினரின் அச்சுறுத்தலைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. பயத்தினால் அவருடைய உதடுகள் ஒட்டி உலர்ந்து வெளிறிப் போய் இருந்தன.

இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராகத் தொடரப்பட்டுக் கொண்டிருக்கும் யுத்தத்தின் கோரவடுக்களினால், ஏற்கனவே இரண்டு தடவைகள், ஸ்ரீலங்காவின் போர் விமானங்களின் மிலேச்சத்தனமான குண்டு வீச்சினால், மிகவும் மோசமான முறையில் பாதிக்கப்பட்டு வீடு மற்றும் பெறுமதி வாய்ந்த சொத்துக்களை இழந்தது மட்டுமல்லாது, 1989 ஆம் ஆண்டு ஆகஸ்ற் மாதம் 2ஆம், 3ஆம், 4ஆம் திகதிகளில் இந்திய

இராணுவத்தினரால் நிகழ்த்தப்பட்ட வல்வைப் படுகொலைகளின் பொழுது, அவரது வீட்டில், அவருடைய கண்களுக்கு முன்னாலேயே இந்திய இராணுவத்தினர், அவரது இரண்டு மைத்துணர்களையும் துடிக்கத் துடிக்கக் கொன்றதை நேரில் பார்த்த அந்தக் கோர நினைவுகளை அவரால் எப்படி இலகுவில் மறந்து விடமுடியும். அடுத்தடுத்துத் துன்பங்களை அனுபவித்த அவரால் இன்னும் ஒரு சிறிய துன்பத்தைக் கூட தாங்கமுடியாது என்பதை அவரது பதட்டமான தொனி காட்டிக் கொண்டிருந்தது. வல்வெட்டித்துறையில் உள்ள ஒவ்வொருவரும் ஏதோ ஒரு வகையில் இந்த யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

"சக்தி!... நீங்கள் பயப்படுறதிலையும் ஒரு நியாயம் இருக்குது அடுத்தடுத்து வந்த துன்பங்களை உங்களாலை தாங்கிக் கொள்ளமுடியாது தான் நீங்கள் இப்ப எங்கடை ஊரை விட்டு ஓடுறதை நான் தடுக்கவில்லை ஆனாலும் இவங்கடை காலக்கெடுவுக்கு இன்னும் இரண்டு நாள் அவகாசம் இருக்குத்தானை அதற்கிடையில் ஊர் மக்கள் ஒன்று சேர்ந்து ஐசிஆர்சி (ICRC) மூலம் தொடர்பு கொண்டு எங்கடை மன உறுதிப்பாட்டைத் தெளிவு படுத்துவம். சக்தி...! சும்மா ஒரு வெருட்டுக்கு இப்பிடிப் போட்டிருக்கிறான். கோட்டையிலும், கொக்காவிலிலும், மாங்குளத்திலும் மூக்குடைபட்டு மனம் பேதலித்துப் போன நிலையில், இப்ப எங்கடை சனத்தின் மீது, ஒரு உளவியல் போரைத் தொடங்கியிருக்கிறான்.. ஆனால், இந்தச் சிங்கள பேரினவாதத்தின் கபடத் தனத்திற்கு நாங்கள் பயந்து இந்த மண்ணை விட்டு ஓடிப் போனமோ,பிறகு நாங்கள் எல்லாரும் அகதியாய் வெளிநாடுகளில் போய் தஞ்சம் இருந்து கொண்டு நாடே இல்லாமல் அலைய வேண்டிவரும். எங்கடை சனத்தை நாட்டை விட்டுத் துரத்தவேண்டு மென்றதிலையே குறியாக இருக்கிறாங்கள். இண்டைக்கு பலஸ்தீனிய மக்களுக்கு என்று ஒரு நாடில்லாமல் இருக்கிறது போல நாங்களும் இருக்கிற நிலைதான் வரும். இண்டைக்கு வல்வெட்டித்துறையை விட்டு வெளியேறு என்று துண்டு போட்டவன், நாளைக்கு வடமராட்சியை விட்டு வெளியேறு என்று மிரட்டுவான். பிறகு யாழ்மாவட்டத்தை விட்டே வெளியேற வேண்டும் என்று சொன்னால், எங்கடை இனத்தின்ரை எதிர்காலம் எங்கை போய்முடியும்..?"

எனது உள்ளத்தில் எழுந்த கொதிப்பும் பேரினவாத சக்திகளின் மீது கொண்ட வெறுப்பும், பல மடங்கு அதிகரித்தது.

"ஓம்!... நீங்கள் இப்ப சொல்லுறது சரிதான். அனந்த்!... ஆனால் நடைமுறையிலை அதைத் தாங்கிக் கொள்ளுகிற சக்திதான் எங்களிடம் இல்லை. இப்பிடித் தொடர்ச்சியாக விமானக்குண்டு

வீச்சினாலை எங்களுக்கு மேலாகத் தாக்குதல் நடத்தினால் நாங்கள் என்ன செய்யிறது? நிராயுத பாணிகளாக இருக்கிற எங்களாலை என்ன செய்யமுடியும்? இந்த அநியாயங்களைத் தட்டிக்கேட்கிறதுக்கு எண்டு உலகத்திலை எந்த நாடும் இல்லை. எல்லாரும் சேர்ந்து எங்களுக்கு எதிராகவெல்லோ நிக்கிறாங்கள்."

சக்திவடிவேல் மாஸ்ரர் கூறுவதும் நியாயமானதே.. கடந்த காலங்களில் ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் இராணுவ, கடற்படை மற்றும் விமானப் படைகள் எல்லாமே ஒன்று சேர்ந்து நடத்திய மிலேச்சத்தனமான தாக்குதல்களில் இந்திய றோ, இஸ்ரேலிய மொசாட், பிரித்தானிய கீனிமீனிபடை, பாகிஸ்தான் உளவுப்படை உட்பட அன்னியக் கூலிப்படைகளும் சேர்ந்து, நிராயுதபாணிகளாக இருந்த பல ஆயிரக்கணக்கான அப்பாவிப் பொது மக்களைத் தான் கொன்றழித்தனர்.

ஸ்ரீலங்காவைப் பொறுத்தவரை போர் விதி முறைகள் பற்றிய ஜெனிவா உடன் படிக்கையை என்றுமே மதித்து நடந்ததில்லை. எத்தனையோ தடவைகள் ஸ்ரீலங்காவின் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக அனைத்துலக மன்னிப்புச் சபை, ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் மற்றும் மனித உரிமை ஆர்வலர்கள் என்று எத்தனையோ அமைப்புக்களுக்கு, அத்தாட்சிப்படுத்திய சத்தியப் பிரமாண வாக்குமூலங்கள், புகைப்படங்கள், வீடியோ நாடாக்கள் போன்றவற்றுடன், தொடர்ந்தும் அறிக்கைகளைச் சமர்ப்பித்தும் கூட ஸ்ரீலங்கா அரசாங்கம் அதனைப் பொருட்படுத்தவே இல்லை என்பதுடன் அனைத்துலக மன்னிப்புச் சபை மற்றும் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் போன்றவற்றிற்கே, ஒரு சவாலாக ஸ்ரீலங்கா அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது. அந்த வகையில் சக்திவடிவேல் ஆசிரியர் கூறிய காரணங்கள் ஒவ்வொன்றும் நியாயமாகவே எனக்குத் தோன்றியது.

"ஓம் சக்தி..! நீங்கள் கூறுவது அவ்வளவும் சரிதான்.. இன்றைக்கு ஸ்ரீலங்கா அரசு செய்கின்ற அப்பட்டமான மனித உரிமை மீறல்களையோ படுகொலைகளையோ மேற்கொண்டு, தமிழர்களின் வீடுகள் பாடசாலைகள் கோயில்களையெல்லாம் உடைத்து நாசம் செய்து கொண்டிருப்பதைத் தட்டிக் கேட்கின்ற உரிமையோ அல்லது கடப்பாடோ, இன்று எந்த நாட்டுக்குமோ அல்லது சர்வதேச அமைப்புக்களுக்குமோ இல்லை என்பது தான் உண்மை. ஆபத்து வேளையில் உங்களுடைய உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக இந்த மண்ணை விட்டு வெளியேறினாலும், மீண்டும் இங்கை வந்து உங்களுடைய பழைய வாழ்க்கையையும், கல்விச் சேவையையும் எங்களுடைய மக்களுக்கு வழங்கவேண்டும்... எதற்கும் பின்னேரம் மன்றத்திற்கு வருவீர்கள் தானே. அப்பொழுது மிகுதியைப் பேசிக் கொள்ளலாம். இந்த நோட்டீசினாலை நாங்கள் கல்வி மன்றத்திற்குப் போகாவிட்டாலும் பிள்ளைகள் வந்து காத்திருக்குங்கள்...... அதற்காக வேளைக்கே போவம்"

48 மணித்தியால அவகாசம் கொடுக்கப்பட்டபடியால் ஆறுதலாக சில முடிவுகளை எடுக்கலாம் என்று அவரை அனுப்பிவிட்டு, நேரத்தைப் பார்த்தேன். எப்படித்தான் நேரம் போகின்றதோ, தெரியவில்லை.. மூன்று மணியாகி விட்டது. சக்திவடிவேல் எனது வீட்டைவிட்டு வெளியேறிய பின்னர், இந்தத் துண்டுப்பிரசுரத்தைப்பற்றித் தான் எனது மனம் அசைபோட்டது.

வல்வைக் கல்வி மன்றத்திற்குச் செல்வதா விடுவதா என்று கூட ஒரு கணம் தடுமாறிக் கொண்டிருந்தேன்.ஆனால் அங்கே எங்களால் விதிக்கப்பட்டிருந்த சில கட்டுப்பாடுகளுக்கு மாணவர்கள் தம்மைப் பழக்கிக் கொண்டிருப்பதால், என்ன பிரச்சினையென்றாலும் மன்றத்தின் வகுப்புகளுக்கு ஒழுங்காக வந்து விடுவார்கள். அதுவும், அன்று ஞாயிற்றுக் கிழமையானதால், வல்வைக்கல்வி மன்றத்தில் பல வகுப்புகள் ஒரே நேரத்தில் நடைபெற இருப்பதால் அதிகளவிலான மாணவர்கள் வருவார்கள் அந்த நினைவுகள் வந்ததும் அவசர அவசரமாக வல்வைக் கல்வி மன்றத்திற்குப் புறப்பட ஆயத்தமானேன்.

# 03.வல்வைப் பிரஜைகளின் பொறுப்பும் கடமையும்

வல்வெட்டித்துறை பிரஜைகள் குழு......!

வடக்கே தமிழ் மக்கள் மீதான போர் நெருக்கடிகள் அதிகரித்துவந்த நேரத்தில், அந்த நேரம் எந்த ஒரு தமிழ் அரசியல்வாதியும் தமிழ் மக்களுடன் இல்லாததால், எமது மக்கள், என்ன செய்வது என்று, அறியாது திகைத்துப் போய் இருந்த நேரத்தில், எமது மக்களுக்கான அரசியல் தலைமைத்துவம் ஒன்று இல்லாததை எமது மக்கள் உணர்ந்து கொண்டனர். பல்வேறு வகைகளிலும் அவலங்களுக்குள்ளாகி வரும் எமது மக்களுக்கான வழிகாட்டல்களையோ அல்லது உதவிகளையோ செய்யமுடியாத ஒரு நிலையில், மக்களுக்குச் சேவையாற்றுவதற்கான ஒரு தன்னார்வ அமைப்பாக அன்று பிரஜைகள் குழுக்களே செயற்பட்டன.

1984ஆம் ஆண்டில், வல்வெட்டித்துறையிலேயே முதன் முதலில் பிரஜைகள் குழு என்ற மக்கள் அமைப்பு தோற்றுவிக்கப்பட்டது. 1984 ஓகஸ்ட் 4ந்திகதி வல்வெட்டித்துறையில் மக்கள் குடியிருப்புக்களை நோக்கி இராணுவமுற்றுகை இடம்பெற்றபோது,ஒரேநாளில் 515 வல்வெட்டித்துறை இளைஞர்கள் கைது செய்யப்பட்டு கப்பலில் ஏற்றிக் காலிக்குக் கொண்டு செல்லப்பட்டனர். அப்பொழுது தான் தமிழ் இளைஞர்களுக்கான சித்திர வதை முகாமாக காலியில் "பூசா தடுப்பு முகாம்" முதன் முதலில் அமைக்கப்பட்டது. வல்வெட்டித்துறையில் கைது செய்யப்பட்ட அப்பாவி இளைஞர்களும், மாணவர்களும் அவர்களுடைய பெற்றோர்களும் கூடி நின்று கதறக்கதறக் காலியிலிருந்த பூசா முகாமிற்கு கொண்டு செல்லப்பட்டனர். அந்தச் சம்பவத்தால், முழு வல்வெட்டித்துறையுமே ஸ்தம்பிதமடைந்தது. தமிழகத்திற்கு அந்தநேரம்,அகதிகளாக ஓடிப் போனவர்கள், மீண்டும் திரும்பிவரப் பயந்தனர். எல்லோர் முகத்திலும் கேள்விக் குறி?.... அடுத்தது என்ன?.... யாரால் என்ன செய்யமுடியும்?....... கேள்விகளே பதில்களாயின.

ஆம்... இத்தகைய ஒரு சூழ் நிலையில் தான், "வல்வெட்டித்துறை பிரஜைகள் குழு" உருவாயிற்று. வரலாற்றிற்கு வழியைக்காட்டும் வகையில் வல்வெட்டித்துறையில் உருாக்கப்பட்ட பிரஜைகள் குழு, பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்களின் தலைமையில், குமாரசாமி முருகமூர்த்தி ஆடியபாதம் செல்வேந்திரா சச்சிதானந்தம் எனத் தன்னார்வத் தொண்டர்களின் பங்களிப்புடன் பிரஜைகள்குழு உருவாயிற்று. உள்துறை அமைச்சு, பாதுகாப்புஅமைச்சு, இராணுவம், இந்தியதூதுவராலயம் மற்றும் வெளிநாட்டு தூதுவராலயங்கள் இறுதியில் ஜனாதிபதி ஜெயவர்தனா என இடைவிடாத சந்திப்புகள் கலந்துரையாடல்கள் இடம்பெற்று, இரண்டு

கிழமைக்குப் பதினான்கு பேர் என்ற வகையில், 475 இளைஞர்களை காலியில் இருந்து மீட்டுவந்துவல்வெட்டித்துறை பிரஜைகள் குழு சாதனைபுரிந்தது. இந்தச் சம்பவத்தில் கைது செய்யப்பட்டவர்களில் ஏனையோர் இன்றும் காணாமல் போனவர்களாகவே இருக்கினறார்கள். இதனைத்தொடர்ந்தே ஏனைய ஊர்களிலும் பிரஜைகள் குழுக்கள் உருவாக்கப்பட்டமை தனிவரலாறாகும். எனினும் பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள் போர் நிறுத்தக் கண்காணிபபுக் குழுவுக்குத் தெரிவு செய்யப்பட்ட பின்னர்,வல்வெட்டித்துறைப் பிரஜைகள் குழுவின் செயற்பாடுகளும் முடிவுக்கு வந்தன.

1987 ஆம் ஆண்டு இந்திய இலங்கை ஒப்பந்தத்தைத் தொடர்ந்து, வல்வெட்டித்துறையில் இந்திய இராணுவத்தின் அடக்கு முறைகளும் இளைஞர்களின் காணாமல் போதலும் அதிகரித்து வந்த நிலையில், மீண்டும் 1988 ஆம் ஆண்டு “வல்வெட்டித்துறை பிரஜைகள் குழு” தோற்றுவிக்கப்பட்டது... பட்டயக் கணக்காளர் சபாரத்தினம் செல்வேந்திரா அவர்களைத் தலைவராகவும், நடராஜா அனந்தராஜ் அவர்களை செயலாளராகவும், அமரர்களான, வ.இ.நடனசிகாமணி, ச.தில்லையம்பலம், எஸ்.விஜயகுமார் மற்றும் பொ.யோகேந்திரன் ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்டு வினைத்திறன் மிக்கதான பிரஜைகள் குழு நியமனம் செய்யப்பட்டது.இவர்கள் பல்வேறு உயிர் அச்சுறுத்தல்கள், காட்டிக் கொடுப்புக்களுக்கும் மத்தியில் இந்த ஊரிலேயே இருந்து வாழ்ந்தனர் என்பது தான் வரலாற்றின் முக்கியமான ஒரு நிகழ்வாகும்.

1988 ஆம் ஆண்டு இந்திய இராணுவம் யாழ்ப்பாணத்தில் இருந்த காலத்தில் எமது மக்களுக்கான ஒரு அரசியல் தலைமைத்துவத்தை ஈடுசெய்யக் கூடியதாகவும், மக்களின் தேவைகளை நிறைவேற்றும் ஒரு அமைப்பாகவும் இயங்கியபோதும், பலர் அச்சத்தினால் நாட்டை விட்டு ஓடிப்போயும், ஊரை விட்டு அகன்றும் மௌனித்தும் இருந்த நிலையில் எமது மக்களுக்கான பலமான ஒரு ஆதார சக்தியாக இருந்த வல்வெட்டித்துறை பிரஜைகள் குழுவினர் துணிச்சலுடன் முன்வந்து மக்களின் தேவைகளை நிறைவு செய்வதற்கான பல நடவடிக்கைகளை மேற்கொண்டமையை இந்தச் சந்தர்ப்பத்தில் குறிப்பிடவேண்டும்.

தேர்தல் காலங்களில் மட்டும் மக்களிடையே வந்து, கைகளை உயர்த்தித் தலைகாட்டும் அரசியல்வாதிகளைப் போல் அல்லாது, பிரஜைகள் குழு உறுப்பினர்கள் பல்வேறு கொலை அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும், மக்களுடன் மக்களாக வாழ்ந்து வந்தனர். அந்த நேரம் பல வழிகளிலும் ஒடுக்குதலுக்கு உள்ளாக்கப்பட்ட எமது மக்களது அவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குரிய முயற்சிகளை மேற்கொண்டு வந்த அதே நேரத்தில், வல்வெட்டித்துறையின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தக்கூடிய பல திட்டங்களை வகுத்து, மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கான

நடவடிக்கைகளும் வல்வெட்டித்துறை பிரஜைகள் குழுவினரால் மேற்கொள்ளப்பட்டன.

1988-1989 காலப் பகுதியில் பிரஜைகள் குழுவினரால் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படுவதற்கு ஏதுவாக துறைசார் வல்லுநர்களை அழைத்து அவர்கள் மூலம், தயாரிக்கப்பட்ட "வல்வெட்டித்துறை நகர அபிவிருத்தித் திட்டம்" (Valvettiturai Urban development Scheme) வல்வெட்டித்துறையை அபிவிருத்தி செய்வதற்கான ஒரு நீண்டகாலத் திட்டமாக இருந்தது. அவற்றுள் குறிப்பாக பின்வரும் அபிவிருத்தி வேலைகளுக்கான கிடைப்படத்துடன் கூடிய பாரிய திட்டம் தயாரிக்கப்பட்டது:

- மரக்கறிச் சந்தைத் தொகுதி,
- வைத்தியசாலையின் சத்திர சிகிச்சைக் கூடம்,
- மீன்சந்தையும், அதனுடன்கூடிய குளிர்சாதன அறையும்
- பொது நூலகம்,
- பொதுப் பூங்கா,
- திருமண மண்டபத்துடன் கூடிய கலையரங்கம்,
- மீன்பிடித் துறைமுகம்,
- அழகுற வடிவமைக்கப்பட்ட கடற்கரைகள்
- நகராட்சி மன்றத்திற்கான புதிய பணிமனைக் கட்டடம்

வல்வெட்டித்துறையில் இந்திய ஆக்கிரமிப்பு இராணுவம் அமைதி காக்கும் படை என்ற போர்வையில், நிலை கொண்டிருந்த காலத்தில் இருந்த அரசியல் வெற்றிடத்தை நிரப்பும் வகையில் வல்வெட்டித்துறை பிரஜைகள் குழுவினர், செயற்பட்டதை இந்திய, இலங்கை அரசுகளே ஏற்றுக் கொண்டதால், உத்தியோகபூர்வமான பேச்சுவார்த்தைகளின் போதும், அழைப்புக்களையும் விடுத்து வந்தன. ஆனாலும் பின்னர், விடுதலைப் புலிகளின், யாழ்ப்பாண மீள்வருகையுடன், சுமுகமான மாற்றங்கள் ஏற்படத் தொடங்கியதும், பிரஜைகள் குழுவை நாங்களாகவே கலைத்துவிட்டோம்.
"ஏதோ ஒரு தேவை கருதி ஒரு அமைப்பு உருவாக்கப்பட்டால், அந்தத் தேவை நிறைவு பெற்றதும், அதனைக் கலைத்துவிட வேண்டும்" என்பதில் கருத்தொற்றுமை இருந்தது. ஆனாலும், இந்திய இராணுவம் வல்வெட்டித்துறையை ஆக்கிரமித்திருந்த காலப்பகுதியில் எமது மக்கள் அல்லோல கல்லோலப்பட்டு அலைந்து திரிந்தபோது, அவர்களுக்கான ஒரு உறுதியான காப்பரணாக வல்வெட்டித்துறை பிரஜைகள் குழு செயற்பட்டதை அக்காலப்பகுதியில் இந்த மண்ணில் வாழ்ந்தவர்கள் இன்றும் நினைவு கூர்ந்து கொண்டே இருக்கின்றனர். வல்வெட்டித்துறை பிரஜைகள் குழுவின் செயற்பாடுகள் மௌனிக்கப்பட்டதும், அதனைத் தொடர்ந்து, இந்த மண்ணின் சாதாரண பிரஜைகளாகவே நாங்கள் உண்டு, எங்களுடைய குடும்பம் உண்டு என்று நிம்மதியாக வாழ்ந்து வந்தோம். அப்படி பொது வாழ்க்கையில்

இருந்து நாங்கள் ஒதுங்கி வாழ்ந்தாலும்,சிங்கள பௌத்த ஏகாதிபத்தியவாதிகளின் இன அழிப்பு நடவடிக்கைகளில் இருந்து, எங்களால் ஒதுங்கி வாழ முடியவில்லை. இந்த மண்ணின் மைந்தர்கள் என்ற வகையில், எமது மக்களுக்கு ஏற்படும் துன்பங்களில் இருந்தும், அவர்களைக் காப்பாற்றவேண்டிய ஒரு கடப்பாடு இருப்பதையும் நாங்கள் மறக்கவில்லை.

வல்வெட்டித்துறை மக்களை உடனடியாக தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறுமாறு,அவசர துண்டுப்பிரசுரம் மூலம் அறிவித்து சுமார் மூன்று மணித்தியாலங்கள் கடந்து விட்ட நிலையிலும்,வல்வை நகர் அது வரை அமைதியாகவே இருந்தது.!

அன்று பிற்பகல் 3.30 மணியாகிவிட்டது...வழமைபோன்று பிள்ளைகள் வல்வைக் கல்வி மன்றத்தை நோக்கி வந்து கொண்டிருந்தனர். அவர்கள் பயமறியாத சிறுவர்கள் என்பதாலோ என்னவோ, நடக்கப்போகும் அசம்பாவிதங்களைப் பற்றி எதுவுமே தெரியாத நிலையில், அன்றும், கலகலப்பாகவே வந்து கொண்டிருந்தனர். நானும்,சக்திவடிவேல் மாஸ்ரர், குமாரஸ்ரீதரன் மாஸ்ரர் தேவராஜா மாஸ்ரர் ஆகியோரும், வாசலில் நின்றபடி பார்த்துக் கொண்டிருந்தோம். தெரு வீதிவழியாக மக்களின் நடமாட்டமும் வழமைக்குமாறாக சற்று அதிகமாகவே இருந்தது.

நாங்கள் வல்வைக் கல்வி மன்ற வாசலில் நின்றபொழுது சைக்கிளில் வந்த செல்வேந்திரா சைக்கிளை வாசலில் நிறுத்திவிட்டு பதறித்துடித்துக் கொண்டு ஓடிவந்தார். வல்வைப் பிரஜைகள் குழுவின் தலைவராக, தற்போது செயற்படாவிட்டாலும், இன்றும் கூட எமது மக்களுக்கு ஆபத்துக்கள் ஏற்படும் காலத்தில், தனிப்பட்ட முறையில் எதையாவது செய்ய வேண்டுமென்று துடித்துக் கொண்டிருப்பவர். நான் செயலாளராக இருந்து அவருடன் பல வேலைத்திட்டங்களில் பங்கெடுத்தவன் என்ற வகையிலும், இவ்வாறான பிரச்சினைகள் ஏற்படும் வேளைகளில், சேர்ந்து செயற்படுவதற்காக என்னை உடனடியாகத் தேடி வந்து விடுவார். அன்றும் கூட எங்களை எங்களுடைய மண்ணைவிட்டு எழும்பச் சொன்ன செய்தியை அறிந்ததும் உடனடியாக என்னைத் தேடி வந்து விட்டார்.

"மாஸ்ரர்.! நான் நெடியகாட்டுப் பிள்ளையார் கோயிலடியில் நிற்கேக்கை தான், கெலியில் இருந்து நோட்டீசைப் போட்டவங்கள்.. இவனுடைய சேட்டையைப் பார்த்தியளோ?....இவன்ரை அடாவடித் தனங்களுக்கு நாங்கள் சும்மா இருக்கக்கூடாது. இந்த ஊர்ப்பிரச்சினைகளில் இருந்தும் ஒதுங்கியிருக்கவேணும் என்று நினைத்தாலும், மனம் கேட்கவில்லை அது தான் உங்களிட்டை வந்தனான்."

"ஓம்... அண்ணை! நானும் அதைப்பற்றித்தான் யோசித்துக் கொண்டிருந்தனான். உங்களுடன் பேசி ஊரவர் என்ற வகையில்

எங்களுடைய ஆட்சேபணையையும், எதிர்ப்பையும் காட்ட வேண்டும். இதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்க வேணும்.இன்னும் இரண்டு நாட்கள் இருக்குத்தானை... அதற்கிடையில் ஏதாவது செய்யவேணும்."

நானும் ஏற்கனவே கொண்டிருந்த அபிப்பிராயத்தை அவரிடம் கூறியதும், உடனடியாக செயலாற்றத் தொடங்கினோம்.

"ஊரில் உள்ள யாரேனும் பிரமுகர்கள் சிலர் மூலம், இது தொடர்பாக ஒரு மகஜர் எழுதி, நல்லூரில் உள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு,இந்த அநியாயத்தை எடுத்துக் கூறி, ஊர் மக்களை எழும்பிச் செல்லவிடாது தடுக்கவேண்டும். எங்களுடைய மண்ணை விட்டு எங்கும் வெளியேறமுடியாது என்பதை இந்த ஆட்சியாளருக்குத் தெளிவு படுத்த வேண்டும்."

செல்வேந்திரா மிகவும் பதற்றமடைந்து காணப்பட்டதை அவருடைய கோபம் கலந்த வார்த்தைகள் எடுத்துக் காட்டிக் கொண்டிருந்தன. அப்பட்டமான ஒரு மனித உரிமை மீறலை மிகச் சாதரணமாகச் செய்வதற்குப் பகிரங்கமாகவே தனது முப்படைகளையும் தயாராக்குகின்ற நிலையில் உள்ள பேரினவாத அரசின் மீது தனது, வெறுப்பைக் கொட்டித் தீர்த்தார்.

"மாஸ்ரர்!... இப்ப நாங்கள் மணியண்ணா வீட்டுக்குப் போய் அவரையும் கூட்டிக் கொண்டு, சங்கிலியனைச் சந்தித்து, அதற்குப் பிறகு ஏற்ற ஒழுங்குகளைச் செய்வோம்.. நாங்கள் இதில் நேரடியாத் தலையிட்டு என்னத்தைச் செய்யிறது..?" அவரே தொடர்ந்தார்..

இருவரும் அம்மன் கோயிலடியில் உள்ள மணியண்ணா வீட்டுக்குச் சென்று, அவரையும் அழைத்துச் செல்வதற்காகப்போய்க் கொண்டிருந்தோம். நாங்கள் போகும் வழி முழுவதும் மக்கள் தங்கள் தங்கள் வீடுகளுக்கு முன்னால் நின்று ஒவ்வொருவரும் என்ன பேசிக் கொள்கின்றார்கள் என்பதைக் கூர்மையாகக் கேட்டுக் கொண்டிருந்தனர். அவர்களுடைய முகங்களிலே ஒரு வித பயம் இருந்தது. ஸ்ரீலங்கா அரசின் இந்தத் திடீர் அறிவிப்பினால் முடிவு எடுக்கமுடியாத ஒரு நிலையில் அவர்கள் தவித்துக் கொண்டிருந்ததை எங்களால் உணரமுடிந்தது.

மணியண்ணா என்று எல்லோராலும் செல்லமாக அழைக்கப்படும் வ.இ.நடனசிகாமணி வல்வெட்டித்துறையின் பிரபலமான ஒரு வர்த்தக குடும்பத்தைச் சேர்ந்தவர். "வ.இ.அப்பா" என்று ஊரறியப்பட்ட பிரபல வர்த்தகரின் மகன் தான் இவர்.. விடுதலைப் போராட்டத்தில் தனது மகனான "கப்டன் அலன்" என்ற மூத்த போராளியை நாட்டுக்காகக் கொடுத்த பின்னரும் கூட, எமது மக்களுக்காக மனம் சலிக்காது, வல்வெட்டித்துறை பிரஜைகள் குழுவின் பொருளாளராக இருந்து துணிச்சலுடன் பணியாற்றிக்

கொண்டிருந்தார். மணியண்ணாவை வல்வெட்டித்துறையில் தெரியாதவர்கள் யாருமே இல்லை என்ற அளவுக்கு எல்லோருக்கும் மிகவும் பரிச்சயமானவர். அவருடைய வாழ்க்கையில் பல துன்பங்களை அனுபவித்தாலும் தன்னுடைய துயரத்தை வெளியே காட்டிக் கொள்ளமாட்டார். எந்த நேரமும் அவருடைய முகத்திலே சிரிப்பு களைகட்டிக் கொண்டிருக்கும்.

"மணியண்ணா!......மணியண்ணா!...."

மணியண்ணாவின் வீட்டுக் கதவைத் திறந்து கொண்டு, அவரை அழைத்தபடி உள்ளே செல்லவும்,எங்களை எதிர்பார்த்திருந்தது போல் அவரே வாசலுக்கு வந்தார்.

"மணியண்ணா... சங்கிலியனிடம் இது பற்றித் தெரியப்படுத்தி, எங்கடை ஊர்ப்பிரமுகர்கள் சிலரைக் கொண்டு ஒரு மகஜர் தயாரித்து இது சம்பந்தமாக ஒரு நடவடிக்கை எடுக்க வேண்டும்."

"என்ன பாருங்கோ.இதுக்கெல்லாம் இப்ப யார் வரப் போகிறார்கள் பாருங்கோ... நாங்கள் தான் ஏதாவது செய்ய வேணும் பாருங்கோ..."

அவர் தனது வழமையான பாணியில் மிகவும் பவ்வியமாக வார்த்தைக்கு வார்த்தை "பாருங்கோ" என்ற வார்த்தைகளைக் கூறுவது போல், அன்றும், இவ்வாறு கதைத்துக் கொண்டே, போட்டிருந்த ஆடையுடனேயே தோளில் ஒரு வெள்ளைத் துண்டைப் போட்டபடி, "விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி" அலுவலகத்திற்கு எங்களுடன் புறப்படத் தயாராகிவிட்டார்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி என்பது, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஒரு அரசியல் பிரிவாகச் செயற்பட்டு வருகின்ற ஒரு ஜனநாயக அமைப்பாகும். இது ஸ்ரீலங்கா தேர்தல் செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஒரு அரசியல் கட்சியாக இருப்பதால் மக்களுடைய பிரச்சினைகளை நேரடியாக மக்கள் முன்னணியே கையாண்டு வந்ததால், நாங்களும் அதற்குப் பொறுப்பாகச் செயற்படும் சங்கிலியன் என்பவரைத் தேடிக் கொண்டு சென்றோம். இந்தக் கட்சி இன்றும் தேர்தல்கள் செலகத்தில் பதிவு செய்ய்பபட்ட ஒரு கட்சியாகவே இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

சங்கிலியன் அப்பொழுது தான் வெளியில் புறப்படுவதற்குத் தயாராகிக் கொண்டிருந்த நிலையில், எங்களைக் கண்டதும், சைக்கிளை ஓரமாக நிறுத்திவிட்டு உள்ளே அழைத்துச் சென்றார்.

"சங்கிலியன்..! இண்டைக்குக் கெலியில் இருந்து போடப்பட்ட துண்டுப் பிரசுரம் சம்பந்தமாக, நாங்கள் ஏதாவது நடவடிக்கை எடுக்கவேணும்

தானே?...... ஊரில் உள்ள சிலரை அழைத்துச் சென்று, சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளுடன், பேசி இந்தஅச்சுறுத்தலுக்கும் அடாவடித் தனங்களுக்கும் ஒரு முடிவு காணவேண்டும்."

சங்கிலியனைப் பார்த்து நான் இப்படி, ஆரம்பித்து வைத்ததும், மணியண்ணாவே, தொடர்ந்தார்.

"நாற்பத்தெட்டு மணித்தியாலங்களுக்குள்ளை பாருங்கோ தம்பி. எங்கள் எல்லாரையும் ஒட்டு மொத்தமாக எழும்பச் சொல்லிக் கேட்கிறது எவ்வளவு காட்டுமிராண்டித் தனமானது.?.... அவன் விரும்பினால் எங்கள் எல்லாரையும் இங்கை வைத்தே குண்டு போட்டு அழித்துவிட்டுப் போகட்டும் பாருங்கோ தம்பி. எங்கடை மண்ணை விட்டு எங்களை எழும்பச் சொல்லிக் கேட்கிறதுக்கு இவனுக்கு என்ன உரிமை இருக்கிறது? நாங்கள் எங்கடை ஊரை விட்டு எழும்பமுடியாது என்பதை ஐசிஆர்சீ (ICRC) க்கு தெரியப்படுத்தி உரிய நடவடிக்கையை எடுக்கச் செய்யவேணும் பாருங்கோ தம்பி..."

"ஓம்... அண்ணை அவன் ஆங்கிலத்திலையும் கூட அச்சடிச்சுப் போட்டிருக்கிறான் அப்ப ஐசிஆர்சிக் காரங்களுக்கும் தெரியப்படுத்தி தான் செய்யப்போறதை இவ்வளவு திமிராகக் காட்டியிருக்கிறான்".

தன்னிடம் இருந்த, ஆங்கில மொழியில் அச்சிட்டு உலங்கு வானூர்தியில் இருந்து போடப்பட்ட துண்டுப் பிரசுரத்தையும் சங்கிலியன் எங்களுக்குக் காட்டினார்.

"அது சம்பந்தமாகக் கதைக்கிறதுக்குத் தான் நான் யாழ்ப்பாணம் வெளிக்கிட்டனான். ராஜன் அண்ணையுடன் கதைத்து என்ன செய்யலாம் என்பதைப் பற்றி இரவைக்கு வந்து சொல்லுறன்..."

சங்கிலியன் இதனைக் கூறிக் கொண்டே யாழ் மாவட்டஅரசியல் துறைப் பொறுப்பாளராகச் செயற்படும் இராஜன் என்பவரைச் சந்திப்பதற்குப் புறப்படுவதற்கு ஆயத்தமாகிவிட்டார்.

வல்வெட்டித்துறை மண்ணின் சாதாரண பிரஜை என்ற வகையில் எங்களுக்கும் ஒரு தார்மீகக் கடமை இருப்பதால், அவரிடம் எங்களுடைய அபிப்பிராயத்தைக் கூறிவிட்டு அங்கிருந்து வெளியேறினோம். அங்கிருந்து செல்வேந்திரா தனது தாய் வீட்டிற்குப் போய்ப்பார்த்து விட்டு வருவதாகக் கூறி, வல்வெட்டித்துறைச் சந்தியில் இருந்து மேற்குப் புறமாக உள்ள ஊரிக்காடு என்ற இடத்தை நோக்கிப் புறப்பட்டார். மணியண்ணாவும், அருகில் உள்ள "அலன் வீதியில்" அமைந்திருந்த அவருடைய வீட்டை நோக்கிப் போக நானும், அவர்களிடமும், சங்கிலியனிடம் இருந்தும் விடை பெற்றுக் கொண்டு மீண்டும் வல்வைக் கல்வி மன்றம் நோக்கி விரைந்தேன்.

# 04. வல்வைக் கல்வி மன்றத்தின் மீது குண்டு வீச்சு

வல்வைக் கல்வி மன்றம் !.......

வல்வெட்டித்துறைச் சந்தியில் இருந்து சுமார் 100 மீற்றர் தூரத்தில் கிழக்காக அமைந்துள்ள மாடிக்கட்டிடத்தில் கடந்த பன்னிரண்டு வருடங்களாக வல்வெட்டித்துறை மாணவர்களுக்கு மட்டுமல்லாது பொலிகண்டி,கம்பர்மலை,தொண்டைமானாறு,வல்வெட்டி பிரதேசங்களில் இருந்து வருகை தரும் மாணவர்களுக்கான கல்விச் சேவையை ஆற்றி வருகின்ற ஒரு நிறுவனம்.!

கடந்த பன்னிரண்டு வருடங்களுக்கு மேலாக ஒரு உன்னதமான கல்விச் சேவையை வழங்கி வருவதுடன்,கலை கலாசாரப் பணிகளையும்,பல்வேறு சமூகப் பணிகளையும் ஆற்றி வருகின்ற ஒரு கல்வி,கலாசார நிறுவனம் இது பல சமூகத் தொண்டர்களினால் அர்பபணிப்புடன் உருவாக்கப்பட்ட ஒரு கூட்டு நிறுவனமாக இயங்கி வருகின்றது.

வல்வெட்டித்துறை சிதம்பரக் கல்லூரியின் கல்வி அபிவிருத்திக்கு உதவக் கூடிய வகையில் அதிபராக இருந்த கோ.செல்வவிநாயகம் அவர்களின் அனுமதியுடன் பாடசாலைக்குப் புறம்பான ஒரு வேலைத் திட்டமாக இலவச வகுப்புக்களை தரம் 9 தொடக்கம் 13 வரை நடத்துவதற்காக கல்வி வளர்ச்சியின் மீது அக்கறை கொண்ட சிலரால் நடத்தப்பட்டது.இந்த முயற்சியில் குறிப்பாக என்னுடன் அப்போது மாத்தளையில் ஆசிரியராக இருந்த சு.இராஜேந்திரா, மேல் நீதிமன்ற நீதிபதியாக இருந்து காலம் சென்ற ந.யோகசிகாமணி, சு.சக்திவடிவேல், எஸ்.சித்திரவடிவேல், பா.குமாரஸ்ரீதரன் ஆகியோர் இலவசமாகவே கற்பித்து வந்தனர். மிகச் சிறப்பாக வகுப்புகள் நடைபெற்று வந்தபோதும், பெற்றோர்களினதும், மாணவர்களினதும் தனியார் கல்வி நிலைய மோகம் மேலாதிக்கத்தைச் செலுத்தி வந்தது.

எதுவுமே இலவசமாகக் கிடைக்குமாயின் அதற்குப் பெறுமதியும் இல்லை என்பது போல்,அந்தநேரம் வல்வெட்டித்துறையில் செயற்பட்டு வந்த சில தனியார் கல்வி நிறுவனங்கள் பெருமளவு பணத்தைப் பிள்ளைகளிடம் சுரண்டி "ரியூற்றரி"களை நடத்தி வந்ததுடன் எங்களுடைய இலவச வகுப்புக்களை முறியடிப்பதற்கான பல்வேறு தந்திரோபாயங்களையும், நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வந்ததால், அவர்களுக்கு எதிராக எங்களால் தாக்குப் பிடிக்க முடியவில்லை. தனியார் கல்விநிலையங்கள், எங்களுடைய பிள்ளைகளின் சுயமான கற்றலுக்கு ஒரு சவாலாகவே இருந்தன.

அதேவேளை 1978 ஆம் ஆண்டு வல்வை சிதம்பரக் கல்லூரியில், க.பொ.த. சாதாரண தர பொதுப் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருந்த பொழுது, தமது ரியூற்றரியில் படிக்கின்ற மாணவர்களுக்கு, பரீட்சை மண்டபத்தில் கடமையில் இருந்த ஒரு பரீட்சை நோக்குநர் மூலம், அங்கே கடமையில் இருந்த சிற்றூழியரைக் கொண்டு வினாத்தாள்களைப் பெற்று, அதற்குரிய விடைகளைக் கல்லூரிக்கு முன்பாக இருந்த தேநீர்க் கடையில் இருந்து, தயாரித்து பரிமாற்றம் செய்து கொண்டிருந்ததால், அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டிய அவசரமும் எங்களுக்கு ஏற்பட்டது . அப்பொழுது தான் நாங்கள் ஒரு முடிவு எடுக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டோம். வல்வெட்டித்துறையின் முற்போக்கு சிந்தனையுள்ள ஆசிரியர்கள் ஒன்று சேர்ந்து. "ரியூற்றரியை ரியூற்றரியினாலேயே அழிக்கவேண்டும்" என்ற சங்கற்பத்துடன் 1979 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 10 ஆம் திகதி வல்வைக் கல்வி மன்றம் என்ற கல்வி நிறுவனத்தை "கல்வியே செல்வம்" என்ற மகுட வாக்கியத்துடன் ஆரம்பித்தோம்.

அத்தகைய ஒரு கல்வி நிறுவனத்தில் கற்பிப்பதற்கு நாங்கள் ஒவ்வொருவரும் பெருமைப்பட்டுக் கொண்டோம்.அதனாலேயே, நாங்கள் ஒவ்வொருவரும் அர்ப்பணிப்புடன் செயலாற்றி வந்தோம். இந்த நிலையில், ஸ்ரீலங்கா அரசின் எச்சரிக்கையையும் பொருட்படுத்தாது, வல்வைக் கல்வி மன்றம் நோக்கிச் சென்று கொண்டிருந்தேன்.

அன்று வல்வெட்டித்துறையில் நிலவிய பதட்டம் காரணமாக பெற்றோர் தமது பிள்ளைகளை, கல்வி மன்றத்திற்கு அனுப்பியிருக்க மாட்டார்கள், இன்றைய வகுப்புகளை இரத்துச் செய்து விட வேண்டுமென்று எண்ணியபடி மன்றத்திற்குள்ளே நுழைந்த எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

ஆம் ! அங்கு ஏராளமான துவிச்சக்கர வண்டிகள் நிறுத்தப்பட்டிருந்தன. வழமை போன்றே சுமார் 250 மாணவர்கள் வரை மிகவும் கலகலப்பாகவும் உற்சாகமாகவும் காணப்பட்டனர். இங்கே நின்ற மாணவர்களின் கலகலப்பும் உற்சாகமான போக்கும் எங்களுக்கும் உற்சாகத்தைக் கொடுத்தது. என்னைத் தொடர்ந்து மன்றத்தில் கல்விப் பணியாற்றுகின்ற அசிரியர்களான சு.சக்திவடிவேல், ந.அரியரத்தினம், ஆர்.எல்.தேவராஜா, ஆ.அதிரூபசிங்கம், இரத்தினசிங்கம், பா.குமாரஸ்ரீதரன் மற்றும் கௌசல்யா செல்வி.சு.பழனிவேல் ஆகியோர் வரத் தொடங்கி விட்டனர்.

ஸ்ரீலங்கா அரசின் இந்த எச்சரிக்கை வல்வெட்டித்துறை மக்களின் மனதில் எவ்வித சஞ்சலத்தையும் ஏற்படுத்தியதாகத் தெரியவில்லை. அவர்கள் எவருமே மனக்குழப்பம் அடைந்ததாகவும் தெரியவில்லை... அரசாங்கத்தின் காலக்கெடுவுக்கு இன்னும் இரண்டு நாட்கள் இருக்கின்றது, என்றும் அதற்கிடையில், ஐக்கிய நாடுகள் ஸ்தாபனமும் ஏதாவது நடவடிக்கை எடுக்கும் தானே என்று நம்பி இருந்தவர்களும், பின்னர் தேவையானால் பார்த்துப்

போகலாம் என்று இருந்தவர்களும் தமக்கு நேரப் போகின்ற அவலங்களை எதிர்பார்க்காத நிலையில், எல்லாவற்றையும் மறந்து கலகலப்பாக இருந்தனர்.

அம்மன் கோயிலடியில் இருந்து வல்வைக் கல்வி மன்றம் வரையான பருத்தித்துறை பொன்னாலை வீதி எங்கும் ஒரே மக்கள் கூட்டம்... ஏதோ கூடிக் கூடி நின்று கதைத்துக் கொண்டிருப்பதும், வானத்தை நிமிர்ந்து பார்ப்பதுமாகவே நின்றனர். ஆனாலும் அவர்கள் ஒவ்வொருவர் முகங்களிலும் ஏதோ ஒரு இனம்புரியாத மரணபயமும், ஏக்கமும் குடிகொண்டதையும் காணக் கூடியதாக இருந்தது.

நான் வல்வைக் கல்வி மன்றத்திற்குள் நுழையும் பொழுதே நிசப்தமாக இருந்தது. இங்கே வழமை போன்று வகுப்புகள் எல்லாம் நடைபெறுவதை அந்த அமைதியான சூழல் எடுத்துக் காட்டிக் கொண்டிருந்தது.

அந்த நேரம் கல்வி மன்றத்திற்கு வெளியே சந்தைப் பகுதியில் மக்களின் இரைச்சலும், ஆரவாரமும், பதட்டமும் அதிகரித்துக் காணப்பட்டது... அந்தச் சத்தம் வரவர அதிகரித்துக் கொண்டே வர கல்வி மன்றத்திற்குள்ளே இருந்த பிள்ளைகளிடையேயும் பதட்டம் அதிகரித்தது.

பலாலிப் பகுதியில் இருந்து பேரிரைச்சலுடன் வானத்தில் வட்டமிட்டபடி பறந்து வந்து நான்கு அவ்றோ குண்டு வீச்சு விமானங்கள் சாகசம் காட்டுவது போல்,கடற்கரைப் பக்கமாகப் பறந்து கொண்டு போய்க் கொண்டிருந்தன.

> “சேர்... இண்டைக்கே சனங்களை எழும்பச் செய்யிறதுக்காக இப்படி வந்து வெருட்டிவிட்டுப் போறான் போல கிடக்கு...”

மேல் மாடியில் இருந்து சடுதியாகக் கீழே இறங்கிக் கொண்டு ஓடிவந்த பதினோராம் ஆண்டு மாணவர்களில் ஒருவனான முகுந்தன் கூறிக் கொண்டே வெளியே சென்று வானத்தை அண்ணாந்து பார்த்தான்..

> “தம்பி முகுந்தன்!.... தலையை வெளியை காட்டாதை. பிறகு உன்னைப் பார்த்துப் போட்டு இங்கை வந்துதான் குண்டு போடுவான்.. உள்ளை வந்து நில்லுங்கோ.”

எனக்குள் உள்ளூரப் பயம் பிடித்துக் கொண்டாலும், அதனை மாணவர்களுக்கு முன்னால், வெளியே காட்டிக் கொள்ளவில்லை... அவனை எச்சரித்து விட்டு, உள்ளே திரும்பினேன்.

> “ டேய்!... மச்சான்!..எங்கடைஅம்மன் கோயில் கொடியேற்றத்திற்கு முதல் நாள் கட்டியங்கூற, காத்தவராயர் ஊரெங்கும் சுத்தி வாறது மாதிரி இவனும் ஆள் காட்டிப்போட்டுப் போறான் போல..”

அதே வகுப்பைச் சேர்ந்த ஒரு மாணவன், தனது நண்பர்களைப் பார்த்து வேடிக்கையாகக் கூறிக் கொண்டிருந்தான். இந்தப் பதட்டமான ஒரு சூழ்நிலையிலும் கூட இவனால் எப்படிப் பகிடியாகக் கதைக்கமுடிகின்றது என்று எனக்குள் எண்ணியபடி அவனுடைய சந்தர்ப்பத்திற்கு ஏற்ற பேச்சை நினைத்து வியந்தேன்.

தொடர்ந்தும் வானத்தில் விமானங்களில் இருந்தும் இரைச்சல் வருவது போன்ற ஒரு பிரமை. அதற்கு மேலும் இவ்வளவு தொகையான மாணவர்களை இங்கே வைத்திருப்பது என்பது ஆபத்தாக இருக்கும் என்று எண்ணினேன்.

“பிள்ளைகள்... கிட்டடியிலை வீடுகள் உள்ளவர்கள், விரும்பினால் வீடுகளுக்கு ஓடிப் போங்கோ... பின்பக்கத்து வழியும் திறந்திருக்குது. மற்ற ஆக்கள் பின்னுக்குள்ளை இருக்கிற பதுங்கு குழிகளுக்குள் போய் நிலலுங்கோ.”

எங்களுடன் நின்ற சக்திவடிவேல் மாஸ்ரர் மாணவர்களை நோக்கித் துரிதமாகக் கட்டளையிட்டபடி சுற்றிச் சுற்றி ஒவ்வொரு மாணவர்களையும் பார்த்துக் கொண்டு வந்தார்.

“இந்த ஆபத்தான நேரத்திலை ஒருவரையும் வெளியை போங்கோ என்று நாங்கள் கலைக்கவில்லை. போகக் கூடிய பிள்ளைகள் மட்டும் அதுவும் கிட்டை இருக்கிறாக்கள் விரும்பினால் போகலாம்.”

வழக்கமாகவே எல்லோருடனும் கலகலப்பாகப் பேசுகின்ற அதிரூபசிங்கம் மாஸ்ரர் மாணவர்களின் மத்தியில் நின்று சத்தமிட்டுக் கொண்டிருந்தார். சில வேளை எங்களுடைய கட்டுப்பாடுகளையும் மீறி மாணவர்கள் முண்டி அடித்துக் கொண்டு தெருவுக்கு வெளியே ஓடி ஏதாவது ஆபத்து நேர்ந்து விட்டால் என்ன செய்வது என்று, அவருக்கும் ஒரு பயம் வந்திருக்கவேண்டும்..!

சிறிய ஒரு இடைவெளியைப் பார்த்து சில மாணவர்கள் தமது துவிச்சக்கர வண்டிகளை எடுத்துக் கொண்டு மன்றத்தை விட்டும் வெளியே ஓடினார்கள். அவர்கள் மன்றத்தின் வாசலை விட்டு வெளியே வந்ததும், காங்கேசன்துறையில் இருந்து வல்வெட்டித்துறையின் கடற்கரைப் பக்கமாக இரைந்தபடி சென்று கொண்டிருந்த கிபீர் விமானம் ஒன்று சடுதியாகத் திரும்பி வந்து, முதலாவது குண்டை முத்துமாரி அம்மன் கோயில் பக்கமாகப் போட்டதும், அது பேரிரைச்சலுடன் விழுந்து வெடித்ததும், அம்மன் கோயிலடிப் பக்கத்தில் இருந்து கரும் புகைமண்டலம் தோன்றியது... வாசல் வரை சென்ற மாணவர்களும் சில ஆசிரியர்களும், அந்த இரைச்சலால் அதிர்ந்து போய்,

துவிச்சக்கர வண்டிகளை அப்படியே போட்டு விட்டு மணல் தரையில் காதுகளைப் பொத்தியபடி விழுந்து படுத்தனர்.

இரு வெவ்வேறு பகை நாடுகளுக்கிடையில் யுத்தம் நடைபெறும் பொழுது பாடசாலைகளில் குண்டு வீச்சுக்களில் இருந்து தப்புவதற்கான வழிமுறைகளைக் கற்றுக் கொடுப்பார்கள் என்று வரலாற்றுச் சம்பவங்களினூடாகத்தான் படித்திருக்கின்றோம். ஆனால் எங்களுடைய நாட்டிற்குள் எங்களுடைய நாட்டுப் படைகளினாலேயே விமானக்குண்டு வீச்சுக்களுக்கு ஆளாகும் பொழுது, அதில் இருந்து தப்பிக் கொள்வதற்கான வழிமுறைகள் எல்லாம் பாடசாலைகளிலேயே கற்றுக் கொடுத்து செயல்முறைப் பயிற்சிகளும் வழங்கப்பட்டு வருவதால், எமது பிள்ளைகள் விமானங்கள் குண்டுகளைப் போடும் பொழுது, எவ்வாறு நடந்து கொளவது என்பதில் நன்கு தேர்ச்சி பெற்றிருந்தனர்.

வல்வைக் கல்வி மன்றத்தின் மாடிக் கட்டிடத்தின் கீழ் அவலக்குரல் எழுப்பியபடி சுமார் 100 மாணவர்கள் வரை அச்சத்துடன் நடுங்கிக் கொண்டு நின்றனர். அவர்களில் பத்துப் பேரைத் தவிர ஏனையவர்கள் எல்லாரும் பெண்கள்! குண்டு வெடித்ததில் இருந்து அவர்களின் அழுகுரல்கள் இன்னும் ஓயவில்லை.

அங்கு நின்றவர்களை ஒருமாதிரி ஆறுதல் படுத்துவதற்குள் எங்களுக்கும் போதும் போதுமென்றாகிவிட்டது. அவர்களை ஒருவாறு அமைதிப்படுத்தித் தேற்றிக் கொண்டிருப்பதற்கிடையில், மற்றுமொரு குண்டு வீச்சு விமானம்,நாங்கள் ஒதுங்கி நின்ற கட்டிடத்தின் வடகிழக்கு மூலையில் சுமார் 75 மீற்றர் தூரத்தில் உள்ள நடராஜா வீதியில் நெருக்கமாக இருந்த வீடுகளின் மேல் அடுத்தடுத்து இரண்டு குண்டுகளைத் தள்ளியதும் அவை பேரிரைச்சலுடன் விழுந்து வெடித்துச் சிதறியது.அந்த அதிர்வுகள் நாங்கள் நின்ற கட்டிடத்தின மீதும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியது.அங்கே பதற்றத்துடன் நின்ற மாணவிகளின் கையில் இருந்த புத்தகங்கள் வெடிப்பொலிகளின் அதிர்வின் வீச்சத்தினால் தூக்கி எறியப்பட்டன.மன்றக் கட்டிடத்தின் கதவுகள்,யன்னல்களின் தடித்த கண்ணாடிகள் “கலீர்,கலீர்“ என்று உடைந்து நொருங்கிச் சிதறிக் கொண்டிருந்தன. எங்கும் ஒரே புகை மண்டலமாக இருந்தது. வல்வெட்டித்துறை மண் புகை படிந்து போய்க் காணப்பட்டது..!

“ஐயோ சேர்... பயமாக் கிடக்கு!.”

தாய்க் கோழியின் செட்டைக்குள் குஞ்சுகள் பயந்து பதுங்குவது போல், அந்தப் பிள்ளைகள் பயத்தினால் நடுங்கியபடி, ஆசிரியர்களுடன் ஒட்டிக் கொண்டு நின்றனர். அவர்களைப் பார்க்கும் பொழுது எனக்குப் பரிதாபமாக வந்தது. எனது உதடுகள் கடவுளைப் பிரார்த்தித்துக் கொண்டிருந்தன.

"பிள்ளைகள் !...பயப்படாதையுங்கோ... உங்கடை மனதையும், உடலையும் இந்த நேரத்திலை தான் உறுதியாக வைத்திருக்க வேண்டும்."

பயத்தினால் நடுங்கியபடி, என்ன செய்வதென்றே தெரியாது தவித்துக் கொண்டிருந்த அந்த மாணவர்களுக்கு, அந்த நேரம் நான் கூறிய வார்த்தைகள் ஔடதமாக இருந்திருக்க வேண்டும். சிறிது நேரம் எந்தவிதமான சத்தத்தையும் எழுப்பாது அமைதியாக நின்று பார்த்துக் கொண்டிருந்தனர். வானத்தில் குண்டு வீச்சு விமானங்களினதும், உலங்கு வானூர்திகளினதும், பேரிரைச்சல் வரவர அதிகரித்துக் கொண்டு வந்தது. கடற்கரைப்பக்கமாக இரைந்து கொண்டு சென்ற விமானங்களை ஒரு தடவை பார்க்கவேண்டும் என்று மெதுவாகத் தலையை நீட்டி வெளியே பார்த்தேன். நான்கு அவ்ரோ விமானங்கள்,இரண்டு கிபீர் குண்டு வீச்சு விமானங்கள். நான்கு உலங்கு வானூர்திகள்... பீப்பா குண்டுகளைத் தள்ளும். இரண்டு வை-12 சகடை விமானங்கள்.

"அட! கடவுளே! ஒரு சின்னஞ்சிறிய நகரத்தை அழிப்பதற்கு இவ்வளவு போர்ப் படை விமானங்களா?.....".

என்னால் நம்பவே முடியவில்லை. எங்களையும் இந்த நாட்டின் பிரஜைகள் என்று கூட எண்ணிப் பார்க்காத இந்தப் பேரினவாத அரசுக்குத் தமிழ் மக்களால் எப்படி விசுவாசமாக இருக்க முடியும்.?

நாலாபுறத்திலும் இருந்து பறந்து கொண்டிருந்த குண்டு வீசி அழிக்கும் வான் கலங்களின் இரைச்சல் காதைப் பிளந்து கொண்டிருந்தது. எந்தப் பக்கத்தில் இருந்து வந்து குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்படுகின்றது என்று இனங்காணமுடியாத நிலையில் சனங்கள் அலறித் துடித்துக் கொண்டு ஓடித் திரிந்த அந்த அவலம் உலகில் எந்த மக்களுக்கும் ஏற்படக்கூடாது.

கண் இமைக்கும் நேரத்திற்குள்,ஒரு குண்டு வீச்சு விமானம்,நாங்கள் நின்று கொண்டிருந்த கட்டிடத்திற்கு, தென் மேற்குப் பக்கத்தில் 50 மீற்றர் உள்ளதும் வல்வெட்டித்துறையின் ஒரே ஒரு கத்தோலிக்க தேவாலயமாகவும் விளங்கும், புனித செபஸ்தியார் தேவாலயத்திற்கு மிக அருகாமையில் பாரிய குண்டைத் தள்ளி விட்டு வேகமாக மேலே பறந்து சென்று விட்டது.. கீழே தரையில் இருந்து விடுதலைப் புலிகள் விமான எதிர்ப்பு ஆயுதங்களால் தாக்கி விடுவார்களோ என்ற அச்சம் காரணமாக இருக்கலாம்.

அந்தக் குண்டு வீச்சைத் தொடர்ந்து, அந்தப் பிரதேசத்தில் இருந்து சுமார் 100 மீற்றர் தூரத்திற்குக் கற்களும், மணலும், கூரைத் தகடுகளும் பெரும் விசையுடன் தூக்கி, வீசி எறியப்பட்டன. அந்தக் குண்டுகளின் சிதறல்களில் பல நாங்கள் நின்ற கட்டிடத்தின் வெளிப்புறத்திலும் விழுநதது.

அதற்கு மேலும் அந்தக் கட்டிடத்தின் கீழ் நின்றால்,பேரழிவை நாங்கள் மட்டுமல்லாது, எங்களை நம்பி அங்கே நின்று அலறிக் கூக்குரல் இட்டுக் கொண்டிருந்த பிள்ளைகளும் சந்திக்கவேண்டிவரும் என்று அச்சமடைந்த நிலையில்,

"சக்தி..! பிள்ளைகளைப் பின்புற வாசல் வழியாகக் கூட்டிக் கொண்டு தெணியம்பைப் பக்கம் ஓடுங்கோ... நான் மிச்சப் பிள்ளைகளையும் கூட்டிக் கொண்டு வாறன். இனி இங்கே ஒரு நிமிடம் கூட நாங்கள் நிற்கக்கூடாது... சிலவேளை அடுத்த குண்டு எங்கடை கட்டிடத்திற்கே போடலாம். எல்லாரும் வெளியே ஓடுங்கோ"

எனது அச்சத்தை அது வரை வெளியே காட்டிக் கொள்ளாது இருந்த என்னால், அதற்கு மேலும் எனது நிலையை மறைக்க முடியவில்லை... எனது இதயம் படபடத்துக் கொண்டிருந்தது. இந்தப்பிள்ளைகளுக்காக என்னுடைய மனம் கடவுளைப் பிரார்த்தித்துக் கொண்டிருந்தது. வல்லைக் கல்வி மன்றக் கட்டிடத்தின் பிற்பக்கப்பாதையினூடாக அங்கே நின்று நடுநடுங்கிக் கொண்டு நின்ற மாணவர்களையும் அழைத்துக் கொண்டு வெளியேறுவதற்காக நின்றபோதும்,சில மாணவர்களால் அந்த இடத்தை விட்டு ஒரு அடிகூட நகர முடியாத நிலையில் அச்சத்தினால், நடுங்கிக் கொண்டு நின்றனர்.

"பிள்ளைகள் கெதியாய் ஓடுங்கோ... முதல்லை இந்த இடத்தை விட்டு வெளியேறுங்கோ..."

என்னால் அதற்கு மேலும் பொறுமைகாக்க முடியவில்லை. சடுதியாகச் சத்தமிட்டுக் கொண்டே, கட்டிடத்தின் பின்புறமாக தற்காலிகமாக அமைக்கப்பட்ட தெற்குப் புறவாசல் வழியாக எல்லாப் பிள்ளைகளையும், ஆசிரியர்களையும் கூட்டிக் கொண்டு வெளியே ஓடினோம்.

1987 ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா அரசாங்கத்தினால் வடமராட்சி மக்களை அழித்தொழிக்கும் ஒரு தந்திரோபாயமாக மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையான "வடமராட்சி லிபரேசன் ஒப்பரேசன்" தாக்குதலுக்கு முன்னரேயே எதிர்பாராத வகையில் ஆபத்துக்கள் ஏற்பட்டால், மாணவர்களோ அல்லது ஆசிரியர்களோ அந்த இடத்தில் இருந்து தப்பிச் செல்வதற்கு ஏற்றவகையில், பின்புற மதிலின் ஒரு பகுதியை இடித்துச் சிறிய கதவு ஒன்று போடப்பட்டதால், இந்த நெருக்கடியான சந்தர்ப்பத்தில் மாணவர்களும், ஆசிரியர்களும் வெளியேறிச் செல்வதற்கு வசதியாக இருந்தது. எங்களுடன் இருந்த ஆசிரியர்களையும் மாணவர்களையும் அழைத்துக் கொண்டு பின்புற வளவையும் தாண்டி உலகுடைய பிள்ளையார் கோயிலுக்குச் செல்லும் சிறிய சந்தையும் கடந்து ஓடிக்கொண்டிருந்த பொழுது, வை-12 சகடை விமானம் பாரிய இரைச்சலுடன் உறுமியபடி, தலைக்கு மேலாகப் போய்க் கொண்டிருந்தது... உடனடியாக,ஒரு கணம் கூடத்

தாமதிக்காது, என்னுடன் வந்தவர்களை அப்படியே காதுகளை மூடியபடி,முகம் குப்புறப்படுக்குமாறு கூறிவிட்டு,நானும் அவர்களுடன் சேர்ந்து முகம் குப்புறப் படுத்தேன். அந்த ஒரு வினாடிக்குள் இரத்தமே உறைந்து விடுவது போல்,பேரிரைச்சலுடன், வை-12 சகடை விமானத்தில் இருந்து, சுமார், 350 கிலோவுக்குக் கூடுதலான நிறையுள்ள, பாரிய குண்டு ஒன்று,நாங்கள் அதுவரை பாதுகாப்புக்காகத் தங்கி நின்ற வல்வைக் கல்வி மன்றத்தின், உயர்ந்த மாடிக்கட்டிடத்தின் மீது, நாங்கள் நின்ற அதே இடத்தின் மீதே, விழுந்து வெடித்ததும், எங்களுடைய தலை முழுவதும் மண்துணிக்கைகளும், அஸ்பெஸ்ரேர்ஸ் சீற் துண்டுகளும், அலுமினியம் கூரைத் தகடுகளும், பச்சைத் தாவரங்களின் இலைத்துகள்களும், வீசி எறியப்பட்டன.

அந்தச் சத்தத்தைத் தொடர்ந்து, பிரமாண்டமான அந்த மாடிக் கட்டிடம் படபடவென்று எங்கள் கண்ணுக்கு முன்னாலேயே சரிந்து விழுந்து கொண்டிருந்தது.





வல்வைக் கல்வி மன்றத்தின் சரிந்து போன மாடிக்கட்டிடத்தின் ஒரு பகுதி

அதற்கு முன்னால் நிறுத்தப்பட்டிருந்த துவிச்சக்கர வண்டிகளின் பாகங்கள், துண்டு துண்டாக்கப்பட்டு வீசி எறியப்பட்டன... துவிச்சக்கர வண்டியின் சில பகுதிகள் இங்கே இருந்த தென்னை மரங்களிலும் வேப்ப மரங்களிலும் தொங்கிக் கொண்டிருந்தன. பெரிய கற் துகள்கள், அந்த வளவுகள் எங்கும் சிதறிப் பறந்தன.!..


1986 ஆம் ஆண்டு ஒப்பரேசன் லிபரேசன் தாக்குதலைத் தொடர்ந்து, ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் இந்தக் கட்டிடம் முகாமிடப்பட்டிருந்த போதும், அதன் பின்னர் 1988 ஆம் ஆண்டு இந்திய இராணுவத் தினர் முகாமிட்டு

இருந்த நேரத்திலும் கூட,அந்த பிரமாண்டமான கட்டிடமோ அல்லது அங்கே இருந்த பெருமளவு மரத் தளபாடங்களோ, கற்றல் உபகரணங்களோ ஆவணங்களோ சேதமாக்கப்படவில்லை. ஆனால், ஸ்ரீலங்கா அரசின் அதி உயர் கோரத்தனமான தாக்குதலின் சின்னமாக அந்த உறுதியான மாடிக் கட்டிடம் சரிந்துபோய் இருந்தது.

அந்தச் சிறிய சந்தில் விழுந்து படுத்திருந்த மாணவர்களையும் ஆசிரியர்களையும் அவசர அவசரமாக அழைத்துக் கொண்டு,பின்புற வழியாக வேறு ஒரு வீட்டினூடாக அழைத்துச் சென்று என்னுடைய வீட்டிற்குக் கூட்டிக்கொண்டு ஓடினேன். மாணவர்களின் முகம் மற்றும் உடல்பகுதிகள் பயத்தின் காரணமாகவோ என்னவோ வியர்வையால் நனைந்து போய் இருந்தது. எங்களுடைய வீட்டை அடைந்ததும் ஏதோ ஆபத்தான கட்டத்தைக் கடந்துவிட்டது போல ஒரு ஆறுதலாக இருந்தது... ஆனால் என்னுடன் வந்த மாணவர்களில் இருந்த பயம் இன்னும் அதிகரித்துக் கொண்டு வந்ததை என்னால் உணரமுடிந்தது. அவர்களுடைய பெற்றோருக்குக் கூட தகவல்களைச் சொல்லி அனுப்ப முடியாத நிலையில் தவித்துக் கொண்டிருந்தோம். மாணவர்களில் சிலருக்கு கற்களின் சிதறல்களால் ஏற்பட்ட காயங்கள் இருந்தன. அவர்களுக்கு வீட்டில் வைத்து முதலுதவி செய்து அவர்களுடைய காயங்களுக்கு மருந்து வைத்து, பன்டேஜ் போட்டுக் கட்டினேன். அவர்களில் அன்றூரஞ்சிதன் என்ற மாணவனுக்கு ஓரளவு பெரிய காயமாக இருந்தது..... அவருக்கும் பன்டேஜினால் கட்டிவிட்டு முதலில் என்னுடன் வந்த சுமார் பதினைந்து வரையுள்ள மாணவர்களையும் என்னுடைய பிள்ளைகளையும் எங்கள் வீட்டில் சீமெந்தினால் பலமாகக் கட்டப்பட்டிருந்த "பங்கர்" என்று சொல்லப்படுகின்ற பதுங்குகுழியினுள் அனுப்பி வைத்துவிட்டு அவர்களைத் தொடர்ந்து நானும், என்னுடன் கூட வந்த சக்திவடிவேல் மாஸ்ரரும் உள்ளே போய்ப் பதுங்கிக் கொண்டோம். எங்களுடைய வீட்டில் இருந்த பெரிய பதுங்கு குழியினுள் அவர்களுடன் சேர்த்து சுமார் முப்பது பேர் வரை இருந்தோம்...


எப்பொழுது எங்களுடைய மக்கள் மீது கண்மூடித்தனமாகக் கடலில் இருந்து பீரங்கிகள் மூலமும்,பலாலி இராணுவ முகாமில் இருந்து எறிகணை வீச்சுக்களையும் மக்கள் குடியிருப்புக்கள் மீது மேற்கொண்டனரோ, குண்டு வீச்சு விமானங்களில் இருந்து பாரிய குண்டுகளைப் போட்டு எம்மையும், எங்களுடைய உடமைகளையும் அழித்தொழிக்கத் தொடங்கினவோ அன்று தொடக்கம் நாங்கள் பங்கருக்குள்ளேயே பல இரவுகளைக் கழித்திருக்கின்றோம். வசதி குறைந்தவர்கள் மண்ணுக்குள் "ட" வடிவத்திலோ அல்லது "ப" வடிவத்திலோ பெரிய குழிகளைக் கிண்டி அதற்கு மேலாக பனங்குற்றிகளை அடுக்கி மண் மூட்டைகளை அடுக்கிவைத்து தமது உயிர்களைப் பாதுகாக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற் கொண்டிருந்தனர். ஆனால் ஓரளவு வசதியுள்ளவர்கள், கருங்கல் மற்றும் பலமான சீமெந்தினால் உறுதியாகக் கட்டி அதற்கு மேலாக மண்ணால்

மூடிவிடுவர். இவை சிறிய நிலவறை போன்று இருக்கும்... அதைவிட இன்னும் வசதி படைத்தவர்கள் மண்ணுக்குக் கீழான பெரிய நிலவறைகளைக் கூடக் கட்டிவைத்திருந்தனர்.இதற்குள் கதிரை மற்றும் கட்டில்களைக் கூட வைத்திருந்தனர்... இரண்டாம் உலக மகா யுத்தம் இலங்கையைப் பாதித்த காலத்தில கூட எங்களுடைய மக்கள் இப்படியான "பங்கர்" வாழ்க்கையை வாழ்ந்திருக்க மாட்டார்கள்.





மண்ணில் சுமார் 4 அடி ஆளமான குழி வெட்டி அதன்மேல் மண் நிரப்பிய உரப் பைகளினால் மூடி அமைக்கப்பட்ட சாதாரண பதுங்குகுழிகளின் ஒரு தோற்றம்.



பாடசாலைகளில் திறந்தமுறையில் அமைக்கப்பட்ட உயிர்க்குழிகள் என அழைக்கப்படும் பதுங்கு குழிகள்

நாங்கள் பதுங்கியிருந்த "பங்கர்" பலமானதாக அமைக்கப்பட்டி ருந்ததால், அதற்குள் இருக்கும் பொழுது பயம் தெரியவில்லை. ஆனால் காற்றோட்டமில்லாத நிலையில் மிக நெருக்கமாக இருந்ததால் மூச்சுத் திணறுவது போல் இருந்தது... அந்த நேரம் வாசலில் பதுங்கு குழியை மூடி வைத்திருந்த சீமெந்து மூடியை சிறிது விலக்கி வைக்கும் பொழுது ஓரளவு காற்றோட்டம் வரும்.... அது அப்பொழுது எங்களுக்குத் தென்றலாக இருக்கும்.

பங்கருக்கு வெளியே, விமானங்களின் இரைச்சல் தொடர்ந்தும் அதிகரித்துக் கொண்டே இருந்தது... எழுந்தமானமாக அங்குமிங்குமாகக்

குண்டுகளைப் பொழிந்து தள்ளிக் கொண்டே இருந்த விமானங்களின் தொகையை எண்ணிப்பார்க்கக் கூட முடியவில்லை.

வல்வெட்டித்துறை நகரத்தின் மீது குண்டுகளை வீசி அழிப்பதற்காக வந்த ஸ்ரீலங்கா படையினருடன் கூட வந்த அன்னியக் கூலிப்படைகளின் இலக்கு எது என்று தெரியாத நிலையில் மூர்க்கத்தனமாகக் குண்டுகளை மக்கள் குடியிருப்புக்களின் மீது பொழிந்து தள்ளிக் கொண்டே இருந்தனர். ஒரு மணித்தியாலத்தினுள் எவ்வளவு குண்டுகளை வீசி விட்டுத் திரும்ப வேண்டும் என்று, அவர்களுக்கு இடப்பட்ட கட்டளையை நிறைவேற்றுவது தான் அவர்களுடைய இலக்காக இருந்திருக்க வேண்டும். ஒரு சிறிது நேர இடைவெளியைப் பார்த்து எனது வீட்டடில் இருந்த மாணவர்களை அவர்களது வீடுகளில் கொண்டு போய்ச் சேர்த்து விட்டு நானும், சக்திவடிவேல் மாஸ்ரரும் எங்கள் எங்கள் எங்கள் வீடுகளுக்குத் திரும்பிவிட்டோம்.

ஆனாலும் விமானங்களினதும்,உலங்கு வானூர்திகளினதும் இரைச்சல் தொடர்ந்தும் அந்தப் பிரதேசத்தையே கலக்கிக் கொண்டிருந்தது. விமானங்களின் இரைச்சல் குறைந்து கொண்டு வரத் தொடங்கியதும், எனது மோட்டார் சைக்கிளில் எனது இரு மகள்களையும் ஏற்றிக் கொண்டு புற்றளையில் உள்ள எனது உறவினர் வீட்டில் விட்டு விட்டு உடனடியாகவே திரும்பிவிட்டேன்... அதுவரை எனது மனைவியும் அயலவர்களுடன் சேர்ந்து எங்களுடைய வீட்டிலேயே இருந்தனர்.

சிறிது நேர அவகாசம் மட்டுமே தந்தவர்கள் போல் மீண்டும் போர் விமானங்களின் இரைச்சல் எங்களுடைய காதுகளை அதிரவைத்துக் கொண்டிருந்தது...!

# 05. இந்து ஆலயங்களை நோக்கியும் குண்டுத் தாக்குதல்கள்

தொடர்ந்தும் புகைகளைக் கக்கியபடி, பத்துக்கும் மேற்பட்ட குண்டுவீச்சு விமானங்களில் இருந்து எரி குண்டுகளையும், பீப்பா குண்டுகளையும் போட்டுக கொண்டிருந்ததால், வானமெங்கும் ஒரே புகை மண்டலமாக இருந்தது....வெடி மருந்துகளின் நாற்றம் மூக்கைத் துளைத்துக் கொண்டிருந்தது..... அந்த நச்சுப் புகைகளைச் சுவாசித்தே ஆகவேண்டும் என்ற தமிழ் மக்களின் தலைவிதியை யாரால் தான் மாற்றமுடியும்.....?

ஆளும் கட்சியாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அதிகூடிய பெரும் பான்மையாலும், எதிர்க்கட்சியாக வந்த ஐக்கிய தேசியக் கட்சி எட்டு ஆசனங்களை மட்டுமே பெற்று பலவீனமான ஒரு எதிர்க்கட்சியாகவும் வந்த பொழுது, தந்தை செல்வா அவர்கள் ஒரு தடவை ஸ்ரீலங்கா பாராளுமன்றத்தில், உரையாற்றும் பொழுது, "தமிழ் மக்களை இனிமேல், கடவுள் தான் காப்பாற்ற வேண்டும்"

என்று, அவரது உள்ளத்து வேதனையைக் கொட்டித் தீர்த்த பொழுது, அதுவே அவருடைய தீர்க்கதரிசனமிக்க ஒரு வேத வாக்காக இருந்ததை இன்றும் நாங்கள் அனுபவித்துக் கொண்டே வருகின்றோம். எங்களுடைய கடவுள்கள் கூட இருப்பதற்கு இடமில்லாமல் ஓடிக்கொண்டிருக்கும் பொழுது அவர்களால் எப்படித் தமிழ் மக்களைக் காப்பாற்றமுடியும்?

சுமார் ஒரு மணித்தியாலமாகத் தொடர்ந்தும் சிறிது நேர இடைவெளிகூட இல்லாது கொத்துக் குண்டுகளையும், பீப்பா குண்டுகளையும் பொழிந்து தள்ளிக் கொண்டிருந்த கிபீர் விமானங்களும், சகடை விமானங்களும் தமது ஓய்வுக்காகவும் எரிபொருளையும் குண்டுகளையும் நிரப்புவதற்காகவும் அந்த இடத்தை விட்டு அகன்ற ஒரு சில நிமிடத்திற்குள்ளாகவே, அவ்ரோ குண்டு வீச்சு விமானங்கள் பலாலி கூட்டுப்படை முகாமில் இருந்து,வந்து குண்டுகளைப் பொழியத் தொடங்கிவிட்டன. பதுங்கு குழிகளுக்குள் நீண்ட நேரமாகப் பதுங்கிக் கொண்டிருந்தவர்கள் வெளியேறி பாதுகாப்பான இடத்திற்குச் சென்று தப்புவதற்கு ஒருசிறிய இடைவெளியைக் கூட விடாது மிலேச்சத்தனமாகத் தாக்கிக் கொண்டே இருந்தன.

ஆரம்பத்தில் வல்வெட்டித்துறைச் சந்தியின் கிழக்குப் புறமாகச் சில குண்டுகளே போடப்பட்டாலும், பெரும்பாலான குண்டுகள் வல்வெட்டித்துறை முத்துமாரியம்மன் கோயிலையும் அதற்கு அருகாக அமைந்துள்ள வல்வை

வைத்தீஸ்வரர் ஆலயத்தின்,சுற்றுப் பிரகாரத்தைச் சுற்றியும், ஆலயங்களை நோக்கியும் குண்டுகளைப் பொழிந்து தள்ளிக் கொண்டிருந்தன.

வானளாவ எழுந்து நிற்கும் அழகிய இராஜ கோபுரத்தைக் கொண்ட சிவன் கோயில் அதற்கு இடது புறமாக கம்பீரமான தோற்றத்தில் வல்வை முத்தமாரி அம்மன் கோயிலும் அமைக்கப்பட்டிருந்தன.

தமிழகத்தின் ஆன்மீகத் தலைவராக விளங்கிய இராமநாதபுரம் ஜில்லா தெய்வசிகாமணி தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள், 21.03.1957 இல் வல்வெட்டித்துறை சனசமூக சேவா நிலையத்திற்கு வருகை தந்திருந்த பொழுது, வல்வெட்டித்துறையில் உள்ள வைத்தீஸ்வரர் ஆலயத்தையும், வல்வை முத்துமாரி அம்மன் ஆலயத்தின் அமைப்பையும் அவற்றின் எழில் தோற்றங்களையும் பார்த்துப் பரவசப்பட்டு, மெய்மறந்ததுடன் இங்கு வாழ்கின்ற மக்களின் பழக்க வழக்கங்களையும் பார்வையிட்டுப் பெருமையடைந்து வெளியிட்ட செய்திக் குறிப்பில் பின்வருமாறு கூறிப்பிட்டுள்ளார்:

"உலகத்தில் உள்ள எத்தனையோ நாடுகளுக்குச் சென்று வந்திருக்கின்றேன்... அங்கே உள்ள இந்து ஆலயங்களையும் பார்த்திருக்கின்றேன். இந்தியாவில் உள்ள ஆலயங்களையும் பார்த்திருக்கின்றேன்... ஆனால், சிவாகம முறைப்படி அமைக்கப்பட்ட கோயிலின் அமைப்பும், புராணகால வரலாற்றுக்கமைய சிவனும் இடது புறமாக அம்மனும் இரு வெவ்வேறு அழகிய பெரிய இராஜகோபுரங்கள் கொண்ட ஆலயங்களாக அமைந்திருக்கின்ற தோற்றத்தை நான் உலகில் எங்குமே கண்டதில்லை. இந்த ஊருக்குப் பொருமையும் அழகும் தந்து கொண்டிருக்கின்ற இந்த இரண்டு ஆலயங்களும் இருக்கும் வரை வல்வெட்டித்துறைக்கு என்றுமே குறை வராது" என்று குறிப்பிட்டதுடன், வல்வெட்டித்துறை சனசமுக சேவா நிலையத்தின் பணிகளையும் மனம் திறந்து பின்வருமாறு பாராட்டினார்.

"இன்று இந்நகர் சனசமூக நிலையத்திற்கு வருகை தரும் சந்தர்ப்பம் கிடைத்தது. மிக்க மகிழ்ச்சி. இளையோரும் முதியோரும் உற்சாகமாகக் காணப்படுகின்றனர். நல்ல பண்பாடும், சமயப்பற்றும் இருக்கின்றது. சமயச் சடங்குகளைப் பழமை பிறழாது செய்து வருகின்றனர். இந்நிலையம் வாழ்க. வளர்க இதன் பணி..!" என்று அவர் கூறிய புகழாரம் வல்வெட்டித்துறையின் மகிமையை எடுத்துக் காட்டுவது போல் இருந்தது.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் கூறியது போல், வல்வெட்டித்துறையின் சிறப்புக்கும், பெருமைக்கும் இந்த இரு ஆலயங்களிலும் நடைபெறும் சிவாக முறையிலான ஆறுகாலப் பூசைகளும் வழிபாட்டு முறைகளுமே காரணம். சைவ ஆகம முறைப்படி

ஆறுவேளைகளிலும் ஒழுங்காக நடைபெறும், இப்பூசைகளையே "ஆறுகாலப் பூசைகள்" என்பர். இந்த ஒழுங்கில் எவ்வளவோ பிரச்சினைகள் ஏற்பட்டபோதும், யுத்த அனர்த்தங்களின் போதும், பக்தர்கள் எவருமே வரமுடியாத சந்தர்ப்பங்களில் கூட, தனியொருவராக நின்று குருக்கள் பூசையை நடத்தியிருக்கின்றார். அதனால்தான் இன்றும் இந்த ஆலயம் ஒரு புகழ்பெற்ற ஆலயமாக விளங்கிவருகின்றது.

1856ஆம் ஆண்டு ஆங்கிலேயருக்குச் சொந்தமான 12000 தொன் நிறையுடைய "அத்திலாந்திக் அரசன்" ( King of Atlantic ) என்ற கப்பல் திருகோணமலைக்கு வடக்காக முல்லைத்தீவுக்கு கிழக்கே வங்கக்கடலில் மூழ்கிவிட்டது. ஆங்கிலேயரின் கட்டிட நிர்மாணப் பணிகளுக்காகக் கொண்டு வரப்பட்ட சுண்ணாம்பு மூடைகளுடனேயே அக்கப்பல் மூழ்கியிருந்தது. பல நாட்களாக அதனை மீட்க முயற்சிசெய்த கப்பலின் உரிமையாளரான ஆங்கிலேயர்கள் அதனை மீட்க முடியாது, மூழ்கிய நிலையிலேயே அதனைக் கைவிடமுடிவு செய்தனர். இங்கிலாந்தில் இருந்து இலங்கை வரை பயணம் செய்த அந்த இரட்டைப்பாய்மரக் கப்பலை மூழ்கிய நிலையிலேயே விலைக்கு வாங்கிய திரு.திருமேனிப்பிள்ளை வெங்கடாசலம்பிள்ளை அவர்கள் எல்லோரும் ஆச்சரியப்படும் படியாக அதனை நீரிலேயே மிதக்கவிட்டு ஓடவிட்டார். இதன் மூலம் கிடைத்த வருமானத்தைக் கொண்டும்,பொது மக்களின் அன்பளிப்புக்களைக் கொண்டும் 1867 ஆம் ஆண்டில் "வல்வை வைத்தீஸ்வரன்" கோயிலைக் கட்டுவித்தார்.

1867 ஆம் ஆண்டு சங்கத்தாபனம் செய்து வல்வெட்டித்துறை வைத்தீஸ்வரன் கோயிலைக்கட்டிய வள்ளல் திரு.தி. வெங்கடசலம்பிள்ளை அவர்கள். வல்வெட்டித்துறையின் புகழ்பெற்ற கடல் வாணிபக் குடும்பத்தில் உதித்த ஐயம்பெருமாள் வேலாயுதர் வழிவந்த "திருமேனியாரின்" மைந்தனாக 1822 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 19ம் திகதி வியாழக்கிழமை வல்வெட்டித்தறையில் பிறந்தார். இவரே தேசியத் தலைவரின் கொள்ளுப் பேரனாவர்.

இந்திய இலங்கை அரசுகளின் படைகளினால், திட்டமிட்டுப் பாரிய அழிவுகளுக்கு உட்படுத்தப்பட்ட போதெல்லாம், இந்த ஆலயங்களில் குடிகொண்டுள்ள காவல் தெய்வங்களின் அனுக்கிரகம் காரணமாக, வல்வெட்டித்துறை செல்வத்திலும், கல்வியிலும், விருந்தோம்பும் பண்பாட்டிலும், வீரத்திலும் குன்றாத வளமுள்ள ஊராக விளங்குகின்றது.

வல்வெட்டித்துறையை வதைத்த அந்த நாட்களில், வல்வெட்டித்துறையில் காலம் காலமாக வாழ்ந்து வருகின்ற மக்கள் குறிப்பாக, பெண்கள், கர்ப்பிணித் தாய்மார்கள், குழந்தைகள், சிறுவர்கள், வயோதிபர்கள் என யுத்த நேரத்தில் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் போர்ப் பாதுகாப்புக்கான பிரகடனத்தில், பாதுகாக் கப்பட வேண்டியவர்களை ஸ்ரீலங்கா அரசாங்கம் நிர்க்கதியாக மன உழைச்சலுடனும், உடல் உபாதையுடனும் அலைய விட்டுக் கொண்டிருந்தது.

வானத்தில் விமானங்களின் இரைச்சல் மேலும் மேலும் அதிகரித்துக் கொண்டே வந்தது. ஒன்று இரண்டு என வட்டமிட்டு பின்னர், கிபீர், அவ்ரோ, சகடை, வை-12, உலங்கு வானூர்திகள் என பத்துக்கும் மேற்பட்ட வான் கலங்கள் அந்தச் சிறிய நகரத்தின் மீது தொடர்ச்சியாகக் குண்டுகளைப் பொழிந்து கொண்டிருந்தன. விமானப் படையினரின் மூர்க்கத்தனமான வெறியாட்டங்களினால், நிலைகுலைந்து போன மக்களில் குழந்தைகள் பெண்கள் உட்பட சுமார் நாற்பது பேர் வரை அம்மன் கோயில் மண்டபத்தின் தரிசன மண்டபத்தின் கீழ் பாதுகாப்புக்காக ஓடி வந்து ஒழிந்து கொண்டனர்.

காதுகளைப் பிளக்கும் ஓசையுடன்,ஒரு குண்டு வீச்சு விமானம், சடுதியாக பேரிரைச்சலுடன் சிறிது கீழ் நோக்கிப் பதியத் தொடங்கியதும் ஆலயத்திற்குள் பதுங்கியிருந்த சிறுவர்களும் பெண்களும் அலறித் துடித்துக் கொண்டிருந்தனர்.

"பதியிறான்...பதியிறான்... ஐயோ...! குண்டைக் கோயிலுக்கு மேலை தான் போடப் போறான். அம்மாளாச்சி காப்பாற்று தாயே."

பெருத்த சத்தத்துடன் கீழ்நோக்கி இறங்கிய விமானம், ஒரே தடவையில் இரண்டு பாரிய குண்டுகளை வீசிவிட்டுக் கண்இமைக்கும் நேரத்திற்குள் மேலே எழுந்து கண்ணுக்கு எட்டாத தூரத்திற்குச் சென்று விட்டது. அந்த இரண்டு குண்டுகளும் அம்மன் கோயிலின், வடக்கு வீதியில் விழுந்து வெடித்துச் சிதறின. அந்தச் சத்தத்தைத் தொடர்ந்து, ஆலயத்தின் உட் சுற்றுப் பிரகாரக் கொட்டகையின், ஆயிரக் கணக்கான ஓடுகளும் உயரத்தில் பொருத்தப்பட்டிருந்த, மின்குமிழ்கள், தூண்களில் கொழுவப்பட்டிருந்த படங்களின் கண்ணாடிகள் எல்லாமே உடைந்து, நொருங்கி உள்ச்சுற்றுப் பிரகார வீதியெங்கும் துகள்துகள்களாகப் பறந்தன.

"தாயே! அம்மாளாச்சி!. எங்களைக் காப்பாற்று..."

அந்த இடத்தில் தங்கிநின்ற மக்களின் அவலக்குரல் அந்த ஆலயம் எங்கும் எதிரொலித்துக் கொண்டிருந்தது. அங்கே மிரண்டு கொண்டிருந்த குழந்தைகள் வீரிட்டு அலறிக் கொண்டிருந்தன. ஒவ்வொருவரின் இதயமும் "படபட"வென்று அடித்தக் கொண்டே இருந்தது.

ஒவ்வொரு வருடமும் சித்திரையில் வரும் அமாவாசையில், அம்மன் கோயிலின் பிரம்மோற்சவம் ஆரம்பித்து விட்டால், கொடியேற்றத் திருவிழாவில் இருந்து குளிர்த்தி அபிசேக நாள் வரைக்கும் ஆசார சீலராக இருந்து அம்மன் கோயிலுடனேயே தம்மைச் சங்கமித்துக் கொள்வர். திருவிழா தொடங்கியதும், நகரம் விழாக்கோலம் பூண்டுவிடும். ஊர் வீதியெங்கும் தெரு விளக்குகளினால் ஒளியேற்றப்பட்டு இரவைப்பகலாக்கிக்

கொண்டிருக்கும். திருவிழாக் காலங்களில் வீதிகளில் இரவு நேர தோசைக் கடைகளும் வந்து விடும். அந்தச் சுவையான தோசையைச் சுவைத்தச் சாப்பிடுவதற்காக வெளியூர்களில் இருந்தும்கூடப் பலர் வருவார்கள்.

ஆலய வெளி வீதிகள் அதிகாலையில் இருந்தே பெண்கள் தங்கள் வீடுகளில் இருந்து கொண்டு வருகின்ற புதிய விளக்குமாற்றினால், அழகாகக் கூட்டித் தண்ணீர் தெளித்து விடுவார்கள். அதே வேளையில், அதிகாலையிலேயே ஆலயத்திற்குள் வந்து, மூலஸ்தானத்தைச் சுற்றியுள்ள சிறிய நீர்த் தொட்டியில் இளம் பெண்கள் வரிசையாக நின்று நீர் நிரப்பும் காட்சியும் மிக அற்புதமாக இருக்கும்.

இதே போன்று வரலாற்றுப் புகழ்பெற்ற செல்வச் சந்நிதி ஆலயத்திலும், உற்சவ காலத்தில்,பன்னிரண்டு, சிறுமிகள் விளக்கெடுத்துத் தொண்டு செய்யும் காட்சியும் மிக அற்புதமாக இருக்கும். இவ்வாறு எமது ஊர் சமயப்பற்று நிரம்பியதாகவும், பிள்ளைகளை சிறு வயதில் இருந்தே ஆன்மீகத்துடன் இணைத்து வாழப்பழக்கி வருவதாலும், அவர்கள் வளர்ந்து பெரியவர்களாகும் பொழுது ஒழுக்கத்திலும், பண்பாட்டிலும் சிறந்து விளங்குகின்றனர்.

வெளிவீதியில் குண்டுகளை வீசித்தள்ளிவிட்டு மேலே பறந்து சென்றுவிட்ட விமானத்தைத் தொடர்ந்து, இன்னொரு குண்டு வீச்சு விமானம் ஆலயத்தின் மேலாகவே ஒரு குண்டைத் தள்ளியது. இலக்குத் தவறாது போடப்பட்ட அந்தக் குண்டு, கோயிலின் மேற்குப் புற மூலையில் உள்ள பிள்ளையார் வாசலில் விழுந்து வெடித்தது...... அந்த ஆலயத்தையும், அங்கே பதுங்கியிருக்கின்ற பொது மக்களையும் ஆலயத்திற்குள் வைத்தே அழித்து விடுவது தான் அவர்களது முழுமையான இலக்காக இருந்தது. ஆனால் அதனைக்கூடச் சரியாக நிறைவேற்றமுடியாத கையாலாகாத ஒரு விமானப் படையை வைத்துக் கொண்டு தான் பொது மக்களுக்கு எதிரான இந்த யுத்தத்தை அரசு ஆரம்பித்துள்ளது. அந்தப் பாரிய குண்டு விழுந்து வெடித்த ஓசை,அங்கே நின்றவர்களின் செவிப்பறைகளையே தகர்த்து விடுவது போல் இருந்தது.! கோயிலின் உள்வீதியெங்கும், ஒரே கரும்புகை மண்டலமாக இருந்தது..... சுகந்தம் வீசும் அகில் புகையும், கற்பூர வாசனையும், சூழ்ந்திருக்கும் அந்த ஆலயத்தினுள்ளே வெடிமருந்துப் புகையும்,கந்தகத்தின் நாற்றமும் மூக்கைத் துளைத்துக் கொண்டிருந்தன....! ஆலயத்தின் பிரதம குரு ஸ்ரீலஸ்ரீ. சோ.தண்டபாணிதேசிகர் மௌனமாக இருந்து முத்துமாரித் தாயை நோக்கிப் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தார்.

இந்தச் சம்பவத்தில் நேரடியாகவே,பாதிக்கப்பட்டு அந்த அவலங்களை அனுபவித்த நல்லையா சரஸ்வதி என்பவர் கூறுகையில்,

“பொம்பர் வருகுது எண்டவுடனை, நாங்கள் கொஞ்சப் பேர், ஓடிவந்து, இதுக்குள்ளை பதுங்கியிருந்தனாங்கள். பிரேம்குமாரும், இன்னுமொரு ஆளும் கோபுர வாசலின் கீழ் நின்றனர்.பிள்ளையார் வாசலில் குண்டு விழுந்து வெடிச்சவுடனை அதுக்கு மேலும் நாங்கள் அங்கை நிற்கப் பயந்து,வெளியே ஓடிவிட்டோம். நல்லவேளை இதுக்குள்ளை யாரும் சாகேல்லை, காயமும் படவில்லை, எல்லாம் இந்த அம்மாளாச்சியின்ரை அற்புதம் தான். இந்தக் குண்டுக்குள்ளை இருந்து காத்த அந்த மனுசி, சும்மா இருப்பா எண்டு நினைக்கிறியளோ? உவங்களுக்கு ஒரு அழிவு வராவிட்டால் பாருங்கோ.”

மிகவும் உணர்ச்சிவசப்பட்ட நிலையில் கூறிக்கொண்டிருந்த அந்தப் பெண்ணின் உறுதிகுலையாத நம்பிக்கை, என்னை மெய் சிலிர்க்க வைத்துவிட்டது. அவருடன் வந்திருந்த அவரது மகள் நளினியும் சம்பவம் நடந்து ஐந்து நாட்கள் கடந்துவிட்ட நிலையிலும்கூட இன்னும் பதட்டம் மாறாத நிலையிலேயே காணப்பட்டார்.

1986 ஆம் ஆண்டில் இதே போன்றுதான் ஒரு சம்பவம் தொண்டைமானாற்றிலும் நடந்தது. வரலாற்றுப் புகழ் பெற்ற தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் கோயில் வீதியில் தகுந்த பாதுகாப்புடன் நிறுத்தப்பட்டிருந்த பல லட்சம் ரூபா செலவில் கட்டி, ஒரே ஒரு தடவை தான் வீதியுலா வந்த அழகிய மிகப்பிரமாண்டமான சித்திரத் தேர், தொண்டைமானாறு ஸ்ரீலங்காப் படைமுகாமில் இருந்து வந்த இராணுவத்தினரால் எரித்துச் சாம்பராக்கப்பட்ட பொழுது, உலக இந்துக்கள் ஒவ்வொருவரினதும் இதயங்களை ஈட்டிகொண்டு தாக்கியது போல் இருந்தது. அதன் விளைவு..? அந்தத் தேர் எரிப்பில் பங்கு பற்றிய இராணுவத்தினரில் ஐந்து பேர் ஒரு வாரத்தினுள் அந்த சந்நிதி முருகன் வீதியில் வைத்தே விடுதலைப் புலிகளால் கொல்லப்பட்டனர்... ஒருவன் மட்டும் எப்படியோ இராணுவத்தில் இருந்து தப்பிச் சென்று கதிர்காமக் கந்தனுக்குக் காவடி எடுத்து பாவ விமோசனம் தேடிக் கொண்டானாம்..

எங்களுடைய சைவ ஆலயங்களில் இருக்கும் தெய்வ விக்கிரகங்கள் ஒவ்வொன்றும் வெறும் கற்சிலைகள் தான்!........ ஆனால், அவற்றின் சக்தியும், மகத்துவமும் இந்த உலகையே! ஏன் இந்த அண்டசராசரத்தையே ஆட்டிப்படைக்கும் வல்லமை பெற்றவை என்பதை பெளத்த சிங்கள பேரினவாதம் இன்னும் உணரவில்லை.

# 06.வல்வை சிவன் கோயிலின் மீதான திட்டமிட்ட தாக்குதல்

தொடர்ச்சியாகக் குண்டுகளைப் பொழிந்து கொண்டிருந்த நேரத்தில் எங்களால், எந்த விதமான தகவல்களையும் பெறமுடியாததால், எல்லாம் ஓய்ந்த பின்னரே நாங்கள் ஊரைச் சுற்றிப் பார்பப்தற்காக புறப்பட்ட போது, இறந்தவர்களின் உடல்கள் தகனம் செய்து முடிக்கப்பட்டு விட்டன. ஆனால், அந்தச் சம்பவங்களை நேரடியாகப் பார்த்தவர்களிடம் இருந்தும் முழுமையான தகவல்களைப் பெற்று, இந்தக் கொடூரமான சம்பவங்களை ஒரு வரலாற்று ஆவணமாகத் தயாரிக்கவேண்டுமென்று எமது ஊர் மக்களினதும்,தேசியத் தலைவரினதும், பொது அமைப்புக்களினதும் வேண்டுகோள்களையும், என்னால் நிராகரிக்க முடியவில்லை. சில நாட்கள் நான் புற்றளையில் தங்கியிருந்துவிட்டு மீண்டும் ஒரு வாரத்தின் பின்னர் வருகை தந்தபொழுதும், அந்த அழிவின் சுவடுகள் அப்படியே இருந்தன.

குண்டு வீச்சு நடந்து ஒரு வாரம் கடந்து விட்டாலும், வல்வை முத்துமாரியம்மன் ஆலயத்தின் முகப்புத் தோற்றம் எவ்வகையிலும் சிதைக்கப்படாது, பழைய தோற்றத்திலேயே இருந்தது, முத்துமாரி அம்மன் கோயிலின் உட்சுற்றுப் பிரகாரம், முழுவதும் சிதைந்து எங்கு பார்த்தாலும் ஓடுகளினதும், கண்ணடிகளினதும் துகள்கள் சிதறிக்கிடந்தன. தொடர்ந்து மூன்று நாட்களிலும் அடுத்தடுத்துக் கோயிலின் மேலும், கோயில் வீதிகளிலும் சுமார், 20 குண்டுகள் வரை போட்டதில், அம்மன் கோயிலின், உட்சுற்றுப் பிரகாரத்தில் வடக்குப் புறமாக அமைந்துள்ள சண்டேஸ்வரி ஆலயத்தின் மேல் ஒரு குண்டு அதன் சீமேந்துக் கூரையைப் பிய்த்துக் கொண்டு வந்து விழுந்து வெடித்ததில்,அதன் முழுப்பகுதியுமே உடைந்த கற்குவியல் போல் தோற்றமளித்தது.

உடைந்த கற்குவியல்களின் மத்தியில் இருந்து, சண்டேஸ்வரி விக்கிரகத்தின் தலைமட்டும் சிறிது வெளியே நீட்டிக் கொண்டிருந்தது. அதில் இருந்து ஒவ்வொரு கற்களாக வெளியே எடுத்துப் போட்ட பொழுது அங்கே கண்ட காட்சி... எங்களை மெய் சிலிர்க்க வைத்து விட்டது. கற்களின் இடிபாடுகளுக்குள் இருந்த சண்டேஸ்வரியில் எந்த விதமான உடைவுகளோ அல்லது காயம் பட்ட மறுக்களோ இல்லை. அப்படியே புதிய சிலையைப் போன்று ஜொலித்துக் கொண்டிருந்தது. மேலே சீமெந்தினால் அமைக்கப்பட்டிருந்த கூரை உடைந்து சிதறிப்போய் இருந்தாலும், சுற்றுச் சுவர்களோ சண்டேஸ்வரியின் விக்கிரகமோ எவ்வகையிலும் பாதிக்கப்படாது இருந்ததுதான் எங்களுக்கு வியப்பாக இருந்தது.

அங்கிருந்து ஆலயத்தின் ஏனைய பகுதிகளையும், உள்சுற்றுப் பிரகாரத்தையும் சுற்றிப் பார்த்து வரும்பொழுது, நெஞ்சம் வேதனையால் துடித்தது... ஆம்...! அந்த ஆலயத்தின் கவர்ச்சியான தோற்றம், புழுதி படிந்து அழகு மண்டிக் கிடந்தது. எழுந்தருளிக்காக வீதியுலா வரும் போது பயன்படுத்தப்படும் வாகனங்கள், உருக்குலைந்து போய்க் கையுடைந்தும், தலையின் பகுதிகள் உடைந்தும், கால் உடைந்தும் காணப்பட்டன. அழகிய மூன்று சித்திரத் தேர்களும் சிறு சிறு பாதிப்புக்களுடன் தப்பிக் காணப்பட்டன.

ஆலய வீதியைச் சுற்றிப் பார்த்துக் கொண்டு வரும்பொழுது, என் கண்கள் இரண்டும் கலங்கிக் கொண்டு வந்தன. அப்பொழுது அம்மன் கோயிலின் தர்மகர்த்தா சபைத் தலைவரும் முன்னாள் பிரஜைகள் குழுவின் பொருளாளருமாக இருந்த மணியண்ணா என்று எல்லோரும் அழைக்கும் வ.இ.நடனசிகாமணி, கோயில் வாசலை நோக்கி நடந்து வந்தார்.

"என்ன மணியண்ணா..! இந்தச் சிங்களப்படைகள் எங்கடை ஊரை எப்பிடிச் சிதைச்சுப் போட்டான் என்று பார்த்தியளோ? மணியண்ணா!"

என்னுடன் கூடவந்த தில்லையம்பலம் தனது ஆற்றாக் கொடுமைகளின் கரணமாக தனது ஆத்திரத்தைக் கொட்டித் தீர்த்தார்.

"ஓம்! பாருங்கோ... நாங்கள் ஆரும் கனவிலை கூட நினைச்சுப் பார்த்திருப்பமோ? என்ன மாதிரி இருந்த கோயில் பாருங்கோ... ஒரு நொடிக்கை வந்து எல்லாவற்றையும் அழிச்சுப் போட்டுப் போயிற்றான், அவன் எங்கடை கோயில்களை அழிக்க வேணுமென்றுதான் பாருங்கோ, இந்தக் கோயிலையும் குறிவைத்து, இவ்வளவு குண்டுகளையும் போட்டவன். முதல் நாள் குண்டுகளைப் போடேக்கை நான் கூட இந்த மண்டபத்திற்குக் கீழ்தான், நின்றனான் பாருங்கோ. என்னோடை தான் செல்வேந்திராவும் இங்கை நின்றவர். சே.48 மணித்தியாலம் என்று எச்சரிக்கைக் கடிதத்தைப் போட்டுவிட்டு, நாலு மணித்தியாலம் கூடத் தரவில்லை. அம்மாளாச்சி சும்மா லேசுப்பட்டவை இல்லைப் பாருங்கோ. அம்மாளாச்சிக்குத் துரோகம் செய்து ஆரும் வாழ்ந்ததில்லைப் பாருங்கோ. இந்தக் காடையங்களின்ரை கொடுமையை உலகத்திற்கு அம்பலப்படுத்த வேண்டும் பாருங்கோ."

வார்த்தைக்கு வார்த்தை "பாருங்கோ! பாருங்கோ..." என்று அன்பொழுக மிகவும் மரியாதையாகப் பேசுவதில் மணியண்ணாவுக்கு நிகர் வேறு எவரும் இருக்கமுடியாது. பொதுவாகவே பொறுமையிழந்தவராகப் படபடவென்று பேசும் மணியண்ணா அன்று மேலும் கொதிப்புடன் இருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

“எங்கடை அம்மாளாச்சியினரை கோயிலைப் பழையபடி புனருத்தாரணம் செய்யிறதெண்டால், பாலஸ்தாபனம் செய்து, கும்பாபிசேகமும் செய்யிறதென்றால், இப்ப பொருட்களும் தட்டுப்பாடாக இருக்கிற நேரத்திலை பாருங்கோ… குறைஞ்சது மூன்று கோடி ரூபாவாவது தேவை பாருங்கோ”

இந்த நாட்டில், மதசுதந்திரம் இல்லாதது மட்டுமல்ல பௌத்தம் அல்லாத மதங்களுக்கும், மதவழிபாட்டுத் தலங்களுக்கும் கூடப் பாதுகாப்பற்ற ஒரு நிலைமையே காணப்படுகின்றது என்பதை ஸ்ரீலங்கா அரசின் மத வழிபாட்டுத் தலங்களின் மீது மேற்கொள்ளப்பட்ட கொடூரமான இந்தத் தாக்குதல்கள் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன.

மணியண்ணாவையும் உதவிக்கு அழைத்துக் கொண்டு, அங்கிருந்து, அம்மன் கோயிலின் தெற்குப் புறமாக சிறிது தூரத்தில் அமைந்துள்ள வல்வெட்டித்துறையின் வரலாற்றுப் புகழ்மிக்க சிவன் கோயிலை நோக்கி நடந்தேன். சிறிது தூரத்தில் நின்றபடியே அந்த ஆலயத்தைப் பார்த்ததும் என் கண்களால் கூட நம்ப முடியவில்லை… அதனைப் பார்த்ததும் நான் அதிர்ந்து விட்டேன்.

ஐம்பூதங்களுக்கெல்லாம் அதிபதியாய், அண்டசராசரங்களை யெல்லாம் கட்டுப்படுத்தி, உலகத்து ஜீவராசிகள் எல்லாம் தொழுது வணங்கி நிற்கும், முழுமுதற் கடவுளான சிவனுக்கே இந்தக் கதியா?

முப்புரம் எரித்த முக்கண்ணனின் கோட்டையா இது?

வல்வெட்டித்துறை சிவன் கோயிலின் உள்ளும் புறமும் வெடிகுண்டு நாற்றங்கள், பெற்றோல் ஆவியின் மணம் ஒருபுறம், எரிகுண்டுகள் போட்டு எரிந்து போய் இருந்த ஆலயத்தின் வர்ணப் பூச்சுக்கள் மற்றும் ஆலயத்தின் பகுதிகள் இன்னொரு புறமுமாக அந்த சிவன் ஆலயத்தின் சீரழிந்த தோற்றம் என் நெஞ்சையே பிழிவது போல் இருந்தது. மணியண்ணா தலையில் கையை வைத்தபடியே அதிர்ந்து போய் நின்றார்.

கோயிலின் உள்ளே காலடி வைப்பதற்காக என் கால்கள் கூசிக் கொண்டிருந்தன. வல்வெட்டித்துறையில் ஏனைய இடங்களில் இல்லாத இன்னுமொரு பண்பாடு பேணப்பட்டு வருகின்றது. அது தான் எந்த ஒரு ஆணாவது மேலங்கியுடன் கோயிலுக்குள் நுழைவதில்லை சிறுவர்களிலும் கூட நான்கு வயது கடந்து விட்டால் அவர்களுக்கும், சிறிய வேட்டி சால்வையைக் கட்டிவிடும் மரபு இருக்கின்றது.

கோயிலுக்குள் செல்லுமுன்,என் மேல் சட்டையைக் கழற்றிக் கையில் எடுப்பதற்காக பொத்தான்களைக் கழற்றத் தொடங்கினேன்….. அப்பொழுது அருகில் நின்ற வயோதிபர் ஒருவர், என்னை இடைமறித்து,

"தம்பி! இந்தச் சிங்களவன்ரை குண்டே வந்து,என்ரை பெருமானின்ரை கோயிலை அலங்கோலப் படுத்திட்டுப் போயிற்றுதாம்... பிறகு நீங்கள் உள்ளை எப்பிடித்தான் போனால் என்ன? சிவ...சிவா..."

அவர் தன்னை மறந்த நிலையில் விரக்தியுடன் கூறிக்கொண்டே கண்ணீர் விட்டு அழத்தொடங்கி விட்டார். அங்கே அவர் நின்ற கோலம், என்னுடைய இதயத்தையே ஒரு கணம் உலுப்பி விட்டது.

"காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தம்மை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினும் மெய்ப் பொருளாவது
நாதன் நாமம் நமச் சிவாயவே"

என்ற திருஞானசம்பந்த நாயனாரின் திருப்பாசுர வரிகள் என் மனக் கண்முன் நிழலாடியது. நிச்சயமாக இவருடைய வீடோ அல்லது இவரின் பிள்ளைகளின் வீடோ இடிந்து தரைமட்டமாக்கப்பட்டிருக்கும்..... பரம்பொருளான அந்த வைத்தியநாதன் குடி கொண்டுள்ள இந்த அழகிய சிவாலயம் உடைக்கப்பட்டதைக் காணச் சகிக்கமுடியாத நிலையில் தன்னை மறந்து அந்த ஈசன் நாமத்தை உச்சரித்தவாறு கண்ணீர் விட்டு அழுது தொழுத காட்சி அங்கு நின்ற எல்லோரையும் மெய்சிலிர்க்க வைத்து விட்டது.

ஆலயத்தின் நுழைவாயிலின் ஊடாகச் சென்று காலடி வைக்கும் பொழுதே, என் பாதங்களைக் கீழே வைக்கமுடியாத அளவுக்கு ஓட்டுத் துண்டுகளும். கண்ணாடித்துண்டுகளும் சிதறிப் போய்க்கிடந்தன. கோயிலுக்குள் வெறுங்காலுடன் போனதால், பாதங்களில் கண்ணாடித் துண்டுகள் கிழித்து இரத்தம் கசியத் தொடங்கிவிட்டது.

குண்டு வீச்சுக்களினால் சிதைக்கப்பட்டுப் பொலிவிழந்து, போய் இருந்தாலும், நாங்கள் ஒரு தூய இந்து என்ற வரன்முறைக்குள் நடந்து கொண்டோம். பாதணிகளும், மேலங்கியும் அணிந்து கோயிலுக்குள் செல்வது அபச்சாரம் என்பதால்,அந்த நியதிக்கு மதிப்புக் கொடுத்தபடி நானும் மணியண்ணா மற்றும் என்னுடன் கூட வந்தவர்களும் கால் பாதங்களை மெதுவாகத் தூக்கித் தூக்கி வைத்தபடி கோயிலின் உட்சுற்றுப் பிரகாரத்தை அடைந்தோம்.

சிவன் கோயில் பரந்த நிலப் பரப்பைக் கொண்டிருப்பதால், இந்தக் கோயிலைப் "பெரியவர்" கட்டும் பொழுதே, தூர நோக்கில் அகன்ற வீதிகளையும், சுற்றுப் பிரகாரங்களையும் அமைத்திருந்த படியால் தற்பொழுது அதிகரித்த சனத் தொகையைத் தாங்கிக் கொள்ளக்கூடியதாக அந்த ஆலயத்தின் வீதிகளும் பெரியதாகவும் அகன்றதாகவும் இருந்தன. அதை விட, வேறு எந்த ஆலயங்களுக்கும் இல்லாத இன்னுமொரு சிறப்பு இங்கே காணப்படுகின்றது. மூன்று சுற்றுப் பிரகாரங்களைக் கொண்டு ஆலய வீதிகள் அமைக்கப்பட்டிருந்ததுடன், இரண்டாம் சுற்றுப் பிரகாரத்திலேயே வசந்த மண்டபம் அமைக்கப்பட்டிருந்தது. கருங்கல்லினாலான பெரிய

பொழிகற்களைக் கொண்டு சுமார் 30 அடி அகலமுள்ள முகப்புத் தோற்றத்தைக் கொண்டு இலங்கையிலேயே மிகவும் பெரிய வசந்த மண்டபம் என்ற பெருமையையும் பெற்றிருந்தது. மூலஸ்தான மூர்த்திகளுடன் முதலாம் சுற்றுப் பிரகாரத்தில் மட்டும் சுமார் 60 விக்கிரகங்கள் வரை பிரதிட்டை செய்யப்பட்டிருந்தன. அவை ஒவ்வொன்றுக்கும் ஆறு வேளையும் பூசைகள் நடைபெறுகின்றன என்றால்... ஒரு பூசை வேளைக்கு மட்டுமே எவ்வளவு செலவாகின்றது என்று பார்த்துக் கொள்ளுங்களேன்.

இரண்டாம் சுற்றுப் பிரகாரத்தில், வடக்குப் புறமாக உள்ள வசந்த மண்டபத்தின் முன் பாரிய குண்டு விழுந்து வெடித்ததில் பெரிய குழி ஒன்று உண்டாக்கப்பட்டிருந்தது. மேலே முதிரை மரங்களினால் பலமாக அமைக்கப்பட்டிருந்த கூரை இடிந்து விழுந்து வசந்த மண்டபத்தை மூடியிருந்தது... மரங்களும், ஓடுகளும் சிதறியிருந்தன. அவற்றையெல்லாம் ஒருவாறு தாண்டிக் கொண்டு, வசந்த மண்டபத்தை எட்டிப் பார்த்தேன். அந்த அழகிய தோற்றமுள்ள மண்டபம் உருக்குலைந்து போய்க் காணப்பட்டது. சிதைந்து போன அந்த அழகிய வசந்த மண்டபத்தின் வாசற்படியைக் கைகளால் தொட்டு வணங்கிவிட்டு, முதலாம் சுற்றுப் பிரகாரத்தினுள் நுழைந்த எனக்கு மேலும் அதிர்ச்சி காத்திருந்தது...!

கோயிலின் கூரைகள், முற்றாகவே சிதைந்துபோயும், ஆயிரக்கணக்கான கூரை ஓடுகள், உடைந்தும் சிதறிப் போய் இருந்தன. கூரையின் தீராந்தி மரங்களும் உடைந்து தொங்கிக் கொண்டிருந்தன. ஆலயத்தின் மேற்குப்புறமாக அமைந்திருக்கும் பழைய திராவிடக் கட்டிட அமைப்பில் கட்டப்பட்டிருந்த "வழுக்கல் மடமும்", உடைந்து கூரை ஓடுகள் எல்லாமே சிதறிப் போய் இருந்தன.



குண்டு வீச்சின் பின் தற்காலிகமாகத்தார்த் தகரத்தினால் கூரைபோடப் பட்டிருக்கும் வழுக்கல் மடம்

சிவாகம முறைப்படி ஆறுகாலமும் பூசைகள் நடைபெற்று வருவதும், வடமாகாணத்திலேயே முதன்மையான ஒரு சிவாலயமாக எல்லோராலும் போற்றப்படுகின்ற வல்வை வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரன் கோயிலுக்கே இந்த நிலையென்றால், ஏனைய இடங்களைப் போய்ப் பார்க்கத் தேவையில்லை.

என் கண்களில் வடிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டே கோயிலை விட்டு வெளியேறி, சிவன் கோயிலின் தென் கிழக்கு மூலையில் நின்றபடி அதன் அழகிய இராஜகோபுரத்தையும் அதற்கு எதிராக உடைந்து நொருங்கிப் போய் இருந்த மடத்தையும் பார்த்தபடி,தெற்குப் புறமாக ஆலயத்தின் இரண்டாம் சுற்றுப் பிரகாரத்துடன் உள்ள தெப்பக் குளத்தையும் பார்க்கின்றேன்.

ஒரு ஆலயத்தின் சிறப்புக்கு அந்த ஆலயமானது மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றும் இருக்கவேண்டும் என்பதற்கு அமைய இம்மூன்றும் அமையப்பெற்ற இந்த ஆலயம், நீண்ட வரலாற்றுப் பாரம்பரியத்தைக் கொண்டிருந்தது. அவற்றை விட இந்த ஆலயத்திற்கு இன்னுமொரு சிறப்பும் உண்டு.

வேலுப்பிள்ளை பிரபாகரனின் கொள்ளுப் பாட்டனான பெரியவர் என்று எல்லோராலும் அழைக்கப்பட்டு வந்த திருமேனிப்பிள்ளை அவர்களால், வல்வெட்டித்துறையில் கிறிஸ்தவ மத ஆதிக்கத்திற்கும் மதமாற்றத்திற்கும், எதிராக சைவப் பாரம்பரியத்தை வளர்க்க வேண்டுமென்ற பெரு நோக்கில், சிவன் ஆலயத்தை அழகுறக் கட்டி எமது மக்களுக்கு அளித்த பெரும் அருட்செல்வம் என்ற பெருமையையும் கொண்டது தான் இந்தச் சிவாலயம்!...... அதனால் தான், இன்று ஸ்ரீலங்காப் படையினரால் தொடர்ச்சியாக மிக மோசமாகத் தாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றதோ என்னவோ.....!

"இத்தனை குண்டுகளையும் தாங்கிக் கொண்டு, எம்மையும் துயரத்திற்கு ஆளாக்குகின்றாயே! எங்கள் பரம்பொருளே. எமக்கு ஒரு நிம்மதியான வாழ்வைத் தரமாட்டாயா? இந்தக் கொடூரங்களுக்கெல்லாம் ஒரு முடிவுகட்டமாட்டாயா?"

மனம் திறந்து வாய்விட்டே புலம்பிக் கொண்டிருக்கும் பொழுதே,

"நல்ல குருநாதன் நம்மை வருத்துவது கொல்லவல்ல, பொல்லாப் பிணி போக்குவதற்கே." என்ற பாடலின் குரல் கேட்டுத் திரும்பினேன். ஆரம்பத்தில் கோயில் வாசலில், என்னுடன் கதைத்த அந்த வயோதிபர், எதிரே உள்ள புட்கரணிப் பிள்ளையார் கோயிலின் வெளிக் கிணற்றில் குளித்துவிட்டு, ஈர உடுப்போடு பாடிக் கொண்டே என்னைக் கடந்து போய்க் கொண்டிருந்தார்.

அவரது அந்தப் பாடல் தேவ அசரீரி போல் இருந்தது. அந்த நேரம் மனதுக்கு ஒரு ஆறுதலையும் தந்தது. அங்கிருந்து திரும்பி சிவன் கோயிலுக்கு தென்கிழக்கு மூலையில் இருந்த புட்டணிப் பிள்ளையார் என்று அழைக்கப்படும் "புட்கரணிப் பிள்ளையார்" கோயிலை நோக்கிச் சென்றேன்.

சிங்கள பௌத்த பேரினவாதிகள், அந்த ஆலயத்தையும் விட்டு வைக்கவில்லை. கோயிலின் கூரைகளில் குண்டுகள் விழுந்து வெடித்ததால், கூரைகள் உடைந்து சிதறிப் போய் இருந்ததுடன், ஆலய கட்டிடத்தின் பல பகுதிகள், உடைக்கப்பட்டு, ஒரு போர்க்களம் போல் காட்சி அளித்துக் கொண்டிருந்தது. கோயிலின் வாசலில் போய் நின்றபடியே ஆலயத்தின் உள் வீதியைப் பார்த்தேன். உள் சுற்றுப் பிரகாரம் எங்கும், உடைந்த ஓடுகளும், கண்ணாடித் துண்டுகளுமாக எல்லா இடமும் சிதறிப் போய்க்கிடந்தன.

ஸ்ரீலங்கா படையினர் ஒரு குறிப்பிட்ட இலக்கை நோக்கியே தமது விமானத் தாக்குதல்களை மேற்கொண்டனர் என்பதற்குச் சாட்சியாக வல்வெட்டித்துறைச் சிவன் கோயிலும் அதனைச் சுற்றியுள்ள மற்றைய ஆலயங்களும் தாக்கப்பட்டு அழிவடைந்த நிலையில் இருந்தன.

தமிழ் மக்களின் சொத்துக்களை முழுமையாகவே அழிப்பதுடன், அவர்களது சமய, கலை, கலாசாரங்களையும், கல்வியையும் சிதைத்து விடவேண்டும் என்பதிலும், தாக்குதல்கள் நடைபெறும் நேரங்களில் மக்கள் எங்கெல்லாம் ஓடிப்போய்ப் பாதுகாப்புக்காகக் கூடுவார்களோ, அங்கெல்லாம் தேடிச் சென்று, குண்டுகளை வீசியும், எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டும், ஒன்றுமறியாத அப்பாவிகளைக் கொல்வதிலும் முனைப்போடு இருந்த ஸ்ரீலங்கா அரசினால், சாதிக்க முடிந்தது என்ன?

நான்கு நாட்களிலும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட விமானக் குண்டுத் தாக்குதல்களில் பல கோடிக் கணக்கான ரூபா பணத்தைச் செலவழித்து, வெறும் கட்டிடங்களையும், சொத்துக்களையும், ஒரு சில உயிர்களையுமே அவர்களால் அழிக்கமுடிந்தது. ஆனால், எமது மக்களின் மனோபலத்தையும், வாழவேண்டுமென்ற உறுதியையும் அந்தப் பேரினவாதிகளால் அழிக்கமுடியவில்லை.

# 07. வல்வெட்டித்துறை மக்களின் ஒன்றுபட்ட சின்னமான சிறுவர் பூங்கா

“காற்றும் ஒரு கணம் பேச மறந்தது...
கடலும் ஒரு நொடி அமைதியாய்க் கிடந்தது
தேற்றுவார் இன்றியெம் தேசம் அழுதது.!
தீருவில் வெளியிலும் தேகங்கள் எரிந்தன.”

என்ற பிரபல தென்னிந்தியப் பாடகர் ரி.எல்.மகாராஜனின் களத்தில் கேட்கும் கானங்களின், அந்தப் பாடல் வரிகளை காற்றின் அலைகளினூடாகக் கேட்கும் பொழுது, எங்களுடைய உடலெல்லாம் ஒரு கணம் புல்லரிக்கும். தீருவிலில் அமைந்துள்ள “வயலூர் முருகன்” கோயிலுடன் தெற்குப் புறமாக உள்ள வயல்வெளியும் சிறிது தூரத்தில் தான் குமரப்பா புலேந்திரன் மற்றும் பத்து விடுதலைப் புலிப் போராளிகளின் நினைவாகக் கட்டப்பட்டிருந்த நினைவுத்தூபியும், அதற்கு எதிர்ப்புறமாக தீருவில் குளத்துடன், ‘கேணல் கிட்டு” நினைவாகக் கட்டப்பட்டிருந்த கப்பலும், கம்பீரமாக எழுந்து நின்று பார்ப்பதற்கே மிக அழகாகத் தோற்றமளித்துக் கொண்டிருந்தன...

1987 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 5 ஆம் திகதி, பலாலி இராணுவமுகாமில் “சயனைற்“ நஞ்சை அருந்தி மரணித்த தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களான குமரப்பா, புலேந்திரன் உள்ளிட்ட பன்னிரு போரளிகளுக்கும் நினைவுச்சின்னங்களை அமைக்க உள்ளதால் அதற்கான இடம் வேண்டுமென்று கோரியபொழுது, வல்வெட்டித்துறை நகராட்சி மன்றம் அவற்றிற்கான இடங்களை ஒதுக்கி அனுமதியும் வழங்கியது. இந்திய அரசின் சதியினால் கொல்லப்பட்ட போராளிகளின் நினைவாக வடமராட்சிப் பிரதேச மக்களின் பங்களிப்புடன் இந்த இரண்டு நினைவுச் சின்னங்களும் அமைக்கப்பட்டதுடன், அவற்றிற்கு நடுநாயகமாக விளங்குவது போல் முருகன் கோயிலுடன் இணைந்ததாக, நுழைவாசல் பகுதியில் அழகாக வடிவமைக்கப்பட்ட “போராளிகள் சிலைகளும் கம்பீரமாகக் காட்சி அளித்துக் கொண்டிருந்தன. இந்தப் போராளிகள் சிலை மலேசியாவில் உள்ள சிலைகளை ஒத்ததாக, இலங்கையின் மிகச் சிறந்த சிற்பியினால் வடிவமைக்கப்பட்டது.

1987ஆம் ஆண்டு இந்தியப் பிரதமர் ராஜிவ் காந்திக்கும், ஸ்ரீலங்காவின் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவுக்கும் இடையில் ஒரு தலைப்பட்சமாக ஏற்படுத்தப்பட்ட, இந்திய - இலங்கை ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டபின், “கடற்புறா” என்ற பெயருடைய படகில் தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய போராளிகளான குமரப்பா, புலேந்திரன் உள்ளிட்ட பன்னிரு போராளிகள், பயணம் செய்து கொண்டிருந்த பொழுது, இந்திய கடற்படையினரால் கைது


செய்யப்பட்டு பலாலி இராணுவத் தலைமையகத்திற்குக் கொண்டு செல்லப்பட்டனர். அவ்வாறு தடுத்து வைக்கப்பட்டிருந்த வேளையில் ஸ்ரீலங்கா பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலியின் உத்தரவுக்கமைய கொழும்புக்குக் கொண்டுவருமாறு பணிக்கப்பட்டு, அவர்கள் பன்னிருவரும், கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட முயற்சி எடுக்கப்பட்ட பொழுதே, சயனைற் அருந்தி தமது உயிரைத் தியாகம் செய்து கொண்டனர். அவர்களது உடல்கள் ஒரே சிதையில் வைத்து, புலிகளின் தலைவர் அஞ்சலி செலுத்த, தீருவில் மைதானத்திலேயே தகனம் செய்யப்பட்டதால், அந்த இடத்தில் அவர்களது நினைவாக நினைவுத் தூபி அமைக்கவேண்டுமென்று பிரஜைகள் குழுவினரும்,இறந்த போராளிகளின் குடும்பத்தினரும் மற்றும் பொதுமக்களும் விரும்பிச் செயற்பட்டதால், முற்று முழுக்க மக்களின் பங்களிப்புடனேயே அந்த நினைவுத் தூபியும், மிக அழகான பூங்காவும் அமைக்கப்பட்டன.


மிகப் பிரமாண்டமான முறையில் மக்கள் பங்களிப்பினூடாக இந்த நினைவுத் தூபியையும்,சிறுவர் பூங்காவையும் அமைப்பதற்குத் திட்டமிட்ட போதும், அதனை முற்று முழுதாக நிறைவேற்றி வைப்பதில் நாங்கள் பின்வரும் தடைகளை எதிர் நோக்கியிருந்தோம்:

- நூற்றுக்கும் மேற்பட்ட பரப்பளவைக் கொண்ட தீருவில் வெளியில், உள்ள பரந்த நிலப் பரப்பு தனியொருவருக்கு மட்டும் சொந்தமானதாக இருக்கவில்லை. வயலூர் முருகன் கோயில், வல்வை வைத்தீஸ்வரன் கோயில், மற்றும் பல தனியார்களுக்குச் சொந்தமான காணியாகத்தான் இருந்தது.... அவர்களில் சிலர் வெளிநாடுகளில், புலம் பெயர்ந்தும் வாழ்கினறனர்.சிலர் உள் நாட்டிலேயே இருக்கின்றனர். அவர்கள் எல்லோரையும் தொடர்பு கொண்டு, ஒன்று சேர்த்து, அவர்களின் மனப்பூர்வமான அனுமதியைப் பெற்று, ஆதனத்தை வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்திற்கு வழங்கித்தான் வேலைகளை ஆரம்பிக்க வேண்டும்.

- பருத்தித்துறை, யாழ்ப்பாணம் பிரதான வீதியில் இருந்து,தீருவில் வயலுக்குப் போவதற்கு ஒரு வண்டில் பாதை மட்டுமே இருந்தது. இன்னுமொரு அகன்ற பாதை சுற்றிச் சுற்றித்தான் வந்து,வயல் வெளியை அடையும்.அந்த வண்டில் பாதை கூட,கற்பாறைகள் நிறைந்த மேடும் பள்ளமுமான பாதையாகவே இருந்தது.அதனை அகலமான பாதையாக மாற்றி போக்குவரத்தை இலகுவாக்க வேண்டும்.



- பாதையை அகலமாக்குவதற்கு இருபுறமும் உள்ள தனியாரின் வீடுகளும், வளவுகளும் தடையாக இருந்ததால்,அதற்குக் குறுக்காக உள்ள சில கிணறுகள், கல்வீடுகள்,பாரிய விருட்சங்கள் போன்றவற்றை அப்புறப்படுத்த வேண்டும்.அவற்றை அப்புறப்படுத்த வேண்டுமானால் உரிமையாளர்களின் அனுமதியைப் பெறுவதுடன் அவற்றிற்கான நட்ட ஈடுகளையும் வழங்கவேண்டும்.











இவற்றிற்கான பாரிய வேலைத் திட்டத்தை மேற்கொள்வதற்கான நிதிவளம், ஆளணிவளம் மற்றும் கட்டடப் பொருட்களைப் பெற்றுக் கொள்ளுதல் போன்ற இடையூறுகள் எதிர்நோக்கப்பட்டன.

இதனைச் செய்து முடிக்கவேண்டுமென்ற உணர்வும் அர்ப்பணிப்பும் ஒவ்வொருவரிடமும் இருந்தாலும், இந்திய இராணுவத்தினரின் அச்சுறுத்தல்களையும் மீறி, வெளிபபடையாக வந்து வேலைகளைச் செய்யத் தயங்கிய பொது மக்களின் அச்சத்தைப் போக்கி அவர்கள் ஒவ்வொருவரையும், இந்தப் பணியில் ஈடுபடவைத்தல்.





இத்தகையை சவால்களுக்கு முகம் கொடுக்கும் வகையில் வல்வெட்டித்துறை பிரஜைகள் குழு, முழுமூச்சாக இறங்கியதால், 5 அடி அகலப் பாதையாக இருந்த வண்டில் பாதை, பின்னர் 20 அடி அகலமான லொறிகளே செல்லக்கூடிய பாதையாக மாற்றி அமைக்கப்பட்டது. இதற்காக பொதுமக்கள் தமது நிலங்களை விட்டுத் தந்ததால், அழகான நேர்ப்பாதையை எங்களால் அமைக்கக் கூடியதாக இருந்தது. இதற்காக ஏற்பட்ட நட்ட ஈடாக 3 வீடுகள் இடித்து அகற்றப்பட்டு பின்னர் வேறு இடத்தில் அவை கட்டிக் கொடுக்கப்பட்டன. இரண்டு கிணறுகள் தூர்த்துப் பின்னர் கட்டிக்கொடுக்கப்பட்டது. ஆரமபத்தில் மக்கள் இதற்குச் சம்மதிக்காத போதும், பின்னர் அந்தப் பாதையின் அழகைப் பாரத்ததும் மிகவும் திருப்திப் பட்டவர்களாக எல்லோரும் எங்களுடன் ஒத்துழைக்கத் தொடங்கினர். அதனைத் தொடர்ந்து பூங்கா அமைப்பதற்கான காணிகளையும் சிலர் மனமுவந்து வழங்கினர். வயலூர் முருகன் ஆலய தர்மகர்த்தாவாக இருந்த அமரர் சிவபாதசுந்தரம் அவர்களும் தனது ஆலயத்திற்குச் சொந்தமான காணியை விட்டுத் தந்ததுடன் தன்னாலான உதவிகளையும் எங்களுடன் சேர்ந்து செய்தார். நினவுத் தூபியும் பூங்காவும் அமைக்கும் பணி விரைவாக நடக்கத் தொடங்கியதும், வடமராட்சிப் பிரதேசத்தில் இருக்கின்ற பல்வேறு சங்கங்கள், பாடசாலைகளின் மாணவர்கள் எனப் பல நூற்றுக்கணக்கான வர்கள் தினமும், சிரமதானப் பணிகளை மனமுவந்து செய்யத் தொடங்கியமை எங்களுக்கு அளவில்லாத மகிழ்ச்சியைக் கொடுத்தது.

இந்தச் சம்பவம் இந்திய அரசுக்குப் பேரிடியாக அமைந்ததுடன், சர்வதேச அரங்கில் இந்தியாவுக்குக் களங்கத்தையும் ஏற்படுத்தியிருந்தது. அன்று நஞ்சருந்தி உயிர் நீத்த குமரப்பா, புலேந்திரன் உள்ளிட்ட, பன்னிரண்டு போராளிகளின் நினைவாகவே, அந்த நினைவுத் தூபி வல்வெட்டித்துறை பிரஜைகள்குழு, வல்வெட்டித்துறையின் பொது அமைப்புக்கள், மற்றும் பொது மக்களால் அழகாகக் கட்டப்பட்டிருந்தது.

அதை அடுத்து 1989 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 16 ஆம் திகதி அன்று, விடுதலைப் புலிகளின் தளபதிகளில் ஒருவரான கேணல் கிட்டு இந்திய இலங்கை ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்ட பின்னர், நாட்டில் நிலவிய சுமுகமான சூழ் நிலையைத் தொடர்ந்து, இந்தியாவில் இருந்து வங்கக் கடலினூடாக சர்வதேச கடற்பரப்பில் பயணம் செய்து கொண்டிருந்த பொழுது, கிட்டுவுடன் ஏனைய பதினாறு போராளிகளும், இந்திய இலங்கை அரசுகளின் கூட்டு நடவடிக்கையினால்,கடலில் வைத்தே தீயுடன் சங்கமிக்கப்பட்டனர். அவர்களின் நினைவாக தீருவில் குளத்துடன் சீமெந்தினால் ஆன ஒரு கப்பல், பொது மக்களின் பங்களிப்புடன் நிர்மாணிக்கப்பட்டது.

ஆயினும் தீருவில் பூங்கா இருந்த நிலப்பரப்புக்களை விடுதலைப் புலிகள் எந்தச் சந்தர்ப்பத்திலும் சுவீகரிக்கவோ அல்லது அவற்றைக் கையகப்படுத்தவோ இல்லை.அதே வேளை இந்தப் பகுதியில் விடுதலைப் புலிகள் எந்தச் சந்தர்ப்பத்திலும் முகாமிட்டிருக்கவும் இல்லை. இதனைப் பராமரிக்கும் பொறுப்பு முற்றுமுழுதாக வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தின் பொறுப்பில் இருந்ததுடன், இப் பூங்கா பொது மக்களின் பாவனையிலேயே இருந்தும் வந்தது.

இதில் முக்கியமான ஒரு விடயத்தை இங்கே குறிப்பிட வேண்டும்.., யாழ்ப்பாணத்தின் மிகச் சிறந்த கட்டிடக் கலைஞரால் திட்டமிட்டு வடிவமைக்கப்பட்டு, இலங்கையிலேயே பிரமாண்டமான ஒரு தூபியாக அமைப்பதில் முழுக்க முழுக்க வல்வெட்டித்துறை பிரஜைகள் குழுவுடன் இணைந்து, பொது அமைப்புக்களும் மக்களுமே நிதி உதவி செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. அதனுடன் சேர்த்து வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தினால் பொதுப் பூங்காவும் அமைக்கப்பட்டிருந்தது. வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்திற்குப் பூங்கா அமைப்பதற்குத் தேவையான ஆரம்ப நிதி அப்போது, பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளராக இருந்த சுந்தரம் டிவகலாலாவினால் ஒதுக்கப்பட்டிருந்தது.

இந்தப் பாரிய பணியை மக்கள் ஒன்றினைந்து உருவாக்குவதற்காக , இந்திய இராணுவத்தினரின் அச்சுறுத்தல்களையும் மீறி அப்போது பொறுப்பாளர்களாக இருந்த ஜேம்ஸ்,தீபன் ஆகியோர், பிரஜைகள் குழுவினருக்கு முன்னால் இருந்த தடைகளை நீக்கியதுடன், அவை

தொடர்பான எல்லா வகையிலுமான ஒத்துழைப்புக்களையும் வழங்கியதால், மிகச் சிறப்பாக அமைத்து முடிக்கப்பட்டது.

இந்திய இராணுவத்தினரின் சுற்றி வளைப்புக்கள் மற்றும் கெடுபிடிகளின் மத்தியில் குமரப்பா, புலேந்திரன் உட்பட பன்னிரு போராளிகளின் நினைவாக தீருவிலில் அமைக்கப்பட்ட நினைவுத் தூபி வல்வைப் பிரஜைகள் குழு எடுத்த முயற்சியினால், மக்களின் பங்களிப்புடன் 21 நாட்களில் நிறைவடைந்தது குறிப்பிடத்தக்கது.

அந்தப் பகுதியில் அத்தகைய அழகுவாய்ந்த நினைவுத் தூபியையும், பூங்காவையும் வானத்தில் இருந்தே அழித்துவிடுவதற்காக அடுத்தடுத்து நூற்றுக்கும் மேற்பட்ட குண்டுகளும் எறிகணைகளும் அன்று தொடர்ச்சியாக வீசப்பட்ட போதும், அந்த தூபிக்கு எவ்வித சேதமும் ஏற்படுத்தப்பட்டிருக்க வில்லை... ஆனால், மீண்டும் சிறிலங்கா இராணுவத்தினரால் வடமராட்சி கைப்பற்றப்பட்ட பின்னரே, அவற்றை புல்டோசர்கள் கொண்டு இடித்துத் தரை மட்டமாக்கினார்கள்...!

தற்போது மீண்டும் வல்வெட்டித்துறை நகராட்சி மன்றம் பொதுப்பூங்காவை அமைப்பதற்காக அந்த நிலத்தில் இருந்து 27 பரப்பு நிலத்தை அதன் உரிமையாளர்களான திரு. வை.சிவகுகதாசன் மாஸ்ரரும், திரு. தேவசிகாமணி அவர்களும் அன்பளிப்பாக எழுதிக் கொடுத்ததுடன் வல்வை சிவன்கோவில் ஆதீன கர்த்தாக்களினால் 20 பரப்பு நிலத்தை குத்தகையாக நகராட்சி மன்றத்திற்கு எழுதிக் கொடுத்தனர். இதனால் நகரபிதா மேற்கொண்ட முயற்சியின் காரணமாக இராணுவத்தினரால் அந்த நிலம் கையகப்படுத்தப்படவில்லை.

# 8. வல்வையைத் தாக்கிய எரிகுண்டுகளும், எறிகுண்டுகளும்

ஸ்ரீலங்கா அரச படைகளினால் குண்டு வீசித்தாக்கப்பட்டு இடிந்து சின்னாபின்னப்படுத்தப்பட்ட கோலங்களை என் மனக் கண்ணில் நிறுத்தியபடி,நீர்த் திவலைகள் நிறைந்து வழியும் நிலையில் இருந்த கண்களோடு, ஆலயச் சூழல்களை விட்டு வெளியே வந்தேன்.

புட்கரணிப் பிள்ளையார் கோயிலுக்கு எதிரே இருந்த சக்திவடிவேல் மாஸ்ரின் வீட்டின் மீதும் குண்டுகள் வீசப்பட்டதால், அவற்றின் கூரைகளும், யன்னல் கண்ணாடிகளும் உடைந்து ஒரு பாழடைந்த வீடு போல் தோற்றமளித்தது.




எறிகணை வீச்சினால் உடைந்த நிலையில் சக்திவடிவேல் மாஸ்ரரின் வீடும், திருத்தி அமைக் கப்பட்ட பின்னர் மீண்டும் குண்டுத் தாக்குதலுக்கு இலக்கான நிலையில் உள்ள வீடும்.

ஸ்ரீலங்காவில் சாதாரண ஆசிரியர்களுக்கான வேதனம் என்பது மிகவும் குறைந்த நிலையில்தான் உள்ளது. ஆசிரியர்கள் சேவை செய்யப் பிறந்தவர்கள் என்றும் அவர்களுடைய சேவை அத்தியாவசிய சேவை என்றும் பிரகடனப்படுத்திவிட்டு, அவர்களிடம் இருந்து உழைப்பை உறிஞ்சுகின்ற நிலைகாணப்படும் பொழுது, அன்றாட வாழ்க்கையைக் கொண்டு நடத்துவதற்கே கஸ்டப்படுகின்ற ஒரு ஆசிரியரால், தனது வீட்டை மீண்டும் கட்டி எழுப்பக்கூடிய சக்தி இருக்குமா. அவருடைய வீடு மிகவும் அழகாகவும், பெரிதாகவும் இருந்தது. முன்னுக்கு ஒரு சபை நடத்தக்கூடிய அளவுக்கு பெரிய முற்றம் இருந்தது. அதற்குப் பின்னால் வயல்வெளிகளுடன் சார்ந்தாற்போல் அந்த வீடு அமைக்கப்பட்டிருந்தது. முன்னரும் வடமராட்சி லிபரேசன் ஒப்பரேசன் இராணுவ நடவடிக்கையின் பொழுதும் இந்த வீடு எறிகணைத் தாக்குதலால் சேதமாக்கப்பட்டு வீட்டுக் கூரைகள் ஓடுகள்

முற்றாகவே சரிந்து விழுந்து நொருங்கிப்போய் இருந்தது. அதனை ஒரு மாதிரிக் கஸ்டப்பட்டுக் கடனைப்பட்டுத் திருத்தி நிம்மதியான வாழ்க்கையை நடத்திக் கொண்டிருந்த நேரத்தில், அவருக்கு இப்படி ஒரு துன்பம் வரும் என்று அவர் நினைத்துக் கூடப்பார்த்திருக்கமாட்டார்.

நான்கு நாட்கள் குண்டு வீச்சுக்களின் மத்தியில் அங்குமிங்குமாக ஓடிக்கொண்டிருந்த சக்திவடிவேல் மாஸ்ரர்.குண்டுச் சத்தங்கள் ஓய்ந்து போனதும், அவரும், அவருடைய மனைவி மற்றும் மகளும், இந்த ஊரைவிட்டே குடும்பமாக இடம்பெயர்ந்து மல்லாவிக்குப் போய்விட்டனர். நாங்கள் அந்த வீட்டைச் சுற்றிப்பார்க்க வந்த பொழுது,அவர்கள் அங்கே இருக்கவில்லை...

சக்திவடிவேல் மாஸ்ரர் வீட்டிற்கு மேற்குப் புறமாக உள்ள வெற்றுக்காணி புல் பற்றைகளால் நிறைந்து போய் இருந்தது. அங்கே ஒரு இடத்தில் சில சிறுவர்கள் சுற்றி நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர். நாங்களும் அதற்கு அருகில் போய்ப் பார்த்தபொழுது, அங்கே வெடிக்காத நிலையில் ஒரு குண்டு இருந்தது... அதனைக் கைகளாலும், கால்களாலும், புரட்டிப் புரட்டிப் பார்த்துக் கொண்டு நின்றனர். அது ரஸ்யாவில் தயாரிக்கப்பட்ட சுமார் 350 கிலோ நிறையிலான குண்டுதான் புட்கரணிப் பிள்ளையார் கோயிலை நோக்கி வீசப்பட்டபோதே, மண்ணில் சரிந்த நிலையில் விழுந்ததால் அது வெடிக்காத நிலையில் இருந்தது. அங்கே நின்ற சிறுவர்களை ஏசிக் கலைத்து விட்டு அதற்கு அருகில் சென்று பார்த்தேன்.

"இப்படியான குண்டுகள் பொது மக்கள் குடியிருப்பக்களில் விழுந்து வெடித்தால் எப்படி இருக்கும்..?"

அந்தக் குண்டின் நீளத்தையும் பாரத்தையும் நினைத்துப் பார்க்கவே என் உடல் கூசியது... சாதாரணமாக தென்னை மரத்தில் இருந்து,ஒரு சிறிய தேங்காய் விழுந்தாலே கூரை ஓடுகள் எல்லாம் சிதறிப் போய் விடும் நிலையில், இந்தப் பாரிய குண்டு மக்கள் குடியிருப்புக்களின் மீது எப்படியான தாக்கத்தை ஏற்படுத்தும் என்று யாராவது நினைத்துப் பார்க்க இல்லையா?.

இரு வெவ்வேறு நாடுகளுக்கிடையில் யுத்தம் நடைபெறும் பொழுது அந்தப் பகுதியையே அழிப்பதற்குத்தான் இப்படியான குண்டுகளை வீசுவதை நாங்கள் கேள்விப்பட்டிருக்கின்றோம். அது கூட ஐக்கிய நாடுகள் நிறுவனத்தினால் தடை செய்யப்பட்டிருந்த நிலையில்,தனது சொந்த மக்களின் மீது,இப்படியான குண்டுகளை வீசி அழிக்க முனைவது, உலகின் வேறு எந்த ஒரு நாட்டிலும் கூட நடந்திருக்க முடியாது..!

அந்த வெடிக்காத நிலையில் இருந்த குண்டு தொடர்பான தகவல்களை அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கக் கிளையின் அதிகாரிகளுக்கு அறிவித்து விட்டு மீண்டும் புட்கரணிப் பிள்ளையார் கோயிலையும் கடந்து,சிவன் கோயிலின் தெற்கு வீதி வழியாக நடந்து கொண்டிருந்தோம்.

நாங்கள் நின்ற அந்தப் பிரதேசத்தில் தான் அதிகளவிலான கோயில்கள் காணப்படுகிறது. அந்த வட்டாரம், இலங்கையிலேயே மிகப் பெரிய சிவாலயத்தைக் கொண்டிருப்பதாலும் அந்தப் பகுதி சிவபுரம் என்ற பெருமையையும் பெற்றிருந்தது.அங்கே உள்ள ஆலயங்களில் பெரிய ஆலயங்களாக விளங்கும் வல்வை வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரர் கோயில், வல்வை ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில் ஆகியவற்றுடன், புட்கரணிப் பிள்ளையார் கோயில், வயலூர் முருகன், சடையாண்டி வைரவர் கோயில், காளி கோயில், வைகுண்டப் பிள்ளையார் கோயில் ஆகியன அந்த வட்டாரத்திலேயே இருக்கின்றன. அதனால் தான் பட்டினசபையாக இருந்தபொழுது, அதற்கு "கோயில் வட்டாரம்" எனப் பெயரிடப்பட்டுள்ளது.

"மனிதர்கள் தான் மறுபிறவி வினையின் பயனை அனுபவிக்கின்றனர் என்றால், அனாதியான இறைவனுக்குக் கூடவா இந்தத் தண்டனை?"

அசுரர்களுக்கும் தேவர்களுக்கும் இடையிலான போராட்டத்தில் வாசுகி எனற பாம்பில் இருந்து கக்கப்பட்டு தேவர்களை அழிக்க வந்த நஞ்சைத் தன் கண்டத்தில் தாங்கிய அந்தப் பரமசிவன் இந்த அசுரர்களின் குண்டுகளையும் தன் தலையின் மீதல்லவா தாங்கிக் கொண்டிருக்கின்றார்.

"கோயிலுக்குள்ளும்,கோயிலைச் சுற்றிவரவும்,சுமார் முப்பது குண்டுகள் வரை இந்த நான்கு நாட்களிலும் போட்டிருப்பாங்கள்."

சிவன் கோயிலின் தெற்கு வீதியில் வசிக்கும் மீனாட்சிசுந்தரம் என்பவர், இதனைக் குறிப்பிட்டதும், நான் ஆச்சரியப்பட்டேன். அவரும் அவருடைய மனைவி பிளளைகளும் அந்த நாட்களிலும் பட்ட அவலங்களையும் எங்களுக்குக் கூறிக் கொண்டிருந்தார்.

"இவ்வளவு குண்டுகளையும் கோயில்கள் என்று தெரிந்த தானே போட்டாங்கள். இது தான் இவங்கடை தர்மிஸ்ட ஆட்சி, சேக் கேடு கெட்டவங்கள். இவங்களுக்கெண்டும் ஒரு மதம், சேக்."

எங்களுடன் கூடப் பார்த்துக் கொண்டிருந்த கந்தசாமி என்ற வயோதிபர் தன்னுடைய ஆத்திரத்தையும், வெறுப்பையும் கொட்டித் தீர்ததுக் கொண்டு நின்றார். மீனாட்சி சுந்தரம், கோயில் வீதிகளையும், அந்தப் பகுதியில் தொடர்ச்சியாகக் குண்டுகளை வீசியதால், தன்னுடைய வீட்டிற்கு ஏற்பட்ட பாதிப்புக்களையும், சேதங்களையும் காட்டி அவருடைய வீட்டின் பின்புறம் விழுந்து வெடிக்காத நிலையில் இருந்த பென்னம் பெரிய பீப்பா எரிகுண்டையும் எங்களுக்குக் காட்டினார்.




வை-12 சகடை விமானத்தில்இருந்த போடப்படும் ரஸ்ய தயாரிப்பான வெடிக்காத நிலையில் இருந்த குண்டும், பீப்பா குண்டு

கருங்கபில் நிறத்தில், ரப்பர் கரைத்துப் பாணி போன்ற ஒரு திரவம் வழிந்து நிலத்தில் பரவி இருந்தது. அதன் ஒரு முனையில் இலகுவில் தீப்பற்றக்கூடிய நீளமான திரியும், ஜெலிக்னைற்றும், நிரப்பப்பட்ட வல்கனைசுக் குழாய் பொருத்தப்பட்டிருந்தது. அந்தத் திரவத்தில் இருந்து பெற்றோல் மணம் மூக்கைத் துளைத்துக் கொண்டிருந்தது. இவை போன்ற பீப்பா குண்டுகளை அவ்ரோ விமானத்தில் இருந்து உருட்டிவிட்டதும் அவை காற்றில் மெதுமெதுவாக அசைந்து ஆடிக் கொண்டு வந்து கீழே எழுந்தமானமாக விழுந்து வெடித்ததும் அந்த இடம் தீப்பற்றி எரியும்.


21ஆம் திகதி திங்கட் கிழமை இப்படியான ஒரு எரிகுண்டு ஒன்றை அவ்ரோ விமானத்தில் இருந்து வீசியதில், காங்கேசன்துறை வீதியில் உள்ள முத்துச்சாமி கந்தசாமித்துரை என்பவரின் வீடு முற்றாகவே தீப்பற்றி எரிந்து சாம்பர் மேடாகக் காட்சி அளித்துக் கொண்டிருந்தது. அந்த வீட்டிற்குள் இருந்த தளபாடங்கள், உடு துணிகள் மற்றும் வீட்டுப் பாவனைப் பொருட்கள் எல்லாமே எரிந்து நாசமாகிப் போய் இருந்தன. அந்த வீட்டிற்குள் போகும் பொழுதே ஒரு வித துர் நாற்றம் மூக்கைத் துளைத்துக் கொண்டிருந்ததால், வயிற்றைக் குமட்டிக் கொண்டு வந்தது. அவருடைய ஒரு பொருள் கூட எஞ்சியிருக்கவில்லை. இவர்களது வீடு, முன்பும் ஒரு தடவை 1989 ஆம் ஆண்டு இந்திய இராணுவத்தினரால் தீக்கிரையாக்கப்பட்டிருந்தது. அந்தத் துயரத்தில் நொந்து போய் இருந்த அநதக் குடும்பம், ஒரு மாதிரி மீண்டும் புத்துயிர் பெற்று வந்த நேரத்தில், "மரணஅடி" விழுந்தது போல்,அந்த வீட்டினுள் போடப்பட்ட எரிகுண்டுகள் அவர்களது, பொருளாதாரத்தின் ஆணிவேரையே தகர்த்து விட்டது.

# தடைசெய்யப்பட்ட நேபாம் குண்டுகள்

பொதுவாக மூன்று வகையான நேபாம் குண்டுகள் பாவிக்கப்படுகின்றன: NP1 (இது தான் பொதுவாக பயன்படுத்தப்படும் நேபாம் குறிப்பாக வியற்நாமிலும், ஸ்ரீலங்காவிலும் பயன்படுத்தப்பட்ட நேபாம் குண்டுகள்)NP 2 (அதிவிசேட நேபாம் குண்டுகள்), Np3 ஆகிய இம் மூன்று வகையான நேபாம் குண்டுகளுக்கிடையிலானபிரதான வேறுபாடு, அவை வெவ்வேறு வெப்பநிலை வீச்சில், தீப்பற்றும் தன்மையைக் கொண்டு வேறுபடுத்தப்படுகின்றது. தீப்பற்று நிலையின் வீச்சானது NP1 குண்டின் வெப்பநிலை வீச்சானது 900 – 1300 ஊ ஆக இருப்பதுடன் அது எரியும் நேரம், சுமார் 3 தொடக்கம் 15 நிமிடங்கள் வரை நின்று எரியும் தன்மை கொண்டது. நேபாம் (Napalm) காஸ்லின் அல்லது ஏனைய ஆவியாகும் திரவங்களை நிரப்பி வைக்கும் ஒரு வகைக் குண்டு.. இது ஒட்டக்கூடியதாகவும், எளிதில் தீப்பற்றக் கூடியதாகவும் இருப்பதால் லூயிஸ் பிஸ்சர் (Louis Fieser) தலைமையிலான உறவாட் விஞ்ஞானிகள் குழுவினரால், இவ்வகையான குண்டுகள் இரண்டாம் உலக யுத்தத்தில் பயன்படுத்தப்பட்டது. இதில் சேர்க்கப்பட்டுள்ள மூலப் பொருட்களில் இருந்தே இதற்கான பெயரும் சேர்ந்து கொண்டது. இதன் இரசாயனப் பொருட்களாக கொப்றிசிப்பிற்றேற்றட் அலுமினியம் உப்புக்களும், நப்தெத்தனிக் மற்றும் பாமிற்றிக் அமிலங்களின் சேர்கையினால் (coprecipitated aluminum salts of nahthenic and palmitic acids.) அக்கலவை தயாரிக்கப்பட்டிருந்ததால், Natthenic and Palmitic acid என்ற பெயரின் சில எழுத்துக்களைச் சேர்த்து Napalm எனப் பெயரிடப்பட்டது. இவற்றுடன் எளிதில் ஆவியாக அல்லது தீப்பற்றக் கூடிய தடித்த ஜெலி போன்ற திரவங்களும் சேர்க்கப்பட்டிருந்தது.

இரண்டு வகையான நேபாம் குண்டுகள் உள்ளன: எண்ணெய் கலந்த அலுமினியம சவர்க்கார இறுக்கமாக்கி மற்றையது, எண்ணெய் கலந்த பொலிமெறிக் இறுக்கமாக்கி ("napalm-B"). இவ் வகையான குண்டுகளால் மேலும் பல பாதிப்புக்கள் ஏற்பட வாய்ப்புக்கள் அதிகம். நேபாம் குண்டுகள் நிலத்தில் விழுந்து வெடிக்கும் பொழுது, வளியை ஒட்சியிறக்கம் செய்து விடுவதால், மிக அதிகளவில் காபனேரொட் சைட்டுக்களைத் தோற்றுவிக்கும். இவ்வாயு நச்சுத் தன்யையானதால் மக்கள் குடியிருப்புக்களில் வீசுவதற்கு ஐக்கிய நாடுகள் தடை விதித்துள்ளது. நேபாம் குண்டுகள் வியற்நாம் யுத்தத்தின் போது, அமெரிக்கப் படையினரின் உலங்கு வானூர்திகள் வந்து இறங்குவதற்கேற்ற வகையில், அடர்த்தியான காடுகளை அழித்து நிலப்பகுதிகளை உருவாக்குவதற்காக அமெரிக்காவினால் பயன்படுத்தப்பட்டது. இந்தக் குண்டுகள் விழுந்து வெடித்தால் சுமார 200

மீற்றர் சுற்று வட்டத்தில் புல்பூண்டுகள் எல்லாமே ஒரு நொடிக்குள் அழிந்து விடும். அவ்வாறான பாரிய சேதம் விளைவிக்கக் கூடிய நேபாம் குண்டுகளைத் தான் வல்வெட்டித்துறையின் குடியிருப்புக்களின் மீது ஸ்ரீலங்கா விமானப் படையினர் கண்மூடித்தனமாக வீசிக் கொண்டிருந்தனர்.



ஒரு வகை நேபாம் குண்டு



இத்தகைய "நேபாம்" எரிகுண்டுகளின் சக்தியை நினைத்துப்பார்த்து அதிர்ந்து போய் நின்றேன்....... இத்தகைய பாரிய அனர்த்தங்களில் இருந்தும் தப்பிய அந்தக் குடும்பத்தின் நிலையை நினைத்துப் பார்த்ததும், கவலையாகத்தான் இருந்தது.

"ஐயோ!தம்பி!....நான்கு பொம்பிளைப் பிள்ளைகளை வைத்துக் கொண்டு இந்த ஒரு வீட்டை நம்பியிருந்த எங்களுக்கு மீண்டும் தலைநிமிர முடியாதபடி,இந்தச் சிங்களப்படை இப்பிடி எரிகுண்டைப் போட்டுவிட்டுப் போய்விட்டாங்களே!. ஐயோ நாங்கள் என்ன செய்யப்போறம்."

எனது சிறிய தந்தையான கந்தசாமித்துரையின் மனைவி ரதிதேவி தலையில் அடித்துக் கொண்டு அழுது புலம்பிக் கொண்டிருந்தார். அவருடைய துயரத்தில் பங்கு கொண்டு ஒரு துளி கண்ணீரை எங்களால் சிந்தமுடியுமே தவிர வேறு எதனைச் செய்யமுடியும்?

"அண்ணா..! வீடு போன கவலை இருந்தாலும், எங்கடை மனங்கள் இன்னும் உடையவில்லை, கோபுரத்தில் இருந்து கொண்டு இப்படி அடிமையாக வாழ்ந்து செத்துக் கொண்டிருக்கிறதை விட, குடிசை வீட்டிற்குள் இருந்து சுதந்திரமாக வாழுறது எவ்வளவோ மேல். இண்டைக்கு எங்கடை வீட்டை இப்படி எரித்து நாசம் செய்து போட்டுப் போயிற்றான் அண்ணா நீங்கள் இருந்து பாருங்கோ நாங்கள் நாளைக்கு நல்ல ஒரு வாழ்வை வாழத்தான் போறம்".

அதுவரை அமைதியாக அங்கு நின்று எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டு நின்ற அவர்களது மகள் சாந்தி இப்படி உறுதி குலையாமல் கூறியதும்,அந்தத் துயரத்தின் மத்தியிலும் நாங்கள் எல்லோருமே, அதனை ஆமோதிபபது போல் தலையை ஆட்டினோம்.

"வீட்டைக் கட்டிப்பார்,கல்யாணத்தை முடித்துப் பார்!." என்று ஒரு பழமொழி யாழ்ப்பாணத்தில் வழக்கில் இருந்து வருகின்றது!. யாழ்ப்பாண மக்களைப் பொறுத்தவரையில், இரண்டுமே கடினமான வேலைகள் தான் என்பதை இரண்டு விடயங்களிலும் அனுபவப்பட்டவர்களைக் கேட்டு அறிந்து கொள்ள வேண்டும்....

இப்படி ஒரு கல்வீட்டைக் கட்டி முடிப்பதற்கு எந்தளவுக்குத் தமது உதிரத்தையே சக்தியாக்கி யிருப்பார்கள்?....

ஸ்ரீலங்காவின் ஜனாதிபதி பிரேமதாசாவின் புதிய வீடமைப்புத் திட்டமானது, "2000 ஆம் ஆண்டில், சகலருக்கும் வீடு" என்ற தொனிப் பொருளை மகுட வாக்கியமாகக் கொண்டு, ஒரு இலட்சம் வீடுகளைக் கட்டிக்கொடுத்தல், என்ற திட்டத்தில், பல்லாயிரக் கணக்கில்... கோடிக் கணக்கில் செலவழித்து சிங்கள மக்களுக்குத் தாரை வார்த்துக் கொண்டிருக்கின்றார்கள்.

இங்கே வடக்குக் கிழக்கில் உள்ள தமிழர்களின் குடியிருப்புக்களை நோக்கி குண்டுகளை பொழிந்து கொண்டிருக்கிறார்கள். இலட்சம் இலட்சமாய், கோடி கோடியாய்ப் பணத்தைச் செலவழித்து, பட்டினி கிடந்து பசியால் மெலிந்தும் குடியிருக்கச் சொந்த வீடு ஒன்று தேவை என்ற உணர்வில், தனிமனித உழைப்பினால் கட்டப்பட்ட பல்லாயிரக் கணக்கான வீடுகளை உடைத்து, நொருக்கிக் கொண்டிருக்கின்றார்கள்.

இது தான் தர்மிஸ்ட அரச கோட்பாடு.! அகிம்சாவாதியின் தர்மம்...!

அந்த வீட்டில் இருந்தும் வெளியேறி,காங்கேசன்துறை வீதி வழியாகக் கிழக்குத் திசை நோக்கி நடந்து கொண்டிருந்தோம். பார்க்கும் இடமெங்கும் வீதியின் இருபக்கங்களிலும், இடிந்த கட்டிடங்களும், எரிக்கப்பட்ட வீடுகளுமாகவே இருந்தன. காங்கேசன்துறை பருத்தித்துறை பிரதான விதியை அடையாளம் காணமுடியாத அளவுக்கு, கற்குவியல்களும், ஓட்டுச் சிதறல்களுமாகவே இரந்தன. வல்வெட்டித்துறைச் சந்தியில் இருந்து மேற்காக சுமார் 100 மீற்றர் தூரத்தில், காங்கேசன்துறை வீதியில் வடக்குப் புறமாக ஒரு பெரிய அழகான மாடிவீடு இருந்தது... அந்த இடத்தில் நின்றபடியே சுற்றுமுற்றும் பார்த்த எனக்கு வியப்பாகத்தான் இருந்தது.

அங்கே இருந்த அந்த அழகிய வீட்டை என்னால் கண்டு பிடிக்கமுடியவில்லை... அந்த வீடு இருந்த இடத்தில் ஒரு பெரிய ஆழமான குழியும் கற்குவியல்களும் மட்டுமே இருந்தன. அங்கே நான்கு ஐந்து பேர் நின்று, அதில் இருந்த பாரிய கற்களை அகற்றிக் கொண்டிருந்தனர். அவற்றுக்கிடையெ சிக்கி இருந்த ஆடைகள், நகைகள் மற்றும் வெள்ளிப் பாத்திரங்களை ஒவ்வொன்றாக இழுத்து எடுத்துக் கொண்டிருந்தனர்!. பாத்திரங்கள் எல்லாமே உருக்குலைந்து, நெளிந்து இருந்தன...அங்கே நின்றவர்களில் அந்த வீட்டின் உரிமையாளரான 36 வயது நிரம்பிய ரவி என்று அழைக்கப்படும் செல்லையா ஸ்ரீகரன் என்பவரை அழைத்து...

"ரவி!. என்ன நடந்தது?....எப்பிடி இந்த வீட்டிலையிருந்து தப்பி வெளியேறிப் போனனீர்கள்.? அல்லது குண்டு போடுறதுக்கு முன்னமேயே ஓடிப் போயிட்டியளோ?"

அந்த வீட்டின் நிலையைப் பார்த்து விட்டுச் சிறிது தயக்கத்துடன் தான் கேட்டேன். ஏனென்றால், பொதுவாக, எறிகணைத் தாக்குதலின் போதோ அல்லது கடலில் இருந்து குடியிருப்புக்களை நோக்கி எறிகணைத் தாக்குதல்களை மேற்கொள்ளும் போதோ அந்த அயலில் உள்ளவர்கள் எல்லோருமே அந்த வீட்டின் கீழ்பகுதியிலேயே ஓடிவந்து நிற்பார்கள். இன்று அந்த வீட்டின் நிலையைப் பார்த்ததும் என்னால் நினைத்துக் கூடப் பார்க்கவில்லை... ஏனென்றால், உலங்கு வானூர்தியில் இருந்து சரியாக நண்பகல் 12.30 மணிக்கு, "வல்வெட்டித்துறை மக்கள் அனைவரையும் 48 மணித்தியாலத்திற்குள் ஊரை விட்டே வெளியேறிவிட வேண்டும்." என்று சிறிய துண்டுப் பிரசுரத்தை வீசி எறிந்து விட்டு, மூன்று மணித்தியாலங்களுக்குள் எவருமே சற்றும் எதிர்பார்க்காத வகையில், பொது மக்களின் குடியிருப்புக்கள் மீது, சடுதியாக நாலாபக்கங்களில் இருந்தும் குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்டதில்,அந்தப் பிரதேசத்தில் இருந்து எவருமே வெளியேற அவகாசம் கொடுக்கவில்லை. அந்த அளவுக்கு ஸ்ரீலங்கா விமானப் படையினரின் வான் சுற்றி வளைப்பு வியூகம் பலமாகப் போடப்பட்டிருந்தது.

குண்டு வீச்சுக்கள் நடைபெறும் பொழுதோ, அல்லது சிறிது நேர ஓய்வின் பொழுதோ, அந்தப் பிரதேசத்தை விட்டு வெளியேறினால் போதும், வானத்தில் தொடர்ந்து வட்டமிட்டபடி இருந்த உலங்கு வானூர்தியில் இருந்து சரமாரியாக ஏவப்படும் றொக்கற் தாக்குதல்களும், 50 கலிபர் தாக்குதல்களும் தொடர்ச்சியாக நடத்தப்பட்டதால், தெரு விதிகளில் எவருமே நடமாடாதபடி, "வான்வியூகம்" அமைத்துத் தமிழர்களை அழித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீலங்கா அரசின் கொடுமைகளை உலகம் ஏன் இன்னும் பார்த்துக் கொண்டிருக்கின்றது? ஸ்ரீலங்கா அரசினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற இன அழிப்பு நடவடிக்கைகள், தொடர்ந்தும் மூடி மறைக்கப்பட்டு வருகின்றன.

அந்த அளவுக்கு, ஸ்ரீலங்கா அரசின் தகவல் தொடர்பு சாதனங்களும், கொழும்பு முதலாளித்துவ சிங்கள, ஆங்கில பத்திரிகைகளும், பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜயரத்தினாவினால் கட்டவிழ்த்து விடும் கொயபல்ஸ் பாணியிலான பொய்களையும், புழுகு மூட்டைகளையும் பிரபல்யப்படுத்தி, தமிழர்களுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளை நியாயப்படுத்தியும் வருகின்றன.

இவ்வாறான தொடர்ச்சியான வான் தாக்குதல்களின் மத்தியில், எப்படி ஸ்ரீகரனினால்,அங்கிருந்து வெளியேறியிருக்க முடியும் என்ற சந்தேகத்துடன் நான் அவ்வாறு கேட்டதும், அவரும் சிரித்துக் கொண்டே,

"20 ஆம் திகதி, ஞாயிற்றுக் கிழமை 3.30 மணியளவில், குண்டு வீச்சு விமானங்கள் சுற்றிச் சுற்றி அங்குமிங்குமாகப் பறந்தபடி எழுந்தமானமாகக் குண்டுகளைப் போடத் தொடங்கியதும், எனது மனைவி வதனியையும், பிள்ளைகளையும் பதுங்குகுழிக்குள் அனுப்பினேன். அப்பொழுது, முன்வீடுகளில் இருந்தும், அயல்வீடுகளில் இருந்தும் குழந்தைகள், சிறுவர்கள் உட்பட ஓடிவந்து தஞ்சமடைந்த பதினொரு பேர் வரை எங்களுடைய பதுங்கு குழிகளுக்குள் இருந்தோம். அந்தக் குழியினுள் நாங்கள் பதினொரு பேரும், மிக நெருக்கமாக இருந்ததால், மூச்செடுக்கமுடியாத அளவுக்கு இருந்தோம். பயம் ஒருபுறம், பங்கர் வெக்கை மறுபுறமுமாக வியர்த்துக் கொண்டிருந்தது... முன்வீட்டில் இருக்கம் ஞானவேல் அண்ணன் ஓடி வந்து என்னுடைய கீழ்வீட்டில் வந்துநின்றார். பலமான மாடிவீடாக அமைக்கப்பட்டிருந்ததால், ஓரளவு பாதுகாப்பாக இருக்கும் என்று அவர் நினைத்து அங்கே நின்றார். நான் பதுங்கு குழியில் இருந்தும் தலையைச் சிறிது வெளியே நீட்டியபடி வானத்தைப் பார்த்துக் கொண்டு நின்றேன். அப்பொழுது எங்களுடைய தலைக்கு மேலாக வை-12 சகடை விமானம் வட்டமிட்டபடி பறந்து கொண்டிருந்தது. அதன் பேரிரைச்சல் என்னுடைய தலைக்கு மேல் கேட்டது.அந்தப் பென்னம் பெரிய சகடை விமானம் மிகத் தாழ்வாகப் பதிந்தபடி, குண்டைத் தள்ளியிருக்க வேண்டும்."

அன்று நடைபெற்ற சம்பவங்களை அப்படியே தத்ரூபமாக ஒரு கதை போன்று கூறிக் கொண்டிருந்த ஸ்ரீகரன் மூச்சு வாங்கியபடி சிறிது நேரம் அப்படியே நின்றார். அந்தச் சம்பவம் அவரை எவ்வளவுக்குப் பாதித்திருந்தது என்பதை அவருடைய பேயறைந்தது போல் இருந்த முகம் காட்டிக் கொண்டிருந்தது. அவர் மேலும் என்ன சொல்லப் போகின்றார் என்பதைக் கேட்கும் பாவனையில் அவருடைய முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

"சகடை விமானத்தில் இருந்து தள்ளிவிடப்படுகின்ற குண்டு வந்து கொண்டிருக்கின்ற விசில் சத்தம் எங்களுக்கு மிக அண்மையில் கேட்டதும், நான் பயந்து போய் பதுங்கு குழியின் கடைசிப் படியினுள் காலை வைத்து மேல் மூடியை இழுத்து மூடுவதற்கிடையில், அந்தப் பாரிய குண்டு, எனது வீட்டின் மேல், விழுந்து வெடித்ததில் எங்களுடைய பெரிய மாடிக் கட்டிடம், படபடவென்று சரிந்து விழுந்ததில் நாங்கள் பதினொரு பேரும் பதுங்கியிருந்த குழியின் வாசல் பகுதி கட்டிட இடிபாடுகளினால், மூடப்பட்டு வந்தது. கண்ணிமைக்கும் நேரத்திற்குள், நாங்கள் தங்கியிருந்த பதுங்கு குழி ஒரே இருள்மயமாகி விட்டது. அதற்குள் தங்கியிருந்த பதினொரு பேரும் பதுங்கு குழிக்குள் இருந்து வெளியேற முடியாதபடி, கற்குவியல்களினால் மூடப்பட்டு விட்டோம். குழிக்குள் இருந்தவர்கள், அழுது கூக்குரல் இட்டுக் கொண்டிருந்தனர். எங்களை யாருமே காப்பாற்ற வரமாட்டார்கள் என்ற பயம் இன்னும்

அச்சத்தை ஏற்படுத்தியது. சரி இனி எங்கடை உயிர் இதுக்ுள்ளேயே போகப்போகுது. என்று எல்லாரும் கடவுளைத் தான் பிரார்த்தித்துக் கொண்டிருந்தனர்.. நான் ஒருமாதிரி, பதுங்கு குழி வாசலின் மேலாக மூடியிருந்த ஒரு பெரிய கல்லைமெதுவாகத் தள்ளி உள்ளே விழுத்தி விட்டுக் கையை மேலே தள்ளி ஒவ்வொரு கல்லாக அகற்றியபடி மெதுவாக மேலே ஏறி வந்தேன். கற்களுக்குள் சிக்கி எனது சாரம் (லுங்கி) முற்றாகவே கிழிந்து விட்டது. அப்பொழுதும் கூட எங்களுடைய தலைக்கு மேலாக வை-12 சகடை விமானம் இரைச்சலுடன் பறந்தபடியே சிறிது தூரம் தள்ளிக் குண்டுகளைப் போட்டுக் கொண்டிருந்தது. நானும் பதட்டத்துடன் குழியினுள் மூச்சுத் திணறிக் கொண்டிருந்தவர்களை, ஒவ்வொருவராக வெளியே இழுத்து எடுத்துக் கொண்டிருந்தேன். அவர்கள் எல்லாரையும் வெளியேற்றியபின், எனது சாரம் கிழிந்திருந்ததால், உள்ளங்கியுடன் எனது மனைவியையும், பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு ஓடிச்சென்று, தெணியம்பையில் உள்ள குட்டிராசா அண்ணன் வீட்டிற்குச் சென்று அவரிடம் இருந்து ஒரு சாரத்தை வாங்கிக் கட்டிக் கொண்டு அங்கே இருக்கப் பயத்தினால், அங்கிருந்தும் சென்று புறாப்பொறுக்கி போய்ச் சேர்ந்தோம். அன்று ஏற்பட்ட பாதிப்பினால் எனது இடது பக்கக் காது கேட்காமல் போய்விட்டது."

ஒரே மூச்சில் விடாது சொல்லி முடித்த ஸ்ரீகரன், இடையிடையே வானத்தைப் பார்த்துப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்தார்.

மறு பிறவி என்பது இதுதானோ?

இவருடைய அந்தத் திகில் அனுபவம் என்னைப் புல்லரிக்க வைத்தாலும்,விமானம் குண்டுகளைப் போடுவதற்கு முன்னர், அவர்களுடைய வீட்டுக் கட்டிடத்தின் கீழ் ஏற்கனவே ஒதுங்கி நின்ற ஞானவேல், என்பவரின் நிலையை அறிவதில் ஆவலுடன் இருந்தேன்.

"அது சரி! ரவி, இந்த ஆபத்தான குண்டுக்குள்ளையிருந்து அருந்தப்பிலை நீங்கள் எல்லாம் தப்பிவிட்டியள். உங்கடை கீழ் வீட்டுக்குள்ளை ஓடி வந்து நின்ற ஞானவேலின் நிலை என்ன? அவருக்கு என்ன நடந்தது?...."

"கடவுளே..! அம்மாளாச்சி!.. அந்த ஆளுக்கு ஆயுள் நல்லகெட்டி!. அவர் இங்கை ஓடி வந்து நின்றவுடனை சகடையும் குண்டைப் போட்டதாலை, அவரால் அங்கையிருந்து ஓட முடியவில்லை. அப்படியே கட்டிடம் உடைந்து விழேக்கை அதுக்குள்ளைதான், எப்பிடியோ நின்றிருக்கிறார். உடைந்து விழுந்த கட்டிடத்தின் இடிபாடுகளுக்கு இடையில், சிக்கிக் கொண்டு வெளியே வரமுடியாதவாறு முனகிக் கொண்டு இருந்திருக்கின்றார். நல்லவேளையாக அங்கே ஓடிவந்தவர்கள் இவரைப் பார்த்து விட்டார்கள். அங்கே அவரை மூடியிருந்த கற்களைத்

தூக்கி வெளியே எடுத்து அவரைக் காப்பாற்றி விட்டபடியால் பலமான காயங்களுடன் தப்பி விட்டார்."

ஸ்ரீகரன் தான் அதற்குள்ளிருந்து தப்பி வெளியேறிய அதிசயத்தையும் மறந்து, அவருடைய திகில் அனுபவத்தை வியப்புடன் கூறிக்கொண்டே, புதைந்து கிடந்த கற்குவியல்களைக் காட்டினார். அந்த இடத்தில் பெரிய பெரிய சீமெந்துக் கற்களும், இரும்புக் கேடர்களும் காணப்பட்டன... அந்தக் காலத்தில் இப்படியான வீடுகளை எப்படிப் பலமாக அமைத்திருக்கின்றனர் என்பதற்கு அங்கே இருந்த இரும்புக் கேடர்கள் காட்டிக் கொண்டிருந்தன.

"இதற்குள் இருந்து தப்பி, இவர் உயிரோடு மீண்டு வருவது என்றால், உண்மையிலேயே அதிசயம் தான் .இப்போ அவர் எங்கை இருக்கிறார்..?

அவரை நேரில் சந்திக்கவேண்டுமென்ற ஆவல் என்னைத் தூண்டியது.

"அவரை வெளியே எடுத்த சிறிது நேரத்திற்குள் மயங்கிப் போனார். காயங்களுக்கு முதலுதவி செய்த பெடியங்கள், அவரை மந்திகை வைத்தியசாலைக்குக் கொண்டு போய்ச் சேர்த்திருக்கிறார்கள். இப்பவும் வாட்டிலைதான் இருக்கிறார்."

நான் அவரிடம் இருந்து விடைபெற்றுச் செல்வதற்குத் தயாரான போது, ஸ்ரீகரன் எங்களை இடை மறித்து,

"எங்களுடைய வீட்டுக்குக் குண்டு போடுற சமயத்தில் தான் இதற்கு முன்னால் உள்ள கடை வாசலில் நின்ற தண்டாயுதபாணி மகேஸ் என்ற பொடியன் குண்டு பட்டு இறந்து போனவர்."

ஸ்ரீகரனே இதனைக்கூறியதும், அவர் காட்டிய இடத்தைத் திரும்பிப் பார்த்தேன்.. அங்கே இன்னும் இரத்தக் கறை மறையாமல் இருந்து கபில நிறமாகக் காட்சி அளித்தது.

# 09. முதலுதவித் தொண்டர்களின் மனிதாபிமானம்

முதல் நாள் குண்டு வீச்சுக்கள் நடந்த பொழுது செல்லையா ஸ்ரீகரனின் மாடி வீடு,தரைமட்டமாக்கப்பட்ட சந்தர்ப்பத்தில்,அவரது வீட்டின் முன் உள்ள "வாணி வீடியோ ஹோம்" என்ற வர்த்தக நிலையத்தின் முன் வாசலில் நின்ற 24 வயதுடைய தண்டாயுதபாணி மகேஸ் என்ற இளைஞன், அடுத்தடுத்துப் போடப்பட்ட இரண்டு குண்டுகள் கீழே விழுந்து வெடித்ததில், குண்டுச் சிதறல்களினால்,தலை பிளந்த நிலையில்,அந்த இடத்திலேயே துடிதுடித்து இறந்து போனார். அவரது உயிர் பிரிந்து அரைமணித்தியாலம் வரை எவருமே அதற்குக் கிட்டவரமுடியாத நிலையில்,அந்த இடத்திலேயே இருந்தது. அதன் பின்னர் கிடைத்த சிறிது நேர இடைவெளியைப் பயன்படுத்தி அங்கு முதலுதவி செய்து உடனுக்குடன் வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்துக் கொண்டிருப்பதில் சில இளைஞர்கள் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

இப்பொழுதெல்லாம் பொதுச் சேவைகளுக்கும், தன்னலமற்ற மனித நேயப்பணிகளுக்கும் இளைஞர்கள் முன்வருவது என்பது முயற்கொம்பாகத்தான் இருக்கின்றது... ஒவ்வொருவரும் தமது தனிப்பட்ட வாழ்க்கை மற்றும் அவர்களது எதிர்காலம் என்பது பற்றித் தான் சிந்திக்கின்றார்களே ஒழிய தாமாக வந்து இவ்வாறான மனிதநேயப் பணிகளுக்கு வருவதைக் குறைத்துக் கொண்டுவிட்டனர். இவற்றை விட கண்ணியமான, சில படித்த மனிதர்கள் கூட பொதுச் சேவையில் இருந்து ஒதுங்கியே வாழ்ந்து வருகின்றனர். பல வருடங்களாக வல்வெட்டித்துறையின் நலன்பேணும் நடவடிக்கைகளில் செயற்பட்டு தன்னையே அர்ப்பணித்து உழைத்த ஒருவர் தானுண்டு தன் குடும்பம் உண்டு என்ற ஏகாந்த நிலையில் ஒதுங்கி வாழ்ந்து கொண்டிருக்கின்றார் . இது பற்றி ஒரு தடவை நான் அவரிடம் உதவியைக் கேட்பதற்காகச் சென்று,

"யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சில உதவிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு, நாங்கள் ஒரு அமைப்பை உருவாக்கி அவர்களுக்கு சில அரச சார்பற்ற நிறுவனங்களுடாக ஏதாவது உதவியைப் பெறறுக் கொடுக்கலாம், வருவீர்களா?" என்று அவருடைய வீட்டிற்குச் சென்று அழைத்ததற்கு அவர்,

"ஐயோ!...மாஸ்ரர்!... என்னை இதிலை இழுக்காதீங்கோ... உங்களுக்குத் தேவையானால் என்ன உதவியும் செய்து தருவன். இனி பொதுச் சேவை, அது, இது என்று என்னைக் கூப்பிடாதையுங்கே, இதுகளிலை என்ரை நேரத்தை அர்ப்பணித்து நான் பட்ட துன்பம் போதும், எங்கடை ஊரைப் பொறுத்தவரையில் எல்லாருமே சுய நலம் பிடித்தவர்கள். நல்லது செய்யவும் மாட்டாங்கள் நல்லதைச் செய்ய விடவும் மாட்டாங்கள்

ஒருவனிலை பழி சுமத்திறதென்றால் எல்லாரும் சேர்ந்து கதைப்பாங்கள். ஆனால் ஒருவரும் நியாயத்தைத் தட்டிக் கேட்கிறதுக்கு முன்னுக்கும் வரமாட்டாங்கள். இதுக்குள்ளை நாங்கள் திரும்பவும் வந்து ஏன் மாஸ்ரர் அவமானப்பட வேண்டும்?"

அவர் விரக்தியின் உச்ச விளிம்பில் நின்று கூறிய அந்த உணர்வு மிக்க வார்த்தைகள் என்னையும் ஒரு கணம் பின்னோக்கித் திரும்பிப் பார்க்க வைத்தது.

1997 ஆம் ஆண்டுகளில், இந்திய அமைதி காக்கும் படை (IPKF) என்ற பெயரில் தமிழர் தரப்பினரின் எவ்விதமான ஆலோசனைகளோ, அபிப்பிராயங்களோ பெறப்படாது, அப்போதைய இந்தியப் பிரதமர் ராஜிவ் காந்திக்கும், இலங்கையின் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனாவுக்கும் இடையிலான இந்திய-இலங்கை ஒப்பந்தம் ஸ்ரீலங்காவில் வைத்துக் கைச்சாத்திட்டு, அந்த மை காய்வதற்கிடையில் பல இலட்சக் கணக்கான இந்தியத்துருப்புக்கள் இலங்கையின் வடக்குக்கிழக்குப் பகுதிகளில் குவிக்கப்பட்டனர்.

ஆரம்பத்தில் யாழ்ப்பாணம் வந்திறங்கிய இந்திய இராணுவத்தினர், தமது பவல் கவச வாகனங்களில் புலிக் கொடிகளைக் கட்டியபடி தாங்கள் தமிழர்களின் நலனுக்காகவே வந்தவர்கள் என்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்தினர். காலப் போக்கில் ஏற்பட்ட அரசியல், யுத்த நிலைமைகள் என்பவற்றின் மாற்றங்களுக்கேற்ப, அவர்களுடைய துப்பாக்கிகளும், கவச வாகனங்களின் குண்டுகளும், தமிழர்களுக்கு எதிராகவே திருப்பப்பட்டன. சாதாரண அப்பாவித் தமிழ் மக்களுக்கு எதிராகத் தமது ஆயுதங்களைப் பிரயோகிக்கத் தொடங்கி விட்டார்கள்.

வல்வெட்டித்துறையில் இந்திய இராணுவம் நிலை கொண்டிருந்த அந்தக் காலப் பகுதியில், .இந்திய இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட "இந்தியாவின் மைலாய்" என்றும், "ஸ்ரீலங்காவின் ஜாலியன் வாலாபாக்" என்றும் அழைக்கப்பட்ட "வல்வெட்டித்துறைப் படுகொலைகள்" இன்றும் உலகத் தமிழ் மக்களால் நினைவு கூரப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இந்திய இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட இவை போன்ற பல படுகொலைகளை ஈழத் தமிழர்களால் எப்படி மறக்க முடியும்? வல்வெட்டித்துறை மக்கள் ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் மட்டுமின்றி இந்திய இராணுவத்தினராலும் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டே வந்தனர்.

வல்வெட்டித்துறை மக்களுக்கென்று ஏன், வடக்கு கிழக்கு மாகாணத் தமிழ் மக்களுக்கென்று கூட சரியான அரசியல் தலைமைத்துவம் இல்லாத நிலையில், இன்று தமிழ்மக்களின் அரசியல் தலைவர்கள் என்று தம்மைக் கூறிக் கொண்டிருப்பவர்கள் எல்லோருமே ஓடி ஒளித்தபோது, சாதாரண மக்கள் எவ்விதமான உதவியோ அல்லது, வழிகாட்டல்களோ இல்லாத நிலையில் அலைந்து திரிந்தனர். அந்த நேரம்தான் வல்வெட்டித்துறையிலும்

அயல் கிராமங்களிலும் உள்ள மக்களுக்கும் ஒரு ஆறுதல் அளிக்கும் நிறுவனமாக வல்வைப் பிரஜைகள் குழு செயற்பட்டது. பாதிக்கப்பட்ட நூற்றுக் கணக்கான குடும்பங்கள் பல்வேறு நிவாரணங்களைப் பெறுவதற்கும், இராணுவ அடக்கு முறைகளினால் நேரடியாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கும் வெளிநாடுகளில் அரசியல் தஞ்சம் பெற்றுக் கொடுப்பதிலும் மேற்கொண்ட முயற்சிகள் ஏராளம். ஆனால் அந்தக் காலத்திலும் ஒரு சிலரால் பிரஜைகள் குழுவைச் சேர்ந்தவர்கள் துன்புறுத்தப்பட்டு வந்தனர். அவர்களது ஆக்க பூர்வமான முயற்சிகளைக் குழப்பும் செயற்பாடுகளை மேற்கொண்டிருந்தனர்.. இதனால்தான் பண்பான நல்ல படித்த மனிதர்கள் பொதுச் சேவையில் வருவதற்குத் தயக்கம் காட்டுகின்றனர். இந்த கசப்பான அனுபவங்களே படித்த மனிதர்களைப் பொது வாழ்வில் இருந்து ஒதுங்க வைத்தது.

நாணயத்திற்கு இரண்டு பக்கங்கள் இருப்பது போல், ஒரு சமூகத்தில் எப்பொழுதும் இரண்டு வகையான குழுக்கள் காணப்படும். ஒன்று ஆக்கபூர்வமாகச் செயற்படுவதுடன் தமது நலன்களைப் பேணுவதில் இருந்தும் சமூகத்தின் நலன்பேணுவதற்காக இயங்குபவர்கள். இவர்களே மிக அதிகளவிலான எண்ணிக்கை உடையவர்களாக இருப்பர். அதே வேளை இத்தகையவர்கள் மௌனமாக இருந்து மற்றவர்கள் எவரையும் புண்படுத்தாது செயலாற்றுபவர்களாக இருப்பர். மற்றைய குழு மிகவும் குறைந்த எண்ணிக்கையைக் கொண்டிருப்பதுடன் அழிவுச் செயற்பாடுகளிலும், அடாவடித்தனங்களிலும் ஈடுபடுவதுடன், சாதாரண மக்களை எப்பொழுதும் அச்சுறுத்தியே தமது காரியங்களை முடித்துக் கொள்பவர்களாக இருப்பதுடன், சுயநலம் உள்ளவர்களாகவும் இருப்பர். அவர்கள் சிறிய குழுக்களாக இருந்தாலும் தீய விளைவுகளை ஏற்படுத்த முயற்சிப்பவர்களைக் கொண்ட அமுக்கக் குழுக்களாகச் (Pressure Group) செயற்படுவதால் வெளியில் இருந்து பார்க்கும் பொழுது, அதிகளவிலானவர்கள் இந்த அணியில் இருப்பது போன்ற தோற்றத்தைக் கொடுக்கும். ஆனால் காலப் போக்கில் அத்தகையவர்களின் சுய உருவம் வெளிப்படத் தொடங்கியதும், அவர்கள் இருந்த இடம் தெரியாமல் மறைந்தே போய்விடுவர். இது தான் தர்ம நியதி என்பதை எங்களில் பலர் மறந்து போய் விடுகின்றனர்.
ஆம்...! வல்வை நகராட்சி மன்றத்திலும் கூட பிற்காலத்தில் இத்தகைய சிறிய அமுக்கக் குழுவே பெருமளவு அழிவை ஏற்படுத்தியதை ஊரவர் கூட இன்றும் வெறுப்போடு நோக்குகின்றனர்.

ஆனால் எதிர்காலத்தில் நடக்கப்போவதைப் பற்றிக் கவலைப்படாது, எந்தவிதமான பிரதியுபகாரங்களைக் கூட எதிர்பார்க்காத நிலையில், தமது உயிரையே துச்சமென மதித்து அந்த இளைஞர்கள் பணியாற்றுவதைக் கண்டதும் எனது இதயம் நெகிழ்ந்தது.

மகேசின் இறந்த உடலை ஒரு கைவண்டிலில் தூக்கிப்போட்டு, வேம்படியில் இருந்து தற்காலிகமாக இடம்பெயர்ந்து, மானாங்கானையில் இருக்கும் அவருடைய பெற்றோரிடம் கையளித்தார்கள்

மகேஸ்!.... எந்த நேரமும் சிரித்த முகத்துடன் சுறுசுறுப்பாக நடமாடித் திரிபவன். எவருக்கும், எந்த நேரத்திலும் உதவி செய்யவேண்டும் என்ற மனோபாவம் உடையவன். முதலுதவிப் பணிகளை மேற்கொண்டிருந்த இளைஞர்களால், அவனது பெற்றோரிடம் கையளிக்கப்பட்ட, மகேசின் இறந்த உடலைப் பெற்றதும், அவனுடைய தாய் கதறி அழுத காட்சி அந்தப் பிரதேசத்தையே ஒருகணம் அதிரவைத்தது... அதிக நேரம் அவனது இறந்த உடலை வைத்து அழக்கூட முடியாத அளவுக்கு வானத்தில் விமானங்களின் இரைச்சல் அதிகரித்துக் கொண்டிருந்ததால், உறவினர்களாலும், அங்கே நீண்ட நேரம் நிற்கமுடியவில்லை... அவனது உடலை இரவோடிரவாகக் கொண்டு தகனம் செய்து விட்டு அழக்கூட நேரமில்லாது, விமானக் குண்டு வீச்சுக்களின் தாக்கத்தினால், நிலை குலைந்து போய் இருந்தனர்.

மகேஸ் இறந்து கிடந்த இடத்தில் இருந்து சுமார், 50 மிற்றர் துரரத்தில் வனஜா சிவனேசன் என்ற இளம் கணித ஆசிரியை படுகாயம் அடைந்த நிலையில் இரத்தவெள்ளத்தில் குற்றுயிராகக் கிடந்தார். அவரும் இறந்து விட்டாரோ என்று எண்ணிய அந்த இளைஞர்கள், அருகே சென்று சென்று பார்த்தபொழுது, அவரது உயிர் ஊசலாடிக் கொண்டிருப்பதை அறிந்ததும், உடனடியாக ஒரு வானில் ஏற்றி பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர்.

20 ஆம் திகதி, ஞாயிற்றுக் கிழமை 3.30 மணிக்குத் தொடங்கிய கோரத்தனமான வான் தாக்குதல்கள் பிற்பகல் 5.30 மணியளவில் ஓரளவு குறைந்தது. அன்று 5.00 மணியளவில், அம்மன் கோயிலின் பின்புறமாக விழுந்த பாரிய குண்டு ஒன்று, திருமேனிப்பிள்ளை என்பவரின் வீட்டிற்கு மேலாக விழுந்து வெடித்தது. அந்த நேரம், திருமேனிப்பிள்ளையின் மகள்களான, திசைவீரசிங்கம் சரோஜினிதேவி, திருமேனிப்பிள்ளை கமலாதேவி, திருமேனிப்பிள்ளை காஞ்சனாதேவி ஆகிய மூன்று இளம் பெண்களும், பதுங்கு குழியினுள் இருந்த நிலையிலேயே மண்சரிந்து கொட்டுப்பட்டதில், பதுங்கு குழி முற்றாகவே மூடப்பட்டது.

மூடப்பட்ட மண்குவியல்களுக்குள் அந்த உயிருள்ள மனித உடல்களும், மூச்சுத் திணறி, உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்தன.!

அந்த மூன்று பெண்களினதும் தந்தையான, திருமேனிப்பிள்ளை குண்டு போட்ட நேரத்தில் வேறொரு இடத்தில் நின்றதால், இதனை அறிந்ததும் ஓடிச் சென்று அயலில் உள்ள அவரது பெறாமகன். கிருஸ்ணகுமாரையும், இன்னும் சிலரையும் எப்படியோ தேடிப்பிடித்துக் கொண்டு வந்து, மண்ணுக்குள் புதைந்து போய் மூச்சுத் திணறிக் கொண்டிருந்த அவரது, பிள்ளைகளை வெளியே இழுத்து எடுப்பதற்கான முயற்சிகளை எடுத்தார்.

மண்வெட்டியினால் மெதுவாகக் கிளறி ஓரளவு மேல்மண்ணை அகற்ற அவர்களில் இருவரின் தலைகளும் தெரியத் தொடங்கியதும், அவர்களது தந்தை திருமேனிப்பிள்ளை "ஓவென்று" தலையில் அடித்துக் கொண்டு கதறி அழத் தொடங்கிவிட்டார்.

"ஐயோ!. என்ரை பிள்ளைகளைக் காப்பாற்றுங்கோ..." அவர் கதறி அழுத கோலம் எல்லோரையும் ஒருகணம் கதிகலங்க வைத்து விட்டது. அங்கே நின்று மண்ணைக் கிளறி எடுத்துக் கொண்டிருந்தவர்களில் ஒருவர், வந்து அவரை அங்கிருந்து வெளியே கூட்டிக் கொண்டு போய்விட்டார்...

அவர்களில் இருவரதும் தலைகள் வெளியே தெரியத் தொடங்கியதும், ஆளொரு பக்கமாகத் தமது கைகளால், சிறிது சிறிதாக மண்ணைக் கிண்டி எடுத்தார்கள். எவ்வளவோ முயற்சி எடுத்தபின், அந்த மூன்று பெண்களையும், வெளியே தூக்கி எடுத்தார்கள். வெளியே தூக்கியதும், திருமேனிப்பிள்ளை காஞ்சனாதேவி என்ற அவரது கடைசி மகள் இறந்து கிடக்கக் காணப்பட்டாள். துயரம் தோய்ந்த இந்தச் சம்பவம் பற்றி திருமேனிப்பிள்ளையின் பெறாமகன் கூறும் பொழுது,

> "குண்டு போட்டு வீடு உடைந்ததும் மண்சரிந்து பங்கர்மூடுப்பட்டுப் போயிற்றுது என்பதை அறிந்ததும், நானும் பிரேம்குமாரும் வேறும் சிலரும் ஓடிப்போய், மண்ணை வெட்டி எடுத்துக் கொண்டிருக்கும் பொழுதே, எங்கடை தலைக்கு மேலே அவ்ரோ விமானம் பறந்தபடி எரிகுண்டுகளை வீசிக் கொண்டிருந்தது... அந்தக் குண்டுகள் எல்லாம் சிவன் கோயிலின் தெற்குப் புறத்தில்தான் விழுந்து வெடித்துக் கொண்டிருந்தது. தலை தெரியத் தொடங்கியதும், குண்டுப் பயத்திலை எப்பிடி விட்டுட்டுப் போறது? மண்வெட்டியையும் பாவிக்கமுடியாது. கொஞ்சம் கொஞ்சமாக மண்ணை அள்ளி எடுத்துக் கொண்டிருந்தோம். அதில் காஞ்சனா அக்காவை எங்களாலை காப்பாற்றமுடியாது போய் விட்டது. அவ பங்கருக்கு அடியிலை போய் மூடுப்பட்டதாலை அவவின்ரை உயிரைக் காப்பாற்ற முடியாது போய்விட்டது."

அவர்களின ஒன்று விட்ட சகோதரனான கிருஸ்ணகுமார், இதனைக் கூறிக் கொண்டே விக்கி விக்கி அழத் தொடங்கிவிட்டார். அந்த ஆபத்தான நேரத்திலும், தமது உயிரைக் கூடப் பார்க்காது, அவர்கள் செய்த அந்தத் துணிச்சலான சாதனை என் நெஞ்சைத் தொட்டது.

ஒவ்வொருவரும் இப்படியான நேரங்களில், தம்மையும், தமது குடும்பத்தையும், சொத்துக்களையும் பாதுகாப்பதற்காக ஓடிக்கொண்டிருந்த நேரத்தில், இந்த இளைஞர்களினதும், எங்கே குண்டுகள் விழுந்து வெடித்ததோ அங்கே உடனடியாக முதலுதவி செய்வதற்காக மருந்துப்

பெட்டிகளுடன் ஓடிக் கொண்டிருந்த இளைஞர்களினதும், போர்க்கால முதலுதவி நிலையத் தொண்டர்களினதும் தன்னலமற்ற தொண்டை நினைத்து எனக்குள் பெருமைப்பட்டுக் கொண்டேன்.

மனிதம் செத்துப் போய்விட்டதோ என்று எண்ணிக் கவலைப் பட்டுக் கொண்டீருந்த எனக்கு இந்த இளைஞர்களினால் மேற்கொள்ளப்பட்ட பணிகளைப் பார்த்ததும் அவர்களை எண்ணிப் பெருமைப்பட்டுக் கொண்டேன்.

ஆம்!. அந்த முதலுதவித் தொண்டர்களின் தன்னலமற்ற சேவைகளைப் பார்க்கும் பொழுது, அராஜகம் ஆட்சி புரியும் இந்த நாட்டில், மனிதாபிமானம் இன்னும் செத்துவிடவில்லை என்பதை உணர்த்தியது.

வானத்தில் மேலே குண்டு வீச்சு விமானங்களின் இரைச்சல், கீழே தரையில் மருந்துப் பொட்டலங்களுடன் ஓடித் திரிந்து கொண்டிருக்கும் இளைஞர்களின் அணி... நினைத்தப் பார்க்கவே உடலெல்லாம் கூசுவது போன்ற ஒரு பிரமை.

ஆனால் வல்வெட்டித்துறைக்கு மிக அருகாமையில் ஒரு அலுவலகத்தையும் வைத்துக் கொண்டு நிலைகொண்டிருந்த செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள், ஆபத்தான அவசரமான நேரத்திற்குள் இங்கே வரவில்லை. அவர்கள் தமக்கு எந்தவிதமான உதவிகளையும் வழங்காததை இட்டு இந்த ஊர் மக்கள் தமது வருத்தத்தையும் தெரிவிக்கத் தவறவில்லை.

இந்த நிலையில், ஆடம்பரமான சொகுசு வாகனங்களில் மனித நேயம் ஒன்றையே மகுடவாசகமாகக் கொண்ட செஞ்சிலுவைச் சங்கக் கொடிகளைத் தமது பாதுகாப்புக் கருதிப் பறக்கவிட்டபடி, பவனி வரும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளும், அவர்களுக்கு உதவியாகத் திரிந்து செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் என்று கூறிக் கொண்டு யுத்தம் நடைபெறாத நேரங்களிலும், மக்கள் எவ்விதமான நெருக்கடிகளையும் சந்திக்காத வேளைகளில் வாகனங்களில் பவனி வருகின்றவர்களை நினைத்து அவர்களுக்காக வெட்கப்படுவதைத் தவிர வேறு எதனைத்தான் எங்களால் செய்யமுடியும்? அவர்களுக்காக வழங்கப்படுகின்ற சம்பளங்கள் மற்றும் விசேட படிகள் போன்றன இங்கே வாழ்கின்ற எத்தனையோ குடும்பங்களுக்குச் சோறு போடக்கூடியதாக இருந்திருக்குமே.!

ஸ்ரீலங்கா அரசினால் வல்வெட்டித்துறையின் மீது நான்கு நாட்களாக மேற்கொள்ளப்பட்ட தொடர் குண்டு வீச்சுக்கள் எல்லாம் ஓய்வுக்கு வந்து இரண்டு நாட்களின் பின் மக்கள் படிப்படியாகத் தமது வீடுகளுக்குத் திரும்பித், தமது வீடுகளின் இடிபாடுகளை அகற்றிக் கொண்டிருந்த நேரத்தில் ஜனவரி 25 ஆம் திகதி பிற்பகல் ஒரு மணிக்குத் தான் முதன்முதலாக செஞ்சிலுவைச் சங்க வாகனத்தை மக்கள் பார்த்தனர். பருத்தித்துறையில் இருந்து செஞ்சிலுவைச் சங்கக் கொடியுடன் பென்னம் பெரிய வெள்ளை வாகனத்தில்

வந்திறங்கிய வடமராட்சியின் பிரதிநிதி ஒருவரும், சர்வதேச பிரதிநிதிகள் இருவருமாக வல்வெட்டித்துறை நகரத்தின் இடிபாடுகளையும் அழிக்கப்பட்ட ஆலயங்களையும் படம் பிடித்துக் கொண்டிருந்தனர்… இடையிடையே வீதி வழியாகப் போய்க்கொண்டிருந்தவர்களை வழி மறித்து, ஏதேதோ கேள்விகளைக் கேட்டு அவர்களையும் படம் பிடித்துக் கொண்டிருந்தனர்…

அவர்கள் அப்படியான தகவல்களைத் திரட்டி அறிக்கையாக எழுதி ஒரு செயல் திட்டமாக (Project Report) எழுதி அனுப்பினால் தானே அவர்களுக்கான அடுத்த சுற்று நிதியை ஜெனிவாவில் உள்ள செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைமைச் செயலகம் அனுப்பி வைக்கும். உலக நாடுகளின் மனிதநேயம் மிக்கவர்களால், இங்கே வாழ்கின்ற பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத் தேவைகளுக்காக அனுப்பி வைக்கின்ற பணத்தில் 50% ஆவது எமது மக்களுக்குக் கிடைத்தால் அதுவே இங்கே வந்து சேரும்பொழுது மிகப் பெரிய உதவியாக இருக்கும். ஆனால் வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களில் பணியாற்றுபவர்களின் ஆடம்பரமான வாழ்க்கை முறைகளையும், உணவுப் பழக்க வழக்கங்களையும் பார்க்கும் பொழுது அவர்கள் இங்கே நிலை கொண்டிருக்கவேண்டுமா என்றுகூட நினைக்க வேண்டியுள்ளது.

அங்கே நின்று அவர்கள் பாய்ந்து பாய்ந்து படங்கள் எடுத்துக் கொண்டிருந்த காட்சியைத் தூரத்தில் நின்று பார்ததுக் கொண்டிருந்த பாடசாலைச் சிறுவன் ஒருவன்,

“அங்கையடா வெள்ளைக் காரங்கள் இரண்டு பேர் படம் பிடிக்கினம், வாடா கிட்டப் போவம்” என்று கூறிக் கொண்டே தன்னுடைய நண்பர்களையும் இழுத்துக் கொண்டு அவர்களை நோக்கி ஓடி வந்தான்.

“டேய்! அவை ரூரிஸ்டுகளடா மொக்கு… அவையள் எங்கடை ஊரைப் படம் பிடித்துக் கொண்டு தங்கடை ஆக்களுக்குக் காட்டப் போகினமாக்கும்..” என்று அந்தச் சிறுவனுடன் கூட வந்த இன்னொரு பையன் கூறிச் சிரித்த அந்தச் சம்பவமானது, எனக்கு ஒரு உண்மையைப் புலப்படுத்தியது.

“ ஆம்!… எங்களுடைய மக்களையோ, மண்ணையோ நேசிப்பவன், இந்த மண்ணில் இருந்துதான் பிறந்திருக்கவும் வேண்டும், பிறக்கவும் வேண்டும்”

# 10. முதல் நாள் மட்டும் 93 குண்டுகள்

20 ஆம் திகதி முதல் நாள் நடைபெற்ற புயல் வேகத் தாக்குதல்கள் அன்று பிற்பகல் ஐந்து மணியுடன் ஒய்வுக்கு வந்தவுடன் அங்கே எஞ்சியிருந்த மக்களில் பெரும்பாலானோர், தமது கைகளில் எடுக்கக் கூடிய அத்தியாவசிய பொருட்களை மூட்டையாகக் கட்டி,அந்த ஒய்வைப்பயன்படுத்திக் கொண்டு வெளியேறிக் கொண்டிருந்தனர்.

நானும், எனது மனைவியும் மகனும் மட்டும் அன்று இரவு வீட்டில் தங்கினோம். நல்லவேளையாக எனது மகள்மார் இருவரையும் ஏற்கனவே புற்றளையில் உள்ள உறவினர் வீட்டிற்கு அனுப்பிவைத்தததால், அவர்களைப் பற்றிய பயம் இல்லாமல் எங்களுடைய வீட்டில் தங்கக் கூடியதாக இருந்தது. அன்று பகல் முழுவதும் ஓடித் திரிந்த அலுப்பும், முதலுதவிப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இளைஞர்களுடன் நின்று காயங்களையும் அநியாயமான மரணங்களையும் பார்த்ததால் ஏற்பட்ட மனஉளைச்சலும் சேர்த்து உடலை வருத்தியது.

ஆறு மணிக்கே வெறும் கோதுமைமா ரொட்டியைத் தட்டி அடுப்பில் வேகவைத்து, பகல் எஞ்சியிருந்த பருப்புக் கறியுடன் சேர்த்துச் சாப்பிட்டுவிட்டு, ஏழு மணிக்கே படுத்து விட்டோம்... மறுநாள் காலையிலும் என்ன நடக்குமோ என்ற அச்சம் எங்கள் எல்லோருடைய மனதையும் உறுத்திக் கொண்டிருந்தது.

நீண்ட நேரமாகத் தூக்கம் வராமல் அங்குமிங்குமாகப் புரண்டு படுத்துக் கொண்டிருந்தேன். அன்று நடைபெற்ற கோர நிகழ்வுகளைப் பார்த்துக் கொண்டிருந்ததாலும், இறந்த உடலங்களை நேரடியாகப் பார்த்ததாலும், என்னால் நிம்மதியாகத் தூங்க முடியாமல் இருந்தது. எப்படியோ நீண்ட நேரப் போராட்டத்திற்குப் பின்னர், ஒருவாறு என் கண்கள் அயர்ந்து கொண்டு வந்ததும், திடீரெனக் கேட்ட ஆட்டிலரி செல் தாக்குதலின் பலமான ஓசையினால், திருக்கிட்டு எழுந்து என் மணிக்கூட்டின் நேரத்தைப் பார்த்தேன். ரேடியம் பூசப்பட்டிருந்ததால். கடிகாரத்தின் முடகம்பிகள் பளிச்சென்று நேரத்தைக் காட்டிக் கொண்டிருந்தது. அப்பொழுது தான் 8.15. மணியாகியிருந்தது. பலாலியில் இருந்து ஏவப்பட்ட எறிகணையின் ஓசையினால், அலறித் துடித்தபடி, பதறிக் கொண்டே, அயலில் எஞ்சியிருந்த ஆறு பெண்கள் வரை ஓடி வந்து எங்களுடைய வீட்டிற்குள் வந்து விட்டார்கள். தொடர்ச்சியாகக் கேட்டுக் கொண்டிருந்த எறிகணைத் தாக்குதல்களின் ஓசையினால், நாங்கள் எல்லாரும் மீண்டும் பதுங்கு குழிகளுக்குள் ஓடிச் சென்று முடங்கிவிட்டோம்.

ஒன்று, இரண்டு, மூன்று. இப்படியே பலாலி கூட்டுப் படை இராணுவ முகாமில் இருந்து பதினெட்டு எறிகணைகள வல்வெட்டித்துறையை நோக்கி ஏவப்பட்டன. அவை வேவில் பிள்ளையார் கோயிலடி, தீருவில், தெணியம்பை, நெடியகாடு போன்ற குறிச்சிகள் எங்கும் பரவலாக விழுந்து வெடித்துச் சிதறின... இப்படியே நாங்கள் ஒன்பது பேரும் இரவு பத்து மணி வரை அந்தப் பதுங்கு குழியினுள் இருந்தபடியே விழித்துக் கொண்டிருந்தோம். அதனைத் தொடர்ந்து அரை மணித்தியாலம் வரை எந்தச் சத்தமும் கேட்கவில்லை.! அயல் வீடுகளில் இருந்தும் எங்களுடைய வீட்டிற்கு ஓடிவந்த ஆறு பேரும், தமது வீடுகளுக்குத் திரும்பிப் போவதற்காக பங்கரை விட்டு மேலே ஏறினர்.

"இப்ப ஏன் அவசரப்பட்டுப் போறியள். இன்னும் அவன் செல் அடிச்சு முடிந்தது மாதிரித் தெரியவில்லை. அவசரப்படாமல் பார்த்துப் போங்கோவன்."

வெளியேறிக் கொண்டிருந்தவர்களைப் பார்த்து நான் கூறியதும்,


"இதுக்குள்ளை கனநேரம் இருக்க ஏலாது தானே. உங்களுக்கும் கரைச்சல், எதுக்கும் போய்ப் பார்ப்பம். அப்படி ஏதுமென்றால், குசினிப் போறணைக்குள்ளை பதுங்குவம்"

எங்களுடன் இருந்த கந்தசாமி சந்திரக்கண்டு கூறிக் கொண்டே எங்களுடைய வீட்டை விட்டு வெளியேறிச் சென்றார். வழக்கமாகவே அவர் ஏதாவது பகிடிக் கதைகளைக் கூறி எல்லோரையும் சிரிக்க வைத்துக் கோண்டே இருப்பார். ஆனால் அன்று தொடர்ச்சியாக அனுபவித்துக் கொண்டிருக்கின்ற மன உழைச்சல் அவரை மிக மோசமாகப் பாதித்திருந்ததை அவருடைய அமைதியான பேச்சுக் காட்டிக் கொண்டிருந்தது.

அவர்கள் ஆறு பேரும் மீண்டும் தமது வீடுகளுக்குத் திரும்பி விட்டனர். என்னதான் இருந்தாலும் சொந்த வீட்டில் சுதந்திரமாகக் காலையும் கையையும் நீட்டிக் கொண்டு படுப்பது போன்ற சுகம் வேறு யார் வீட்டிலுமாவது கிடைக்காது தானே.! அவர்கள் அந்த பதுங்கு குழியை விட்டு வெளியேறியதும், நாங்கள் மூவரும் ஒரு படுக்கை விரிப்பை விரித்து விட்டு அந்தப் பதுங்கு குழியினுள்ளேயே ஒடுங்கிக் கொண்டு படுத்திருந்தோம். சீமென்ற் சுவரால் கட்டப்பட்டிருந்தாலும், உள்ளே எவ்வளவு நேரம் தான் அதற்குள் ஒடுங்கிக் கொண்டு இருக்கமுடியும்?

இரவு 10.45 மணி. மீண்டும் எங்கோ தூரத்தில் வேவு பார்க்கும் ஆளில்லாத விமானம் இரையும் சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது. அதைத் தொடர்ந்து தமது வீடுகளில் நிம்மதியாகத் தூங்கலாம் என்று போனவர்கள் பதறித் துடித்துக் கொண்டு மீண்டும் எங்களுடைய பதுங்கு குழியை நோக்கி ஓடிவந்தார்கள்.

## ஆளில்லா வான் வழி வேவு விமானங்கள் (UAV)



9.1 Kg நிறையுள்ள "RQ-7 நிழல்" எனப் பெயரிடப்பட்ட ஒரு ஆளில்லா விமானமும், அமெரிக்க வான் படைத் தளத்தில் நிறுத்தி வைக்கப்பட்ட ஆளில்லா வேவு விமாங்களும்

ஆளில்லா வான் வழி வேவு விமானங்கள் Unmanned aerial vehicle (UAV)), என்பது பொதுவாக ட்ரோன் (drone) எனப்படும் தானியங்கி விமானியுள்ள ஒரு வான்கலமாகும் (Remotely Piloted Aircraft -RPA) இது, சர்வதேச சிவில் வான்படை அமைப்பினால் அறிமுகப்படுத்தப்பட்டது. (International Civil Aviation Organization -ICAO)யுத்த முனைகளில் இராணுவத்தினருக்கு உதவுகின்றன. இது விமானிகள் அற்றதாக தானியங்கியில் இயங்கக் கூடியதால், இதனை எந்த இடத்திலும் செல்லக்கூடிய வகையில் தரையில் இருந்தே இயக்கலாம். இலங்கையில் உள்நாட்டு யுத்தம் நடைபெற்ற பொழுது இத்தகைய விமானங்கள் மூலமே,மக்களின் நடமாட்டங்களை துல்லியமாக இனங்கண்டு, செய்மதி மூலமாக விமானப் படைத் தலைமையகத்திறகுத் தகவல் அனுப்பியதும், இந்த இடத்தை நோக்கி எறிகணை வீச்சுக்களும், விமானக் குண்டு வீச்சுக்களும் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இவை யுத்த முனைகளில் இராணுவத்தினருக்கு உதவுகின்றன. இது விமானிகள் அற்றதாக தானியங்கியில் இயங்கக் கூடியதால், இதனை எந்த இடத்திலும் செல்லக் கூடிய வகையில் தரையில் இருந்தோ அல்லது வேறோரு விமானத்தில் இருந்தோ ஒரு விமானி மூலம் இயக்கலாம். இலங்கையில் உள்நாட்டு யுத்தம் நடைபெற்ற பொழுது இத்தகைய விமானங்கள் மூலமே, மக்களின் நடமாட்டங்களையும், விடுதலைப் புலிகளின் இலக்குகளையும் துல்லியமாக இனங்கண்டு, செய்மதி மூலமாக விமானப் படைத் தலைமையகதிற்குத் தகவல் அனுப்பப்பட்டன.

இவை பொதுவாக இராணுவ நடவடிக்கைகளில் பயன்படுதப்பட்டு வந்தாலும், சிலவேளைகளில் தீயணைப்பு நடவடிக்கைகள், கிருமி நாசினி விசிறுதல் மற்றும், மின்னிணைப்புக்களையும், குழாய்களையும் பரிசீலித்தல், போன்ற இராணுவ நடவடிக்கைள் அல்லாத சிவில் பதுகாப்பு வேலைகளிலும் சில நாடுளில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன.

ஆளில்லா வேவு விமானம் வட்டமிட்டுச் சென்றால், அதை அடுத்து உடனடியாகக குண்டு வீச்சு விமானங்கள் வந்து அந்த இடத்தில் குண்டுகளைப் போடும் என்பதை அறிந்து வைத்ததால், அவர்களால் தங்களுடைய வீடுகளில் இருக்க முடியவில்லை..... இரவு 10.50 மணியளவில், சீன தயாரிப்பான இரண்டு வை-12 சகடை விமானங்கள் பேரிரைச்சலுடன் வட்டமிட்டபடி,பறந்து கொண்டிருந்ததும், மீண்டும்

எங்களுடைய குருதி உறைவது போல் இருந்தது.... சிறிது நேரம் தூங்குவதற்குக் கூட அவகாசம் தராமலேயே விமானங்கள் தொடர்ச்சியாக வந்து பயமுறுத்தியபடி குண்டுகளையும் வீசிக் கொண்டு பறந்து திரிந்தன.

"கடவுளே.!.முருகா! இந்த அநியாயம் பிடிப்பாங்களிட்டை இருந்து எங்களைக் காப்பாற்று. முருகா! சஸ்டியை நோக்கச் சரவண பவனார், சிஸ்டருக்குதவுஞ் செங்கதிர் வேலோன் பாதமிரண்டில் பன்மணிச் சதங்கை, கீதம் பாட, கிண்கிணியாட. மையல் நடஞ்செயும், மயில்வாகனனார் கையில் வேலாலெனைக் காக்கவென்று வந்து, வரவர வேலாயுதனார் வருக... வருக...!"

எங்களுடன் பங்கருக்குள் இருந்த கந்தசாமி சந்திரக்கண்டு சகடை விமானத்தின் இரைச்சலைக் கேட்டதும், வாய் விட்டே பிரார்த்தித்தபடி, கந்தசஸ்டி கவசத்தைப் பாடத் தொடங்கி விட்டார்... அவர், அதனைப்பாடத் தொடங்கியதும் அருகில் இருந்த எங்களுக்கும் ஒரு தெம்பு பிறந்தது போல் இருந்தது. வானத்தைச் சுற்றி, இரண்டு தடவைகள் மட்டுமே வட்டமிட்ட வை-12 விமானம், எனது வீட்டிற்கு வடகிழக்கு மூலையில், சுமார் 75 மீற்றர் தள்ளி ஒரு பாரிய குண்டைத் தள்ளிவிட்டு மீண்டும் இரைந்து கொண்டு மேலே பறந்து பருத்தித்துறைப் பக்கமாகப் போய்க் கொண்டிருக்க, இன்னுமொரு வை-12 விமானம், எங்களுடைய வீட்டிற்குத் தெற்குப் புறமாகவும் ஒரு குண்டைத் தள்ளி விட்டுப் பறந்தது.

இந்த இரு விமானங்களிலும் இருந்து வீசப்பட்ட இரண்டு குண்டுகளும், மேலே இருந்து விழும்பொழுது, கூவியபடி வந்து விழுந்து, பெரிய சத்தத்துடன் வெடித்ததும், நாங்கள் இருந்த பதுங்கு குழியின் சுவர்கள் அதிர்ந்தன.!

இந்த வை-12 வகை விமானங்கள் மூலம் தமிழர்களையும்,அவர்களின் குடியிருப்புக்களையும் அழிப்பதற்காகவே பயன் படுத்தி வருவதை உலக சமாதானத்திற்கான அமைப்பு என்று தன்னைக் கூறிக் கொள்ளும், ஐக்கிய நாடுகள் அமைப்பு போன்றவை ஏன் தட்டிக் கேட்கவில்லை.....? சிறுபான்மை இனங்களின் உரிமைகளைப் பாதுகாக்கவேண்டிய இந்த உலக சமாதானத்திற்கான அமைப்புக்கள் ஏன் மௌனம் சாதிக்கின்றன என்பது தான் புரியவில்லை.....!

நள்ளிரவின் ஆரம்பத்தில் மக்களை தூக்கத்தில் இருந்தும் எழுப்பி, திகிலடைய வைக்கும் வகையில் அந்த இரு வை-12 விமானங்களும் குண்டுகளை மாறிமாறி வீசிக் கொண்டிருக்க உலங்கு வானூர்திகளில் இருந்தும், "படபடவென்று" பட்டாசு வெடிப்பது போன்று றொக்கற் தாக்குதல்களை மேற்கொண்டபடி பறந்து கொண்டிருந்தன. அந்த நேரம் நாங்கள் இருந்த பதுங்கு குழிக்கு மிக அண்மையில் பயங்கரமான சத்தத்துடன் விழுந்து வெடித்த செல் தாக்குதலில் எங்களுடைய பங்கரே ஒரு கணம் அதிர்ந்தது.

## வை-12 போர் விமானங்கள்

வை-12 தொடரில் தயாரிக்கப்பட்ட பல்வேறு வடிவமைப்பில் உள்ள விமானங்கள், சீனாவில் உருவாக்கப்படுகின்றன. . இது சக்தி மிக்க இரண்டு இயந்திரங்கள் பொருத்தப்பட்ட 19 இருக்கைகளையும் கொண்டது.இவ்வகை விமானங்கள் சீனாவைத் தளமாகக் கொண்ட ஹெறயிலோன்ஜியாங் நகரத்தில் உள்ள “உறாபின் வான் தொழிற்சாலையின் கூட்டு நிறுவனத்தினால்” (Harbin Aviation Industry (Group) Ltd.- HAI) வடிவமைக்கப்பட்டு தயாரிக்கப்படுகின்றன. இந்த வகை விமானங்கள் பிரதானமாக அவசரகால மீட்பு நடவடிக்கைகளில், படையினரை ஏற்றி இறக்குவதற்காகவே பயன்படுத்தப்பட்டது. ஆனால் இலங்கை சீனாவுடன் கொண்டுள்ள நீண்டகால நட்புறவின் காரணமாக தமிழ் மக்களை அழிக்கும் நடவடிக்கைகளில் தாராளமாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

சீனாவில் தயாரிக்கப்பட்ட இவ்வகை வான்கலங்கள் வளர்முக நாடுகளில் அதிகளவில் செல்வாக்கைப் பெற்று வருகின்றன. குறிப்பாக, பாகிஸ்தான், நேபால், ஸ்ரீலங்கா, பெரு, தான்சானியா, நமிபியா போன்ற 20 நாடுகள் வரை சீனாவிடம் இருந்து இவ்வகை விமானங்களைக் கொள்வனவு செய்து, போர் நடவடிக்கைகளில் பயன்படுத்தப்படுகின்றன.





வை-12 சகடை விமானம். இன்னொரு வகையான வை-12 விமானம்

என்னப்பா, எங்கடை வீட்டுக்கு மேலைதான் விழுந்து விட்டதோ?” எனக்கு மிக நெருக்கமாக ஒடுங்கிக் கொண்டிருந்த எனது மனைவி சிறிது பதட்டமடைந்தவராக என்னை உலுப்பி எடுத்தார்.

“சும்மா பேசாமல் இரு. அது கிட்டை எங்கையும் விழுந்தாலும் எங்கடை வீட்டிலை விழுந்தமாதிரித்தான் சத்தம் கேட்கும், சும்மா அலட்டிக் கொண்டிருக்காமல், பேசாமல் இரு.”

எனக்கு எரிச்சலாக இருந்தாலும், மனதுக்குள்ளை பயமாவும் இருந்தது.

"சிலவேளை எங்கடை வீட்டுக்கு மேலைதான் போட்டிருப்பாங்களோ?" எனது உள்மனம் துடித்துக் கொண்டிருந்தது.

சர்வதேச விதிமுறைகளுக்கு மாறான முறையில் விமானக் குண்டு வீச்சுக்கள் இடம் பெற்றுக் கொண்டிருந்தன... ஏதுமறியாத அப்பாவி மக்கள் குடியிருப்புக்களை நோக்கிக், கொத்துக் கொத்தாகக் குண்டுகள் வீசப்பட்டன.

### இலங்கை விமானப் படை

றோயல் சிலோன் விமானப்படை என்ற பெயரில் (RCyAF) இலங்கையில் முதன்முதலில் 1951 மார்ச் 2ஆம் திகதி நிறுவப்பட்டது. இது பின்னர் இலங்கை விமானப்படை எனப் பெயர் மாற்றம் பெற்றது. இலங்கையில் உள்நாட்டு யுத்தத்தில், 200க்கும் அதிகமான போர் விமானங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இன்று இதில், 27,000 விமானப்படை வீரர்களும், 1300 அதிகாரிகளும் உள்ளனர். இவர்களுக்கான பயிற்சிகள் இஸ்ரேல், இந்தியா மற்றும் அமெரிக்கா விமானப்படை அதிகாரிகளினால் வழங்கப்பட்டன. "இலங்கை வானத்தைப் பாதுகாக்க" என்ற மகுட வாசகத்தைக் கொண்ட இலங்கை விமானப் படையானது, இன்று அதி சக்தி வாய்ந்த ஒரு வான் படையாக விளங்குகின்றது.

அன்று இரவு, எங்கள் ஒவ்வொருவருக்கும் மரணத்தின் வாசல் கதவு,திறந்து விடப்பட்டது போன்று ஒரு பயங்கரமான அனுபவமாகக் கழிந்தது.....! எங்களுடைய ஊரவர்கள் போன்று அன்று இரவே நாங்களும் ஓடித் தப்பி இருந்தால், இந்தப் பயங்கரமான அனுபவங்களைக் கொண்ட ஒரு இரவை அனுபவித்திருக்க முடியாது..... எவ்வளவு தான் பயப்பிராந்தியுடன் நடுக்கத்தின் மத்தியில் அந்த இரவைக் கழித்தாலும், பின்னர் அந்தச் சம்பவங்களை நினைத்துப் பார்க்கும் பொழுது, அவை கூட ஒரு சுகானுபவம் தான்... இந்த அனுபவம் தென்னிலங்கையில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற சிங்கள மக்களுக்குக் கிடைக்க முடியாத ஒரு அனுபவம் அல்லவா?

எதுவுமே அறியாத அப்பாவி மக்கள் மீது,ஸ்ரீலங்கா அரசாங்கம் இப்படிக் கண்மூடித் தனமாக பேரழிவை ஏற்படுத்தக் கூடிய குண்டுகளைப் போட்டு அவர்களை நிர்க்கதியாக்குவதற்கு என்ன காரணத்தைக் கற்பிக்க முடியும்?

சமமான நீதியை எதிர்பார்த்து, சுதந்திரத்தையும், நிம்மதியான வாழ்க்கையையும் தேடும் மக்களை அவர்கள் சிறு பான்மையினங்கள் என்பதற்காக, அவர்கள் மீது ஒரேயடியாகக் குண்டுகளை வீசிக் கொன்றொழித்து விட்டால் தமிழர்களின் பிரச்சினைகளுக்கெல்லாம் முடிவு காணலாம் என்று நினைத்து விட்டார்களோ..? அதனால் தான் மக்கள் ஒன்று

கூடும் இடங்களான பாடசாலைகள், ஆலயங்கள், மக்கள் கூடியிருக்கும் சந்தைகள் என்பவற்றின் மீது, அடுத்தடுத்துக் குண்டுகளைப் பொழிந்து கொண்டிருக்கின்றார்கள். அல்லது, தமிழர்களின் பொருளாதார வளங்களை அழித்து, நிர்மூலமாக்கி விட்டால், அவர்களுடைய எண்ணத்தில் சுதந்திர உணர்வுகளோ, அடக்கு முறைகளில் இருந்து விடுதலை பெறவேண்டுமென்ற உந்துதலோ ஏற்படாது என்று நினைத்தார்களோ? அதனால் தான் மக்களையும் மக்கள் குடியிருப்புக்களையும் அவர்களது பொருளாதார மூலங்களையும் உடைமைகளையும் குண்டு வீசி அழித்துத் தரைமட்டமாக்கி முற்றாகவே, நிர்க்கதியாக்கியுள்ளனர்.

அதே நேரத்தில், பயன்தரும் நூற்றுக்கணக்கான, தென்னைகள், மாமரங்கள், பனைமரங்கள், மற்றும் பயிர் விளைந்துள்ள நிலங்கள், வர்த்தக நிலையங்கள் கைத்தொழிற்சாலைகள் மீது,குண்டுகளைப் பொழிந்து, அவற்றை வேரோடு நிர்மூலமாக்கியுள்ளனர். அல்லது இந்தத் தர்ம யுத்தத்தில், தான் தோல்வி அடைந்து பின்வாங்க நேரிட்டால், எஞ்சியுள்ள எமது மக்களின் கைகளுக்கு எதுவுமே கிடைக்கக் கூடாது என்ற வகையில்,எமது பிரதேசத்தை "அழித்துப் பின்வாங்குதல்" (Scorched Earth Policy) என்ற அழித்துப் பின்வாங்குதல் என்ற கொள்கைக்கு அமைய அரசு நடந்து கொள்கின்றதோ என்னவோ...!

அவ்வாறு இல்லாவிடில்...

கோண்டாவிலில் இலங்கை அரசுக்குச் சொந்தமான "இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குரிய" நூற்றுக் கணக்கான பஸ் வண்டிகளைக் குண்டு வீசித் தகர்த்திருப்பார்களா?

அரச பாடசாலைகளையும் அவற்றின் பெறுமதி வாய்ந்த கற்றல் உபகரணங்கள், நூல்கள் போன்றவற்றை எரி குண்டுகளை வீசி நாசமாக்கியிருப்பார்களா?

ஆசியாவிலேயே முதல் தரமான நூலகம் என்ற பெருமைபெற்ற யாழ்ப்பாண நூல் நிலையத்தை எரித்து, அழித்து யாழ்ப்பாணத்தின் கல்விக் கட்டமைப்பையே வேரோடு சாய்த்திருப்பார்களா?

ஶ்ரீலங்கா விமானப் படையின் குண்டு வீச்சுக்குப் பயந்து தமது உயிரைக் காப்பதற்காக நவாலி சென் பீற்றர்ஸ் தேவாலயத்தில் தஞ்சமடைந்த அப்பாவி மக்களில் 176 பேரையும் தேவாலயத்திற்குள் வைத்தே குண்டு வீசி அழித்திருப்பார்களா?.....இப்படி வான் படைகளினால் ஏற்படுத்தப்பட்ட எத்தனை அழிவுகளை எமது மக்கள் சந்தித்திருக்கின்றார்கள்?

எது எப்படித்தான் இருந்தாலும்,கட்டிடங்களை அழிப்பதனாலோ, தமிழ் மக்களின் பொருளாதார மூலங்களைச் சிதைத்து விடுவதாலோ, எமது

மக்களின் மன உறுதியையும், சுதந்திரமாகவும் சமமான உரிமைகளையும் பெற்றவர்களாக வாழவேண்டும் என்ற வேட்கையையும் அழித்துவிட முடியாது என்பதை ஸ்ரீலங்கா அரசும் அதன் தகவல் தொடர்பு சாதனங்களும் புரிந்து கொண்டிருக்க வேண்டும்.

இன்று எமது மக்களை வேரோடு பெயர்த்து விட முயன்றாலும், நாளை எமது மக்கள் மீண்டும் இந்த மண்ணில் குடியேறத்தான் போகின்றனர்...! விழுந்தாலும், விழவிழ எழுவோம் என்ற உறுதியுடன், இந்த அராஜக சிங்கள, பௌத்த பேரினவாத அரச கொடூரங்களுக்கு எதிராக அணிதிரண்டு எழத்தான் போகின்றார்கள்..!

இந்த நள்ளிரவிலும் விமானங்களின் இரைச்சல் இன்னும் ஓயவில்லை. அப்பொழுது சுமார் பன்னிரண்டு மணியாவது இருக்கலாம்.

உடல் உபாதைகள் ஒருபுறம், மன உழைச்சல் இன்னொரு புறமுமாக உடல் அயர்ந்து கொண்டு வந்தது. மெது, மெதுவாகக் கண்களைத் தூக்கம் கவ்விக் கொண்டு வந்தது. கால்களை மடக்கி வைத்தபடியே, நாங்கள் ஒன்பது பேரும், அன்று இரவு முழுவதும், இந்தப் பதுங்கு குழிக்குள்ளேயே முடங்கிக் கொண்டிருந்தோம்.

அன்று மட்டும் பிற்பகல் 3.30 மணியில் இருந்து, நள்ளிரவு வரை சுமார் 93 குண்டுகளைக் கொத்துக் கொத்தாக வீசிவிட்டு வான்படைகள் எங்களுடைய பிரதேசத்தை விட்டு ஒவ்வொன்றாகக் கலைந்து சென்று விட்டன...

அதிகாலையில் 5.45 மணிபோல் பதுங்கு குழியை விட்டு வெளி உலகத்தைப் பார்த்த பொழுது, ஏதோ ஒரு புதிய உலகத்தைப் பார்ப்பது போல் இருந்தது..

எரி குண்டுகளின் நாற்றம் மூக்கை அரித்துக் கொண்டிருந்தது!

எங்களுடைய வீட்டின் முன்பகுதியில் போட்டிக்கோவுடன் சேர்ந்தாற் போல் இருந்த "பிளாற்" உடைந்து சிதறிப் போய் இருந்தது. வீட்டில் இருந்த முருங்கை மரம், தென்னை மரம் ஆகியன, முறிந்து சரிந்து போய்க் கிடந்தது. விமனங்களின் சத்தம் எதுவுமே கேட்காததால், அந்தப் பிரதேசம் எங்குமே ஒரு வித மயான அமைதி நிலவியது. ஆறு மணியாகியும் கூட எவருமே வெளியில் வரவில்லை. ஏன் வழமையாகவே கேட்கின்ற, பறவைகளின் ஒலிகூடக் கேட்கவில்லை. அவை கூட முதல் நாள் குண்டு வீச்சுக்களின் அச்சத்தினால்,வெளியே வரவில்லையோ அல்லது அவையும் இறந்து கருகிப் போய் விட்டனவோ தெரியவில்லை.

வீதியெங்கும் மரங்கள் முறிந்து, குறுக்காக விழுந்து கிடந்தன. தெருவெங்கும் கட்டிடங்களில் இருந்து வீசப்பட்ட கற்களும், ஓட்டுத் துண்டுகளும், அஸ்பெஸ்டஸ் சீற் துண்டுகளும் சிதறிப் பாதையையே மூடிக் கிடந்தன.

காலையில் நேரத்துடனேயே குளித்து விட்டு, தேநீரைக் குடிக்கத் தொடங்கியதும், மீண்டும் விமானங்களின் இரைச்சல் தூரத்தில் கேட்கத் தொடங்கியது. தேநீர்க் கோப்பையை அப்படியே வைத்துவிட்டு பதுங்கு குழியை நோக்கி ஓடினோம்..

"ஐயோ கடவுளே இந்த அறுவான்கள் இண்டைக்கும் எங்களைச் சும்மா விடமாட்டாங்கள் போல கிடக்கு. ஒருவரையும் உயிரோடை விடாங்கள்."

அயல் வீடுகளில் இருந்து பதைபதைத்தபடி ஓடிவந்த சந்திரக்கண்டு கந்தசாமி என்ற எனது உறவுக்காரரான வயோதிபப் பெண், எங்களைத் தொடர்ந்து பதுங்கு குழியினுள் வந்து எங்களுடன் சேர்ந்து கொண்டனர். அந்தச் சிறிய சீமெந்துப் பதுங்கு குழியினுள் மீண்டும், ஒன்பது ஜீவன்கள் அடைக்கப்பட்டனர்.

ஒருநாள் முழுவதும், வல்வெட்டித்துறை நகரத்தின் மீது, போடப்பட்ட 93 குண்டுகளும் போதாதென்று நினைத்து விட்டார்களோ என்னவோ மறுநாளும் காலை 6.15 மணியில் இருந்து, தொடர்ச்சியாக இரண்டு வை-12 விமானங்களும் சேர்ந்து, தீருவில் வயல் வெளி,, அம்மன் கோயிலடி, ஆதிகோயிலடி, தெணியம்பை, உடையாமணல் ஆகிய இடங்களில் மீண்டும் குண்டுத் தாக்குதல்களை மேற்கொள்ளத் தொடங்கின.

இவற்றில் பெருமளவு குண்டுகள் எங்களுடைய வீட்டிற்கு அண்மையில் உள்ள பகுதிகளிலேயே வீசப்பட்டன. அவை ஒவ்வொன்றும் 350 கிலோ கிராம் வரை நிறை உள்ளதால், நாங்கள் இருந்த பதுங்கு குழியின் சுவர்கள் இடிந்து விழுவது போல், அதிர்ந்து கொண்டிருந்தன..!

ஒரு குண்டு நாங்கள் இருந்த இடத்தில் இருந்து இரண்டு வீடுகள் தள்ளி விழுந்து வெடித்ததில், பாரிய ஓசையுடன், கட்டிடங்களும், மரங்களும் இடிந்து விழத் தொடங்கி விட்டன. அதன் பாரிய அதிர்வுகளினால், எனது வீட்டின், ஓடுகளும், அஸ்பெஸ்டஸ் தகடுகளும், யன்னல் கண்ணாடிகளும், சிதறிப் பறந்தன... மூச்சுக் கூட விடமுடியாத அளவுக்கு சுமார் 40 நிமிடங்கள் தொடர்ச்சியாகத் தாக்குதல்களை நிகழ்த்திவிட்டு,அந்த இரண்டு விமானங்களும் வந்த வழியே திரும்பிப் பலாலியை நோக்கிப் பறந்து சென்றதும் தான் எங்களுக்குப் போன உயிர் திரும்பி வந்தது போல் இருந்தது...!

அந்தச் சிறிது நேர இடைவெளியைப் பயன்படுத்தி, எங்களுடைய ஒழுங்கையில் இருந்தவர்கள் எல்லோருமே வெளியேறிவிட்டனர். வல்வெட்டித்துறையின் ஏனைய பகுதிகளில் இருந்த மிகுதிப் பேரும் வெளியேறிக் கொண்டிருந்தனர்... அதற்கு மேலும் அங்கே இருந்தால், ஏதாவது ஆபத்து என்றால் கூட உதவிக்கு ஆட்களே வரமுடியாத நிலை வந்துவிடும் என்ற பயம் எங்களையும் பிடித்துவிட்டது!

எங்களுடைய இரண்டு பெண் பிள்ளைகளையும் முதல் நாள் அன்றே புற்றளையில் உள்ள எனது மனைவியின் சகோதரியின் வீட்டில் பாதுகாப்பாக அனுப்பி வைத்து விட்டு வந்ததன் பின்னர்,அவர்களுடன் எந்தத் தொடர்பையும் எடுக்கமுடியாது இருந்ததால், அவர்கள் எங்களை எதிர்பார்த்திருந்து ஏங்கிக் கொண்டிருப்பார்கள் என்பதை நினைத்ததும் தான், அவர்களைப் போய்ப் பார்த்துவிட்டு வரவேண்டும் என்ற ஆவல் எங்களுடைய மனதை உறுத்தியது.

அங்கே இனிமேலும் தங்கிஇருப்பது ஆபத்து என்று முடிவெடுத்ததும்,உடனடியாக, நாங்கள் மூவரும் சைக்கிளில் ஏறி புற்றளையை நோக்கிப் பயணமானோம்.

வல்வெட்டித்துறையில் இருந்து சுமார் ஏழு கிலோ மீற்றர் தூரத்தில் வல்லிபுரக் கோயில் வீதியில் அமைந்துள்ள ஒரு கிராமம் தான் புற்றளை. அங்கே எனது மனைவியின் மூத்த சகோதரி அவரது கணவன் மற்றும் பிள்ளைகள் தங்கியுள்ள வீடு உள்ளதால், சில நாட்கள் பாதுகாப்பாக இருக்கலாம் என்று போய்ச் சேர்ந்தோம். ஏற்கனவே எங்களுடைய மற்றைய இரு பிள்ளைகளையும் பாதுகாப்புக்காக அவர்களுடைய வீட்டில் கொண்டுபோய் விட்டு வந்ததால், இந்த நான்கு நாட்கள் அவலத்தின் மத்தியிலும் சிறிது ஆறுதலாக இருந்தது.

1985 ஆம் ஆண்டு தொண்டைமானாறு வீதியில் சின்னமலைப் பகுதியில் இருந்த அவர்களுடைய வீடு விமானக் குண்டு வீச்சினால் முற்றாகவே சேதமாக்கப்பட்டுத் தரைமட்டமாக்கப்பட்டதால், அங்கிருந்து இடம்பெயர்ந்து, புற்றளையில் உள்ள அவர்களது குடும்ப நண்பர் ஒருவரின் வீட்டில் தங்கியிருக்கின்றனர். நாங்கள் மூவரும் சைக்கிளில், வல்வெட்டியை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் பொழுது, இரண்டு உலங்கு வானூர்திகள், சுற்றிச் சுற்றிப் பறந்து வல்லை வெளி, கெருடாவில், தொண்டைமானாறு, மண்டான் வெளி ஆகிய இடங்களை நோக்கி கலிபர், றொக்கற் தாக்குதல்கள் மேற்கொண்டிருந்தன. இடையிடையே வல்வெட்டித்துறை, பருத்தித்துறை கடற் பிரதேசங்களில் இருந்து வீரயா, சூரயா ஆகிய கடற்படைப் போர்க் கப்பல்களில் இருந்தும், சிறிய கடற்கலங்களில் இருந்தும் தரைப் பகுதிகளை நோக்கி எழுந்தமானமாகப் பீரங்கித் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருந்தன.

ஸ்ரீலங்கா அரசின் எச்சரிக்கையையும் மீறி, வல்வெட்டித்துறையில் அதுவரை இருந்து, தற்போது வெளியேறிக் கொண்டிருக்கின்ற மக்களை நோக்கியே இந்தத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அந்தக் குண்டு வீச்சுக்களுக்கிடையிலும் படுத்தும், மரங்களுக்குக் கீழும் பதுங்கியும் சென்று அங்கிருந்து ஒருவாறு புற்றளையை அடைந்ததும் தான் நாங்கள் நிம்மதியாகப் பெருமூச்சு விட்டோம்.

அவர்களுடைய வீட்டின் வாசலில் போய் இறங்கியதும், எனது மைத்துணி

திருநாவுக்கரசு செல்லா, வாசலில் நின்று எங்களை மிகவும் கோபமாகப் பார்த்துக் கொண்டு நின்றார். அவருடைய அந்தக் கோபமான பார்வை எங்களைச் சுட்டெரிப்பது போல் இருந்தது.

"உங்களுக்குக் கொழுப்பு பிடித்து விட்டதோ. இந்தப் பயங்கரமான குண்டு வீச்சுக்கை இவ்வளவு நேரமும் இருந்திருக்கிறியள்.. இங்கை நாங்கள் எவ்வளவு யோசித்துக் கொண்டிருக்கிறம். அவன் ஒரே ஒரு பெடியனையும் அங்கை வைச்சுக் கொண்டு என்ன துணிவிலை இருந்தனிங்கள். இங்கை உன்ரை இரண்டு பிள்ளைகளும் சாப்பிடவும் இல்லை உங்களைப் பற்றியே யோசித்துக் கொண்டிருந்ததுகள். இந்தப் பக்கம் வாற ஒவ்வொருவரையும் உங்களைப் பற்றி விசாரிக்க ஒருவருக்கும் தெரியவில்லை. நாங்கள் எல்லாரும் எவ்வளவு யோசித்துக் கொண்டிருந்தனாங்கள்."

அவருடைய கோபமும் நியாயமானது தான் என்பதை உணர்ந்ததால், மௌனமாக உள்ளே சென்றோம். அங்கே போய் இருந்ததும் தான்,எங்களுக்கு ஏதோ ஒரு நிம்மதியாகவும், ஆறுதலாகவும் இருந்தது. அதை விட எங்களுடைய குடும்பம் ஒன்றாகச் சேர்ந்து விட்ட ஒரு மகிழ்ச்சி, நான்கு நாட்களாக நாங்கள் அனுபவித்த மரண வேதனைகளுக்கு முற்றுப் புள்ளி வைத்தது போல் இருந்தது. ஆனாலும் உள்ளார்ந்த ரீதியாக மன உழைச்சல் எங்களை வாட்டியது என்னுடைய வாழ்வோ, சாவோ சொந்த மண்ணிலேயே நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த மண்ணிலேயே முடியவேண்டும் என்ற துடிப்பும் ஏக்கமும் இருந்தது..

# 11. போர் என்றால் போர்..... பிரகடனம்

வல்வெட்டித்துறை நகரத்தின மீது 1991 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 20 ஆம் திகதி, பிரகடனப்படுத்தப்படாத யுத்தத்தை முடுக்கி விட்டுப் பேரழிவுகளை ஏற்படுத்தியிருந்தபோதும், ஜனவரி 21 ஆம் திகதி திங்கட்கிழமை தான் ஸ்ரீலங்கா அரசாங்கம் உத்தியோக பூர்வமாக ஊரடங்குச் சட்டத்தை வானொலி மூலம் அறிவித்தது.... ஊரடங்குச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தாமலேயே இவ்வளவு அழிவுகளை ஏற்படுத்திய அரசாங்கம், இனிமேல் எவ்வளவு அழிவை ஏற்படுத்தப் போகின்றார்களோ என்பதை நினைத்துப் பார்க்கவே உடலெல்லாம் நடுங்கியது....!

அன்றும் அதிகாலையில் இருந்தே,ஆரம்பிக்கப்பட்ட விமானக் குண்டு வீச்சுக்கள், பிற்பகல் 5.30 மணிவரை தொடர்ந்தும் இடம்பெற்றது.

இந்த வான் தாக்குதலிலும் நான்கு கபீர் (Kafir) குண்டு வீச்சு விமானங்களும், இரண்டு உலங்கு வானூர்திகளும், இரண்டு அவ்ரோ பயணிகள் விமானங்களும், இரண்டு வை-12 விமானங்களுமாக பத்து வனூர்திகள் வரை வல்வெட்டித்துறை வான் பரப்பில் நின்று குண்டுகளைப் பொழிந்து கொண்டிருந்தன. இவை பெரும்பாலும் பாடசாலைகள், ஆலயங்கள் மற்றும் பொது மக்களின் குடியிருப்புக்களை நோக்கியே வீசப்பட்டன.

வல்வெட்டித்துறைச் சந்தியில் இருந்து, 150 மீற்றர் வரையான சுற்று வட்டத்திற்குள்ளான பிரதேசத்திற்கு உள்ளேயே இத்தனை விமானங்களும் கூட்டாகச் சேர்ந்து குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளன.

எனது வீட்டைவிட்டு வெளியெறி ஒரு அன்னியப்படுத்தப்பட்ட சூழலில் தொடர்ந்தும் நிற்க என்னால் முடியவில்லை... அன்று பிற்பகலே ஒரு மாதிரியாக எனது மனைவியிடமும், பிள்ளைகளிடமும் அனுமதியைப் பெற்றுக் கொண்டு எங்களது வீட்டை நோக்கி சைக்கிளில் திரும்பினேன்.

வழமையாகவே, அந்த மங்கிய மாலை நேரத்தில் கலகலப்பாக இருக்கும், அந்த இடம், களை இழந்து ஆட்கள் இல்லாத ஒரு சூனிய் பிரதேசமாகக் காட்சி அளித்தது..! ஒவ்வொருவரும் தமது வீடுகளை விட்டு ஓடிப் போகும்பொழுது, தமது வீடுகளில் ஆசையாக வளர்த்த நாய்கள், பூனைகள், மற்றும் ஆடு,மாடுகள் போன்ற கால் நடைகளைக் கூட அப்படியே விட்டு ஓடிப்போய் விட்டனர்.

அந்த நேரம் நாய்கள் எல்லாம் வீடுகளுக்குள் நின்று ஊளையிட்டுக் கொண்டு நின்றன.! ஆடு, மாடுகள் உணவு தண்ணீர் எதுவுமே இல்லாது கதறி அழுது கொண்டிருந்தன.

தெருக்களில் ஆங்காங்கே ஆடு மாடுகளின் இறந்த உடலங்கள் காணப்பட்டன!

ஆலயங்களில் மணியோசை கேட்கவில்லை...! மக்களின் ஆரவாரங்கள் எதுவும் இல்லை.!

ஐம்புலன்களும் அடங்கிய நிலையில் கலகலப்பான வல்வை நகரம் தூங்கி வழிந்து கொண்டிருந்தது.!.... அந்த நேரம் ஒரு மயான பூமியினூடாக நடந்து வருவது போன்ற ஒரு உணர்வில் பயமாகவும் இருந்தது...!

மூன்றாவது நாள் செவ்வாய்க் கிழமை 22 ஆம் திகதி காலை 6.30 மணியில் இருந்து, மீண்டும், வல்வெட்டித்துறை நகரை, போர் விமானங்களும், அவ்ரோ விமானங்களும், வை-12 விமானங்களும், ஹெலி கொப்ரர்களும் வான்வியூகம் அமைத்து விதவிதமான குண்டுகளைப் பொழிந்து தாக்கத் தொடங்கிவிட்டன.

அன்றும் கூட சிவன் கோயில், அம்மன் கோயில், ஆதிகோயில், தெணியம்பை மற்றும் காட்டுவளவு, நெடியகாடு, உடையாமணல் ஆகிய இடங்களை நோக்கி நேபாம் எரிகுண்டுகளும், 350 கிலோகிராம் குண்டுகளும் போடப்பட்டு ஊரின் எஞ்சிய பகுதிகளை தரை மட்டமாக்கியும், எரித்தும் அழித்துக் கொண்டிருந்தார்கள்... அந்தப் பகுதிகளில் தற்செயலாக ஆட்களின் நடமாட்டத்தைக் கண்டுவிட்டால் போதும் வானத்தில் இருந்து அனுப்பப்படும் தகவல்கள் மூலம் பலாலியில் இருந்து அந்தஇடத்தை நோக்கி ஆட்டிலறி எறிகணைகளும் ஏவப்பட்டுக் கொண்டிருந்தன. அவ்ரோ விமானங்களில் இருந்து, எரி குண்டுகளைப் போட்டுக் கொண்டிருந்ததால், பல வீடுகளும், கடற்கரைகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கன்னார் படகுகளும் தீப்பற்றி எரிந்து கொண்டிருந்ததால் வானமெங்கும் ஒரே கரும்புகை மண்டலமாக இருந்தது.

இதில் காயமடைந்து சிகிச்சை பெற்ற நோயாளிகளின் உடலில் இருந்த தீக்காயங்களைப் பார்க்கும் பொழுது, அவை இரசாயனக் குண்டுத் தாக்குதல் என்பதை வைத்தியர்கள் தெரிவித்தனர். ஆனால் இந்த வகையான குண்டுகளைத் தாங்கள் பயன்படுத்தவே இல்லை என்று இராணுவத்தினர் உடனடியாகவே மறுப்புத் தெரிவித்தனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளை அரசியல் ரீதியாகவோ, இராணுவ ரீதியாகவோ வெற்றி கொள்ள முடியாத நிலையில், ஏற்பட்ட மன

உழைச்சலின் வெளிப்பாடாகவே வல்வெட்டித்துறையின் மீதான மூர்க்கத்தனமான புயல் வேகத் தாக்குதல்கள் அமைந்திருந்ததாக அரசியல் விமர்சகர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

1977 ஆம் ஆண்டு தென்னிலங்கையில் வெடித்த இனக் கலவரங்களின் போது, சிங்களக் காடையர்களினால், தமிழர்களின் சொத்துக்களும், உடைமைகளும் கொள்ளையடிக்கப்பட்டும், எரிக்கப்பட்டும், பல அப்பாவித் தமிழ் மக்கள் கொடூரமாகக் கொல்லப்பட்டும், சித்திரவதை செய்யப்பட்டும் இருந்தபோது, யாழ்ப்பாணமே தெரியாது தென்னிலங்கையில் வாழ்ந்த பல தமிழர்கள் எங்கே தப்பி ஓடுவது என்று தெரியாது, அலைந்து கொண்டிருந்த வேளையில், அப்போதைய ஜனாதிபதியாக இருந்த ஜே.ஆர். என்று அழைக்கப்பட்ட ஜுனியஸ் றிச்சட் ஜெயவர்த்தனா, "1977 ஆம்ஆண்டு ஆகஸ்ற் மாதம் 17 ஆம் திகதி" அரச வானொலி மூலம் நாட்டு மக்களுக்கு, விடுத்த பகிரங்கச் செய்தியில்,

"போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம்,.
எதற்கும் எனது அரசு தயாராகவே உள்ளது"

1977 ஆம் ஆண்டு தமிழர்களின் தரப்பில் எந்த ஒரு ஆயுதப் போராட்டமும் ஆரம்பிக்காத நிலையில், சாதாரண அப்பாவித் தமிழர்களுக்கு எதிராக ஒரு நாட்டின் ஜனாதிபதியினால் விடுக்கப்பட்ட யுத்தப் பிரகடனத்தைத் தொடர்ந்து, அதுவரை கலவரம் மூளாத பகுதிகளில் கூட மிகவும் மோசமான முறையில் தமிழர்கள், சிங்களக் காடையர்களினால், கொல்லப்பட்டனர்... தமிழர்களின் சொத்துக்கள் கொள்ளையடிக்கப்பட்டன. பல நூற்றுக் கணக்கான பெண்கள் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்படடனர்.

இறைமையுள்ள ஒரு நாட்டின் அதிஉத்தம ஜனாதிபதியான ஒருவர் இவ்வாறான ஒரு அறிக்கையை நாட்டு மக்களுக்கு விடுக்கும் பொழுது அதன் விளைவுகள் எவ்வாறு இருக்கும் என்று நினைத்துப் பார்க்கவில்லையா? இவ்வாறான மேதாவித்தனங்களைப் பார்க்கும் பொழுது, கிராமிய சிங்கள மேதாவியான "மாதன முத்தா" கதைதான் நினைவுக்கு வருகின்றது.

மாதன முத்தாவின் வழியில் வந்த ஒருஇனத்தின் வழிவந்த ஒருவரால், இதை விட வேறு ஒரு தரமான அறிக்கையை அந்நேரம் வெளியிட்டிருக்க முடியாது என்பதும் உண்மைதான...!

மாதன முத்தா என்பது சிங்கள கிராமிய கதையொன்றில் வரும் பிரதான கதா பாத்திரம். ஒரு ஆதிச் சிங்களக் கிராமத்தில் மாதன முத்தா என்ற ஒரு "மேதாவி" இருந்தவராம்...! அவர் தனது சீடர்கள் புடை சூழ யானை மீது பவனி வந்து கிராம மக்களைப் பார்த்துப் போவது வழக்கம். அந்த ஊர் கிராமவாசிகள், தமக்கிடையே எழும் பிரச்சினைகள், சச்சரவுகள்,

பிணக்குகளை அவரிடம் சென்று முறைப்பாடு செய்வார்கள். அந்தக் கிராமத்தவர்களும் அவரை ஒரு ஞானகுருவாக ஏற்று அவர் சொல்வதை அப்படியே ஏற்றுக் கொண்டு செய்தும் முடித்துவிடுவார்கள்.

ஒரு முறை, சிங்களக் கிராமவாசி ஒருவரின் மாட்டுக் கன்று ஒன்று, மண்பானைக்குள் தலையை நுழைத்து தண்ணீர் குடித்துக் கொண்டிருக்கும் பொழுது, அதன் தலை பானைக்குள் போய் விட்டது. மாட்டுக் கன்றினால் தலையை வெளியே எடுக்க முடியவில்லை. அந்தக் கிராம வாசியினால் கூட பானையை எடுக்கமுடியவில்லை.. உடனே மாட்டுக் கன்றையும், அப்படியே பானையையும் சேர்த்து மாதன முத்தாவிடமே கொண்டு போகின்றான்.

"பிரபு! எனது கன்று பானையினுள் தலையை நுழைத்து விட்டுத் தலையை அதற்குள் இருந்து எடுக்கமுடியாது கஸ்டப்படுகின்றது. பானையை வேறாக எடுக்க உதவி செய்யுங்கள் பிரபு."

என்று மிகவும் பவ்வியமாகப் பணிந்து கேட்டான்... மாட்டுக் கன்றையும், அதன் தலையோடு சேர்ந்து கொண்டுள்ள பானையையும் சிறிது நேரம் பார்த்துக் கொண்டு முகவாயைக் கையினால் தடவிக் கொண்டு சிறிது நேரம் யோசித்தார்.

"எட மடையா..! மாட்டுக் கன்றின் கழுத்தை வெட்டிவிடு... பானை வேறாக வந்து விடும். இது தெரியாமல் இங்கை வாறியோ?..... ஏய் சீடப்பிள்ளைகளா.. உடனடியாகச் செய்து கொடுங்கள்.."

மாதனமுத்தா யானையில் இருந்தபடியே, கம்பீரமாகப் பதில் அளிக்கின்றார்... அவரது இந்தப் புத்திசாலித் தனமான தீர்ப்பை நிறைவேற்றுமாறு சீடர்களுக்குக் கட்டளையிட்டதும், உடனே அவரது சீடர்களின் ஒருவன் கூரிய கத்தியினால் மாட்டுக் கன்றின் தலையை வெட்டிப் பானையைத் தலையுடன் வேறாக்கி விடுகின்றான்.
பானை வேறாக வந்ததும் எல்லோரும் ஆரவாரித்துச் சந்தோசப்பட்டார்கள்..!

"பிரபு! பானை வேறாக வந்து விட்டது... அதன் தலையை வேறாக்கி எடுத்துத் தாருங்கள்"
கிராம வாசியும் அவரை விட்டபாடாக இல்லை.

"அடேய்! பானையை உடைத்து தலையை வேறாக்கி இந்த மூடனிடம் கொடுங்களடா."

மாதன முத்தா தனது சீடர்களிடம் கட்டளையிட்டதும், அவரது கட்டளையைச் சிரமேல் தாங்கி உடனடியாகவே செயற்படுகின்ற சீடர்களும் தாமதிக்காது, பானையை உடைத்து தலையை வேறாக்கி அந்தக் கிராமவாசியிடம் கொடுத்தார்கள்... அவரது சாதுரியமான இந்தத் தீர்ப்பை எல்லோரும் கைதட்டிப் புகழ்ந்தார்களாம்.

இந்தக் கதை சிங்கள மக்களிடையே வழங்கி வருகின்ற பரம்பரியமான ஒரு கிராமிய கதையாக இருந்தாலும், இன்றைய சிங்கள இனவாதம் பேசுகின்ற அரசியல் தலைவர்களின் இரத்தத்தில் கூட இந்தப் பாரம்பரியக் கதாபாத்திரத்தின் குணவியல்புகள் வெளிக்காட்டத்தான் செய்கின்றது.


இதே குணவிலயல்புள்ள கதாபாத்திரம் ஒன்று தமிழிலும் இருக்கின்றது தானே? “அவிவேக பூரண குருவும் சீடர்களும்” என்ற வீரமாமுனிவரின் கிராமிய கதாபாத்திரம் போன்ற அவிவேகிகள் ஒரு சில தமிழ் அரசியல்வாதிகளிடையேயும் காணப்படுவதால் தான் தமிழர்களுக்கான தீர்வுகளும் தடைப்பட்டுக்கொண்டு போகின்றன. “கோமாளித்தனமான“ அறிக்கைகளையும், உரைகளையும் வெளியிட்டு தமிழர்கள் அனைவரையுமே முட்டாள்கள் ஆக்குகின்றவர்கள் இருக்கும் வரை, தமிழர்களின் முதுகில் ஏறி அவர்கள் சவாரி செய்து கொண்டே இருப்பார்கள்.

ஆமாம்! .. சிங்கள மக்களிடையே, மாதன முத்தாக்கள் இருப்பது போல் தமிழ் மக்களிடையேயும் அவிவேக பூரணகுருக்கள் இருக்கின்றார்கள். அவர்களைத்தானே இன்றும் உள்ளூராட்சிச் சபைகளிலும், நகரசபைகளிலும், மாகாணசபைகளிலும் பார்த்துக் கொண்டிருக்கின்றோம்..!

அன்று ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனா தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கைகளை முளையிலேயே கிள்ளியெறிய வேண்டும் என்பதற்காகவும், தமிழ் மக்களின் நியாயமான உணர்வுகளைத் திசை திருப்புவதற்காகவும் சிங்கள மக்களிடையே இனவெறியைத் தூண்டி, தமிழ் மக்களுக்கு எதிரான தாக்குதலைத் தொடுத்திருந்தார். ஆனால் அந்த இன அழிப்பு நடவடிக்கைகள் ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் இனவாதப் போக்கை வெளிநாட்டு ஊடகங்களும், இணையத்தளங்களும் உலகுக்கு, அம்பலப்படுத்தி விட்டன..... சிங்களக் காடையர் கூட்டத்தினரின் காட்டுமிராண்டித் தனமான தாக்குதல் சம்பவங்களையும், தமிழர்கள் வீதிகளில் வைத்து எரிக்கப்படுவதையும் காணொளிகளாகவும் செய்தி விமர்சனங்களாகவும் அவை வெளியிட்டு ஸ்ரீலங்காவின் இரட்டை வேடத்தை வெளிச்சம் போட்டுக் காட்டியதும் தான் ஜேஆர் அரசாங்கம் ஆட்டம் காணத் தொடங்கியது.

அன்று தமிழர் மீதான இந்த இன அழிப்புத் தாக்குதலின் விளைவுகளினால் ஸ்ரீலங்காவுக்கு எதிரான கண்டனங்கள் எழத் தொடங்கிவிட்டன. அந்தக் கண்டனங்களில் இருந்து தப்புவதற்காகவும் உலகின் கண்களில் இருந்தும் மூடி மறைப்பதற்காகவும் 1977 ஆம் ஆண்டு இனக்கலவரத்தில், பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு, நியாயம் வழங்குவதாகக் கூறிய அரசு, முன்னாள் பிரதம நீதியரசராக இலங்கையில் கடமையாற்றிய எம்.சி.சன்சோனி (Miliani Claude Sansoni) என்பவரைத்

தலைவராகவும், திஸ்ஸ தெய்வேந்திராவைச் செயலாளராகவும் கொண்டதாக ஒரு நீதி விசாரணை ஆணைக் குழுவை நியமித்தது. அந்த விசாரணை ஆணைக்குழ "சன்சோனி ஆணைக்குழு" என்ற பெயரில் வடக்கு, கிழக்கு, கொழும்பு மற்றும் தென்னிலங்கையின் பல பகுதிகளுக்கும் சென்று பாதிக்கப்பட்ட மக்களிடம் இருந்து சுமார் 1200 சாட்சியங்களைப்பதிவு செய்து ஒரு அறிக்கையைத் தயாரித்தது. அந்த அறிக்கையில் அரசுக்கெதிராகக் கொடுக்கப்பட்ட சாட்சியங்கள் வெளியே வந்தால் தமது "மானம்" போய்விடுமோ என்று கருதிய அரசாங்கம், அதனை அப்படியே கிடப்பில் போட்டு விட்டது. அந்த ஆணைக்குழுவின் முன்னிலையில் என்னால் வழங்கப்பட்ட சாட்சியமும், திரு. ம.க.ஈழவேந்தன் அவர்களால் வழங்கப்பட்ட சாட்சியங்களும் சிங்கள ஏகாதிபத்தியவாதிகளின் முகமூடியைக் கிழித்தெறியும் வகையில் இருந்தன.



ஆணைக்குழுத் தலைவர் எம்.சி.என்சோனி

1977 ஆம் ஆண்டு நான் கண்டியில் உள்ள தெல்தோட்டையில் பணியாற்றிய பொழுது, விடுமுறைக்காகக் கொழும்புக்குச் சென்று அங்கிருந்து, யாழ்ப்பாணம் நோக்கி, ஆகஸ்ற் மாதம் 16 ஆம் திகதி நான்,எனது மனைவி மற்றும் எங்களுடைய இரண்டு வயதுக் குழந்தை நவஜீவன் ஆகியோருடன் புகைவண்டியில் பயணம் செய்தபொழுது பொத்துகர என்ற இடத்தில் சிங்களக் காடையர் கூட்டத்தினால் நான் பலமாக தாக்கப்பட்டு எனது மனைவியின் நகை மற்றும் உடைமைகளைப் பறிகொடுத்த நிலையில், ஒரு நல்ல உள்ளம் படைத்த சிங்களப் பெண்ணின் உதவியினால் உயிர் தப்பி மீண்டும் தெல்தோட்டைக்கு வந்து, அகதி முகாமில் இருந்தோம். பின்னர் அங்கிருந்து, பஸ்வண்டிகளில் பாதுகாப்புப் படையினரின் உதவியுடன் யாழ்ப்பாணம் கொண்டு வந்து சேர்க்கப்பட்டோம்..... அந்தத் துயரம் தோய்ந்த நினைவுகளை எப்படி மறக்கமுடியும்.....?

அப்பொழுது தான் எங்களுக்கென்று ஒரு தாயக நிலம் இருந்ததால் தஞ்சமடைவதற்காக எமது மண்ணுக்கு ஓடிவரக்கூடியதாக இருந்ததை எண்ணிப் பூரிப்படைந்தேன். அந்தத் துயரம் தோய்ந்த சம்பவங்களையும், இந்த மண்ணிலே வாழ்கின்ற தமிழர்கள் எப்படியெல்லாம் வாழவேண்டும் என்ற எங்கள் கனவுகளை "சன்சோனி கமிசன்" முன்னிலையில் நான்

எடுத்துரைத்த பொழுது, எனக்கு யாழ்ப்பாணத்திற்கான இடமாற்றம் வழங்கப்படவேண்டும் என்று பரிந்துரைத்ததைத் தவிர வேறு எந்தத் தீர்வையும் நீதிபதி சன்சோனி அவர்களினால் அரசுக்குச் சிபார்சு செய்ய முடியாமல் போனதும் எதிர்பார்த்த ஒன்றுதானே...!

அந்தத் திட்டமிடப்பட்ட இன அழிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராக சர்வதேசம் உடனடியாக நடவடிக்கை எடுக்காது மௌனம் சாதித்ததாலேயே 1977 ஆம் ஆண்டுடன் மட்டும் நின்றுவிடவில்லை. 1982, 1983 எனத் தொடர்ந்தது.!

ஆனால் 1977 ஆம் ஆண்டின் இன அழிப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்து, சிங்கள ஏகாதிபத்தியவாதிகளுக்கு எதிரான தமிழர்களின் அதிருப்திகளும், அந்த இனவாத அரசுகளுக்கெதிராகப் போராட வேண்டும் என்ற உத்வேகம் இளைஞர்களிடையே வலுப்பெறத் தொடங்கியதாலேயே அரசுக்கெதிரான ஆயுதப் போராட்டங்களும் கூர்மையடையத் தொடங்கின...

ஆம்!.....தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டம் என்பது ஒரு இரவுக்குள் திடீரென முளைக்கவில்லை என்பதை ஸ்ரீலங்கா அரசாங்கமும், சர்வதேசமும் புரிந்து கொள்ளவேண்டும். அன்று ஜே.ஆர். ஜெயவர்த்தனா செய்த தவறையே இன்றைய ஜனாதிபதியான ரணசிங்க பிரேமதாசாவும் தொடர்வதைப் பார்க்கும் பொழுது, ஏகாதிபத்திய அரசுகளின் சரிவும் வெகு தொலைவில் இல்லை என்பதை உணர்த்துகின்றது.

போராட்டக் களத்தில் நேருக்கு நேர் நின்று யுத்தம் புரிந்து கொண்டிருக்கின்ற போராளிகளை எதிர்கொள்ள முடியாத பிரேமதாசா அரசாங்கம், இன்று பழிதீர்க்கும் முகமாக வல்வெட்டித்துறை மக்களைக் கொன்றொழிக்கும் நடவடிக்கையில் இறங்கியுள்ளது.

ஆம்... இங்கே உடைகின்றவை வெறும் கற்களால் ஆன கட்டிடங்கள் தான்... ஆனால் இந்த மண்ணின் மக்களின் மனங்களை உடைத்துவிட முடியாது என்பதை, இத்தனை அழிவுகளுக்குப் பின்னரும் வாழ்வோ சாவோ இந்த மண்ணிலேயே தான் என்பதற்காக அழிவுச் சின்னங்கள் மீதும், உடைந்த கற்குவியல்களின் மீதும், கால்களைப் பதித்து, மெல்ல அடி எடுத்து வைக்கும் அந்த மக்களின் மனோபலம் காட்டுகின்றது...!

ஆனால் அதுவே என்றாவது ஒரு நாள் தமிழர் வரலாற்றின் திருப்பு முனையாகவும் அமையப் போவதும் நிச்சயம்.!

வல்வெட்டித்துறையின் மீதான தாக்குதல்கள், தீ வைப்புச் சம்பவங்கள்... படுகொலைகள் என்பன இதுதான் முதல் தடவையுமில்லை... காலம் காலமாக வரலாறு தந்த பாடங்கள், அந்த மண்ணின் மக்களைப் புடம் போட்டு எடுத்தது.

# 12. பிரிந்து நின்றவர்களை ஒன்றுபடுத்திய விவேகம்


தமிழர்களின் உரிமைகளுக்காகப் போராடப் போவதாகக் கூறிக் கொண்டு திரு.சா.ஜே.வே.செல்வவிநாயகம் இவர்களைத் தலைமையாகக் கொண்ட "இலங்கைத் தமிழரசுக் கட்சி", திரு.ஜி.ஜி. பொன்னம்பலம் அவர்களின் தலைமையிலான," அகில இலங்கைத் தமிழ் காங்கிரசுக் கட்சி", திரு.செ.சுந்தரலிங்கம் அவர்களின "ஈழத் தமிழர் ஒற்றுமை முன்னணி", திரு.வ.நவரத்தினம் அவர்களின் "சுயாட்சிபக் கழகம்" மற்றும் மலையகத் தமிழர்களின் கட்சியான "இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்" போன்ற தமிழ்க் கட்சிகள் அன்று பிரிந்து நின்று தமிழ் மக்களிடம் வாக்குகளைப் பெறுவதற்காக மக்களைக் கூறுபோட்டுக் கொண்டு வந்ததால், அது ஸ்ரீலங்கா அரசுக்குச் சாதகமாகவே அமைந்திருந்தது.... இந்த நிலையில், தமிழ் கட்சிகள் பிளவு பட்டிருந்தால் காலப் போக்கில் தமிழினம் அழிவை நோக்கிச் செல்லவேண்டிய ஒரு துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்படும் என்று தமிழ் மக்களிடையே ஒரு அச்சம் இருந்தது.

"பூனைக்கு மணிகட்டுவது யார்.?" என்ற ஒரு குழப்ப நிலையில் தமிழ் மக்கள் அன்று இருந்தனர்... வெவ்வேறு கொள்கைகளை உடையவர்களையும், தலைமைத்துவத்தைக் கைப்பற்றுவதிலேயே குறியாக இருப்பவர்களையும் எப்படி ஒன்றாகச் சந்திக்க வைப்பது என்று இன உணர்வு உள்ள ஒவ்வொருவருமே சிந்தித்துக் கலங்கிக் கொண்டிருந்த வேளையில் தான் ஈழத் தமிழர்களின் வரலாற்றில் ஒரு திருப்பு முனையை ஏற்படுத்திய அந்த வரலாற்று நிகழ்வு 1971 ஆம் ஆண்டு வல்வெட்டித்துறையில் நடைபெற்றது. தமிழ் தலைவர்கள் ஒன்று படவேண்டியதன் தேவையை உணர்ந்த வல்வையின் புத்திஜீவிகளும்,இளைஞர் அணியினரும் அவர்களை ஒற்றுமைப்படுத்தும் முயற்சியில் இறங்கிய போதுதான், அது எவ்வளவு கடினமான செயல் என்பதை உணர்ந்து கொணடனர். இந்த நிலையில் தான், தமிழ் தலைவர்களிடையே ஒற்றுமையை நிலை நாட்டி ஒரே கட்சியின் கீழ் கொண்டு வருவதற்காக தந்தை செல்வாவுடனும் கலந்துரையாடி அவருடைய ஆசீர்வாதத்துடன், ஒவ்வொரு கட்சியின் தலைவர்களையும் சந்தித்ததில் முன்னாள் வல்வெட்டித்துறை நகரசபையின் தலைவராக இருந்த ஞானமூர்த்தி அப்பா எடுத்த முயற்சிகள் எழுத்தில் வடிக்கமுடியாது...

எமது இனத்திற்கே தலை குனிவை ஏற்படுத்தி வெவ்வேறு கோணங்களில் சிதறுண்டு தமது அரசியலை நடத்தி வந்த தமிழ்க்கட்சிகளை ஒன்று படுத்தி "தமிழர் விடுதலைக் கூட்டணி" என்ற ஒரே கட்சியாகத் தோற்றுவித்த நாள் 1971 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 7 ஆம் திகதியான இந்த நாள் வல்வெட்டித்துறை வரலாற்றில் மட்டுமல்லாது, உலகத் தமிழர்களின்

வரலாற்றிலேயே பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ஒன்றையொன்று தாக்குவதிலும் முரண்பட்டுக் கொண்டும் இருந்த இலங்கைத் தமிழரசுக் கட்சி, சுயாட்சிக்கழகம், அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ், ஈழத் தமிழர் ஒற்றுமை முன்னணி ஆகிய நான்கு கட்சியின் தலைவர்களையும், ஒரே இடத்தில் கூடவைத்து ஒன்றுபடுத்துவதற்காக முன்னாள் வல்வெட்டித்துறை நகர பிதா அமரர் ச.ஞானமூர்த்தி அவர்களின் தலைமையில், அமரர்களான வேற்பிள்ளை, அ.சபாரரத்தினம் ஆகியோரால் இந்த ஒற்றுமை முயற்சி மேற்கொள்ளப்பட்டதுடன் அன்றைய அந்த வரலாற்று நிகழ்வில் தயாரிக்கப்பட்ட ஆறு அம்சக் கோரிக்கைகள் அடங்கிய ஒப்பந்தத்தில், திரு.அ.அமிர்தலிங்கம், திரு.மு.சிவசிதம்பரம், திரு.செ.சுந்தரலிங்கம், திரு.வ.நவரத்தினம் ஆகியோருடன், பாராளுமன்ற உறுப்பினர்களான திரு.க.துரைரத்தினம், திரு.க.ஜெயக்கொடி, திரு.வ.ந.நவரத்தினம், உட்பட அனைத்தப் பாராளுமன்ற உறுப்பினர்களும், செனற்றர் நடராஜா, யாழ் மாநகர மேயர் திரு.நாகராஜா ஆகியோருட்பட அனைவரும் கையொப்பமிட்டனர்.



தமிழ் தலைவர்கள் ஒன்று சேர்நது தமிழர் விடுதலைக் கூட்டணியை உருவாக்கிய போது தமிழ் தலைவர்களுடன் வல்வெட்டித்துறை தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணியினரருடன் முன்னாள் வல்வை நகரபிதாக்களும் காணப்படுகின்றனர்.



வல்வையில், தமிழர்களை ஒன்றுபடுத்திய ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் தலைவர்களிடம் அன்று இருந்த ஒற்றுமை, இன்று எங்கே போய்விட்டது.?

அதனைத் தொடர்ந்து 1976 ஆம் ஆண்டில், இதில் பங்கு பற்றிய அனைத்துத் தமிழ் கட்சிகளும், ஒன்று சேர்ந்து வட்டுக் கோட்டையில் கூடி "தமிழ் மக்களுக்கான ஒரே ஒரு அரசியல் தீர்வாக தன்னாதிக்கமும், இறைமையும் கொண்ட தமிழீழமே தீர்வாக இருக்கவேண்டும்" என்ற பிரகடனத்தைக் கொண்டு வந்தனர். அதுவே இன்றும் கூட தேர்தல் பிரசாரங்களில் தமிழரசுக் கட்சியினால்,"வட்டுக் கோட்டைத் தீர்மானம்"என்று குறிப்பிடப்படுகின்றது. ஆனால் அதற்காகப் பின்புலமாக நின்று கட்சிகளின் ஒற்றுமைக்காக உழைத்த அமரர் ஞானமூர்த்தி அவர்களையும், வல்வெட்டித்துறையையும் இன்று இருட்டடிப்புச் செய்து, வல்வெட்டித்துறையிலேயே தமிழர்களின் கட்சிகள் ஒற்றுமைப்படுத்தப்பட்டன என்பதையும் கூற மறுப்பதுதான் கவலையைத் தருகின்றது.

அதனை அடுத்து இடம் பெற்ற பொதுத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற ஒற்றுமைப்படுததப்பட்ட கட்சி "உதயசூரியன்" சின்னத்தில் போட்டியிட்டு 98 வீதமான வாக்குகளைப் பெற்று 18 தொகுதிகளைக் கைப்பற்றி பாராளுமன்றத்தில் இரண்டாவது பெரும்பான்மைக் கட்சியாகத் திகழ்ந்து தமிழர்களின் ஒற்றுமையை உலகிற்கு எடுத்துக் காட்டியது.

ஆனால், இவ்வளவு வருடங்கள் சென்றபின்னரும், இன்று மீண்டும் தமிழ்கட்சிகளின் தலைவர்களிடையே பிளவுகள் ஏற்பட்டு பதவிகளைக் குறிவைத்து, ஒருவரை ஒருவர் தாக்குவதிலேயே இருந்ததால், இலங்கைத் தமிழர்கள் மட்டுமல்லாது, உலகமே ஈழத்தமிழ் கட்சிகளின் தலைவர்களின் சுயநலப் போக்கைக் கண்டிக்கத் தொடங்கியது. அந்தக் காலகட்டத்தில் தமிழ் மக்களுக்கான சிறந்த தலைமைத்துவத்தை வழங்கிக் கொண்டிருந்த தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள், அனைத்துக் கட்சிகளின் தலைவர்களையும் வன்னிக்கு அழைத்து அவர்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்தவேண்டிய அவசியத்தை விளக்கி, எல்லோரையும் ஒற்றுமைப்படுத்தி "தமிழ் தேசியக் கூட்டமைப்பை" உருவாக்கினார். தமிழ்தேசியக் கூட்டமைப்பை அவர் உருவாக்கியதாலேயே, மீண்டும் அந்தக் கட்சியின் பெயரில் போட்டியிட்ட அனைத்து வேட்பாளர்களும் வெற்றி பெற்று பாராளுமன்றம் செல்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தார்.

ஆனால், அந்த நேரம் இருந்த இறுக்கமான தலைமைத்துவம் காரணமாக ஒன்றுபட்டிருந்தபோதும், வெவ்வேறு கொள்கைகளையும், இலக்குகளையும் கொண்டிருப்பவர்களால் இந்த ஒற்றுமை முயற்சியின் கீழ் தாக்குப் பிடிக்கமுடியவில்லை. சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்தவர்கள் போல், ஈழத் தமிழர்களின் போராட்டம் 2009 ஆம் ஆண்டு மௌனிக்கப் பட்டதும், மீண்டும் அவர்கள் தமது சுய உருவத்தைக் காட்டத் தொடங்கிவிட்டனர். தந்தை செல்வாவும், தலைவர் பிரபாகரனும் எந்த நோக்கத்திற்காக தமிழர் கட்சிகளை ஒன்றுபடுத்தினார்களோ அவர்களது இலட்சியங்களையே குளி

தோண்டிப் புதைப்பது போல் மீண்டும் ஒவ்வொருவரும் தமது கட்சிகளைப் பலப்படுத்தி தமிழ் தேசியக் கூட்டமைப்பைப் பலவீனப்படுத்தும் செயலில் ஈடுபட்டு வருவதை தமிழர்கள் ஏற்கமறுத்து வருகின்றனர். குறிப்பாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ விடுதலை இயக்கம், தமிழீழ மக்கள் விடுதலை இயக்கம்ஆகிய கட்சிகளைத் தூக்கி எறிந்து விட்டு, தமிழரசுக் கட்சியைத் தனிக் கட்சியாக முன்னிலைப்படுத்துவதை தமிழ் மக்கள் விரும்பவில்லை என்பதைத் தமிழ்த் தலைவர்கள், இதுவரை உணராதது தான் வியப்பானது. அந்த வகையில், இன்று ஒரு சிறந்த நேர்மையான தலைமைத்துவம் இல்லாத ஒரு நிலையில் தமிழர்கள் மீண்டும் அரசியல் அனாதைகளாக்கப்பட்டு உள்ளனர்......

பதவி மோகம் கொண்டு அலைந்து திரியும், தமிழ் தலைவர்களிடையே மீண்டும் ஒற்றுமையை ஏற்படுத்த, தந்தை செல்வாவோ அல்லது தலைவர் பிரபாகரனோ பிறந்துவரவேண்டும் என்று ஈழத் தமிழர்கள் முணுமுணுப்பதும் கேட்கின்றது. எவ்வாறாயினும், தந்தை செல்வா கூறியது போல்," தமிழ் மக்களைக் கடவுள் தான் காப்பாற்ற வேண்டும்." என்பதும் காலம் கடந்து விட்டது போல் தமிழ் மக்கள் உணரத் தொடங்கி விட்டார்கள்......!

இதே நிலை தொடருமானால் தமிழ் மக்கள் தமது அரசியல் தலைமையை தாமே தெரிவு செய்யப் புறப்பட்டால் இன்றைய தலைவர்களின் நாளைய நிலை என்ன என்பதை அவர்கள் சிந்தித்துச் செயற்பட வேண்டும்.

# 13. சோரம் போகாது வீரம் வளர்த்த வல்வை

வல்வெட்டித்துறை மண்ணின் மைந்தர்களின் வீரம் செறிந்த வரலாறுகள் வரலாற்று ஆய்வாளர்களினால் மீளாய்வு செய்யப்படவேண்டும். அவை ஈழத் தமிழ் மக்களின் வாழ்வோடு இணைந்துவிட்ட வரலாறுகள்...!

வல்வெட்டித்துறையின் காத்திரமான பங்களிப்பு இலகுவில் மறக்கப்பட முடியாதவை. ஆனால், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் பிறந்த ஊராக இருக்கின்ற ஒரே காரணத்திற்காக இந்த ஊரையே அழித்து விடுவதில் அடுத்தடுத்துப் பதவிக்கு வருகின்ற ஒவ்வொரு பேரினவாத அரசுகளும், வெளிநாட்டு அரசுகளும், ,இராணுவத்தினரும், முனைப்பாக இருப்பதையே வல்வெட்டித்துறை மண்ணின் மீது காலம் காலமாக மேற்கொள்ளப்பட்டு வந்த பிரகடனப் படுத்தப்படாத பல இராணுவ நடவடிக்கைகள், மற்றும் யுத்த முன்னெடுப்புக்கள் எடுத்துக் காட்டுகின்றன. அது மட்டுமல்லாது, பேரினவாத அரசுகளின் தமிழின விரோத நடவடிக்கைகளுக்கெல்லாம் மௌனம் சாதிக்காது,முதன்முதலில் எதிர்ப்புக் காட்டுவதும், அவற்றிற்கு எதிராகப் போராட முன்வருவதும் இன்னுமொரு காரணமாகவும் இருக்கலாம்.

அரச படைகளுக்கு எதிரான ஆயுதப் போராட்டம் 1983 ஆம் ஆண்டில் ஆரம்பிப்பதற்கு முன்னரே வல்வெட்டித்துறையில் இராணுவத்தினரின் அடாவடித் தனங்களுக்கும், அடக்கு முறைகளுக்கும் எதிராக மக்கள் கிளர்ச்சிகள் ஏற்பட்டிருந்தன.

பொதுவாக வல்வெட்டித்துறை மக்களிடையே ஆன்மீக உணர்வும், ஆலயங்களைப் போன்றே தமது வீடுகளையும், சூழலையும் பேணி வரும் மரபும் இருந்து வருவதை ஊருக்குப் புதிதாக வருபவர்கள் கூட உணர்ந்து கொள்வர். அவர்களில் கடற்றொழில் செய்பவர்களும், கடலோடி வாணிபம் செய்பவர்களும் ஆர்ப்பரிக்கும் அலைகடலில் ஜீவ மரணப் பேராட்டத்தை நடத்தி வருபவர்களாக இருந்தபோதும், தங்களுடைய மண்ணில் மனிதநேயத்திற்கும் தெய்வ சிந்தனைக்கும் முதலிடமளித்தவர்கள். வீட்டிற்கு எவராவது எந்த நேரத்திலாவது திடீரென விருந்தாளிகளாக வந்ததும் அவர்கள் முதலில் அவர்களைப் பார்த்து,

"சாப்பிட்டு விட்டீர்களா? வாங்க சாப்பிட்ட பின்பு பேசலாம்" என்று தான் கேட்பார்கள். அந்த விருந்தோம்பம் பண்பும் கலாசாரமும் வல்வெட்டித்துறை மண்ணில் இன்றும் கூடக்காணலாம்.

ஆனாலும் 1948 இல் பிரித்தானிய ஏகாதிபத்திய வாதிகளிடம் இருந்து இலங்கை விடுதலை பெற்றதாகக் கூறப்பட்டாலும், தமிழ் மக்களுக்கான சுதந்திரமான வாழ்வு என்பது கேள்விக் குறியாகவே இருந்து வந்தது. குறிப்பாக வல்வெட்டித்துறையில் கரையோரப் பாதுகாப்புக்கென அனுப்பப்பட்ட பொலிசார் மற்றும் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டு வந்த தொடர் அட்டூழியங்களினால் வல்வெட்டித்துறையையும் அதனைச் சூழ்ந்துள்ள கிராமங்களின் மக்களும் பெரிதும் பாதிக்கப்பட்டனர். எனினும் தமது அன்றாட ஜீவனோபாயத்திற்கான வாழ்வுக்காக ஜீவமரணப் போராட்டத்தை நடத்திக் கொண்டிருந்தவர்களால், அடக்கு முறைகளைச் சகித்துக் கொண்டு எவ்வளவு காலத்திற்குத்தான் பொறுமையாக வாழமுடியும். ? ஒருவரை இன்னொருவர் அடக்கி அதிகாரம் செலுத்துவது, அவரது பொறுமை எல்லை கடக்கும் வரைதான், என்பதற்கு உதாரணமாகவே வல்வெட்டித்துறை மக்களால், முதன் முதலில் அடக்கு முறையாளர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட தாக்குதலாகும்.

1961 ஏப்ரல் மாதம் 19 ஆம் திகதி...!

வல்வெட்டித்துறையில் இராணுவ முகாம் அமைக்கப்படுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருந்த பொழுது, வல்வெட்டியில் இருந்த பழைய பொலிஸ் நிலையத்தில் பொலிசாருடன் சேர்ந்து இயங்கிய இராணுவத்தினருக்கும், வல்வெட்டித்துறை ஆதிகோயிலடி மக்களுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலே வடக்கு கிழக்கில் இராணுவ அடக்குமுறைக்கு எதிராக நடைபெற்ற முதலாவது சம்பவம் என்பது எங்களில் பலருக்கும் தெரியாது. 1983 ஆம் ஆண்டில் தான் முதன் முதலில், தமிழ் இளைஞர்கள் இராணுவத்திற்கு எதிராகப் போராடினார்கள் என்ற தவறான தகவல்கள் வரலாற்றில் பதிவாகக் கூடாது என்பதற்காக 1961இல், வல்வெட்டித்துறையில் நடைபெற்ற அந்த வீரம் செறிந்த போராட்ட நினைவுகள் இங்கே பகிரப்படுகின்றன.


இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நிறுவுனரும், "தந்தை எஸ்.ஜே.வி." என்றும் உலகத் தமிழ் மக்களால், அன்புடன் அழைக்கப்படுபவருமான சாமுவல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகம் அவர்கள் சிங்களத் தலைவர்களாலும் கௌரவமாக மதிக்கப்படுகின்ற ஒரு தலைவர். அவருடைய தலைமையில், 1961 ஆம் ஆண்டு கொழும்பு காலிமுகத் திடலில், இலங்கை அரசினால் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படுகின்ற அடக்கு முறைகளையும் பாரபட்சமான நடவடிக்கைகளையும் கண்டித்து, நடத்தப்பட்ட சத்தியாக்கிரகப் போராட்டம் உலகின் கவனத்தை ஈர்த்ததால், இலங்கை அரசு நிலை குலைந்து போனது. சர்வதேச ஊடகவியலாளர்களும், இராஜதந்திரிகளும், அன்று நடைபெற்றுக் கொண்டிருந்த சாத்வீகமான போராட்டத்தை மிக உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருந்தனர். அதனை முறியடிப்பதற்காக அரசாங்கத்தால் அனுப்பி வைக்கப்பட்ட பொலிசாரும், இராணுவத்தினரும்,

சிங்களக் காடையர்கள் கூட்டமும், கூட்டாகச் சேர்ந்து, சத்தியாக்கிரகிகள் மீது.துப்பாக்கிப் பிடிகளினாலும், கத்தி பொல்லுகளினாலும் மோசமாகத் தாக்கிக் கொண்டிருந்தனர். அப்பொழுது ஒருவன் ஓடிவந்து, ஈ.எம்.வி.நாகநாதனின் தலையின் மீது தன் கையில் வைத்திருந்த பட்டன் பொல்லினால் ஓங்கி மூர்க்கத்தனமாகத் தாக்கினான். அவனுடைய பட்டன் பொல்லுத் தான் உடைந்து நொருங்கியதே தவிர அமரர் ஈ.எம்.வி.நாகநாதன் அவர்களின் தலை உடையவில்லை. அன்று தொடக்கம் தான் அவர், "இரும்புத் தலை நாகநாதன்" என்று எல்லோராலும் செல்லமாக அழைக்கப்பட்டார். அவ்வாறு பொலிசார் மற்றும் இராணுவத்தினரால் மூர்க்கத்தனமாகத் தாக்கப்பட்ட போதும் கூட சத்தியாக்கிரகிகள் அந்த இடத்தை விட்டு நகரவேயில்லை. ஆத்திரம் கொண்ட இன்னுமொரு சிப்பாய், தந்தை செல்வாவை மிருகத் தனமாகத் தாக்கிக் கொண்டிருந்தான். அவரது மெலிந்த உடம்பு பூப்போலத் துவண்டு சரிந்தது.

மேலும் ஆத்திரம் கொண்ட சிப்பாய் ஒருவன், அவரை இழுத்துக் கொண்டு போய்ச் சாக்கடைக்குள் தூக்கி எறிந்து அவமானப் படுத்தினான். தமிழர்களின் தலைவன் மிருகத்தனமாகத் தாக்கப்பட்ட நிலையிலும் கூட அந்த நேரம் தமிழர்களால், இராணுவத்தினருக்கு எதிரான எந்த ஒரு வன்முறையும் கட்டவிழ்த்து விடப்படவில்லை. காந்திய வழியில் அகிம்சை காத்துக் கொண்டிருந்த தந்தை செல்வா, அந்தநேரம் வாய் திறந்து "அவர்களைத் திருப்பித் தாக்குங்கள்" என்று கட்டளை இட்டிருந்தால், அப்பொழுதே நாடு பெரும் இரத்தக்களரியைச் சந்தித்திருக்கும். அதுவே நாட்டின் பிரிவினைக்கும் அன்றே வழி வகுத்திருக்கும்.

அதே காலப்பகுதியில் முதல் முதலாக இலங்கையில் தமிழரசுக் கட்சி ஒரு அடையாளத்தின் வெளிப்பாடாக தனிநாட்டைப் பிரிப்பதற்கான ஒரு எச்சரிக்கையாக 1961 ஆம் ஆண்டு தமிழர்களின் முதலாவது தபால் தலையை வெளியிட்டு வைத்தது. 10 சதம் பெறுமதியான இந்த முத்திரையில் விவசாயம், கப்பல் போக்குவரத்து,மற்றும் கைத்தொழில் துறைகளை எடுத்துக் காட்டும்வகையில், தந்தை செல்வநாயகம் அவர்களால் யாழ்ப்பாணத்தில். வெளியிட்டுவைக்கப்பட்டது தந்தை செல்வா அவர்களே, தமிழரசின் அஞ்சல் அதிகாரியாகப் பணியாற்றியதுடன், ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்த தமிழர்கள் முத்திரைகளை வெளியிட்டதுடன், வீடு, வீடாகச் சென்றுகடிதங்களை விநியோகித்தனர். இது தமிழர்களின் வரலாற்றில் சர்வதேச ரீதியாக ஒரு தாக்கத்தையும் ஏற்படுத்தியிருந்ததுடன் இலங்கை அரசாங்கத்தையும் தர்மசங்கடத்திற்கும் உள்ளாக்கியது.






இலங்கைத் தமிழரசுக் கட்சி 1961 இலும், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி 1989 இலும் வெளியிட்ட தபால் முத்திரைகள்

இதே மாதிரியான ஒரு தபால் தலை 1989 ஆம்ஆண்டு ஈபிஆசர்எல்எப் கட்சியினராலும் வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. தமிழர்களின் தலைவராகவும், ஈழத்துக் காந்தி என்றும் மதிக்கப்படுகின்ற தந்தை செல்வா அவர்கள் இராணுவத்தினராலும், பொலிசாராலும் மிருகத் தனமாகத் தாக்கப்பட்ட சம்பவம் தமிழ் மக்களைக் கொதிப்படைய வைத்தது. அந்தச் செய்தியால் ஆத்திரமடைந்த வல்வெட்டித்துறை ஆதிகோயிலடி இளைஞர்கள் தமது கண்டனத்தைத் தெரிவிக்கும் வகையில் அமைதியான முறையில் ஒரு கூட்டத்தை ஒழுங்கு செய்திருந்தனர்.

1961 ஏப்ரல் மாதம் 19 ஆம் திகதி பொலிசாரினதும், இராணுவத்தினரதும் தாக்குதல் நடவடிக்கைகளுக்கு நீதி விசாரணை நடத்தப்பட வேண்டுமென்று கோரி, வல்வெட்டித்துறை ஆதிகோயிலடி இளைஞர்களினால், கடற்றொழில் சங்கக் காணியில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த சாத்வீகமான முறையில் நடைபெற்றுக் கொண்டிருந்த கூட்டத்தில், பெருமளவில் பொதுமக்கள் கலந்து கொண்டு இலங்கை அரசின் அடாவடித்தனங்களுக்கு எதிராக சுலோகங்களை எழுப்பினர். இந்தச் செய்தியை அறிந்த பொலிசாரும், இராணுவத்தினரும் கூட்டம் நடைபெற்ற இடத்திற்கு ஜீப் வண்டிகளில் மிக வேகமாக வந்து அங்கே நின்ற பொதுமக்கள் மீது திடீரென யாருமே எதிர்பார்க்காத வகையில் கோரமான முறையில் தாக்குதலை மேற்கொண்டனர்.

அப்பொழுது தான், குளித்துவிட்டு ஈர உடையுடன் அந்த வழியாக வந்த தேவராசாவை வழி மறித்த இராணுவத்தினர், அவர் மீது மிக மோசமாகத் தாக்குதலை மேற்கொண்டனர். அவரைக் கீழே விழுத்திப் புரட்டிப் புரட்டி அடித்தனர். அவருடைய உடலில் இருந்தும் இரத்தம் வழிந்து கொண்டிருந்தது. ஏதுமறியாத அந்த அப்பாவிக் கடற்றொழிலாளியின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலையும் இராணுவத்தினரின்

அத்துமீறல்களையும் கண்டித்து, மறுநாள் ஆதிகோயிலடி எங்கும் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டன. இராணுவத்தினரின் அராஜகத்திற்கு எதிராக பொதுமக்கள் அணிதிரண்டு, போராட்டத்தை நடத்திக் கொண்டிருந்த பொழுது, மீண்டும் ஒரு அடக்கு முறையைப் பிரயோகிப்பதற்காக இராணுவத்தினர் ஜீப் வண்டியில் அந்த இடத்தை நோக்கி வேகமாக வந்து கொண்டிருந்தனர். அங்கே நின்ற பொதுமக்கள் மீது வாகனத்தால் மோதவருவது போல் ஜீப் வண்டி வேகமாக வருவதைக்கண்டதும்,அங்கே நின்றவர்கள் திகைத்தப் போய் நின்றனர்.

"எட தம்பிமாரே!..ஒருவரும் அசையாமல் நில்லுங்கோ..அவன் என்ன செய்யப்போறான் என்பதைப் பர்ப்போம். எங்கை ஜீப்பாலை அடிச்சால் அடிக்கவரட்டும் பார்ப்பம்."

அந்த மக்களில்ஒருவராக நின்று அமைதிப் போராட்டத்தில் பங்கெடுத்துக் கொண்டிருந்தவர்களில், சற்று வயதான ஒருவர் நெஞ்சை நிமிர்த்தியபடி கூறிக் கொண்டிருந்தார். அவருடைய அந்த உறுதியான உத்தரவுக்குப் பின்னர், எவருமே கலக்கம் அடையவில்லை. அவர்களில் எவருமே ஒரு அடிகூடப் பின்வாங்காது வருவதை எதிர் கொள்வதற்குத் தயாராக நின்றதைக் கண்டதும், இராணுவத்தினருக்குத் தலைமை தாங்கி வந்த இராணுவப் பொறுப்பதிகாரி, திகைத்துப் போனவனாக, இராணுவ ஜீப் வண்டியை நிறுத்துமாறு உத்தரவிட்டதுடன்,அந்த ஜீப் வண்டி வந்தவழியே பின்னோக்கியும் செலுத்தப்பட்டது.

அந்தச் சம்பவத்துடன் அன்றைய பிரச்சினை முடிந்து விட்டது என்றுதான் எல்லோருமே நினைத்துக் கொண்டதால், அன்று பிற்பகல் வழமை போலவே மக்கள் தமது அன்றாட வேலைகளைச் செய்து கொண்டிருந்தனர். ஆண்கள் கடலுக்குச் செல்வதற்கான ஆயத்தங்களை மேற்கொண்டிருந்தனர். சில பெண்கள் அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து கொண்டிருந்தனர்.

அந்த நேரம் கடற்கரை வழியாக மூன்று இராணுவச் சிப்பாய்கள், ஆளுக்கொரு றைபிள் துப்பாக்கிகளையும், ஏந்தியபடி அங்கே நின்ற மக்களை நோக்கி வந்து கொண்டிருந்தனர். கடற்கரையில் தொழிலுக்காகச் செல்பவர்களுக்கு அருகில் வந்த இராணுவச் சிப்பாய்கள், தூசண வார்த்தைகளைப் பேசியபடி, அவர்கள் மீது மூர்க்கத்தனமான தாக்குதல்களை மேற்கொண்டனர்.

அங்கே சற்றுத் தூரத்தில் தள்ளி நின்று தங்கள் மீன்பிடி வலைகளைச் சீர் செய்து கொண்டிருந்த சுந்தரம் இராமசாமி மற்றும் சுந்தரம் அழகராசா இருவர் மீதும், சப்பாத்துக் கால்களாலும், துப்பாக்கியின் பிடிகளாலும் மோசமாகத் தாக்கிக் கொண்டே,

"வீட்டை ஓடுடா. . . பறை நாயே "

என்று கலைத்துக் கலைத்து அடித்தார்கள். அவர்களின் அடாவடித் தனங்களும், கீழ்த்தரமான வார்த்தைப் பிரயோகங்களும், அங்கே நின்ற இளைஞர்களைக் கொதிப்படைய வைத்தது... தமிழர்களை மட்டரகமாகப் பேசுவதைப் பொறுமையுடன் பார்த்துக் கொண்டு நீண்டநேரம் அவர்களால் நிற்க முடியவில்லை. அவர்களுடைய இரத்தம் சூடேறிக் கொண்டு வந்தது. தொடர்ச்சியாக அந்த மூன்று இராணுவத்தினராலும் மேற்கொள்ளப்படுகின்ற தாக்குதலைக் கண்டு கொதித்துக் கொண்டிருந்தனர்.

"எடேய் என்னடா பார்த்துக் கொண்டிருக்கிறியள்!.. அவங்களை அடிச்சுக் கலையுங்கோடா. எங்கடை இடத்திலை வந்து எங்களுக்கு முன்னாலை எங்கடை பொடியளை அடிக்கிறான்... கண்டபடி பேசுறான். பார்த்துக் கொண்டு நிக்கப் போறியளோ."

பொறுமையிழந்த நிலையில் கொதித்துக் கொண்டிருந்தவர்கள், அந்தப் பெரியவரின் உத்தரவுக்காகக் காத்திருந்தவர்கள் போல், கற்களாலும், பொல்லுகளாலும், போத்தல்களாலும், இரும்புக் கம்பிகளாலும் இராணுவத்தினரைத் திருப்பித் தாக்கத் தொடங்கி விட்டனர்.

ஊர் மக்களின் எதிர்பாராத அந்த அதிரடித் தாக்குதல்களால் நிலை குலைந்து போய் ஓடுவதற்கு முயற்சித்த இராணுவத்தினரின் துப்பாக்கிகளைப் பறித்தெடுத்தனர். அவர்களின் அந்த மூர்க்கத்தனமான தாக்குதலில் இரண்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டதும், மற்றைய சிப்பாய் அந்த இடத்தை விட்டுத் தலைதெறிக்க ஓடித் தப்பினான். யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினருக்கு எதிரான அந்தச் சம்பவத்தை அரச ஊடகங்களும், அரசும் மூடி மறைக்க முயற்சிகள் எடுத்த போதும் அவை சுயாதீன ஊடகங்களில் வெளிவரத் தொடங்கியதும் அரசுக்குப் பெரும் சவாலாக அமைந்திருந்தது.

அந்தச் சமபவத்தைத் தொடர்ந்து அடிபட்ட புலி போல அலைந்த இராணுவத்தினரால், அந்த நகரம் சுற்றி வளைக்கப்பட்டு சல்லடை போட்டுத் தொலைக்கப்பட்ட றைபிள் துப்பாக்கிகளைத் தேடி அலைந்தும் அவர்களின் கைகளுக்குக் கிடைக்கவில்லை. அந்தக் கோபத்தில் மறுநாள் மேலும் சில இராணுவத்தினர் மீண்டும் அங்கே வந்து சாதாரண பொது மக்களைத் தாக்கத் தொடங்கிவிட்டனர்.

"பறை நாய்களே!... எங்கடை ஆக்களிட்டைப் பறிச்ச துவக்குகளைத் திருப்பித்தரும் வரைக்கும், உங்கள் ஒருவரையும் விடமாட்டோம். உங்கடை ஊரையே கொழுத்தி எல்லாரையும் சுட்டுத் தள்ளி விடுவம்.."

வெறிபிடித்தவர்கள் போன்று சிங்களத்தில் கத்தியபடி, கண்மூடித்தனமாகத் தாக்கிக் கொண்டேயிருந்தனர். திடீரென அங்கே நின்றவர்களில் ஆறு பொதுமக்களைப் பிடித்துச் சென்று வல்வெட்டித்துறையில் இருந்து சுமார் 500 மீற்றர் தொலைவில் இருக்கும் கெருடாவிலில் கொண்டு போய் வைத்து உணர்விழக்கும் வரை சப்பாத்துக் கால்காலும்,துப்பாக்கிப் பிடிகளாலும் மூர்க்கத் தனமாகத் தாக்கிக் கொண்டே இருந்தனர்... அவர்கள் நிலத்தில் விழுந்து வேதனையில் முனகிக்கொண்டிருக்கவும் கூட அவர்களை உருட்டி உருட்டி அடித்துக் கொண்டேயிருந்தனர்.

"ஏய்!.மடையங்களாடா நீங்கள்... அடிக்கஅடிக்க வாங்கிக் கொண்டிருக்கிறியள். அவங்கள் தங்கடை துவக்குகளைத் திரும்ப எடுக்கும் வரை,. உங்களை உயிரோடை விட்டுட்டுப் போகமாட்டாங்கள். அவங்கள் திரும்ப உங்களுக்குக் கிட்ட வாறதுக்கிடையிலை அப்பிடியே செத்தது மாதிரிக் கிடவுங்கோடா."

அங்கே நின்ற இராணுவச்சிப்பாய்களில் ஒருவன். அவன் ஒரு முஸ்லிமாக இருக்கவேண்டும், அவர்களுக்கு மிக அருகில் வந்து, அவர்களைக் கால்களாலும், கைகளாலும் தாக்குவது போலப் பாவனை செய்து, தமிழில் தாழ்ந்த குரலில் மெதுவாகக் கூறிவிட்டு அவர்களைப் பின் தொடர்ந்து சென்றான்.

இராணுவத்தினரின் தொடர்ச்சியான மிலேச்சத்தனமான தாக்குதல் சம்பவங்களால், யாழ்ப்பாணமே அதிர்ந்து போனது. அந்த அடாவடித்தனங்களால் வல்வெட்டித்துறை நகரமே செயலிழந்தது. பத்திரிகைகளின் முன்பக்கச் செய்திகளாக வல்வெட்டித்துறையில் பொது மக்கள் மீதான தாக்குதல் சம்பவம் பற்றியே எழுதப்பட்டிருந்தன..

அந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து மறு நாள், பாடசாலைகள் நடைபெறவில்லை... வர்த்தக நிலையங்கள் பூட்டப்பட்டுக் கிடந்தன... போக்கு வரத்துக்கள் எதுவுமே நடைபெறவில்லை. எவருமே தொழில்களுக்குக் கூடச் செல்லவில்லை. இந்த பதட்டமான நிலைமை நீடித்தால் இதன் பாதிப்புக்கள் வல்வெட்டித்துறையின் ஏனைய பகுதிகளுக்கு மட்டுமல்லாது, மற்றைய அயல் கிராமங்களுக்கும் பரவக்கூடும் என்ற அச்சம் பொலிஸ் திணைக்களத்திற்கு ஏற்பட்டது. இந்த அசாதாரணமான நிலைமையைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்து சுமுக நிலையை ஏற்படுத்துவதற்கு, அப்போது வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக இருந்த, இன்ஸ்பெக்டர் அடைக்கலமுத்துவிடம் பொறுப்பளிக்கப்பட்டது. அதற்கு அமைய இன்ஸ்பெக்டர் அடைக்கலமுத்து ஆதிகோயிலடிப் பகுதிக்குத் தானே நேரில் சென்று ஊர் பிரமுகர்களுடன் சமரச முயற்சியை மேற்கொண்டார்.

"இராணுவத்திடம் இருந்து பறித்தெடுககப்பட்ட துப்பாக்கிகளை நீங்கள் திருப்பிக் கொடுக்கும் வரை அவங்களும் சும்மா விடமாட்டாங்கள். இதாலை உங்களுக்கும் மிகப் பெரிய அழிவையும் ஏற்படுத்துவாங்கள்... அந்தத் துப்பாக்கிகளை என்னிடம் தாருங்கோ, நான் கடற்கரையில் கண்டெடுத்தது என்று கூறி அவர்களிடம் ஒப்படைக்கின்றேன்... அதுக்குப் பிறகு ஆமிக்காரராலை எந்தப் பிரச்சினையும் வராமல் நான் பார்க்கிறன்."

அங்கே நின்றவர்களில் எவருமே வாயைத் திறக்கவில்லை. எதுவுமே பேசாமல் நின்றனர். காக்கிச்சட்டை போட்டவர்களை, அவர்கள் யாராக இரந்தாலும் நம்பக் கூடாது என்று நினைத்தார்களோ என்னவோ, அவர்கள் எல்லோருமே மௌனமாக நின்றிருந்தனர்.!

அப்பொழுது தான் சோரம் போகாத அந்த வீரம் மிக்க வல்வெட்டித்துறை மக்களின் ஒற்றுமையை இன்ஸ்பெக்டர் அடைக்கலமுத்து உணர்ந்து கொண்டார். ஆனால்... இன்று அந்த ஒற்றுமையும் வீரமும் உள்ள சமூகத்தைத் தொலைத்து விட்டல்லவா, நாம் இருக்கின்றோம்?

"சரி..சரி... நீங்கள் யாரும் நேரடியாக என்னிடம் தரவேண்டாம்... உங்களுக்கு என்மீது நம்பிக்கை வரவேண்டுமென்றால்,. எங்காவது ஒரு பொது இடத்திலை வைத்துவிட்டு எனக்கு அறிவியுங்கோ. நான் அவற்றைக் கடலுக்குள் இருந்து எடுத்ததாகக் கொண்டு போய்க் கொடுத்து விடுகிறன். இனிமேல் ஏதாவது பிரச்சினையென்றால் பயப்படாமல் என்னிடம் வாருங்கோ.."

என்று கூறிவிட்டு இன்ஸ்பெக்டர் அடைக்கலமுத்து ஜீப்பில் ஏறிச் சென்றுவிட்டார். இன்ஸ்பெக்டர் அடைக்கலமுத்து அந்த இடத்தை விட்டுச் சென்றதும், அவர்கள் எல்லோரும் ஒன்று கூடி எடுத்த முடிவுக்கு அமைய இராணுவத்தினரிடம் இருந்து பறித்தெடுககப்பட்ட துப்பாக்கிகளை,ஒ ரு பொது இடத்தில் வைத்து விட்டு காவல்துறைக்கு அறிவிப்பது என்ற தீர்மானத்துடன், வந்தனர். அதனைத் தொடர்ந்து இராணுவத்தினருக்கும், ஊர் மக்களுக்கும் இடையிலான் முறுகல் நிலை ஓரளவு தணிந்து கொண்டு வந்துது.! அதற்குப் பின்னர் இன்ஸ்பெக்டர் அடைக்கலமுத்து பொலிஸ் பொறுப்பதிகாரியாக இருக்கும் வரை, அந்த இடத்திற்குப் பொலிசாருக்குத் தெரியாமல் இராணுவம் செல்லவில்லை...!

அந்தச் சம்பவம் நடைபெற்றுச் சில காலங்கள் வரையில் எவ்வித பிரச்சினையும் அந்தப் பகுதியில் ஏற்படவில்லை. இடையிடையே சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பாரிய அளவில் பொது மக்களுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் பாரிய முறுகல் நிலை ஏற்படவில்லை.

1983 ஆம் ஆன்டில் சிறிய ஒரு இராணுவமுகாமாக உருவாக்கப்பட்ட ஊரிக்காடு இராணுவமுகாம் படிப்படியாகப் பெருப்பிக்கப்பட்டு சுமார் ஒரு பற்றாலியனைக் கொண்ட ஒரு பாரிய முகாமாக வளர்ந்து வந்தது. அந்த

முகாம் பெருப்பிக்கப்பட்ட பின்னர் இராணுவத்தினரின் அட்டூழியங்களும் படிப்படியாக அதிகரித்து வந்தது.

ஆதிகோயிலடியைச் சேர்ந்த சபாரட்ணம் பழனிவேல் என்ற இளைஞன், ஒரு நாள் அதிகாலை நேரத்தில தனது சகோதரியை திருகோணமலை பஸ்வண்டிக்கு அனுப்பிவைத்து விட்டு தனது வாகனத்தில் வந்து கொண்டிருக்கும் பொழுது, வல்வெட்டித்துறை ஊரிக்காடு இராணுவமுகாமில் வழிமறித்து கோரமாகத் தாக்கப்பட்டு,முகாம் வாசலில் வைத்து அடித்தே கொல்லப்பட்டார். அவருடைய அவலக்குரல் அந்தச் சுற்று வட்டாரம் எங்கும் எதிரொலித்தது. அதன் பின்னர் இறந்த அவருடைய உடலை இழுத்துக் கொண்டு, இராணுவமுகாமுக்குள் கொண்டு போனார்கள். முகாமிற்குள் வைத்து அந்த அப்பாவி இளைஞனின் உயிரற்ற உடலைச் சித்திரவதை செய்த பின்னர், இறந்த அந்த இளைஞனின் தலையின் மீது, இராணுவ ட்ரக் வண்டியினால் ஏற்றிச் சிதைத்த கொடூரமும் இந்த மண்ணில் தான் இடம் பெற்றது. மீண்டும் சிதைந்த உடலை இறந்த நாய்களை இழுத்துச் செல்வது போல், வெளியே கொண்டுவந்து, இராணுவ முகாமின் நுழைவாயிலில் அனாதரவாகத் தூக்கி எறிந்தனர்.

இந்தச் சம்பவத்தை நேரில் பார்த்த முருகமூர்த்தி என்பவர், உள்ளம் கொதித்த நிலையில், உடனடியாக இராணுவத் தளபதியிடம் சென்று,

> "அந்த அப்பாவி இளைஞனைக் கொன்றது உங்களுடைய இராணுவத்தினர் தான், அவரைக் கொன்று, இராணுவ ட்ரக் வண்டியினால், அவரது தலையைச் சிதைத்ததையும் நானே பார்த்தேன். இதனை நீங்கள் தான் விசாரிக்க வேண்டும்."

இராணுவ முகாமுக்குச் சற்றுத் தள்ளித் தான், அவரது வீடு இருக்கின்றது. ஆங்கே நடக்கின்ற சமபவங்களை அவருடைய வீட்டின் மாடியில் நின்று இலகுவாகப் பார்க்கக் கூடியதாக இருந்ததால், அவரது துணிச்சலான அந்தச் செயலால், ஆத்திரமடைந்த இராணுவத்தினர், அவரைப் பழிதீர்ப்பதற்குச் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திரந்தனர். ஒரு நாள் அவர் தனியாகக் காரில் வரும் பொழுது, அவரை வழிமறித்த இராணுவத்தினர், அவரைக் காரில் இருந்தும் இறக்கி நையப் புடைத்ததுடன், அவரது கையையும் முறித்து அனுப்பினார்கள்... ஏற்கனவே ஆதிகோயிலடி இளைஞனின் கொலை தொடர்பாக முறைப்பாடு செய்ததால், அவரையும் இந்தச் சந்தர்ப்பத்தில் கொன்று விட்டால் அந்தப் பழி நேரடியாக இராணுவத்தினரையே சாரும் என்ற அச்சத்தினால், நல்லவேளை அவர் காயத்துடன் மட்டும் தப்பி விட்டார்.

இதேபோன்று 1965 கார்த்திகை சப்தமி திதியன்று வேம்படியில் வேலும்மயிலும் என்ற பாதசாரி தெருவோரமாக நடந்து சென்று கொண்டிருந்த போது, இராணுவத்தினர் தாம் பயணம் செய்த ஜீப் வண்டியினால் வேகமாக வந்து மோதிக் கொன்றுவிட்டு நிற்காமல் சென்றதைத் தொடர்ந்து அந்த மக்கள் இராணுவத்தினரின்

அச்சுறுத்தலையும் மீறி இராணுவத்தினருக்கு எதிரான ஒரு ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டனர். வல்வெட்டித்துறைச் சந்தியில் இறந்தவரின் குடும்பத்தினருக்கான நீதிகிடைக்க வேண்டி இளைஞர்கள அமைதிவழியில் போராடினர். இந்த நிகழ்வானது இராணுவத்திற்கு எதிராகப் போராட வேண்டுமென்ற உணர்வை சாதாரண மக்களிடையே ஏற்படுத்தியது. எனினும் இளைஞர்களின் போராட்ட உணர்வை மழுங்கடிக்கச் செய்யும் நோக்கில், அன்றைய அரசாங்க அதிபரின் தலையீட்டுடன் வெறும் வாக்குறுதிகளுடன் கனவுகளாகவே போய்விட்டன. அதற்குப் பிறகு எவருமே அது தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

# 14. சிவஞானசுந்தரம் படுகொலை

வல்வெட்டித்துறையில் அரச படையினருக்கு எதிராக 1967 ஆம் ஆண்டு பொது மக்களினால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவம் பற்றிய வர்ணகுலத்தனின் கட்டுரையொன்றில் இருந்து எடுக்கப்பட்ட சில பகுதிகள், சுவை குன்றாமல் அப்படியே கீழே தரப்படுகின்றது:

"1974 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழாராய்ச்சி மாநாட்டு முடிவு நாளன்று இடம் பெற்ற பத்து அப்பாவிப் பொது மக்களினதும் படுகொலைச் சம்பவத்திற்கு ஏழு வருடங்களிற்கு முன்னர் 1967 ஆம் ஆண்டில், முதன்முறையாக வல்வெட்டித்துறையில் ஆயதப்படையினருக்கு எதிராக மக்கள் கிளர்ந்து எழுந்ததுடன் ஆயுதத்தை ஆயுதத்தால் எதிர் கொண்டார்கள். ஜனநாயக முறையில், உணர்வுபூர்வமாக சொந்தமண்ணில் தமது நடமாட்டத்தையும் பொதுமக்களின் ஒன்றுகூடலையும் திட்டமிட்டு கலைக்க முயன்ற சிங்களப்படைகளின் காடைத்தனத்தை நேரடியாக எதிர்கொண்ட மண்ணிலிருந்து பின்னாட்களில் ஆயுதப்போராட்டம் ஆரம்பமாகி அதுவே பின்னர் பெரும்பிளம்பாகி முழுமையாக தம்மை சுட்டெரிக்குமென அன்றையஆட்சியாளரோ அல்லது அவர்களின் கைக்கூலிகளோ, ஏன் ஆயுதப்படைகளோ கூட எள்ளளவும் நினைத்துப் பார்க்கவில்லை.....

"வல்வெட்டித்துறை" என்றும் உலகின் பார்வையை தன்பக்கம் திருப்பியதுடன் தமிழின விடுதலைக்காகத் தன்னையே ஆகுதியாக்கிக் கொண்ட புண்ணியபூமி. கிறிஸ்துவிற்கு ஒரு நூற்றாண்டுக்கு முன்பிருந்த சுதேசநாகர்களும் சோழ வளநாட்டின் வடபகுதியான தொண்டை மண்டலத்தில் இருந்து குடியேறிய தேவர் குலமக்களும் கலந்துவாழும் வளம் கொண்ட மண். ஆண்டஅவர்களது பூமி. யாழப்பாண அரசினை போர்த்துக்கேயரிடம் பறிகொடுக்காது போராடிய மன்னவன் சங்கிலியனையும் (7ம் செகராசசேகரன்) களத்திலே எமது இறமையை பறிகொடுத்தபின்னரும் இடைவிடாது உயிருக்கும் வரை போராடிய கரையாரத்தளபதி வருணகுலத்தானையும் தாலாட்டிய தொட்டிலது. வங்கக்கடலின் தழுவலினால் என்றுமே கிளர்ச்சி கொண்டு தலைநிமிர்த்தும் மண். அலை தாண்டிக்கடலோடும் கடலோடிகளின் காலடிபட்டு சிலிர்த்து நிற்கும் மண்ணது. யாராலும் கட்டுப்படுத்த முடியாத கடல் போல அம்மண்ணின் மக்களும் தம்மை யாரும் கட்டுப்படுத்துவதை மறுத்தார்கள் அதேபோல் தாமும் மற்றவர்களை கட்டுப்படுத்துவதை வெறுத்தார்கள். ஆங்கிலேயர் ஆட்சியில் மட்டுமல்ல அதற்கு முன்னரும்கூட அவர்களின்

சுதந்திரத்தில் யாரும் கை வைக்கவும் இல்லை அவ்வாறு கை வைக்கமுயன்றபோது வல்வெட்டித்துறை மக்கள் கைகட்டிக் கொண்டு வாழாவிருந்ததும் இல்லை.

1967ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 8ந்திகதி சனிக்கிழமை வரப்போகும் புதுவருடப் பிறப்பிற்கு வல்வெட்டித்துறைமண் தயாராகிக் கொண்டிருந்தது. அதேநேரம் எமது குல தெய்வமான அருள்மிகு முத்துமாரியம்மனின் பக்திபூர்வமான பதினைந்துநாள் உற்சவநாட்களும் கோலாகலமாக கொண்டாடப்படும் இந்திரவிழாவும் நெருங்கிக் கொண்டிருந்தன. ஆனாலும் அப்பேதைய வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக இருந்த பத்திரானாவும் அவருக்கு அடுத்த நிலையில் இருந்த சார்ஜன்ற் இராஜரத்தினம் மற்றும் இனவெறியனான திசநாயக்கா உட்பட ஏனைய பொலிசாரின் அடாவடித்தனங்களினால் குறிப்பிட்ட திருவிழா நாட்களும் கேள்விக் குறியாகியது.

எனினும் வல்வெட்டித்துறை மக்கள் தமது நிலையினைத் தெளிவுபடுத்துவதற்காகவும், பொலிசாரின் அடாவடித்தனங்களை மேலும் சகித்துக் கொண்டு அடங்கி இருப்பதா அல்லது அவர்களது அடாவடித்தனங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதா என்பது பற்றியும், அதனை நிறுத்த என்ன செய்யலாம் என்பது பற்றியும் பொதுமக்களின் கருத்தினை அறிந்து செயற்பட முனைந்தனர். வல்வெட்டித்துறை நகரத்தின் மத்தியில் விளங்கிய சனசமூக நிலையத்தின் முன்றலில் அன்றைய சனசமூகநிலையத்தின் தலைவராக விளங்கிய சண்முகம்பிள்ளை ஞானமூர்த்தி அப்பாவின் தலைமயில் இயங்கிய நிர்வாகசபையினரால்
“தொடரும் பொலிஸ் இராணுவ அட்டூழியங்களை நிறுத்த பகிரங்க ஆலோசனைக்கூட்டம்”

என பொதுமக்களுக்கான அறிவித்தல் கொடுக்கப்பட்டுப் பிற்பகல், சனசமுக நிலையத்தின் தலைவர் திரு.ச.ஞானமூர்த்தி அவர்களின் தலைமையில் பொதுக்கூட்டம் ஆரம்பமாகியது. ஊரில் வாழும் ஆண்களில் கணிசமான பகுதியினர் உட்பட பாராளுமன்ற உறுப்பினர் திரு.க.துரைரத்தினம், வல்வை நகரசபைத் தலைவர் திரு.மு.இரத்தினவடிவேல் ஆகியோரும் அக்கூட்டத்தில் சமூகம் அளித்திருந்தனர். எனினும் போக்குவரத்திற்கு தடங்கலின்றி மக்கள் உள்ளே போகவும் வரவும் வழிவிட்டு அடைக்கப்பட்ட வாசிகசாலை முன்றலிற்கு உள்ளேயே அவர்கள் கூடியிருந்தனர். ஒருசிலர் மைதானத்தை சுற்றிய வீதியோரங்களில் ஆங்காங்கே நின்று கூட்டத்தை பார்த்துக்கொண்டிருந்தனர். கூட்டத்தில் பலவித கருத்துக்களும் பகிரப்பட்டுக் கொண்டிருந்தன.


மேற்படி பொதுக்கூட்டம் ஒருபுறம் நடந்து கொண்டிருக்கையில் ஊரின் இன்னோர்புறத்தே முத்துமாரியம்மனின் திருவிழாவிற்கு கட்டியம்கூறும் காத்தவராயரின் ஊர்வலமும் நடந்து கொண்டிருந்தது. இதனால் கூட்டத்திற்கு

சமூகமளிக்காதோர், மங்கலவிளக்குகளுடன் வீட்டுவாசல்களில் காத்தவராயரின் வருகைக்காக காத்திருந்தனர். இவ்வாறு வல்வையின் மைந்தர்கள் அனைவரும் தமது தனிப்பட்ட விருப்புவெறுப்புக்களை ஒதுக்கி வைத்துவிட்டு தெய்வ சிந்தனையுடனும் சமூகசிந்தனையுடனும் ஒன்றிப்போயிருந்தனர். சனசமூக நிலையக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பொழுது, இரண்டு, தடவைகள் கூட்டத்தில் கூடியிருந்த மக்களை ஊடறுத்து, ஜீப் வண்டியில் பொலிசார் போய்க் கொண்டிருந்தனர். அப்பொழுது அங்கிருந்த இளைஞர்களிடையே, சலசலப்பு ஏற்பட்டது. இந்நிலையில் மீண்டும் மூன்றாவது தடவையாக இராணுவத்தினர் மூன்று ஜீப்புகளிலும், வல்வெட்டித்துறை பொலிஸ் இன்ஸ்பெக்டர் பத்திரானாவின் தலைமயில் சுமார் ஐம்பதுக்கும அதிகமான பொலிசார் இன்னொரு ஜீப்பிலுமாக கூட்டம் நடந்து கொண்டிருந்த வாசிகசாலை மைதானத்தை சுற்றி வளைத்துக் கொண்டனர். எவ்வித முன்னறிவித்தலுமின்றி படைகளால் சுற்றிவளைக்கப்பட்ட மக்கள் என்ன? ஏது? என தம்மை சுதாகரிப்பதற்குள் படைகளின் குண்டாந்தடித் தாக்குதலுக்கு இலக்காகினர். மைதானத்தின் மூன்றுவாசல்களையும் வாசிகசாலையின் வடக்குப் புறவாசலையும் மக்கள் தப்பித்து செல்லாதவாறு தடைசெய்தபடி படையினர் தமது தாக்குதலை தொடங்கி யிருந்தனர்.

அதுவரை அமைதியாக உறங்கிக் கிடந்த வல்வெட்டித்துறை மண்ணில் புதியபோர்க்களம் ஒன்று திறக்கப்பட்டது. தனித்தனியாக மக்கள் கூட்டத்தினை குண்டாந்தடி கொண்டு தாக்கியபடையினர் வெருண்டோடி குழுக்களாக சேர்ந்து கொண்டனர். அதேபோல் வெட்டவெளியில் நின்று வெறும் கைகளுடன் மோதவாரம்பித்த மக்களும் பாதுகாப்பிடம் தேடியபடி, ஒழித்திருந்து கொண்டே கற்களினாலும் போத்தல்களினாலும் தொடர்ந்து தாக்கினார்கள். சிலர் தாக்குதலில் இருந்து தப்பிப்பதற்காக சனசமூக நிலையத்திற்குள் பின்வாங்கினர். காயம் பட்டவர்கள் கைமுறிந்தவர்கள் கால் உடைந்தவர்கள் தலை பிளந்தவர்கள் என இரு புறமும் இரத்தம் வழிந்தோடியது. பூனை என பதுங்குவார்கள் என எதிர்பார்த்த மக்கள் புலியாகமாறி பழிவாங்க பாய்ந்தபோது விழிபிதுங்கிய படையினர் வெருண்டோடத்தலைப்பட்டனர். தம்மை பாதுகாத்துக்கொள்ள துப்பாக்கிகளின் துணையை நாடினர். சிங்கள இராணுவத்தினரோ தாம் ஏறிவந்த ஜீப்பொன்றையும் கைவிட்டுவிட்டு களத்தினை விட்டு ஓடிமறைந்தனர். இலங்கை இராணுவம் முதன் முறையாக பின்வாங்கி ஓடிய வரலாறு 1967ஏப்ரல் 8ந்திகதி சனிக்கிழமை இரவு வல்வெட்டித்துறை மண்ணில் ஆரம்பமாகியது.

நாலாபுறமிருந்தும் பறந்துவரும் போத்தல்களையும் கற்களையும் எதிர்கொள்ள முடியாத பத்திரானாவின் தலைமையில் வந்த பொலிசார் சனசமூகநிலையத்திற்குள் ஓடிஒளிந்து கொண்டனர்.

சந்தியிலிருந்து பொலிஸ் நிலையத்திற்கு தப்பியோட முடியாத நிலையில் இடையிடையே வெளியேவந்து சகட்டுமேனிக்கு சுட ஆரம்பித்தனர். இறுதியில் வல்வெட்டித்துறை சந்தியின் நடுநாயகமாக யாழ்ப்பாண வீதியோரம் நின்ற அரசமரத்தின்கீழ் இராமசாமிப்பிள்ளை சிவஞானசுந்தரம் என அழைக்கப்படும் "ஞானம்", சனசமூக நிலையக்கட்டிடத்தின் முன்னால் துப்பாக்கியுடன் காத்திருந்த திசநாயக்கா என்ற பொலிசாரின் துப்பாக்கிச் சூட்டில் பலியாகி விழுகின்றார். தனது வியாபாரக் கடமைகளை முடித்துவிட்டு யாழ்ப்பாணவீதியால் வீடு திரும்பிக் கொண்டிருந்த இவரை வானைவிட்டு இறங்கி முன்னால் நடந்து வரக்கூறிய இன்ஸ்பெக்டர் பத்திரானா "சூட்" என கட்டளையிட்டதும் உடனடியாகவே திசநாயக்கா என்ற பொலிஸ், ஞானத்தை சுட்டு வீழ்த்தினார்.



வல்வெட்டித்துறைச் சந்தியின் அன்றைய தோற்றம்

வடஇலங்கை பல்பொருள் விற்பனைநிலையம் என்னும் நிறுவனத்தின் பங்குதாரராகவும் முகாமையாளராகவும் விளங்கிய வ.இ.சிவஞானசுந்தரம் 13மார்கழி1938 இல் பிறந்தார். இவர் பத்திரானாவின் நண்பராகவும் விளங்கியவர். மேற்குறிப்பிட்ட சம்பவம் நடந்த அன்றைய நாட்காலையிலும் பத்திரானாவின் காசோலை ஒன்றை இவர் பணமாக மாற்றிக் கொடுத்திருந்தார். இவ்வாறு பத்திரானாவிற்கு நன்கு பரிச்சயமான இவர் வந்தவழியில் ஆங்காங்கே கூடிநின்ற மக்கள் மோதலின் தீவிரத்தன்மையை கூறி இவரைச் செல்லவிடாது தடுத்தபோதும், பத்திரானாவின் நட்பில் நம்பிக்கை வைத்து நடந்த அப்பாவியான சிவஞானசுந்தரம் இன்ஸ்பெக்டர் பத்திரானாவினாலேயே கொல்லப்பட்டார்.

எதிர்பாராத மோதலில் பயன்படுத்திய போத்தலும் கற்களும் துப்பாக்கிகளின் முன்னால் எம்மாத்திரம். கிழக்கே பருத்தித்துறை வீதியில் வினாயகசுந்தரம் இறங்கநாதனும் மேற்கே காங்கேசன்துறை வீதியில்

தளையசிங்கம் பாலசுப்பிரமணியமும் வடக்கே கடற்கரை வீதியில் சோமசுந்தரம் அருச்சுனராசா தெற்கே யாழ்வீதியில் இராம சாமிப்பிள்ளை சிவஞானசுந்தரம் என மேலும் பலர் துப்பாக்கி சூட்டுக் காயங்களிற்கு உள்ளாகியிருந்தார்கள். இவர்களில் படுகாயமடைந்தவர்கள் போக சிவஞானசுந்தரம் தனது உயிரை இழந்திருந்தார். சந்தியின் மையத்தில் ஆறுமுகம் சேதுநாராயண சாமி உட்பட மேலும் பலர் ஓடித் தப்பமுடியாத காயங்களுடன் விழுந்து கிடக்கின்றனர்.

காத்தவராயரின் வருகைக்கான வெடியோசையோ என மக்கள் திகைத்து நிற்க தமிழினஒழிப்பில் உயிர்த்த சிங்கள அராஜகத்தின் துப்பாக்கி வெடியோசைகள் வானைப்பிழந்து கொண்டிருந்தன. அமைதியாக உறங்கிக் கொண்டிருக்கும் மக்களைச் சீண்டுகின்றோம் எனப்புரியாமல் சிங்களப் பொலிசாரின் துப்பாக்கிகள் குண்டுகளை சீறி உமிழ்ந்தன. சனசமூகநிலையத்தின் இரு புறவாசல் வழியாகவும் இடையிடையே வெளியே வந்து எட்டிப்பார்க்கும் பத்திரானாவின் கட்டளைக்கேற்ப சார்ஜன்ற் இராஜரட்ணம், திசநாயக்கா மற்றும் பொலிசாரின் கைகளிலிருந்து துப்பாக்கிச் சூடுகள் மக்களை நோக்கி நாற்புறமும் பறந்து கொண்டிருந்தன.

இப்போது பத்திரானா வாசிகசாலையின் கிழக்குவாசல் வழியாக மீண்டும் மேற்காக காங்கேசன்துறை வீதியை எட்டிப்பார்த்தார். துணைக்கு பனையன் இராஜரட்ணமும், சிலநிமிடங்களிற்கு முன்பாக பாலசுப்பிரமணியத்தை குறிவைத்து தாக்கியது போல் மீண்டும் மனிதரை வேட்டையாடும் கண் கொத்திப்பாம்பாக இரையைத்தேடிய அவனது பார்வையில் வீதியின் வடக்குப் புறமாக சில அடிகள் தூரத்தில் யாரோ அசைவது போன்றபிரமை இராஜரெட்ணத்தை அழைத்து குறியைக்காட்டினார். இராஜரெட்ணம் பார்வையால் அப்பகுதியை துளாவியபோதே இவர்களை நோக்கிய "டுமீல்" என்ற ஒற்றைச் சத்தம் காதைக்கிழித்தது.

"சிங்களப்படைகளுக்கு எதிரானதும் அவர்களை குறிவைத்ததுமான ஈழத்தமிழர்களின் முதலாவது வேட்டுச் சத்தம் அதுதான்"

பத்திரானாவும் இராஜரெட்ணமும் வாசிகசாலைக்குள் திரும்பி ஓடினார்கள். ஆனால் அவர்கள் ஓடிய வேகத்தைவிட துப்பாக்கிக் குண்டின் வேகம் மிக அதிகமானது. "இடியைத் தொடர்ந்து வரும் மழைபோல" துப்பாக்கியில் இருந்து புறப்பட்ட ஒற்றைச் சத்தத்தை தொடர்ந்து அங்காங்கே ஈயக்குண்டுகள் தெறித்துப் பறந்தன. சந்தியின் மத்தியில் நின்ற அரச மரம் தென்கிழக்குத்திசையில் அமைந்திருந்த கலாநிதி ஸ்ரோர், சிவராசா தேனீர்ச்சாலை, உலோக ஒட்டு வேலைக்கடை மற்றும் இவைகளுடன் இணைந்திருந்த கதவுகள் சுவர்களில் எல்லாம் ஈயக்குண்டுகள் தாக்கித்துளைத்தன. இவ்வடுக்கள் அடையாளம் காணக்கூடியவாறு சில





அழகும், எளிமையும் கொண்ட பழைய சனசமூக சேவா நிலையம் இன்று கேட்பாரற்ற நிலையில் இருந்த இடமே தெரியாது அழிக்கப்பட்டதால், பெருமை மிக்க சனசமுக சேவா நிலையத்திற்கான அடையாளத்தையே இழந்து நிற்கின்றது. அதற்குப் பதிலாக நெக்கோட் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு, இன்றும் மூடப்பட்ட நிலையில் பயன்படுத்தப்படாது இருக்கும் கட்டத்தையும் படத்தில் காணலாம்

அமைதியாக உறங்கிக் கொண்டிருக்கும் இளைஞர்களைச் சீண்டுகின்றோம் எனப்புரியாமல் அரசபடைகள் துப்பாக்கிகளை உயர்த்தியதைத் தொடர்ந்து ஆயுதத்தை ஆயுதத்தால் அழிக்கும் முதலாவது வேட்டு வல்வெட்டித்துறையில் ஒரு வீரனாகக் கருதப்பட்ட செல்லையா காஞ்சிமாவடிவேலின் கரத்திலிருந்து புறப்பட்டது. புறா வேட்டையாடும் 12.04 இரக வேட்டைத் துப்பாக்கியில் இருந்தே அது வெளிக்கிளம்பியது. மரபுப்போர் போல் அரைமணி நேரத்திற்கு மேலாக நேரடிமோதலும் அதன் பின் மறைந்திருந்து தாக்கும் கரந்தடி முறையிலான மோதலும் நடந்து முடிந்தன. இராணுவத்தால் கைவிடப்பட்ட ஜீப்பானது பலத்த சேதமடைந்த நிலையில் பரிதாபமாக அநாதரவாக தனித்து நின்றது. சந்திமுழுமையும் உடைந்த போத்தல்களின் சிதறல்கள் பரவிக்கிடந்தன. சந்தியை சூழவிருந்த கடைகளும் வீடுகளும் போத்தல்களின்றி வெறுமையாகின. இவ்வாறு அன்றைய இரவில் வல்வெட்டித்துறை சனசமூகசேவா நிலையமும் அதனைச் சூழவிருந்த சந்திப்பகுதியும் பெரும் போர்க்களத்தை நினைவூட்டியபடி இருந்தது.

புறாக்களை வேட்டையாடும் சன்னாங்களினால் இடதுகன்னம் முதல் உடலின் பலபகுதிகளிலும் பத்திரானா காயமடைந்திருந்தார். காயமடைந்ததனால் ஏற்பட்ட மரண பயமோ அல்லது தீர்ந்துவிட்ட துப்பாக்கிகுண்டுகளினை மாற்ற முடியாத ஏக்கமோ? மீண்டும் வெளியே வருவதையும் வெளியே எட்டிப் பார்ப்பதையும் தவிர்த்துக் கொண்டான். ரேடியோ தொடர்பாடல் கருவிகளெதுவும் அற்ற அக்காலத்தில் யாராவது வந்து காப்பாற்றமாட்டார்களா? என்ற தவிப்புடன் அவன் காணப்பட்டான். இவனுடன் காயமடைந்த சரார்ஜன்ற் பனையன் இராஜரெட்ணம் மற்றும் திசநாயக்காவுடன் ஏனையபொலிசாரும் தப்பிச்செல்ல வழிபார்த்து தொடர்ந்து

சனசமூகநிலையத்திலேயே முடங்கிக்கொண்டனர். சனசமூகசேவா நிலையத்தின் உள்அறையிலும் மண்டபத்திலும் ஒளிந்திருந்த மக்களையும் வெளியேறவிடாது இவர்கள் தடைசெய்தனர். இதனால் தொடர்ந்தும் அங்கேயே அம்மக்கள் பணயக் கைதிகளாக்கப்பட்டனர்.

அவ்வாறு அடைபட்டிருந்த மக்களுடன் மக்களாக பருத்தித்துறை நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் க.துரைரத்தினம் அவர்கள் காணப்பட்டார். அவர் தன்னையாரென? அறிமுகப்படுத்தி பத்திரானாவுடன் பலமுறை கதைக்க முயன்ற போதும் பொலிஸ் பொறுப்பதிகாரியான பத்திரானாவினால் அவை உதாசீனப்படுத்தப்பட்டன. வெறுமனே நாடாளுமன்ற பதவிகளின் மூலம் பொலிசாரின் அட்டூழியங்களை நிறுத்த முடியாத அவரது அன்றைய நிலையும் வல்வெட்டித்துறை மக்களின் எதிர்கால மனமாற்றத்திற்கு உந்துகோலாய் அமைந்தகாரணிகளில் ஒன்றாய் அமைந்தது.அன்று தகவலை அறிந்ததும் உடுப்பிட்டித் தொகுதியின பாராளுமன்ற உறுப்பினராக இருந்த அமரர் மு.சிவசிதம்பரம் அவர்கள் உடனடியாக அந்த இடாத்திற்கு வருகை தந்து பிரதம மந்திரியுடனும்,பாதுகாப்பு அமைச்சருடனும் தொடர்பு கொண்டதால் நிலைமை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டது. இவ்வாறே அன்றைய இரவின் நிகழ்வுகள் அகிம்சை வழியில் நம்பிக்கை இழக்கும் நிலைக்கு, வல்வெட்டித்துறை மக்களை தள்ளும் நிலைக்கு காரணமாக அமைந்துவிட்டது.

ஆனால் 1967 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 08 ஆம் திகதி அன்று நடந்த அரசபடைகளினுடனான மோதலும் சிவஞானசுந்தரத்தின் படுகொலையும் அதனைத் தொடர்ந்து குற்றவாளிகள் தப்பிக்கொண்டவிதமும் வல்வெட்டித்துறை இளைஞர்களை புதியபாதையில் சிந்திக்கத் தூண்டியது. வன்முறைக்கு வன்முறை வழியாகாதா? இதுவே அவர்களின் கேள்வி? விளைவு, தொடர்சியாக புடம் போடப்பட்ட வல்வெட்டித்துறை மண்ணின் ஊர் உணர்வோடு பின்னைய நாட்களில் இன உணர்வும் சேர்ந்துகொள்ள ஈழத்தமிழினம் புதியபாதையில் வெற்றிநடைபோட ஆரம்பித்தது." அன்று அந்தக் கொடுமைகளைக் கண்டு வெஞ்சினம் கொண்டு எழுந்த பலஇளைஞர்கள் பின்னாட்களில் தமிழீழ விடுலைப் போரின் முன்னோடிகளாக மிளிர்ந்து கொண்டனர்.

அன்று, வல்வெட்டித்துறைச் சந்தியில் பொலிசாரினால் கொல்லப்பட்ட சிவஞானசுந்தரம் அவர்களுடைய நினைவாக எழுந்து நிற்கும் "சிவஞானசுந்தரம் ஞாபகார்த்த மண்டபம்" வல்வையின் அன்றைய அந்தச் சோக கீதத்தை இன்றும் மீட்டிக் கொண்டே இருக்கின்றது.

# 15. தொடரும் இன அழிப்புக்கள்

1984 ஆம் ஆண்டு,ஆகஸ்ற் மாதம் 4 ஆம் திகதி.....!

வல்வெட்டித்துறையில் 1984 ஆம் ஆண்டு, ஆகஸ்ற் மாதம் 4 ஆம் திகதி இடம்பெற்ற இன்னுமொரு துயரமான சம்பவம் வல்வை மக்களின் இதயங்களை இன்றும் நெருடிக் கொண்டிருக்கின்றன..

வழமைபோன்று அன்றும் இன அழிப்புக்காக வந்து கொண்டிருந்த இராணுவ வாகனத் தொடர் அணியின் மீது ஊறணிக்கும், நெடியகாட்டுக்கும் இடையில், கண்ணி வெடித் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றதில், அந்த இடத்திலேயே ஒரு இராணுவ அதிகாரி உட்பட ஆறு இராணுவத்தினர் கோரமாகக் கொல்லப்பட்டனர்.அந்தத் தாக்குதலின் பழிவாங்கும் நடவடிக்கையாக, அன்று பிற்பகலில் இருந்து இரவு வரை நூற்றுக் கணக்கான வீடுகள், பெற்றோல் ஊற்றித் தீவைத்தக் கொழுத்தப்பட்டன. பல கோடி ரூபா பெறுமதியான சொத்துக்கள் கொள்ளையடிக்கப்பட்டன...!

அன்று இடம் பெற்ற இராணுவச் சோதனை என்ற பெயரில், 300க்கும் மேற்பட்ட அப்பாவி இளைஞர்கள், விசாரணை என்ற பெயரில் கைது செய்யப்பட்டு இராணுவ முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டனர். இவ்வாறு விசாரணைக் காகவெனக் கூட்டிச் செல்லப்பட்ட நூற்றுக் கணக்கான இளைஞர்களை விடுவிக்க வேண்டும் என்று, அப்போதைய பிரஜைகள் குழவின் தலைவராக இருந்த பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள் பலாலி இராணுவ முகாம் தளபதியுடன் பேசிய பொழுது,

"விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அது முடிந்ததும் உடனே விடுவித்து விடுகின்றோம் "

என்ற பதிலைச் சம்பிரதாயத்திற்காகக் கூறிய இராணுவத் தளபதி, மறு நாளே அவர்களை இராணுவ ட்ரக் வண்டிகளில் ஏற்றிக் கொழும்புக்கு அனுப்புவதற்கான உத்தரவையும் வழங்கி விட்டார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து,வழமையாகக் கொழும்புக்குச் செல்லும் பாதை வழியாகச் செல்லாது, அனுராதபுரம், கெக்கிராவை, திஸ்சமகாராமை, வெள்ளவாயா, கதிர்காமம் போன்ற சிங்களப் பிரதேசங்களுக்கூடாக அந்தத் தமிழ் இளைஞர்களை ஏற்றிய லொறிகள் சென்றன. திறந்த லொறிகளில், கைகள் கட்டப்பட்ட நிலையில், அந்த அப்பாவி இளைஞர்கள், "பயங்கரவாதிகள்" என்ற முத்திரை குற்றப்பட்டு, சிங்கள மக்களுக்கான காட்சிப் பொருளாகக் கூட்டிச் செல்லப்பட்டனர். அவ்வாறு கூட்டி இழுத்துச் செல்லப்பட்ட தமிழ் இளைஞர்களுக்காகவென விசேடமாக "பூசா தடுப்பு முகாம்" என்ற சித்திரவதை முகாம் முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்டது.

இது, 1984 ஆம் ஆண்டு ஆகஸ்ற் மாதம் 6 ஆம் திகதி, காலி பிரதேசத்தில் உள்ள பூசா என்ற இடத்தில் தமிழ் இளைஞர்களைச் சித்திரவதை செய்வதற்காக வென்றே, திறந்து வைக்கப்பட்டது.

இந்த தடுப்பு முகாமில்,நூறு பேருக்கு ஒரு மலகூடம், என்ற வகையில் அமைக்கப்பட்டிருந்தது.. கழிவகற்றல் கடன்களைச் செய்வதற்காக, அதிகாலையில் இருந்தே,நீண்ட வரிசையில் காத்துக் கொண்டு நின்றால்தான் ஒருவாறு ஒரு மணித்தியாலத்திற்குள் அந்த மலகூடத்தை அடையலாம். அவர்கள் போகும் பொழுது ஒரே ஒரு சட்டி தண்ணீர் மட்டுமே கொண்டு போகலாம். அவர்கள் முகம் கழுவினால் என்ன, உடலைத் துப்பரவு செய்தால் என்ன. அந்தத் தண்ணீரில் தான் சமாளிக்க வேண்டும்..

அதுவரைக்கும் அவர்கள் பட்டுக் கொண்டிருக்கும் அவஸ்தையை தூரத்தில் தள்ளி நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டு நிற்கும் இராணுவத்தினர், எள்ளி நகையாடிக் கற்களால் எறிந்து தாக்கிக் கொண்டிருப்பார்களாம்... இராணுவச் சீருடைகளை அணிந்ததுமே மனிதாபிமானமும் செத்துப் போய் விடுகின்றதோ......!

அங்கே கைது செய்யப்பட்டுக் கொண்டிருந்தவர்களில் பலர் காணாமலேயே போய் விட்டனர். இன்று வரை அவர்களைப் பற்றிய எந்த விபரமும் தெரியாமலேயே போய்விட்டன.

காலி பூசா சித்திரவதை முகாமில் சில காலம் தடுத்து வைக்கப்பட்டுச் சித்திரவதை செய்யப்பட்டு திரும்பிய இளைஞர் ஒருவர்,

"இங்கிருந்து காலிக்குக் கொண்டு போகும் வரைக்கும், எங்களுக்குக் குடிக்கத் தண்ணீரோ உணவோ தரவில்லை. திறந்த லொறியிலை எங்கடை கைகளைக் கட்டி வெயிலில் கூட்டிக் கொண்டு போனவங்கள். வெயில் கொடுமையாலை, நாவரண்டு தண்ணீர் என்று கேட்டதற்கு, அநுராதபுரத்தில் நிற்பாட்டி, மலகூடக் குழியில் உள்ள அழுக்குத் தண்ணீரைக் காட்டிக் குடிக்குமாறு சப்பாத்துக் காலால் அடித்தார்கள்..."

அன்று தாங்கள் பட்ட வேதனையின் அவலத்தைக கூறி அழுதார். அந்தச் சித்திரவதை முகாமிர் பலர் அடித்துக் கொலை செய்யப்பட்ட சம்பவங்கள் அவர் கூறிய பின்னர் தான் ஊரவர்களும் அறிந்து கொண்டனர். இந்த அவல வாழ்க்கையில் இருந்து திரும்பிய ஒருவன், "ஸ்ரீலங்கா அரசின் ஒற்றையாட்சிக் கொள்கையை ஏற்றுக் கொள்வான் என்று எப்படி எதிர்பார்க்கமுடியும்?

1985 ஆம் ஆண்டு மே மாதம் 9 ஆம் திகதி.!

வல்வெட்டித்துறை நகரமும் அதனைச் சூழ்ந்துள்ள கிராமங்களும், அமைதியாகத் தூங்கிக் கொண்டிருந்த நேரம் அதிகாலை 4.00 மணி.. இரவோடிவாக யாருமே எதிர்பார்த்திருக்காத வகையில், சுமார் 2000 வரையான படையினரால் வல்வெட்டித்துறையும், அதனைச் சூழ்ந்தள்ள கிராமங்களும் மிகப் பாரிய ஒரு இராணுவ நடவடிக்கைக்காகச் சுற்றி

வளைக்கப்பட்டது. வல்வெட்டித்துறைக்குக் கிழக்கே பொலிகண்டியில் இருந்தும், தெற்கே உடுப்பிட்டடியில் இருந்தும், மேற்கே தொண்டைமானாற்றில் இருந்தும் இராணுவ சுற்றி வளைப்பு நடவடிக்கை ஆரம்பமானது...!

இராணுவத் தளபதி ஜோர்ஜ் மென்டிஸ் தலைமையில் தமிழ் மக்களுக்கு எதிரான இந்த இராணுவ நடவடிக்கை முடுக்கி விடப்பட்டிருந்தது.

அமைதியான அந்த இரவையும் கிழித்துக் கொண்டு, நாய்களின் ஓலம் வானைப் பிளந்தது..! திடீரெனக் கேட்ட துப்பாக்கிச் சத்தங்களும், கிறனற் குண்டு வெடிப்புச் சத்தங்களும் மாறி மாறி மூன்று திசைகளில் இருந்தும் கேட்டதால் தூக்கத்தில் இருந்த மக்கள் அலறித் துடித்து எழுந்து, வெளியே நடப்பதைக் கூட அறிய முடியாது, விழி பிதுங்க நின்றனர்.

நூற்றுக் கணக்கான வீடுகளும்,வர்த்தக நிலையங்களும் பெற்றோல் ஊற்றிக் கொழுத்தப்பட்டதால், வானம் ஒரே செந்நிறப் பிளம்பாகக் காட்சி அளித்தது...!

நீட்டிய துப்பாக்கிகளுடன் வீடுகளுக்குள் புகுந்த இராணுவத்தினர், வீடுகளுக்குள் நடுக்கத்தில் இருந்த அப்பாவிகளில் பலரை வெளியே இழுத்து வந்து வகைதொகையின்றிச் சுட்டுக் கொன்றனர்.

வல்வெட்டித்துறையின் அனைத்து வீதிகளும்,சிறிய ஒழுங்கைகளும் இராணுவத்தினரால் சுற்றி வளைக்கப்பட்டுள்ளதுடன் கடைகள் மற்றும் மாடிக் கட்டிடங்களுக்கும் மேலாகவும் பதுங்கியிருந்தனர். இந்த நேரத்தில் தான்,அதிகாலை 5.00 மணியளவில்,சிவபுர வீதியில் உள்ள சேதுலிங்கம் கலாமோகன் தனது வீட்டிற்குள் இருந்து, கிணற்றடிக்குச் சென்ற வேளையில பெற்றோல் நிரப்பு நிலையத்திற்கு முன்னால் உள்ள விஸ்ணுசுந்தரம் கட்டிடத்திற்கு முன்னால் பதுங்கியிருந்த ஒரு இராணுவச் சிப்பாயினால் சுடப்பட்டார். அந்த ஒரு கணத்திலேயே அவரது உடல்,அவரது தந்தை சேதுலிங்கம், பிள்ளைகளின் முன்னாலேயே, சிறிது நேரம் துடிதுடித்தபடி கிடந்து மரணித்தது.!

இந்தக் கொடூரமான படுகொலையை நேரில் பார்த்துப் பதறித் துடித்த கலாமேகனின் தந்தையான சேதுலிங்கம்,இது பற்றிக் கூறும் பொழுது,

“எனது மகன் படுக்கையில் இருந்தும் எழும்பிக் கக்கூசுக்குப் போறதுக்காக வாளியையும் எடுத்துக் கொண்டு,கிணற்றடிப் பக்கமாகப் போகவும் திடீரெனக் கேட்ட துவக்குச் சத்தத்தினால், என்ரை மகன், அலறியபடியே விழுந்து துடித்துக் கொண்டிருந்தான். அந்தச் சத்தத்தைக் கேட்டு நானும் அவரது மூன்று பிள்ளைகளும் ஓடிவந்து பார்த்தபொழுது, சிறிது நேரம் துடிதுடித்துக் கொண்டு, கையையும் காலையும் அடித்தபடியே எங்கடை கண்ணுக்கு முன்னாலேயே அவர் செத்துப் போனார். ஐயோ.. கடவுளே! என்ரை கண்ணுக்கு முன்னாலேயே என்ரை மகன் சாகிறதைப் பார்க்க நான் என்ன பாவம் செய்தனான்.?”

அன்று அவர் எழுப்பிய அவலக் குரல், நிச்சயமாக அந்தச் சிங்கள இனவெறியர்களுக்குக் கேட்டிருக்க முடியாது..!

அதேபோன்று அங்குமிங்குமாக இராணுவத்தினரின் துப்பாக்கிகளில் இருந்து சீறிப் பாய்ந்த குண்டுகள் அந்த நகரத்தையே அதிரவைத்துக் கொண்டிருந்தன. வீடு வீடாகச் சோதனை என்ற பெயரில் அத்து மீறி நுழைந்த இருாணுவத்தினர், வீடுகளுக்குள் பயத்தினால், பதுங்கியிருந்த இளைஞர்களை வெளியே இழுத்துக் கொண்டு வந்து போட்டனர். இப்படியே இழுத்துக் கொண்டு வந்து தெருவில் வீசி எறியப்பட்டவர்களில், பதினொரு அப்பாவி இளைஞர்கள் அவர்களுடைய பெற்றோர்களிகன் முன்னாலேயே வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டனர்!

அதேவேளை, உடுப்பிட்டி நாவலடியில் இராணுவத்தினருக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில், இராணுவ அட்டூழியங்களுக்கும், சித்திரவதைகளுக்கும் காரணமாக இருந்த இராணுவ அதிகாரியான, "மேஜர் ஜோர்ஜ் மென்டிஸ்" கைக்குண்டினால் தாக்கப்பட்டு அந்த இடத்திலேயே கொல்லப்பட்டார்.. இந்தத் தாக்குதலில் சம்பந்தப்பட்ட விடுதலைப் புலிப் போராளியான, லெப்டினென்ற் ஜெயம் எனப்படும், அபிமன்னசிங்கம் சயனைற் அருந்தி சாவைத் தழுவிக் கொண்டான்.

அந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து, வல்வெட்டி, இலக்கணாவத்தை, கம்பர்மலை போன்ற நகரைச் சுற்றியுள்ள கிராமங்களில் இருந்து, இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட சுமார் 45 இளைஞர்கள் கைகள் கட்டப்பட்ட நிலையில் வல்வெட்டித்துறையின் மேற்குப் புறமாக அமைந்துள்ள புனிதமான தீர்த்தக்கேணி அமைந்துள்ள ஊறணியை நோக்கிக் கூட்டி வரப்பட்டார்கள்.

வல்வெட்டித்துறை, பொலிகண்டி, வல்வெட்டி ஆகிய பிரதேசங்களில் உள்ள ஆலயங்களின் தீர்த்தோற்சவம் இச்சமுத்திரத்திலேயே மேற்கொள்ளப்படுவதால் இந்தப் பிரதேசம் புனிதப் பிரதேசமாக விளங்குகின்றது. இத்தகைய புனித பூமியை நோக்கி, வேள்விக்காகப் பலிக்களத்தை நோக்கிக் கூட்டிவரப்படுகின்ற ஆடுகளைப் போன்று கண்கள் பிதுங்கிப் போய் உதடுகள் ஒட்டிய நிலையில், தலையைத் தொங்கப் போட்டபடி, அந்த இளைஞர்கள் நடந்து கொண்டிருந்தனர். அவர்களைச் சுற்றி வர நூற்றுக் கணக்கான இராணுவச் சிப்பாய்கள் ஏ.கே.47 ரக துப்பாக்கிகளை நீட்டிப் பிடித்தபடி நடந்து கொண்டிருந்தனர்.

அந்த உச்சி வெயிலிலும் கூட வல்வெட்டித்துறை நகரம் தூங்கி வழிந்து கொண்டிருந்தது. தெருவில் ஈ, காகம் கூடப் பறக்கவில்லை... பாதையின் இரு மருங்கிலும், வீடுகளிலும் உள்ள தென்னை மரங்களில் இருந்த தேங்காய்கள் ஒன்று கூட மிச்சம் மீதி இல்லாது, பிடுங்கி இளநீரைக் குடித்து வீசி எறிந்துவிட்டுச் சென்று கொண்டிருந்தார்கள்.

ஊறணி தீர்த்தக் கடற்கரைப் பகுதிக்கு அவர்களைக் கூட்டி வந்த இராணுவத்தினர் சுட்டெரிக்கும் தார் போட்ட ரோட்டில் முழங்காலில் குந்தி

இருக்க வைத்துப் பினபுறமாகச் சப்பாத்துக் கால்களால் அடித்துச் சித்திரவதை செய்து கொண்டிருந்தார்கள். சிறிது நேரம் வரை அந்த தகதகக்கும் உச்சி வெயிலில் அவர்களைக் காய விட்ட இராணுவத்தினர், அவர்களில் இருந்து, 25 இளைஞர்களைத் தெரிந்தெடுத்து, ஊறணி ஊற்றில் இருந்து 50 மீற்றர் தொலைவில உள்ள ஊறணி குடியேற்றப் பகுதியில் கடற்கரையோரமாக அமைந்திருந்த படிப்பகக் கட்டிடத்தினுள் தள்ளி உள்ளே விட்டு அதன் கதவுகள் யன்னல்கள் எல்லாவற்றையும் இறுக்கமாகப் பூட்டிவிட்டு, ஒரு கணம் கூடச் சிந்திக்காது, மனிதாபிமானம் என்பதே எள்ளளவும் இல்லாது, அந்தக் கட்டிடத்தைப் பாரிய குண்டு வைத்துத் தகர்த்தனர்... அந்தக் கட்டிடமும் அதற்குள் பூட்டப்பட்டு சிறை வைக்கப்பட்டிருந்த அப்பாவி இளைஞர்களும் மண்ணோடு மண்ணாக மூடப்பட்டுப் போனார்கள்.

ஆம்!...தாங்கள் சாகப்போகின்றோம் என்று தெரியாமலேயே அந்த 25 இளைஞர்களின் உடலும் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டு உருக்குலைந்து போவதை அந்த வெறிபிடித்த சிப்பாய்கள் புதினமாகப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தார்கள்.

ஊறணி குடியேற்ற படிப்பகக் கட்டிடத்திற்கு வைத்த வெடிகுண்டின் ஓசையின் அதிர்வுகள் அங்கிருந்து ஐந்து மைல்களுக்கு அப்பால் கூட உணரப்பட்டதாக, அயலூர் வாசிகள் தெரிவித்தார்கள்..

கட்டிடத்தின் உடைவுகள்!....., நொருங்கிச் சிதறிய தளபாடங்கள்!...... மனித தசைத் துண்டுகள்!..... குருதிக் குவியல்கள்!.....இவற்றைத் தவிர.

அந்தக் குண்டு வெடிப்பில் ஒன்றுமே எஞ்சவில்லை..!

ஊறணி தீர்த்தக் கடற்கரையின் முன்னால் வெயிலில் நிற்பாட்டி வைத்திருந்த மற்றைய 12 அப்பாவிகளையும்.. அவர்களில் ஒரு இளைஞன் வாய் பேசாதவன்.. மூட்டை தூக்கி அன்றாடம் உழைத்து வருபவன். அப்படியே இழுத்துக் கொண்டு, தீர்த்தக்கடற்கரையில் உள்ள பெண்கள் ஆடை மாற்றும் மண்டபத்தில் கைகள் கட்டப்பட்ட நிலையில் முழங்காலில் வரிசையாக இருக்க வைத்துவிட்டு படபட வென்று சுட்டுத் தள்ளினார்கள்.!

1985 ஆம் ஆண்டு மே மாதம் 9 ஆம் திகதி அரச படைகளினால் நிகழ்த்தப்பட்ட "வல்வெட்டித்துறை ஊறணிப் படுகொலைகளானது", ஸ்ரீலங்காவுக்கு, கறைபடிந்த ஒரு வரலாற்றைத் தேடிக் கொடுத்தது. அந்த மிலேச்சத் தனமான படுகொலைகளைத் தொடர்ந்து, ஏற்பட்ட விளைவுகள், இலங்கை இனப் பிரச்சினையில் ஒரு புதிய அத்தியாயத்தைத் தேடிக் கொடுத்தது.! ஆம் அந்த நிகழ்வுகளே, 1986 ஆம் ஆண்டில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் உட்பட ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ விடுதலை இயக்கம்,தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் ஆகிய போராட்ட இயக்கங்களுக்கும், ஸ்ரீலங்கா அரசாங்கத்திற்கும் இடையில் ஆரம்பிக்கப்பட்ட திம்பு பேச்சு வார்த்தைக்கு வழிவகுத்தது. ஆனால் பலத்த

எதிர்பார்ப்புடன் ஆரம்பமான திம்பு பேச்சு வார்த்தையானது எந்த விதமான முடிவையும் எட்டாமலேயே முடிவுக்க வந்தது ..!

ஸ்ரீலங்கா அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், இலங்கை இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வைக் காணவேண்டும் என்று உண்மையாகவே விருப்பத்தைக் கொண்டிருக்கவில்லை என்பதை திம்பு பேச்சு வார்த்தையில் கலந்து கொண்ட ஸ்ரீலங்காவின் அதிகாரமளிக்கப்படாத பிரதிநிதிகளின் போக்கு எடுத்துக் காட்டியது.ஏனெனில் ஒவ்வொரு அமர்வுகளிலும்,ஸ்ரீலங்கா அரசாங்கமே முட்டுக் கட்டைகளை ஏற்படுத்தியதுடன்,ஏற்க முடியாத நிபந்தனைகளையும் முன்வைத்தமையானது, தொடர்ந்தும் இராணுவத் தீர்விலேயே ஸ்ரீலங்கா அரசு நம்பிக்கை வைத்துள்ள மையைக் காட்டுகின்றது.

ஸ்ரீலங்காவின் அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் இத்தகைய பிடிவாதமான போக்குப்பற்றி, 22.02.1987 அன்று புதடில்லியில் நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் மகாநாட்டில்,பேசிய இந்தியப் பிரதமராக இருந்த, ராஜிவ் காந்தி தனது தலைமை உரையில்,

“இலங்கை இனப் பிரச்சினைத் தீர்வுக்கு, அந் நாட்டு ஜனாதிபதி முன்பு தெரிவித்த யோசனைகளில் இருந்தும் பின்வாங்கி, இராணுவ நடவடிக்கைகளில் இறங்கியுள்ளதாகத் தெரிகிறது. தமிழ்ப் போராளிகளுக்கு எதிராக இலங்கை அரச படைகள், மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைகள் இதனை உணர்த்துகின்றன. இந்நடவடிக்கைள் தொடருமானால், இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான எவ்வித சாத்தியக் கூறும் இல்லை. அது மேலும் பிரச்சினையைச் சிக்கலடையவே செய்யும்.”

என்று குறிப்பிட்டதானது, ஸ்ரீலங்காவின் முரட்டுப் பிடிவாதத்தையும், ஒரு குறிப்பிட்ட சிறுபான்மை இனத்திற்கு அடுத்தடுத்துத் துன்பங்களை ஏற்படுத்தி அந்த இனத்தையே வேரோடு அழிப்பதில் முனைப்போடு இருப்பதையும் காட்டுகின்றது.

இவ்வளவு தெளிவான தூரநோக்குடன் சிந்தித்தவரும், இரண்டு புகழ்பெற்ற பிரதமர்களின் வாரிசுமான முன்னாள் பாரதப் பிரதமர் ராஜிவ் காந்தி எவ்வாறு ஜே.ஆரின் வலைக்குள் விழுந்தார் என்பது தான் வியப்புக்குரியது.

1987 ஆம் ஆண்டு மே மாதம், 26 ஆம் திகதி வடமராட்சி மக்களால் மறக்கப்பட முடியாத நாட்கள்... வல்வெட்டித்துறை மக்களில் பலர் உட்பட வடமராட்சி மக்களில் 856 அப்பாவி மக்களை அழித்து ஒழித்தநாள்....

1987 ஆம் ஆண்டு மே மாதம்,26 ஆம் திகதி,அதிகாலையில், திடீரென ஸ்ரீலங்கா அரசாங்கத்தினால் பிரகடனப்படுத்தப்பட்ட யுத்த அறைகூவல், "வடமராட்சி ஒப்பரேசன் லிபரேசன்" அதாவது, வடமராட்சியை விடுவிப்பதற்கான இராணுவ நடவடிக்கை என்ற பெயரில், வடமராட்சி மக்களுக்கெதிராக முடுக்கி விடப்பட்டது. இந்தத் தாக்குதல் மூலம் தான் இலங்கை அரசாங்கம் இஸ்ரேலிய மொசாட் படையினர், பாகிஸ்தான் கூலிப்படையினர், பிரித்தானியாவின் தனியாருக்குச் சொந்தமான "கீனிமீனி" படையினர் ஆகிய பயங்கரவாத அமைப்புக்களுடன் இரகசியமாக வைத்திருந்த தொடர்புகள் அம்பலத்திறகுக் கொண்டு வரப்பட்டது.அன்னிய கூலிப்படையினரின் உதவியுடன் தமிழீழ விடுதலைப் புலிகளின் நிர்வாகக் கட்டுப்பாட்டிற்குள் இருந்த யாழ்ப்பாணத்தை விடுவிப்பது என்ற போர்வையில், முதலாவது நடவடிக்கையாக வடமராட்சியில் தமிழ் மக்களுக்கு எதிரான பாரிய இராணுவ நடவடிக்கையை இலங்கை அரசாங்கம் மிகப் பெரும் எடுப்புடன் மேற்கொண்டது.

இலங்கை வரலாற்றில் முதலாவதும், மிகப் பெரியதும் என விமர்சிக்கப்பட்ட இந்த இராணுவ நடவடிக்கையில், சுமார் 20,000 படையினர்களுடன், 20 உலங்கு வானூர்திகள், 5 பொம்பர் குண்டு வீச்சு விமானங்கள், மற்றும் கடலில் வலம் வந்து கொண்டிருந்த பத்துக்கும் மேற்பட்ட கடற்படைக் கப்பல்களுடன் வடமராட்சியின் மீதான இராணுவ நடவடிக்கை 1987 ஆம் ஆண்டு மே மாதம், 26 ஆம் திகதி அதிகாலையில் இருந்தே ஆரம்பிக்கப்பட்டது. அன்று காலை தாக்குதல்கள் நடை பெற்றுக் கொண்டிருக்கும் பொழுதே காலையில் வடமராட்சி மக்கள் அனைவரையும் கோயில்களிலும், பாடசாலைகளிலும் சென்று பாதுகாப்புக்காகத் தங்கியிருக்குமாறு, எச்சரித்து விமானங்களில் இருந்தும் துண்டுப் பிரசுரங்களைப் போட்ட கையோடு, முப்படைகளினதும் தாக்குதல்கள் ஆலயங்களை நோக்கியும், பாடசாலைகளை நோக்கியும் தொடுக்கப்பட்டன. இந்தத் தாக்குதலில் அல்வாய் முத்துமாரி அம்மன் கோயிலில் தஞ்சமடைந்திருந்த மக்களை அழிப்பதற்காக ஆலயத்தின் மீது அடுத்தடுத்து எறிகணைத் தாக்குதல்கள் மேற்கொண்டதில், அல்வாய முத்துமாரி அம்மன் கோயில் கூரை மீது செல் விழுந்து வெடித்ததில் நூற்றுக்கும் அதிகமான மக்கள் கொல்லப்பட்டனர். வல்வெட்டித்துறையில் இருந்து இராணுவ நடவடிக்கை காரணமாக இடம் பெயர்ந்தவர்களே இந்த ஆலயத்தில் தஞ்சமடைந்திருந்தனர்.

இந்த இராணுவ நடவடிக்கையினால் வல்வெட்டித்துறையில் மட்டும், 390 வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டன... நூற்றுக்கும் அதிகமான மக்கள் கொல்லப்பட்டனர். பல ஆலயங்கள் சேதமாக்கப்பட்டன... சிதம்பரக் கல்லூரி, சிவகுரு வித்தியாலயம் ஆகிய பாடசாலைகள் எரிக்கப்பட்டன. வல்வெட்டித்துறை நகரின் மிகச் சிறந்த நூலகமும், அதனுடன் இணைந்த நகர சபைக்கட்டிடமும் குண்டு வீசித் தாக்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து எரிகுண்டுகள் போடப்பட்டதில், நூல் நிலையத்தில் உள்ள மிகப் பெறுமதியும் பழமையும் வாய்ந்த சுமார் 20,000 க்கும் அதிகமான நூல்கள் மற்றும் நூலகத் தளபாடங்கள் என்பன எரிந்து சாம்பரானது.

இந்த இராணுவ நடவடிக்கை காரணமாக வடமராட்சியில் மட்டும் 856 அப்பாவிகள் துடிக்கத் துடிக்கக் கொல்லப்பட்டனர். இத்தனை அனர்த்தங்களையும் ஏற்படுத்தி பல அப்பாவிப் பொதுமக்களைக் கொன்று குவித்த ஶ்ரீலங்கா அரசு சாதித்தது தான் என்ன?

இலங்கை அரசாங்கத்தினால் மீட்கப்பட்டதாகப் பெருமளவில் பிரச்சாரப்படுத்தி பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழுங்குவதற்கு உதவிகளைச் செய்யுங்கள் என்று உலக நாடுகளிடம் பெருமளவு பணத்தையும் கூடாரம் மற்றும் பாவனைப் பொருட்களையும் சேகரித்துக் கோடிகோடியாகச் சேர்த்தவைகளில் பெரும்பாலானவை தென்னிலங்கை மக்களுக்கே வழுங்கப்பட்டதாக இலங்கை அரசாங்கம் மீது வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களும், ஏனைய பொது அமைப்புக்களும் குற்றம் சுமத்தியதால் அதில் மிகச் சிறிய அளவிலான பொருட்களை வடமராட்சிக்கும் அனுப்பி வைத்தது.!


வடமராட்சியை மீட்டெடுதத வெற்றிக் களிப்பில் ஶ்ரீலங்கா அரசு மூழ்கியிருந்த வேளையில், எவருமே எதிர்பார்க்காத வகையில், வடமராட்சியின் மிகப் பெரிய கல்லூரிகளில் ஒன்றாக விளங்கிய நெல்லியடி மத்திய கல்லூரியில் தங்கியிருந்த ஆயிரக் கணக்கான படையினர் மீது கப்டன் மில்லரின் கரும்புலித் தாக்குதல் இடம் பெற்றது. மில்லரின் கரும்புலித் தாக்குதல் நடைபெற்ற போது வடமராட்சியே அதிர்ந்தது. நெல்லியடியில் இருந்த சுமார் ஐந்து கிலோ மீற்றர் தூரம் வரை ஏற்பட்ட அதிர்வில், பல வீடுகளின் யன்னல் கண்ணாடிகள் உடைந்து நொருங்கின... அன்று தான் முதன் முதலில் புலிகளின் கரும்புலித் தாக்குதல் இடம்பெற்று நூற்றுக்கும் அதிகமான படையினர் கொல்லப்பட்ட பொழுது, ஶ்ரீலங்கா அரசு ஆட்டம் காணத் தொடங்கியது.


அதன் விளைவு..!

இந்திய அரசு நிவாரணம் என்ற போர்வையில் இலங்கை அரசின் அனுமதியின்றியே 1987ஆம் ஆண்டு ஒக்ரோபர் 4 ஆம் திகதியன்று திடீரென வானத்தில் பூமழை பொழிந்தது போல், “பூமழை நடவடிக்கை” (Operation Poomalai) என்ற பெயரில் இந்திய விமானப் படையின் ஐந்து அன்ரனோவ்-AN-32 விமானங்களில் இருந்து, சுமார் 25 தொன் நிறையுள்ள பல உணவுப் பொட்டலங்கள் வடமராட்சி எங்கும் வீசப்பட்டன... இந்திய அரசு வடக்கில் அத்து மீறி உணவுப் பொட்டலங்களை வீசியதுடன், பல இலட்சக்கணக்கான இந்திய இராணுவத்தினரைக் கொண்டு வந்து குவித்தது. அதுவே இலங்கையின் இறைமையைப் பறித்ததுடன், இலங்கையின் அசியல் மற்றும்

இராணுவ மேலாதிக்கம், இந்திய வல்லாதிக்கத்தின் கைக்குள் மாற்றப்பட்டும் விட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் எதிர்ப்புக்களுக்கு முகம் கொடுக்க முடியாத நிலையில், ஜே.ஆரின் தர்மிஸ்ட அரசு.இந்தியாவின் உதவியை நாடியது. அதன் விளைவு தான் "இந்திய இலங்கை ஒப்பந்தம்". ஸ்ரீலங்கா ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவுக்கும், இந்தியப்பிரதமர் ராஜிவ் காந்திக்கும் இடையில் இடம்பெற்ற ஒரு தலைப்பட்சமான இந்திய-இலங்கை ஒப்பந்தம் கொழும்பில் வைத்துக் கைச்சாத்திடுவதற்காக கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வந்திறங்கியபோது அணிவகுப்பு மரியாதையை வழங்குவதற்காக நின்ற கடற்படையினரில் ஒருவனான "வீரமுனி" என்பவன், ராஜிவ் காந்தியைத் தன்னிடம் இருந்த றைபிள் துப்பாக்கியினால், தாக்கியபோது மயிரிழையில் தப்பிய அவமானத்தையும் பொருட்படுத்தாது, இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் 1987ஆம் ஆண்டு ஜூலை 29 ஆம் திகதி கைச்சாத்திட்டார்.





ஸ்ரீலங்காவுக்கு வருகை தந்த பிரதமர் மீது கடற்படைச் சிப்பாய் தாக்குதல்

ராஜிவ் காந்தி, ஜே. ஆருடன் ஒப்பந்தம் செய்யும் போது..

அதனைத் தொடர்ந்து, இந்திய அமைதி காக்கும் படை என்ற பெயரில் இந்திய இராணுவத்தினர் இலங்கைக்குள் குறிப்பாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஊடுருவுவதற்கான வாய்ப்பை ஸ்ரீலங்கா அரசு எற்படுத்திக் கொடுத்தது இலங்கையின்வடக்கு கிழக்குப் பகுதியெங்கும் பல இலட்சக்கணக்கான இந்திய இராணுவத்தினர் இலங்கை அரசுக்கே எண்ணிக்கை தெரியாத அளவுக்குக் குவிக்கப்பட்டனர்... தமிழ் மக்களுக்கு உதவுவது போல் வந்தவர்கள், தமது படையணிகளில் ஆரம்பத்தில் சென்னை றெஜிமென்ற் படைப்பிரிவையே (Madras Rejiment) இங்கு கொண்டு வந்து தமிழ் மக்களின் நம்பிக்கையைப் பெறுவதற்கான முயற்சியை மேற்கொண்டனர்... அதே வேளை பலாலியில் இருந்து யாழ்ப்பாணம் வந்து கொண்டிருக்கும் பொழுது, தமது பவல் கவச

வாகனங்களில் புலிகொடிகளைக் கட்டியபடி பவனிவந்து, தமிழ் மக்களின் நம்பிக்கையைப் பெற முனைந்தனர்.

பின்னர் படிப்படியாக சீக்கிய றெஜிமென்ற் படைப்பிரிவினரின் எண்ணிக்கையை அதிகரித்து, தமிழக இராணுவத்தினரின் எண்ணிக்கையைக் குறைத்துக் கொண்டு வந்தனர். வடக்கு கிழக்கில் குவிக்கப்பட்ட பல இலட்சக்கணக்கான, சீக்கிய இராணுவத்தினர் தமிழ் மக்களுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபடத் தொடங்கினர். அதன் விளைவாக.....

நூற்றுக் கணக்கான இந்து ஆலயங்கள் எரிக்கப்பட்டன.....!
சைவக் குருமார் கொல்லப்பட்டும், இம்சிக்கப்பட்டும் அவமானப்படுத்தப்பட்டனர்...!
சுமார் 35,000 தமிழ் பொது மக்கள் வரை படுகொலை செய்யப்பட்டனர்!
யாழ்ப்பாண அரசினர் வைத்தியசாலையில் 1987 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம், 22 ஆம்திகதி பல வைத்திய நிபுணர்கள், தாதிகள், நோயாளிகள் என சுமார் எழுபதுக்கும் அதிகமானோர் வார்டுகளிலும் வைத்தியசாலைக்குள்ளும் வைத்து வெட்டியும், சுட்டும் கொல்லப்பட்டனர்.!
யாழ்ப்பாண வைத்திய சாலையின் வாட்டுக்களையெல்லாம் சின்னாபின்னப்படுத்தி அழித்தனர்!
நூற்றுக்கும் அதிகமான தமிழ் பெண்கள் இந்தியச் சிப்பாய்களினால் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டனர்..!
குழந்தைகள் பெரியவர்கள் என்ற வேறுபாடுகள் இல்லாமல் பல ஆயிரக்கணககானவர்கள் படுகாயங்களுக்கு உள்ளாக்கப்பட்டு, ஏதாவது ஒரு அவயவத்தை இழந்து துடித்தனர்..!
பல கோடிக் கணக்கான ரூபா பெறுமதியான சொத்துக்கள் நாசமாக்கப்பட்டன.!
பல இலட்சக் கணக்கான ரூபா பெறுமதியான விவசாய உற்பத்திப் பொருட்கள் எரியூட்டப்பட்டன.

வடக்கு கிழக்கில் சீக்கியச் சிப்பாய்களின் வெறியாட்டமானது, இந்து-சீக்கிய வேற்றுமையின் வெளிப்படு தன்மையை உணர்த்தியது...! அப்போது இந்தியப் பிரதமராக இருந்த இந்திரா காந்தியினால் சீக்கிய தீவிரவாதிகள் அமிர்தசரஸ் பொற்கோயிலில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டதற்கு தமிழ் நாட்டில் எதுவுமே செய்யமுடியாமையின் பிரதிபலிப்பு, தமிழர் தாயகமான வடக்கு கிழக்கில் இத்தகைய ஒரு வெறியாட்டத்திற்குத் தூண்டுதலாக இருந்ததாக ஆய்வாளர்களினால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை சீக்கியச் சிப்பாய்கள் மிகமோசமாக மேற்கொண்டு அழிவை ஏற்படுத்திய வகையில் அவர்கள் இரண்டு விடயங்களைச் சாதிக்க முயன்று வெற்றியும்

பெற்றனர். அவற்றில் ஒன்றாக, இந்துக்கள் மீது தமக்குள்ள காழ்ப்புணர்வை வெளிக்காட்டியமை, மற்றையது, தம்மைப் பழிவாங்கிய இந்திரா காந்தியின் மகன் ராஜிவ் காந்தியின் மீது தமிழக மக்கள் மத்தியில் அபகீர்த்தியை ஏற்படுத்தி நேருவின் குடும்ப ஆட்சியை ஒழிப்பது. அதில் சீக்கியர்கள் ஓரளவு வெற்றியை அடைந்துள்ளார்கள் என்றுதான்கூறவேண்டும்.

இந்தக் கால கட்டத்தில் தான், வல்வெட்டித்தறையில் இயங்கிய பிரஜைகள் குழு வல்வை மக்களின் மன உறுதிப்பாட்டை பேணியதுடன், இந்திய இராணுவத்தினரின் கெடுபிடிகளில் இருந்தும் மக்களைக் காப்பாற்றியது...!

இந்திய இராணுவத்தினருடன் சேர்ந்து இயங்கிய ஒட்டுக் குழுக்கள் ஊடாக, வல்வெட்டித்துறை பிரஜைகள் குழு உறுப்பினர்களுக்கு எதிரான கொலைப் பயமுறுத்தல்கள் தொடர்ச்சியாக விடுக்கப்பட்டுக் கொண்டிருந்ததால், பிரஜைகள் குழுவின் உறுப்பினர்கள் எவரையும் வடமராட்சிக்கு வெளியே செல்லவேண்டாம் என்று வடமராட்சிப் பொறுப்பாளர் தீபன் மற்றும் ஜேம்ஸ் ஆகியோர் அறிவுறுத்தியதால் நாங்கள் முடிந்தவரை வடமராட்சியை விட்டு வெளியே செல்வதைத் தவிர்த்தக் கொண்டோம்.

ஆனால் துரதிர்ஸ்ட வசமாக வடமராட்சியை விட்டு,தெல்லிப்பழையில் உள்ள தனது அச்சுக் கூடத்தைப்பார்த்து வருவதற்காக எவருக்கும் தெரிவிக்காமலேயே புறப்பட்ட பிரஜைகள் குழவின் உறுப்பினராக இருந்த மயிலியதனையில் இருக்கும் விஜயகுமார், இடைவெளியில் வைத்தே சுட்டுக் கொல்லப்பட்ட அந்தத் துயரமான சம்பவம் எங்கள் ஒவ்வொருவரின் மனதையும் மிக மோசமாகப் பாதித்துவிட்டது... கூடவே பயமும் பிடித்துக் கொண்டது.

எமது மக்களில் பலர், இந்தியப்படைகளின் இராணுவ நடவடிக்கைகளைக் காரணம் காட்டி பிரஜைகள் குழவின் சிபார்சுக் கடிதத்தைக் காட்டி நாட்டை விட்டு வெளியேறிக் கொண்டிருந்தார்கள். அதே போன்று நாங்கள் நினைத்திருந்தால், 1989 ஆம் ஆண்டே அரசியல் புகலிடம் தேடி ஐக்கிய இராட்சியத்திற்கோ அல்லது கனடாவுக்கோ அல்லது வேறு எந்த ஒரு ஐரோப்பிய நாட்டிற்கோ ஓடியிருக்கலாம். அங்கே மிகுந்த செல்வச் செழிப்புடன் கூட வாழ்ந்துமிருக்கலாம்.

இந்தச் சமுக விரோதக் குழக்களுக்குப் பயந்து எங்களை நம்பியிருக்கின்ற இந்த மக்களை விட்டுப் போகமுடியாது, என்பதில் நாங்கள் உறுதியாக இருந்ததால், இந்திய இராணுவம் எங்களுடைய மண்ணை விட்டு வெளியேறும் வரையில் நாங்களும் பல்வேறு அச்சுறுத்தல்கள், கொலை மிரட்டல்களின் மத்தியிலும், கடைசி மட்டும் இந்த மண்ணிலேயே வாழ்ந்தோம் என்பதை நினைக்கும் பொழுது பெருமையாகவும் இருக்கின்றது.

இந்திய அமைதி காக்கும் படை என்ற பெயரில் இங்கு வந்தவுடன் யாழ்ப்பாணம் பொது வைத்தியசாலையில் மேற்கொண்ட படுகொலைகள், அராஜகம் போன்று அதே பாணியில், வல்வெட்டித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையிலும் மேற்கொள்ளப்பட்ட அடாவடித்தனங்கள் கூட சகல வெளிநாட்டு ஊடகங்களிலும், வரத் தொடங்கியதும் இந்திய அரசின் கையாலாகத் தனத்தை உலகம் அறிந்து கொண்டது.

1988 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26 ஆம் திகதி வல்வெட்டித்துறையில் இந்திய இராணுவத்தினர், தேடுதல் நடவடிக்கைகள் என்ற பெயரில் "மிகப் பாரிய இராணுவ சுற்றிவளைப்பு" நடவடிக்கையை வல்வெட்டித்துறை மக்களுக்கு எதிராகவே மேற்கொண்டனர். அன்றும், நூற்றுக்கும் அதிகமான அப்பாவிப் பொதுமக்கள் குறிப்பாக வயோதிபர்கள், பெண்கள், அரசாங்க அலுவலர்கள் என்ற வேறுபாடுகள் இன்றி எழுந்தமானமாகக் கைது செய்யப்பட்டு காங்கேசன்துறையில் இந்திய இராணுவத்தினரால் அமைக்கப்பட்டிரந்த, புனர்வாழ்வு முகாம் என்ற பெயரில் இயங்கிய "சித்திரவதை முகாமுக்குக்" கொண்டு செல்லப்பட்டு இங்கு சுமார் இரண்டு மாதங்கள் வரை சித்திரவதை செய்யப்பட்டனர்...! இதிலும் அவர்களை விடுவிக்கும் முயற்சியில், வல்வைப் பிரஜைகள் குழவினரும், தமிழீழ மக்கள் மன்றத் தலைவராக வீரமுடன் செயற்பட்ட க.சிவானந்தசுந்தரம் ஐயாவும், நேரடியாக அப்போதைய இந்தியத் தூதுவராக இருந்த J.N..டிக்சிற் அவர்களுடன் கலந்தரையாடியதைத் தொடர்ந்து, அவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

வல்வெட்டித்துறையின் அந்தக் காயம் ஆறுவதற்கு முன்னராகவே, 1989 ஆண்டு ஜனவரி மாதம், 19 ஆம்திகதி, இந்தியப் படையினரின் தாக்குதல்கள் வல்வெட்டித்துறை மக்கள் மீது மீண்டும் முடுக்கி விடப்பட்டது.

அன்று கலையில் இருந்து வல்வெட்டித்தறையைச் சுற்றி வளைத்த இந்திய இராணுவத்தினர், வீடுகளில் இருந்தவர்கள் மீதும், தெருவில் நின்றவர்கள் மீதும் கண்மூடித்தனமான தாக்குதல்களை மேற் கொண்டனர். அவர்கள் மோசமான தாக்குதலை மேற்கொண்டிருந்த வேளையில் தனது அலுவலகத்தில் இருந்து திரும்பிக் கொண்டிருந்த கிராம சேவகரான துரைராசா கணபதிப்பிள்ளையை வழிமறித்த இராணுவத்தினரை நோக்கி, தான் ஒரு கிராம சேவகர் என்று கூறியபோதும்,அவரைக் கீழே தள்ளி விழுத்திக் கால்களாலும், தடிகளாலும் அடித்துக் காயப்படுத்தினர். வல்வெட்டித்துறை சந்தியில் இருந்து, நெடியகாடு வழியாக தெருவில் வந்து கொண்டிருந்தவர்கள் மீதெல்லாம் தாக்குதலை மேற் கொண்டபடி, வல்வெட்டித்துறை அரசினர் வைத்திய சாலையை நோக்கிச் சென்றனர். அன்று நடைபெற்ற இராணுவத் தாக்குதலுக்கு பொலிகண்டி இந்திய இராணுவ முகாம் பொறுப்பதிகாரியான கப்டன் மேனன் தலைமை தாங்கினார்.

வைத்தியசாலைக்குள் நுழைந்த இராணுவக் கும்பல் அங்கு கடமையாற்றிய வைத்தியர்களையும், தாதிகளையும், ஊழியர்களையும், தங்கிச் சிகிச்சை பெற்ற நோயாளர்களையும் அடித்துக் காயப்படுத்தினர்.

உலகில் எங்குமே, நடந்திருக்க முடியாத, நினைத்துப் பார்க்க முடியாத, கொடுமைகளையும், சித்திர வதைகளையும் வல்வெட்டித்துறையில் செய்து முடித்திருக்கின்றது.! இந்திய இராணுவத்தினரின் மிலேச்சத்தனமான தாக்குதலால் ஊறணி வைத்தியசாலை காயப்பட்டவர்களால் நிரம்பி வழிந்தது.... வைத்தியசாலையின் வாட்டுக்களில் (Wards) உள்ள கட்டில்களில் மட்டுமல்லாது, எந்த நிலப் பகுதியைப் பார்த்தாலும் அங்கே காயப்பட்ட அப்பாவிகளின் முனகல் சத்தங்களால் வைத்தியசாலை என்ற சூழலையே மாற்றியமைத்துக் கொண்டிருந்தது.

அந்தச் சம்பவம் பற்றி வல்வெட்டித்துறைப் பிரஜைகள் குழுவின் சார்பில் நானும், செல்வேந்திராவும், உடனடியாக அவருடைய காரிலேயே சென்று, யாக்கரை முகாமில் இருந்த பிரிகேடியர் சமேராம் என்பவரைச் சந்தித்து, இது தொடர்பான முறைப்பாட்டைத் தெரிவித்து, உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டதுடன் இந்தியப் பிரதமர், இந்தியத் தூதுவர் ஜே.என்.டிக்சிற், இந்திய இராணுவத் தளபதி திபேந்தர் சிங் ஆகியோருக்கும், சர்வதேச மன்னிப்புச் சபை மற்றும் ஐக்கிய நாடுகள் அமைப்பின் பிரதிநிதிகளுக்கும் கடிதங்கள் கையளிக்கப்பட்டன... பிரஜைகள் குழுவினரின் கோரிக்கையைத் தவிர்க்க முடியாத பிறிகேடியர் சமேராம் சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு வருகை தந்து பாதிக்கப்பட்ட மக்களையும் பார்வையிட்டு அதிர்ச்சி அடைந்தார். இந்தத் தாக்குதல்களுக் கெல்லாம் காரணமான, பொலிகண்டி இராணுவ முகாம் பொறுப்பதிகாரியான கப்டன் மேனனை. உடனடியாக அங்கு வருமாறு தகவல் அனுப்பியதுடன் அவரும் வந்து சேர்ந்து விட்டார். அங்கே நுழைந்ததும், பிறிகேடியரை நோக்கி, “சல்யுற்“ அடித்துவிட்டுத், தனது தொப்பியைக் கழற்றியதும், எங்களைக் கண்டதும், அவருடைய முகம் கறுத்துப் போனதுடன் மிரண்ட நிலையிலும் இருந்ததை அவதானிக்க முடிந்தது. அந்தச் சம்பவம் தொடர்பான விசாரணையை வைத்தியசாலையின் மாவட்ட வைத்திய அதிகாரியின் அலுவலகத்தில் பிறிகேடியர் சமேராம் மேற்கொண்டபொழுது, வைத்திய சாலையில் நடந்த தாக்குதல் தொடர்பாகவும், தெரு வீதிகளில் நடைபெற்ற தாக்குதல்கள் தொடர்பாகவும் மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர். பத்மலோசினி மற்றும் பிரஜைகள் குழுவின் தலைவர் ச.செல்வேந்திரா, செயலாளரான நானும் மற்றும் சிலரும் அன்று நடைபெற்ற சம்பவங்கள் பற்றி எவ்வித அச்சமும் இல்லாது தெளிவு படுத்தியபோது, கப்டன் மேனன் எவ்விதமான பதிலையும் கூறமுடியாத நிலையில், தலை குனிந்த படி நின்றார். அந்தச்சம்பவத்தால் நிலை குலைந்து போன பிறிகேடியர் சமேராம் இது பற்றிக் குறிப்பிடுகையில்,

"எமது ஜவான்கள் இந்த மக்கள் மீது மேற்கொண்ட தாக்குதலால் எமது நாட்டுக்கு ஏற்பட்ட களங்கத்தை மாற்றமுடியாது... அதற்காக நான் மனம் வருந்துகின்றேன்... எதிர்காலத்தில் இவ்வாறு எந்தச் சம்பவமம் நடைபெறாது. இதில் சம்பந்தப்பட்டவர்கள் மீது நாங்கள் இராணுவச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுப்போம். இதில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நஸ்ட ஈடு பெற்றுத் தர நடவடிக்கை எடுக்கப்படும்"

என்று குறிப்பிட்ட பிறிகேடியர், பிரஜைகள் குழவினரை மன்னிப்புக் கேட்குமாறு உத்தரவிட்டதும் அங்கே நின்ற எங்கள் முன்னிலையில் கப்டன் மேனன் மன்னிப்பைக் கோரியதும், நான், பிறிகேடியரை நோக்கி,

"அவர் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நாங்கள் கோரவில்லை... ஆனால் இது போன்ற தாக்குதல்கள் எதிர்காலத்தில் நடைபெறாது பார்த்துக் கொண்டால் போதும்." என்று குறிப்பிட்டதும், அந்த இடத்தை விட்டு எல்லோரும் அகன்று விட்டனர்.

ஆனால் அடிபட்ட புலி ஆளைக் கொல்லாது விடாது என்பது போல், அந்தச் சம்பவத்தை கப்டன் மேனன் மறந்து விடவில்லை என்பதை ஆகஸ்ற் மாதம் 2ஆம், 3ஆம், 4ஆம் மாதங்களில் இந்திய இராணுவத்தினரின் இறுதிப் போராக வல்வெட்டித்துறையில் மீண்டும் மேற்கொள்ளப்பட்ட உலகையே அதிர்ச்சிக்குள்ளாக்கியதுடன், வரலாற்றில் இந்திய அரசுக்குக் களங்கத்தை ஏற்படுத்திய "வல்வைப் படுகொலைகள்" தாக்குதல்கள் இடம்பெற்றது. இந்த மிலேச்சத் தனமான சம்பவங்கள் உலக பத்திரிகைகள், இணையத் தளங்கள் என்பவற்றிலும், வல்வைப் படுகொலைகள் என்ற பெயரில் தமிழிலும், "India's Mylai" என்று ஆங்கிலத்திலும் என்னால் எழுதப்பட்டு அழகிய நூல்களாக படங்களுடன் வெளிவந்த போது இந்திய அரசினால் அதற்கான நியாயங்களைக் கூற முடியாது போய்விட்டது.

அதன் விளைவு..! இலங்கையில் இருந்து இந்திய இராணுவம் பெருத்த ஏமாற்றத்துடனும், அவமானத்துடனும் திருப்பி அனுப்பப்பட்டது.!

இன்று வல்வெட்டித்துறையின் மீதும், அங்கு வாழ்ந்து வருகின்ற மக்கள் மீதும், ஸ்ரீலங்கா அரசு கொடுத்த புயல் வேகத் தாக்குதலின் விளைவை நாளை ஸ்ரீலங்கா அரசும் அனுபவிக்கப் போவதும் தவிர்க்க முடியாதது.!

வல்வெட்டித்துறையின் மீதான சில பாரிய இராணுவ நடவடிக்கைகள:


| பாதிக்கப்பட்ட பிரதேசங்கள் | ஆண்டு | கொல்லப்பட்ட பொது மக்கள் |
|---|---|---|
| வல்வை சனசமூக நிலையத்தில் நின்ற மக்கள் மீதான தாக்குதல் | 1967 | 01 |
| ஆதிகோயிலடி மக்கள் மீதான தாக்குதல்கள் | 1983 | 01 |
| வல்வெட்டித்துறை நெடியகாடு சுற்றி வளைப்புத் தாக்குதல் | 1984 | 32 |
| வல்வெட்டித்துறை ஊறணிப் படுகொலைகள் | 1985 | 39 |
| வடமாராட்சி ஒப்பரேசன் லிபரேசன் | 1987 | 856 |
| வல்வைப்படுகொலைகள் (இந்திய இராணுவம் ) | 1989 | 76 |
| ஒப்பரேசன் வல்வைப் புயல் | 1991 | 10 |
| | | |

❖ இவற்றை விட அவ்வப்போது இடம் பெற்ற தாக்குதல்கள் விமானக் குண்டு வீச்சுக்களிலும் செல்தாக்குதல்களிலும், கடற்படையினரின் தாக்குதல்களிலும் நூற்றுக்கணக்கான வீடுகள் நிர்மூலமாக்கப்பட்டதுடன், சுமார் 98 க்கும் மேற்பட்ட பொது மக்களும் கொல்லப்பட்டனர்.

# 16.கிறிஸ்தவ தேவாலயத்தின் மீதும் தாக்குதல்

சின்னஞ் சிறிய கடலோரக் கிராமமான வல்வெட்டித்துறை நகரத்தின் மீது முதல் நாள் 93 குண்டுகள்.... இரண்டாம் நாள் 76 குண்டுகள்..... மூன்றாம் நகள் 86 குண்டுகள்... நான்காம் நாள் 102 குண்டுகள்..... இப்படி முன்னூறுக்கும் மேற்பட்ட குண்டு மழையால் செயலிழந்து உருக்குலைந்து போன வல்வையை மீட்டெடுக்கவும் காப்பாற்றவும், கடவுள் தான் புதிய அவதாரம் எடுத்து வரவேண்டும்.... வை-12 விமானங்களில் இருந்து போடப்பட்ட ஒவ்வொரு குண்டுகளும் பாரிய குழிகளை ஆங்காங்கே ஏற்படுத்தியிருந்தன..... சில குழிகளில் தண்ணீர் சீறிப்பாய்ந்து கொண்டிருந்தது....

முதல் நாள் 3.45 மணியளவில் போடப்பட்ட குண்டுகளில், வல்வெட்டித்துறைச் சந்தியில் இருந்து 50 மீற்றர் துாரத்தில் பருத்தித்துறை வீதியில் உள்ள புனித செபஸ்தியார் தேவாலயத்தை நோக்கிவை-12 விமானத்தில் இருந்தும் போடப்பட்ட பாரிய குண்டு தேவாலயத்தின் முன்னால் விழுந்து வெடித்ததில் சுமார் ஆறு அடி ஆழமுள்ள பெரிய குழி ஒன்று ஏற்பட்டிருந்தது. ஆதில் இருந்து வெடித்துச் சிதறிய துண்டுகள் தேவாலயத்தின் பலிபீடம், நற்கருணைப் பாத்திரம்,திருச் சொரூபம், கொடிக் கம்பம்,திருச் சொரூபம் பவனிவரும் கூடு மற்றும் ஆலயத்தின் கூரை ஓடுகள், கண்ணாடிகள், மின்குமிழ்கள் தளபாடங்கள் ஆகியவற்றைச் சேதமாக்கியது. வெளியே விழுந்து வெடித்த குண்டின் சிதறல்களே இவ்வளவு சேதத்தை ஏற்படுத்தியுள்ள நிலையில் அந்தக் குண்டு தேவாலயத்தின் மீதே விழுந்து வெடித்திருந்தால் இந்த தேவாலயத்தின் நிலை என்னவாகியிருக்கும்... நல்ல வேளையாக அந்த செபஸ்தியார் ஆண்டவரின் கருணையை நினைத்துக் கண்ணீர் விட்டேன்.



பழமை வாய்ந்த புனித செபஸ்தியார் தேவாலயம்

ஆலயத்தின் உள்ளே செபம் செய்யும் மண்டபத்தின் தரைகள் எங்கும், ஓட்டுச் சிதறல்களும், கண்ணாடித் துண்டுகளுமாக கால் பாதங்களைக் கீழே வைக்கமுடியாமல் இருந்தது.... ஆலயத்தினுள் வெறுங்காலுடன் சென்றதால், கால்பாதங்களை கண்ணாடித் துண்டுகள் காயப்படுத்த அதில் இருந்தும் இரத்தம் கசிந்து கொண்டிருந்தது...... உள்ளே சென்ற எனக்கு, அங்கே கண்ட காட்சி ஆச்சரியத்தைக் கொடுத்தது..... ஆலயத்தினுள் நின்று செபம் செய்து கொண்டிருந்த அன்றூ ரஞ்சிதன் என்ற சிறுவன், பலி பீடத்தையே வெறித்துப் பார்த்தபடி நின்றான். நான் அவனுக்கருகில் சென்று அவனது தோளைத் தடவியபடியே,

"ரஞ்சிதன்... ஆண்டவரிடம், என்ன கேட்கின்றாய். இந்த அளவுக்காவது எங்களை உயிரோடு விட்டு வைத்திருக்கின்றதற்கு அந்த ஆண்டவருக்கு நன்றி சொல்கின்றாயா?." அவனைப் பார்த்துப் பரிவோடு கேட்டேன்."

" சேர்.! பாவிகளுக்காகக் கர்த்தர் சிலுவையைச் சுமந்து சென்று, மற்றவர்களின் துன்பங்களைத் தானே ஏற்றுக் கொண்டார். இன்று எங்களுடைய ஆண்டவர் பாவிகளின் குண்டைத் தன் தலைமீது தாங்கி எங்களைக் காத்திருக்கின்றார்."

என்னை எதிர்பாராத வகையில், திடீரெனக் கண்டதும், எழுந்து நின்ற ரஞ்சிதன், மேலும் எதையோ சொல்லத் துடித்தாலும், துக்கம் அவன் தொண்டையை அடைத்துக் கொண்டதோ என்னவோ, போசமல் கண்களை மூடியபடியே நின்றான்...

அன்ரூ ரஞ்சிதனின் தந்தை கடற்படை அலுவலகத்தில் வேலை செய்து இளைப்பாறி தற்பொழுது தமது வீட்டிலேயே வாழ்ந்து வருகின்றார். அவனது தாயும் தந்தையும் உண்மையான கிறிதவ வாழ்க்கையை மேற்கொண்டு, கர்த்தருக்கு விசுவாசமாக வாழ்ந்து வருபவர்கள். அவ்வாறான தூய வாழ்க்கையை வாழ்ந்து வருகின்ற அவர்களுக்குக் கூட ஆண்டவர் சோதனை மேல்சோதனையைக் கொடுத்து ஆற்ற முடியாத துயரத்தையுமல்லவா கொடுத்திருக்கின்றார்.!

வேறு எந்த ஒரு கிராமத்திலோ அல்லது திருக்கோணமலை, மட்டக்களப்பு, கொழும்பு போன்ற இடங்களிலோ, இராணுவத்திற்கு எதிரான தாக்குதல்கள் நடந்தால் போதும், உடனடியாக அதன் பிரதிபலிப்பை வல்வெட்டித்துறையில் தான் அனுபவிக்கமுடியும். வேறு எங்காவது தாக்குதல்கள் நடந்த மறு கணமே, வல்வெட்டித்துறையின் மீதுதான் விமானத் தாக்குதல்களையும் பலாலியில் இருந்து செல் தாக்குதல்களையும் கண்மூடித்தனமாக மேற்கொண்டு வல்வெட்டித்துறையையே

சின்னாபின்னப்படுத்தி விடுவார்கள்.... இந்தத் தாக்குதல்களில் எத்தனை பேர் கொல்லப்பட்டார்கள், எத்தனை பேர் அங்கங்களை இழந்துள்ளனர் என்பதைப் பற்றி யாருமே கவலைப்படுவதில்லை....!

1986 ஆம் ஆண்டு வல்வெட்டித்துறையின் மீது இப்படித் தான் திடீரென்று ஒருநாள் யாருமே எதிர்பார்த்திருக்காத வகையில் விமானங்களில் இருந்து குண்டுகள் வீசப்பட்டதுடன், பலாலியில் இருந்தும் எறிகணைத் தாக்கதல்கள் கண்மூடித்தனமாக மேற்கொள்ளப்பட்டன. வல்வெட்டித்துறை நெடியகாடு வீதியில் துவிச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருந்த ரஞ்சிதனின் மூத்த சகோதரியும், அண்ணனும் மேற்கொள்ளப்பட்ட விமானக் குண்டு வீச்சினால் தலை சிதறி அந்த இடத்திலேயே பலியாகிய சம்பவத்தை அவனால் எப்படி மறக்க முடியும்?........ அன்று நடைபெற்ற இறுதி ஊர்வலத்தில், இரண்டு சகோதரர்களினதும் பாடைகள் எடுத்துச் செல்லப்பட்ட பொழுது, அன்று அந்த ஊரே அழுததை என்னால் இன்றும் மறக்க முடியவில்லை. அதற்கு மேலும் நான் ஏதாவது கதைத்தால், அவன் வாய்விட்டே அழுதுவிடுவான் என்று பயந்த நிலையில், அவனுடன் பேச்சுக் கொடுக்க விரும்பாது, அவனை ஆறுதல் படுத்தி விட்டு அந்த ஆலயத்தை விட்டு வெளியேறினேன்.

புனித செபஸ்தியார் ஆலயத்தின் வருடாந்த திருநாளின் நிறைவு நாள், அன்று காலை தான் மிக அமைதியாகவும், ஆடம்பரமின்றியும் முடிவடைந் திருந்தது. இந்த ஆலயம் சக்கோட்டை பரிஸ் பங்குத் தந்தையின் பரிபாலனத்திற்குள் வருவதால், வருடாந்த திருநாள் மற்றும் சிறப்புப் பூசை வழிபாடுகளில், சக்கோட்டை, பொலிகண்டி ஆகிய இடங்களில் இருந்தும் கிறிஸ்தவ மக்கள் எல்லோரும் வருகை தருவார்கள்.புனித செபஸ்தியார் தேவாலயத்தின் முன்னால் விழுந்த அந்தப் பாரிய குண்டு, நான்கு மணித்தியாலத்திற்கு முன்னராகவே போடப்பட்டிருந்தால், சுமார் 100 பேராவது ஆலயத்திற்குள் வைத்தே கொல்லப்பட்டிருப்பார்கள்...!


இந்தக் குண்டின் தாக்கம், அதன் அருகில் உள்ள கிராம சேவையாளர் துரைராசா கணபதிப்பிள்ளையின் வீட்டையும், முற்றாகவே நிர்மூலமாகிக்யிருந்தது.

புனித செபஸ்தியார் தேவாலயச் சூழலை விட்டு வெளியேறி வல்வெட்டித்துறைச் சந்தைக் கட்டிடத்தின் முன்னால் போய் நின்றேன். தேவாலயத்தின் முன்பாக உள்ள மரக்கறிச் சந்தைக் கட்டிடம், முற்றாகவே தரை மட்டமாக்கப்பட்டிருந்தது... நவீன சந்தைக் கட்டிடத்தின் எல்லாக் கடைகளினதும், பாரிய இரும்பக் கதவுகள் குண்டுகளின் அகோரத் தாக்குதல்களினால்,உடைந்தும் வளைந்தும் சின்னாபின்னப்படுத்தப் பட்டிருந்தன.

இந்தக் கட்டிடத்தின் மேல்மாடியில், மேற்குப் பகுதியில்,உள்ள கட்டிடப் பகுதியில், வல்வெட்டித்துறை பொது நூலகமும், அதன் கிழக்குப் பகுதியில், நகர சபை அலுவலகக் கட்டிடமும் இயங்கி வந்தபொழுது, 1987 ஆம் ஆண்டு

ஸ்ரீலங்கா படையினரால், குண்டுகள் போட்டுத் தாக்கி அழிக்கப்பட்டன... பின்னர், அதில் கீழ்ப்புறமாக உள்ள வர்த்தக நிலையங்கள் மீண்டும் புனரமைக்கப்பட்டிருந்தன. மீண்டும் 1989 ஆம் ஆண்டில், இந்தியப்படையினரால் எரிக்கப்பட்டது..!

"விழ விழ எழுவோம்" என்பதற்கு இணங்க அதில் உள்ள கடைகள் மீண்டும் புனரமைத்து இயங்கிய பொழுதே வல்வெட்டித்துறையின் மீதான அன்றைய தாக்குதலிலும் பொது நூலகம், நகர சபைக் கட்டிடம் மற்றும் வர்த்தக நிலையங்கள் சேதமாக்கப்பட்டன.



எரிகுண்டுகளின் வீச்சினால் சிதைக்கப்பட்ட நவீன சந்தைக் கட்டிடமும், நகராட்சி மன்றத்தின் எரிக்கப்பட்ட பொது நூலகமும், பெறுமதி வாய்ந்த நூல்களும்.

நவீன சந்தைக் கட்டிடத்தையும் கடந்து, சந்தியில் வந்து நின்று அங்கிருந்து செல்லும் மூன்று பிரதான பாதைகளையும் பார்த்தபடி உறுமுவது போல் அமைக்கப்பட்டிருந்த மூன்று புலிச் சின்னங்களின் அருகே சென்று அவற்றைத் தடவிப் பார்த்தேன். இவ்வளவு குண்டு வீச்சுக்களின் மத்தியிலும் அந்தப் புலிச் சின்னங்கள் சிதைக்கப்பட வில்லை.

வல்வெட்டித்துறைச் சந்தியில் இருந்து மேற்காக காங்கேசன்துறை - பொன்னலை வீதியும்,கிழக்காக பருத்தித்துறை வீதியும், தெற்காக யாழ்ப்பாண வீதியும் பிரிந்து செல்கின்றன. அந்த முச்சந்தியில் நின்று மேற்கில் உள்ள வீதியைப் பார்த்துத் திகைத்துப் போய் நின்றேன். அந்த தெருவெங்கும் கற்குவியல்கள் பாதையை மூடி மறைத்தன..!

வானளாவ எழுந்து நின்ற கட்டிடங்கள் பல தரை மட்டமாக்கப்பட்டிருந்தன. கண்ணுக்கு எட்டிய தூரம் வரைக்கும் வெட்டவெளியாகக் காணப்பட்டன.

# 17. அவலங்களுக்குள்ளாகும் ஆதிகோயிலடி

ஆதிகோயில் வட்டாரம் நோக்கிச் சென்று கொண்டிருந்த பொழுது, இருபறமும் வீதியை மூடியிருந்த கற்குவியல்களினூடகவே செல்லமுடிந்தது... ஆதிகோயில் வீதிச் சந்தியில் நின்று கடற்கரை வீதியைப் பார்த்த பொழுது, வயிற்றைப் பற்றி எரிவது போல் இருந்தது. அந்தச் சந்தியில் இருந்து, ஆதிவைரவர் வீதியினூடாக கடற்கரையை நோக்கிச் செல்லும் பாதையின் இரு மருங்கிலும் உள்ள வீடுகள் உடைந்து சிதறிப் போய் இருந்தன.

பேராசிரியர் சிவத்தம்பியின் வீட்டின் முன்னால், உள்ள மின் கம்பிகளின் மீது, பெரிய மீன்பிடி வலையொன்று தொங்கிக் கொண்டிருந்தது... அந்தப் பகுதியைச் சேர்ந்த ஒருவர், வந்து கொண்டிருந்தார். அந்த வலையையே நிமிர்ந்து பார்த்துக் கொண்டிருந்ததைக் கண்டதும், என்னைப் பார்த்து ஒரு அசட்டுச் சிரிப்பை உதிர்தத்தார்

"என்ன பார்ததுக் கொண்டிருக்கிறியள்..? வலைகள் கடலிலை தான் மிதக்கும், ஆனால் எங்கடை நாட்டிலை, மின் கம்பங்களிலும், பறக்கும்... பறவைகளை வலை வீசிப் பிடிக்கிறதுக்காகப் போட்டது என்று நினைக்காதீங்கோ தம்பிமாரே... இதிலை இருந்து மூன்று வீடு தள்ளிச் சகடையில் இருந்த போட்ட குண்டு விழுந்து வெடித்துச் சிதறியதில், அந்த வீட்டுக்குள்ளை இருந்த பொருட்களோடை, இந்த வலைகளும் இப்படிச் சிதறிப் பறந்திருக்குது. அதோடை பாருங்கோ,அந்த வீட்டிலை பயத்தினால் வலைக்குள்ளை ஒளிச்சிருந்த நாயும், காயப்பட்ட நிலையில் இந்த வலைக்குள்ளை சிககுப்பட்டுத் தொங்கிக் கொண்டிருந்தது. பிறகு எங்கடை பெடியள் வந்து நாயைத் தட்டிவிட்டவங்கள்..."

அவருடைய வீடும் குண்டு போட்டுத் தகர்த்திருந்தும் கூட, அவர் இதனை வேடிக்கையாகவும், சுவாரசியமாகவும் கூறியபொழுது, எங்களுக்கும் சிரிப்பு வந்து விட்டது.அதனைப் பார்ததுக் கொண்டே அந்த இடத்தில் இருந்து ஆதிகோயில் வீதியினூடாகச் சென்று கொண்டிருந்தோம்... என்னுடன் "ஸ்ரார் போட்டோ" புகைப்படப்பிடிப்பாளர் தங்கவடிவேலும், மணியண்ணாவும் வந்து கொண்டிருந்தனர்.

அந்த வீதிவழியாக நடந்து கொண்டிருந்த பொழுது, அங்கே வீதியோரமாக உடைந்து உருக்குலைந்து போன வீட்டின் முன்னால் ஒரு வயதான அம்மாள், எங்களையே பார்த்துக் கொண்டு நின்றார். சோகமே உருவாக,கண்களில் ஏக்கம் பிரதிபலிக்க எங்களையே பார்த்துக் கொண்டு நின்ற அந்த அம்மாளின் அருகே சென்றதும், அவருக்கு அருகில் நின்ற அவரது மகள்,

"முதல் நாள் பிளேனிலை இருந்து குண்டு போட்டதிலை, என்னுடைய அண்ணா தவராசா இறந்து போனார்... இதிலை கோயிலுக்குப் பிறகாலை உள்ள வீட்டிற்குள் இருந்து, அன்புவின்ரை எட்டு வயதுப் பிள்ளையும், எங்கடை மருமகன், சிவசுப்பிரமணியமும் ஓடி வரேக்கை, அந்த வீட்டிற்குள்ளை விழுந்து வெடித்த குண்டு விழுந்து வெடித்ததில் இந்தப் பிள்ளையும் செத்துப் போயிற்றுது. என்ரை மருமகனுக்குக் காலிலும், தொடைப் பகுதியிலும் சரியான காயம்."

"வீட்டுக்கு வீடு வாசல்படி" என்பது போல், ஒவ்வொரு வீடுகளிலும், கேட்டுக் கொண்டிருக்கும் சோக கீதம், நெஞ்சைப் பிழிந்து கொண்டிருந்தது. அந்த வீட்டிற்குள் இருந்த எட்டு வயது மாணவியான, சிவனேந்திரம் அன்புக்கரசி குண்டு விச்சு விமானங்கள் பதிந்து வரும் சத்தத்தைக் கேட்டவுடனே, பாய்ந்து பொதுப் பதுங்கு குழியை நோக்கி ஓடிப் போகும் பொழுதுதான், குண்டு வெடித்துச் சிதறிக் கோயில் வீதியில் வைத்தே துடிக்கத் துடிக்கக் கொல்லப்பட்டாள். அந்தச் சிறுமியுடன் பாய்ந்து ஓடிய கந்தசாமி சிவசுப்பிரமணியம் என்ற இளைஞன், படுகாயம் அடைந்து மந்திகை வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார்.

அங்கிருந்து நடந்து போய்க் கொண்டிருந்த பொழுது, இன்னுமொரு வீட்டின் முன்னால் ஒரு தென்னங் குற்றியில் குந்தி இருந்த, ஒரு இளம் பெண்ணும், பதின் மூன்று வயதுச் சிறுமி ஒருத்தியையும் பார்த்தபடி சென்றோம்.

ஏற்கனவே என்னைப் பற்றித் தெரிந்திருக்க வேண்டும்.அங்கே அந்த இளம் பெண்ணுடன் நின்ற சேதுலிங்கம் வரதலட்சுமி என்ற சிறுமி, என்னைக் கண்டதும் எழுந்து நின்றாள்.

"சேர்.!, எங்கடை வீடுதான் முதன் முதலிலை குண்டு போட்ட வீடு.. பொம்பர் விமானம் சுற்றி வரேக்கை, எங்கடை ஐயா வீட்டுக்குள்ளை படுத்திருந்தவர். நான் பயத்தினால் ஓடிப்போய் ஐயாவை எழுப்பிக் கொண்டு கோயிலடிப் பக்கத்தில் இருந்த பதுங்கு குழிக்குள்ளை ஓடிப் போகவும்,எங்கடை வீட்டிற்கு மேலை குண்டு விழுந்த வெடித்து, எல்லாமே சிதறிப் போய்விட்டது.. ஆனால் நல்லவேளை வைரவ சுவாமியின்ரை அருளாலை நாங்கள் எல்லாரும் தப்பிவிட்டம். இல்லாவிட்டால், நாங்கள் இரண்டு பேரும் அதுக்குள்ளையே மூடுப்பட்டுச் செத்துப் போய் இருப்பம்.."

அந்தக் கள்ளங் கபடமற்ற சிறுமி, வரதலட்சுமி இப்படிக் கூறியதும், அவருக்கு அருகில் நின்ற தாயும் கூடவே நின்று சிரித்தாள்...

சொத்துக்களை எப்படியோ மீளவும், ஒரு நாள் சேர்த்து விடலாம்.. ஆனால் இழந்து போன உயிர்களை யாரால் திருப்பித் தரமுடியும்?.... அந்த வகையில், அந்தக் குடும்பத்தில் எவருக்குமே உயிர் ஆபத்து எற்படாததால்,வீடு உடைந்த நிலையிலும் அவர்கள் ஓரளவு மகிழ்ச்சியடைந்தனர்.

"நான் அண்டைக்கு யாழ்ப்பாணம் போயிட்டன்... இந்த வீடு கட்டி முடித்துக் குடி புகுந்து, ஒரு வருசம் தான் ஆகுது பாருங்கோ. இப்படி ஒரு வீடு போனால், ஒரு கொட்டிலைக் கட்டிப்போட்டுத் தன்னும், நாங்கள் இங்கை தான் இருக்கப் போறம்... எங்கடை இடத்தைவிட்டு நாங்கள் எங்கையும் போக ஏலாது தானே."

என்னைப் பார்த்து எள்ளளவேனும் மனம் கலங்காத நிலையில், நெஞ்சை நிமிர்த்தியபடி, அந்தத் தாய் கூறியமை அவரது உறுதியை எடுத்துக் காட்டியது.

ஆம்!......அந்த உடைந்த நிர்மூலமாக்கப்பட்ட புதிய கல்வீட்டின், இழப்பின் தாக்கம், அவர்களுடைய உள்ளத்தில் வேதனையையோ அல்லது, விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான ஒரு உணர்வையோ காணமுடியவில்லை.

"சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம் சுடச்சுட நோக்கிற்பவர்க்கு"

என்ற திருவள்ளுவரின் இந்தக் குறள் போன்று, பௌத்த, சிங்கள பேரினவாதம் எந்த அளவுக்கு எமது மக்கள் மீது அடக்கு முறையையும், இராணுவ மிலேச்சத் தனத்தையும் பிரயோகிக்கின்றதோ அந்த அளவுக்கு அந்த மக்களின் உணர்வுகள் உரம் பெறுவதையும்,அடக்கு முறையாளர்களுக்கு எதிரான மனப்போக்கையும், காணக்கூடியதாக இருப்பதையே மாணவி வரலட்சுமியினதும், அவளது தாய் நேதுலிங்கம் வள்ளியம்மாவினதும் உறுதியான போக்குக் காட்டியது.

"எங்கடை வீடுகளைத் தான் இப்படித் தரைமட்டமாக்கிப் போயிற்றான்..... நாங்கள் காலங்காலமாக வழிபட்டு வந்த எங்கடை குலதெய்வமான ஆதிவைரவர் கோயிலையே சிதைத்து விட்டாங்களே....."

கோயில் வாசலை நோக்கிப் போகும் பொழுதே, அந்த உடைந்த ஆலயத்தின் இடிபாடுகளுக்கூடாக மூலஸ்தானத்திற்குள் ஜெகஜோதியாக நின்று அருள்பாலித்துக் கொண்டிருக்கும், ஆதி வைரவ சுவாமியைக் கரம் குவித்துக் கும்பிட்டுவிட்டுத் திரும்பிய சிவகுரு செல்லத்துரை எங்களை வழிமறித்துக் கூறியபொழுது, அவர் கண்களில் நீர்த் திவலைகள் பனித்தக் கொண்டிருந்தன.

"ஆதிகோயில்" என்ற இடத்தின் பெயரே வழங்குவதற்குக் காரணமான "வைரவர்" கோயில் வல்வெட்டித்துறையிலேயே மிகவும் பாரம்பரியமும், பழமையும் வாய்ந்த ஒரு ஆலயமாகும். அலைகள் ஆர்ப்பரித்து, மீண்டும் அமைதியாகத் திரும்பும் அழகு வாய்ந்த கடலொடு இணைந்த ஒரு சூழலில் ஆதி வைரவர் தேவஸ்தானம் அமைந்துள்ளது.அந்தக் கோயில் சிறிய அளவில் இருந்தாலும், பார்ப்பதற்கு அழகாகவும், அடக்கமாகவும் இருந்தது.

ஆதிகோயிலின் மூலஸ்தானம், மகாமண்டபம் தவிர்ந்த கோயிலின் அனைத்துமே குண்டு வீசித் தகர்க்கப்பட்டிருந்தன. கோயிலின் வடக்கு வீதியின் மையப் பகுதியில் ஒரு பீப்பா குண்டு விழுந்து வெடித்ததில் அந்த இடத்தில் சுமார் ஆறு அடி ஆளமான குழி ஏற்பட்டிருந்து, அதற்குள் தண்ணீர் நிறைந்திருந்தது. இந்த ஆலயத்தைச் சுற்றிமட்டும் சுமார், பத்துக் குண்டுகள் வரை போடப்பட்டதாக தனது பத்து விரல்களையும், விரித்துக் காட்டியபடி, கூறினார்.

இக்கோவில் 1825ம் ஆண்டு பொதுமக்களால் கட்டப்பட்டதாக யாழ்ப்பாணக் கச்சேரிப் பதிவேடுகள் தெரிவிக்கின்றன. ஏற்கனவே கூறப்பட்டது போன்று இது வல்வெட்டித்துறையின் மிகவும் பழமை வாய்ந்த ஆதியான ஒரு கோயிலாக இருந்தாலும் அந்தக் காலப் பகுதியில் சிறிய கோயிலாக இருந்தமையால் பதிவுகளுக்கு உட்படாதிருந்திருக்கலாம்.

கோயிலுடன் அருகாக இருந்த ஆதிசக்தி படிப்பகம், முற்றாகவே சேதம் அடைந்து, அதற்குள் இருந்த நூற்றுக் கணக்கான புளொரசன்ற் குழாய் விளக்குகள், உடைந்து சிதறிப்போய் இருந்தன.!..... ஆதி வைரவர் கோயிலைப் பார்த்துக் கொண்டு, கடற்கரை வீதி வழியாக வரும் பொழுது, கண்ணுக்கு எட்டிய தூரம் வரைக்கும், வீடுகளே கண்ணில் தென்படவில்லை. எல்லாமே குண்டு வீச்சுக்களினால் தரைமட்டமாக்கப்பட்டு எரிகுண்டுகள் வீசி எரிக்கப்பட்டும் உருக்குலைந்து போய் இருந்ததனால், அடையாளமே தெரியவில்லை.

ஆதிகோயில் வட்டாரத்தில் வாழும் மக்களின் துர்ப்பாக்கியமான வாழ்வு ஒரு கண்ணீர்க்கதை.!

முற்று முழுதாகவே கடற்றொழிலையே நம்பி வாழ்கின்ற பல நூற்றுக்கணக்கான தொழிலாளர் குடும்பங்களைக் கொண்ட ஒரு சிறிய பிரதேசம் தான் ஆதிகோயில் வட்டாரம்.1984 ஆம் ஆண்டிலிருந்து 1987 ஆம் ஆண்டு வரை சுமார் 100 மீற்றர் தூரத்தில் தான் ஊரிக்காடு கடற்புறா இராணுவ முகாம் அமைக்கப்பட்டிருந்தது. மிகப் பெரும் நிலப்பரப்பில் அமைக்கப்பட்டுள்ள இந்த முகாம் பலாலி இராணுவ முகாமுக்கு அடுத்த பெரிய முகாமாக இருந்தது.

வல்வெட்டித்துறை ஊரிக்காடு இராணுவ முகாமில் இருந்து, தினமும் ஏவப்படும் எறிகணைத் தாக்குதல்களினால், தமது வீடுகளை விட்டு இடம்பெயர்ந்து ஓடுவதும், செல் தாக்குதல்கள் ஓய்ந்ததும் பின்னர் திரும்பி வருவதுமாகவே இருப்பதால், நிம்மதியற்ற ஒரு சூழலிலேயே அவர்கள் காலத்தை ஓட்டி வந்தனர். ஸ்ரீலங்கா அரசினால் அடுத்தடுத்துப் பிரகடனப்படுத்தப்பட்ட கடல் வலயச் சட்டங்கள் அவர்களது ஜீவனோபாயத்தையே வேரோடு சாய்த்து விட்டது.!

தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வரும் எறிகணைத் தாக்குதல்கள், கடலில் வைத்து மேற்கொள்ளப்படுகின்ற கடற்படையினரின் தாக்குதல்கள் போன்றவற்றால், தொழில் இழந்து, பட்டினிச் சாவை எதிர்கொள்ள வேண்டிய நிலையில், இவர்களில் பெரம்பாலானோர் முற்றாகவே இடம் பெயர்ந்து, வடமராட்சி கிழக்குப் பகுதியின் கடலோர பிரதேசங்களான, நாகர்கோயில், தாளையடி, வெற்றிலைக்கேணி போன்ற இடங்களில் அகதிகளாகத் தஞ்சமடைந்து இருண்ட வாழ்க்கைக்குத் தள்ளப்பட்டனர்.


இந்தத் துயரமான ஒரு சூழலில், தவிக்கும் மக்களின் வாழ்வில் மேலும் சோதனை ஏற்பட்டது போல், 1987 ஆம் ஆண்டு, மே மாதம 26 ஆம் திகதி தொடக்கம் ஜுன் 1 ஆம் திகதி வரை ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் "ஒப்பரேசன் லிபரேசன்" தாக்குதலின் பொழுது, ஊரிக்காடு இராணுவ முகாமில் இருந்து கனரக ஆயதங்களுடன் வெளியேறிய பல நூற்றுக்கணக்கான இராணுவத்தினர் பின்னே செல்ல "புல்டோசர்கள்" மூலம் நாற்றுக் கணக்கான வீடுகளைத் தரைமட்டமாக்கியபடி வல்வெட்டித்துறை நகரத்தை அழிப்பதற்காக முன்னேறிக் கொண்டிருந்தனர். இராணுவத்தினரின் எதிர்பாராத இந்த இராணுவ நடவடிக்கைகளால் அதிர்ந்து போன ஆதிகோயில் மக்கள் நிரந்தரமாகவே அகதிகளாகினர்.!

1987 ஆம் ஆண்டு ஜுலை மாதம 29 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட இந்திய இலங்கை ஒப்பந்தத்தைத் தொடர்ந்து, படிப்படியாகத் திரும்பித் தமது வீடுகளைக் கட்டிக் குடியிருக்கத் தொடங்கி தமது தொழிலை ஆரம்பித்த நேரத்தில் தான், 1992 ஆம் ஆண்டில் இராணுவத்தினரால், மேற் கொள்ளப்பட்ட விமானக் குண்டு வீச்சுக்களினால், மீண்டும் பல நூற்றுக் கணக்கான வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன.

ஆதிகோயிலுடன் வடக்குப் புறமாக உள்ள கடற்கரை வீதி வழியாக வரும்பொழுது,வல்வை சிவகுரு வித்தியாலயத்தின் பின்புறம் உள்ள வீடு ஒன்றின் உடைந்த கூரைகளை மாற்றிக் கொண்டிருந்த மகேந்திரம் என்பவர் எங்களைக் கண்டதும் கூரையில் இருந்து கீழே இறங்கி வந்தார்.

"அங்கை கடற்கரையைப் பாருங்கோ மாஸ்ரர்..! சகடை விமானத்தில் இருந்து போட்ட பெரிய குண்டு விழுந்து ஏற்பட்ட குழியை..."

அவர் கூறிக் கொண்டே, எங்களைக் கடற்கரைப் பக்கமாகக் கூட்டிச் சென்று, கரையோரமாக ஏற்பட்ட ஆழமான குழியைக் காட்டினார். அந்தப் பாரிய குழியினுள் தண்ணீர் நிறைந்திருந்ததால், அந்தக் குழியின் ஆளத்தை மதிப்பிட முடியவில்லை. சிறிய கல் ஒன்றைக் குழியினுள் போட்டதும், நீண்டநேரம் வரை குமிழிகள் வெளியேறிக் கொண்டிருந்ததைக் கொண்டு அது சுமார், 10 அடியாவது அழமாக இருக்கலாம் என்று ஊகித்தேன். அந்தப் பகுியில் கரையோரமாகக் கட்டப்பட்ட பத்துக்கும் மேற்கட்ட மீன்பிடி வள்ளங்கள் மீது, வானத்தில் இருந்து எரி குண்டுகள் போடப்பட்டதால், அவை கல்நார் படகாக இருந்ததால், எல்லாமே எரிந்து கரிக்கட்டிகளாகக் காட்சி அளித்துக் கொண்டிருந்தன.



"இந்தக் குண்டு விழுந்ததிலை இங்கனேக்கை உள்ள வீடுகளில் ஒரு பாதிப்பும் ஏற்படவில்லையோ.....?"


"ஐயோ கடவுளே.! இதிலை கடற்கரையிலை, நின்ற நவரத்தினம் என்ற தச்சுவேலை செய்கிற பெடியன், தவராசா, அன்பழகன் மூன்று பேரும் இந்தக் குண்டு விழுந்து வெடித்துச் சிதறிய சன்னாங்கள் பட்டு, அந்த இடத்திலையே துடிதுடித்துச் செத்துப் போனதுகள். குண்டு போடேக்கை நாங்கள் இந்த பங்கருக்குள் போய் இருந்துதான், தப்பினம். பொம்பர் போயச் சிறிது நேரத்திலை வந்து பார்க்க துடித்துக் கொண்டு இருந்ததுகள். பிறகு கொஞ்சத்திலை எங்கடை கண்ணுக்கு முன்னாலையே செத்துப் போயிற்றுதுகள்..."


சிவகுரு வித்தியாலயத்தின் எல்லைச்சுவருடன் உள்ள காணியில், வசிக்கும், 75 வயதான தேசோமயானந்தம் புஸ்பகாந்தியம்மா இதைச் சொல்லும் பொழுதே, அந்தப் பதட்டம் இப்பொழுதும், தொனிபபதைக் காணக்கூடியதாக இருந்தது.

"இந்தப் பகுதியில் குண்டுகள் போட்டதாலை என்ரை நாலு வீடும் சரி பாருங்கோ...." அங்கே நடைபெற்று முடிந்த அனர்த்தங்களால் நிலை குலையாது நின்ற, புஸ்பகாந்தியம்மா," நாலு வீடும் சரி" என்று சாதரணமாகக் கூறினாலும் கூட, அவை ஒவ்வொன்றும் நான்கு அல்லது ஐந்து இலட்சத்திற்கும் அதிகமான மதிப்புடையது...!

சிவகுரு வித்தியாலயத்தின் முற்றத்தில்,ஒரு பெரிய பதுங்கு குழி அமைக்கப்பட்டிருந்தது. முதல் நாள் குண்டு வீச்சுக்கள் நடைபெற்ற பொழுது, புஸ்பகாந்தியம்மாவுடன், அவரது மூன்றுமகள்கள், மருமகன் மகேந்திரன், பேரப்பிள்ளைகள் ஆகியோரும் நின்றனர்...


அவர்களுடைய வீட்டையும் கடந்து,சிவகுரு வித்தியாலயத்திற்குள் போனதும், அந்தப் பாடசாலையின் சூழலைப் பார்த்ததும் திகைத்துப் போய் நின்றோம்.




13
12

















# 18. சிவகுரு வித்தியாலயமும் முற்றாக அழிப்பு

"இது பாடசாலை தானா?...." அந்தப் பாடசாலையின் தோற்றத்தைப் பார்த்ததும், என்னால் நம்பமுடியவில்லை. அந்த அளவுக்கு பாரிய குண்டுகள் வீசப்பட்டு, அந்தக் கட்டிடமே சுக்கு நூறாக உடைந்து, கூரைகள் சரிந்து விழுந்து உருக்குலைந்து போய் இருந்தன.





உடைந்து சிதறி உருக்குலைந்து போன வல்வையின்
பழம் பெரும் சிவகுரு வித்தியாலயம்

அதிபர் அலுவலகத்தின் கூரை ஓடகள், சிதறி இருந்ததுடன், கதவு, அலுமாரிகள், உடைந்து நொருங்கிப்போய் இருந்தன. பிரதான மண்டபத்தின் மேல் வை-12 விமானத்தில் இருந்து குண்டு போடப்பட்டதில், அந்தக் கட்டிடம் சரிந்து விழுந்து தரைமட்டமாகியிருந்தது. அந்தக் கட்டிடத்தின் முன்னால், சுமார், 15 அடி விட்டமும்,எட்டு அடி ஆளமும் உள்ள மிகப் பெரிய குழி ஒன்று காணப்பட்டது. அந்தக் குழியில் இருந்து அதிர்வினால், சிதறிய மண்கட்டிகளும், கற்களும் ஐம்பது அடி தூரத்திற்கு அப்பால் உள்ள கட்டிடங்களின் கூரைகளின் மீது, வீசி எறியப்பட்டிருந்தது. அதற்கு அருகில் இருந்த இன்னுமொரு கட்டிடத்தின் மீது பெற்றோல் எரிகுண்டு விழுந்து, அந்தக் கட்டிடத்தினுள் இருந்த மாணவர்களின் தளபாடங்களும்,கூரை மரங்களும், கோவைகளும் முற்றாகவே எரிந்து சாம்பராகிக் காணப்பட்டன.

அதிபர் அலுவலகம், நூலகம் போன்றவற்றில் இருந்த கோவைகள், புத்தகங்கள் என்பன பாடசாலை முற்றமெங்கும், சிதறியிருந்தன.

போர் நடவடிக்கைகளில் எவை எவை தவிர்க்கப்பட வேண்டுமென்று ஜெனிவா உடன்படிக்கையில் கூறப்பட்டனவோ அங்கெல்லாம் தேடிச்

சென்று குண்டுகளை வீசியுள்ளனர்...!

ஆலயங்கள்.!

சந்தைகள்.!

வைத்தியசாலைகள.!

பாடசாலைகள்..! என மக்கள் கூடுமிடங்களைத் தேடிச் சென்று தாக்கி அழித்திருக்கின்றார்கள்.

சிவகுரு வித்தியாலயத்தினுள்ளும், அதனைச் சூழ உள்ள இடங்களிலும் மட்டும் சுமார் நாற்பது குண்டுகள் வரை கண்மூடித் தனமாக வீசப்பட்டு, அந்தச் சுற்றுப் புறமெங்கும் பாலைவனம் போல் வெறிச்சோடிப் போய் இருந்தன. அங்கே காய்த்துக் குலுங்கிய பல தென்னை மரங்களும், குலை தள்ளிய வாழை மரங்களும் முறிந்து கருகிப் போய்ச் சாய்ந்து கிடந்ததைப் பார்க்கும் பொழுது, போர்க்களத்தில் யானைகள சரிந்து விழுந்து மரணித்தது போல் இருந்தன..!

அந்தப் பகுதியில் மட்டும் பதினெட்டு வீடுகள் வரை தரை மட்டமாக்கப்பட்டிருந்தன. வல்வெட்டித்துறை சிவகுரு வித்தியாலய வீதி வழியாக வந்து கொண்டிருக்கும் பொழுது,உடைந்து சிதறிப் போய் இருந்த ஒரு வீட்டின் முன்னால், தெருவோரமாக உள்ள பாறைக்கல்லின் மேல் குந்திக் கொண்டிருந்த நடராசா தெய்வானைப்பிள்ளை என்ற 73 வயதுடைய ஒரு அம்மாள், எங்களைப் பார்த்ததும்,எழுந்து நின்று,

"ஐயாமாரே.! என்ரை வீட்டையும் ஒருக்கால் பார்த்துப் போட்டுப் போங்கோவன். இந்த அறுவான்கள் செய்த நாசமாப்போன வேலையைப் பாருங்கோவன்."

தன்னுடைய உடைந்து போன அந்த வீட்டையும்,அவரது எதிர்பார்க்கைகளையும் ஓரளவாவது பூர்த்தி செய்தாலேயே அந்த வயதான அம்மாளுக்கு ஒரு ஆறுதலாக இருக்கும். என்பதால் அவருடைய வீட்டிற்குள் இருந்த இடிபாடுகளையும் கடந்து உள்ளே போனோம்.

துன்பத்தில் அவஸ்தைப்படுபவர்களுக்கு அவர்களை ஆறுதல் படுத்தக்கூடிய ஔடதமாக இருப்பது எங்களுடைய ஆறுதலான வார்த்தைகளும், நாங்கள் காட்டுகின்ற அனுதாபமும் தானே..!

அந்த வீடு... பெரியதொரு மாளிகை என்றோ அல்லது பங்களா என்றோ சொல்லமுடியாது. ஆனால் அந்த வயதான அம்மாளைப் பொறுத்தவரையில், அவருக்கு அது மாளிகைதான்..! அது ஒரு மிகச் சிறிய வீடு. ஒரு சிறிய அறை.ஒரு மண்டபம், அதோடு இணைந்த ஒரு சமையல் அறை... ஆனால் குண்டு வீச்சினால்,கூரைகள் சரிந்து விழுந்து இரண்டு பக்க மதிலும் உடைந்து சிதறிப் போய்க் கிடந்தது. அந்த வீட்டின் கூரைக்குப்

போடப்பட்டிருந்த அஸ்பெஸ்ரேர்ஸ் சீற்றுகளும்,அடுக்களைக்குப் போட்பபட்டிருந்த ஓடுகளும் தூள் தூளாகி முற்றமெங்கும் சிதறிப்போய் இருந்தது.

"ஐயாமாரே..! பார்த்தியளே.. எனக்கு எழுவத்தைஞ்சு வயசாப் போய்ச்சுது. பிள்ளை குட்டியும் இல்லை. என்ரை மனுசனும் நேரத்தோடை என்னைத் தனிச்சு விட்டுட்டுப் போயிட்டுது. இண்டைக்கு நான் தனிய இருந்து பிச்சைச் சம்பளத்திலையும் ஆரும் சொந்தக் காரர் செய்யிற உதவியினாலை ஏதோ சிவனே என்று இருக்க இந்தப் பாழாய்ப்போனவங்கள் இப்பிடிக் குண்டைப் போட்டு அழிச்சுப்போட்டான்."

அந்த மூதாட்டி, தனது மனதில் பட்டதை அப்படியே அடுக்கிக் கொண்டுபோய்,வீட்டின் நடுப் பகுதிக்குள் கூட்டிக் கொண்டு போய் வெட்டவெளியாக இருந்த மேற் கூரையைக் காட்டினாள்.

கூரை ஓடுகளும்,அஸ்பெஸ்டர்ஸ் சீற்றுக்களும் உடைந்து போனதால், வானம் பளிச்சென்று தெரிந்தது.. அதனூடாக சூரிய ஒளி எங்கும் பரவிக் கொண்டிருந்தது.

"ஐயாக்களே!. நான் காலையில் சமைச்சு வைச்ச சோறு கறியைக் கூடக் காகங்களும் தெரு நாய்களும் விட்டு வைக்கவில்லை. சனியன்கள் இந்தப் பொட்டல் வெளிக்குள்ளாலை வந்து எல்லாத்தையும் தட்டி உருட்டிச் சாப்பிட்டுவிட்டுப் போயிட்டுதுகள்.."

ஓடுகள் உடைந்து வானம் தெரியக் கூடிய வகையில், வெட்டவெளியாகக் காட்சி அளித்துக் கொண்டிருந்த வீட்டு முகட்டுக் கூரையைக் காட்டிவிட்டுத் தனது வெறுமையாக இருந்த சோற்றுப் பானையைத் தூக்கிக் காட்டினாள். எவருடைய உதவியுமே அற்ற நிலையில் இருந்த அந்த மூதாட்டியைப் பார்க்க மிகவும் பரிதாபமாகத் தான் இருந்தது.

நான்கு நாட்களாகத் தொடர்ந்த குண்டு வீச்சுக்களினால், கடற்றொழிலுக்கும் எவருமே செல்லாததால், கடற்கரையோரமும் வெறிச்சோடிப் போய் இருந்தது. கடற்றொழில் நன்றாக நடந்து கொண்டிருந்த நேரங்களில் கரையோரமாக மீன் மற்றும் கருவாடுகள் காயப் போட்டிருப்பார்கள்... அந்த நேரங்களில் பல நூற்றுக் கணக்கான காகங்கள் கடற்கரையிலேயே பறந்து திரியும்.... ஆனால் இப்போது கடற்கரையோரமாக மீன்கள் காயப்போடாததால், காகங்களும், தெரு நாய்களும் குடிமனைகளையும், அடுக்களைகளையும் ஆக்கிரமிக்கத் தொடங்கி விட்டதால் மக்கள் குடியிருப்புக்கள் எல்லாம் காகமயமாகவே இருந்தன..... காகங்களின் இரைச்சலும் காதுகளைப் பிளந்து கொண்டிருந்தன..

அந்த வயதான அம்மாளையே பார்த்துக் கொண்டிருந்த எங்களால், அந்த நேரம் என்ன உதவியைத் தான் செய்யமுடியும்.

"ஆச்சி!. இப்டிபடியெல்லாம் உங்கடை பகுதியைக் குண்டு போட்டு அழிச்சதைப் பற்றி என்னனை நினைக்கிறியள்?.... இதெல்லாம் இந்தப் பொடியங்களாலைதானை வந்தது என்று நினைக்கிறியளோ?"

அப்பொழுது எனக்கு அருகில் நின்ற பொன்.பூலோகசிங்கம் திடீரென இப்படிக் கேட்டதும், என்னுடைய கவனம் கலைந்தது.

பொன்.பூலோகசிங்கம் யாழ்ப்பாணத்தில் இருந்து எங்களுடைய மக்களின் அவலங்களைப் பார்த்து அறிக்கை ஒன்றைத் தயாரிப்பதங்காக வந்திருந்தார். அவர் ஒரு ஊடகவியலாளராகவும் இருப்பதால் மக்களின் மன உணர்வுகளை அறிந்து கொள்வதில் முனைப்பாக இருந்ததை என்னால் உணர முடிந்தது.

"ஐயா!. என்ரை ராசாக்கள்! நான் ஏன் அப்பிடிச் சொல்லப் போறன். இந்த நாய்கள் அந்தப் பொடியங்களோடை நேருக்கு நேரை நின்று சண்டை பிடிக்க முடியேல்லை. கள்ளத்தனமாக வானத்தாலை வந்து சாதாரணமாக எங்களைப் போலை ஆக்களின்ரை வீடுகளை வந்து அழிச்சிட்டெல்லை போறான்..."

தனக்கு ஏற்பட்ட பாதிப்பின் துயரத்தை மறந்து போராளிகளின் மீது அந்தப் பெண் கொண்டிருந்த பற்றையும் எண்ணி ஆச்சரியப்பட்டேன்.

அந்த மூதாட்டியின் கலகலப்பான சுபாவமும், தனக்கு ஏற்பட்ட துயரத்தையும் மறந்து, இவ்வளவு அனர்த்தங்கள் ஏற்படடபின்னரும், தமிழீழ விடுதலைப் புலிகள் மீது கொண்டிருந்த பற்றையும் நம்பிக்கையையும் எண்ணி ஆச்சரியப்பட்டுப் போனோம்.

அந்த வீட்டையும் சென்று பார்த்தபடியே உள்ளத்தின் மனச்சுமைகளைத் தாங்கியபடி, உதயசூரியன் உல்லாசக் கடற்கரை வீதியூடாகச் சென்று கொண்டிருந்தபொழுது, அந்த வீதியின் வலது புறமாக, பிரேம்குமார் என்பவரின் கடை இருந்தது. அந்தக் கடையைப் பார்த்ததும், சிறிது நேரம் எங்களையே மறந்து அந்தக் கடையையே பார்த்துக் கொண்டிருந்தோம்.
அவரது பல சரக்குக் கடையின் கதவுகள் உடைந்து நொருங்கிப் போய் இருந்தது... அந்தக் கடையின் பிற்பக்கச் சுவர்கள் கூட உடைந்து ஒரே வெட்டவெளியாக இருந்தது...! கடையின் பட்டடை, தராசு மற்றும் கடையில் வைக்கப்பட்டிருந்த எஞ்சிய பருப்பு, உழுந்து, பயறு போன்ற உணவுப் பொருட்கள் சிதறிப் போய இருந்தன.

ஆந்தக் கடையின் உடபுறமாக, சுதந்திரமாக எவருக்கும் அஞ்சாத நிலையில், மூன்று வெள்ளாடுகளும், நான்கு ஐந்து காகங்களும் அங்கே இருந்த உணவுப் பொருட்களைச் சுவைத்துக் கொண்டிருந்தன. அதில் நின்று எங்களுடன் வந்த பொன் பூலோக சிங்கம் தனது கமராவினால், புகைப்படம்

எடுத்துக் கொண்டிருப்பதைக் கண்டுவிட்டோ என்னவோ, ஒரு ஆடு,அழகாகத் தனது கால்களைத் தூக்கியபடி "போஸ்" கொடுத்துக் கொண்டிருந்தது. அந்தத் துயரத்தின் மத்தியிலும், அந்த அற்புதமான காட்சியைக் கண்டு வாய்விட்டே சிரித்து விட்டோம்...!

மீண்டும் அந்த இடத்தை விட்டு அகன்று காங்கேசன்துறை பிரதான வீதியை அடைந்து வலப்பக்கமாக அம்மன் கோயிலடிப்பக்கமாகச் சென்று, ஆலடியை அடைந்தோம், ஆலடிச் சந்தியில் அமைக்கப்பட்டிருந்த "மாவீரர் சிறுவர் பூங்கா" வுக்கு எதிரில் ஒரு பாரிய குழி காணப்பட்டது. அந்தப் பாரிய குழியைப் பார்த்துக் கொண்டிருந்த பொழுது, எதிர் வீட்டில் இருக்கும் நாராயணசாமி மயோன் ராசா என்பவர், எங்களை நோக்கி வந்தார்.

" மாஸ்ரர்.! இந்த இடத்திலும், எங்கடை வீட்டிற்கு அந்தப் பக்கத்திலுமாக் வை-12 விமானத்திலை இருந்து, அடுத்தடுத்து மூன்று குண்டுகளைத் தள்ளினாங்கள். இவ்வளவு குண்டுகளும் விழ நாங்கள் எங்கடை வீட்டின் பங்கருக்குள்ளை தான் இருந்தனாங்கள்." அவர் கூறிக் கொண்டே, தனது பாதிக்கப்பட்ட வீட்டையும், தாங்கள் ஒரு நாள் முழுவதும் பதுங்கியிருந்த பதுங்கு குழியையும் காட்டினார். அவரது வீடும் குண்டுகளின் தாக்கத்தினால், சேதமடைந்து காணப்பட்டது. ஒரே ஒரு அறை மட்டும், அரைகுறையாக எஞ்சியிருந்தது.

"மயோன்.. இவ்வளவு அருகிலை பாரிய சத்தத்தோடை குண்டுகள் விழேக்கை உங்களுக்கு எப்படி இருந்தது.?"

அவருடைய வீட்டில் அமைக்கப்பட்டிருந்த பதுங்கு குழிக்கு அண்மையில், மிக நெருக்கமாக ஏற்பட்ட அந்தப் பாரிய குழியைப் பார்த்ததும், நான் அதிர்ந்து போய்விட்டேன்.

" இருபதாம் திகதி பின்னேரம்,ஐந்து ஆறு பொம்மர் விமானங்களும், கெலிகொப்டர்களும் இரைந்து கொண்டு வரவும், நாங்கள் அலறி அடித்துக் கொண்டு,பதுங்கு குழிக்குள்ளை ஓடிப் போய் இருந்திட்டம். எங்களைத் தொடர்ந்து பக்கத்து வீடுகளிலை இருக்கிற சனங்களும் கிட்டத்தட்ட முப்பது பேர் வரை ஓடிவந்து எங்களோடை வந்து இருந்ததுகள்..... ஒவ்வொரு தடவையும் குண்டுகள் விழும் பொழுதும், நிலம் அதிர்ந்து, எங்கடை பங்கருக்கு மேலேயே விழுகிறது மாதிரி இருந்தது..... கடவுளே அம்மாளாச்சி...! அதை நினைத்துப் பார்க்க இப்பவும் வயிற்றைக் கலக்கிறது மாதிரி இருக்குது...." மயோன் ராசாவின் மனைவி இதனைச் சொல்லும் பொழுதே, யுத்த காலத்தில் பதுங்கு குழிகள் எத்தனை அப்பாவி மக்களினதும், குழந்தைகளின் உயிர்களைக் காப்பாற்றி யிருக்கின்றன என்பதை உணரக் கூடியதாக இருந்தது.

இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பொழுதும் இலங்கையில் கூட, யுத்தத்தின் பொழுது, குண்டுவீச்சு விமானங்கள் கோரமான தாக்குதல்களை

நிகழ்த்திய பொழுது, வீதிகள், பாடசாலைகள், சந்தைகள், கோயில்கள் போன்ற பொதுமக்கள் பெருமளவு கூடும் இடங்களில் இவற்றைப் போன்ற பாரிய பதுங்கு குழிகள் அமைக்கப்பட்டிருக்கும். போர் விமானங்களின் இரைச்சல் கேட்டதும், உடனடியாக "சைரன்" ஒலி எழுப்பப்படும் பொழுது, மாணவர்கள், பொது மக்கள் எல்லோரும் தாமதிக்காது, பென்சிலையோ, அல்லது சிறிய மரத்துண்டுகளையோ அல்லது கரண்டிகளையோ வாயில் கடித்து வைத்தபடி பதுங்கு குழிக்குள் ஓடிப்போக வேண்டும். இத்தாலிய, யப்பானிய, ஜேர்மனிய போர் விமானங்களின் குண்டு வீச்சுக்களில் இருந்து தப்புவதற்காக, இத்தகைய பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

ஆனால்,இன்று இந்த இலங்கை மண்ணில்,காலம் காலமாக வாழ்ந்து கொண்டிருக்கின்ற தனது சொந்த மக்களின் மீதே, பயங்கரமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய இரசாயனக் குண்டுகளையும், நெபாம் குண்டுகளையும் கண் மூடித்தனமாக நடத்திக் கொண்டிருக்கின்ற ஒரு அநாகரிகமான அரசாங்கத்தை உலகின் எந்த ஒரு நாட்டிலும் பாரக்கமுடியாது.

இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பொழுது குண்டுகளை வீசித் தள்ளிய ஜேர்மனிய விமானங்களுக்காகவோ, யப்பானிய விமானங்களுக்காகவோ, அல்லாது எங்களையும் தனது பிரஜைகள் என்று கூறிக்கொண்டு எங்கள் தலைகளின் மீதே குண்டுகளை வீசிக் கொண்டிருக்கின்ற ஸ்ரீலங்கா விமானங்களில் இருந்து எங்களுடைய உயிர்களைக் காப்பாற்றுவதற்காக நாங்கள் பதுங்கு குழிகளில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

"குண்டு விழுந்த இடத்திற்குப் பக்கத்தில் இருந்த எங்களுக்கு அவ்வளவு சேதம் இல்லை... ஆனால், இதிலை இருந்து 50 மீற்றர் தூரத்திற்கு அப்பால் தள்ளி இருந்த தில்லையம்பலம் என்பவர் பொம்மர்களின்ரை சத்தம் கேட்டவுடனை, பதுங்கு குழிக்குள்ளை ஓடிப் போவதற்காக வாசலுக்குப் போகவும், இங்கை போட்ட குண்டுகளின் சிதறல்கள் விழுந்து வெடித்து, அவருடைய தலையைக் கிழித்துக் கொண்டு சென்றதாலை அந்த இடத்திலேயே துடிதுடித்துச் செத்துப் போயிட்டார்..."

மயோன்ராசா இதனைச் சொல்லிக் கொண்டிருக்கும் பொழுதே,குண்டு வீச்சினால் இறந்த தில்லையம்பலத்தின் மகன் ஜெயராஜ் அந்த வழியால், எங்களையும் கடந்து கொண்டு, சோர்ந்த முகத்துடன் போய்க்கொண்டிருந்தார். அப்பொழுது, மயோன்ராசா அவரை அழைத்து, எங்களுக்கு அறிமுகப்படுததினார்.

"எங்கடை ஐயா அந்த வீட்டிலை இருந்து பொம்பர் விமானங்களைக் கண்டதும், பங்கருக்குள்ளை ஓடிப்போற நேரத்திலை தான் இதிலை குண்டு விழுந்ததாலை ஏற்பட்ட அதிர்ச்சியினாலை தூக்கி எறியப்பட்டதோடை தலையிலும் பெரிய காயம் ஏற்பட்டு கொஞ்ச

நேரத்திலை சீவன் போயிற்றுது..."

ஜெயராஜ் இதனைக் கூறியதும், அந்தக் குண்டின் அமுக்க அதிர்வுகளின் தாக்கத்தை நினத்து ஆச்சரியப் பட்டேன்.

"இதே மாதிரித் தான்,அந்த வீட்டிற்குப் பின்புறமாக உள்ள வீட்டிலையும் ஒரு சம்பவம் நடந்தது."

அந்த அதிர்ச்சியான அனுபவத்தில் இருந்து மீள்வதற்கு முன்னரே, மயோன் எங்களுடைய தலையில் இன்னுமொரு குண்டைப் போடுவதற்குத் தயாரானார்.

" என்ன அது.? " அங்கே நின்ற மூன்று பேரும் ஒரே நேரத்தில் வியப்புடன் வாயைப் பிளந்தோம்.

" ஓம் மாஸ்ரர்... அது பெரிய பரிதாபகரமான ஒரு சம்பவம்... ரமணி என்ற இளம் பெண், விமானங்களைக் கண்டதும், தனது இரண்டு மாதக் குழந்தையையும் தூக்கிக் கொண்டு பதுங்குகுழியை நோக்கி ஓடிப் போக,அவரைத் தொடர்ந்து அவரது வயதான தாயும் ஓடிச்சென்றார்கள். பதுங்கு குழியின் வாசலை அடைந்ததும், ரமணி, குழியினுள் இறங்குவதற்கு வசதியாக, அவளுடைய தாய்,குழந்தை கஜனியைத் தன் கையில் வாங்கிக் கொண்டிருந்த நேரத்தில், பொம்பரிலை இருந்து போடப்பட்ட பாரிய குண்டு விழுந்து வெடித்து, அப்பொழுது ஏற்பட்ட அதிர்ச்சியில் அவரது கையில் இருந்த குழந்தை அதில் இருந்து சுமார் பத்து அடி தூரத்திற்குத் தூக்கி வீசப்பட்டது.... கஜனியை அன்று இரவே மந்திகை வைத்தியசாலைக்குக் கொண்டு போய்ச் சேர்த்த சிறிது நேரத்திற்குள்ளேயே அவர்களுடைய கண்ணுக்கு முன்னாலேயே இறந்து போய்விட்டது."

குழந்தையின் தலையில் ஏற்பட்ட பலமான காயத்தினால், நீள்வளைய மையவிழையம் பாதிக்கப்பட்டு இறந்து விட்டதாகப் பின்னர் அறிந்தோம்.

"இப்போ அந்தக் குழந்தையின் தாய் ரஜனியும், அவருடைய வயதான தாயும் எங்கே இருக்கினம்?"

"இந்தக் குழந்தைதான அவவுடைய ஒரே பிள்ளை.. மந்திகையில் இறந்து போனதும், அங்கேயே புதைத்து விட்டார்களாம்.. அதற்குப் பிறகு அந்த இடத்திலேயெ இருந்து இரண்டு நாட்கள் வரை அழுது கொண்டிருந்ததுகளாம். அதற்குப் பிறகு அவர்கள் எங்கை போனார்கள் என்று தெரியேல்லை."

மயோன்ராசா இதனைச் சொல்லும் பொழுதே அந்த இளம் தாய் தனது ஒரே பிள்ளையையும் இழந்து தவித்த வேதனையை எங்களால் நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை. அந்தத் தயரம் நிறைந்த கதைகளைக் கேட்டு உள்ளம் வெதும்பியபடி, அந்த இட்ததை விட்டு அகன்று, மீண்டும் வலவெட்டித்துறை சந்திப் பகுதியை நோக்கி நடந்தோம். அப்பொழுது, எங்களுடன், அந்தப் பகுதியின் பொறுப்பாளராக இருந்த சங்கிலியன் என்பவரும் எங்களுடன் சேர்ந்து கொண்டார்.

" நானும் இப்படித்தான் பொம்பர் வருகுது எண்டவுடனை, ஒரு பிளாற்றுக்குக் கீழை ஓடிப்போக. அம்மன் கோயிலடி, மோர் மடத்திற்கு அப்பால் விழுந்த குண்டு ஒன்று, வெடித்ததில் நானும் ஆறு அடி தூரத்திற்குத் தூக்கி எறியப்பட்டேன். அப்படியே விழுந்து கிடந்தபடி காதுகளைப் பொத்தியபடி அந்தத் திசையையே பார்த்துக் கொண்டு இருந்தேன்.. அந்தக் குண்டு விழுந்த இட்ததிலை சுமார் பதினைந்து அடி உயரத்திற்கு நெருப்புக் கோளம் போல செந்நிறமாகப் புகை மண்டலமாக இருந்தது... அந்தப் புகை மண்டலம் இரண்டு மூன்று நிமிடங்கள் வரை இருந்தது..."

சங்கிலியன் முதல்நாள் விழுந்த குண்டில் இருந்து மயிரிழையில் உயிர் தப்பிய அனுபவத்தைக் கூறும்பொழுது, எங்களுக்கு மெய்சிலிர்த்தது. சங்கிலியன் என்பவர் அந்தப் பிரதேசத்தின் அரசியல் வேலைத் திட்டங்களைக் கவனிப்பதற்காக நியமிக்கப்பட்டவர். அவருடைய கடமை அந்தப் பிரதேசத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற மக்களுடைய அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதும், அவர்களிடையே ஏற்படும் பிணக்குகளைத் தீர்ப்பதில் உதவியாக இருப்பதுமாக இருந்ததால், குண்டு வீச்சுக்கள் இடம் பெற்ற இடங்களுக்கு நேரடியாகச் சென்று பாதிகப்பட்ட மக்களுக்கு உதவும் பணியில் அமர்த்தப்பட்டிருந்தார்.

"சங்கிலியன்! நீங்கள் கடைசி நேரம் வரை இந்த ஊரிலையே நின்றனீங்களோ?"

"ஓம். முதல் நாள் இருபதாம் திகதியில் இருந்து, 23 ஆம் திகதி வரை குண்டுத் தாக்குதல் நடந்து கொண்டிருக்கேக்கை இங்கைதான் நான் நின்றிருந்தனான். காயப்பட்டவர்களை எல்லாம் நானும் சேர்ந்து தான் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோய்ச் சேர்த்தனாங்கள்."

ஸ்ரீலங்காவின் நான்கு நாட்கள் "புயல்வேகத் தாக்குதல்களின் மத்தியில், அண்டசராசரமும் அதிரும் அந்த இடியோசைகளின் மத்தியில், அந்தப் பயங்கரமான ஒரு சூழலில்,தொடர்நதும் இரவு பகலாக நிற்பதற்கும் ஒரு சகிப்புத் தன்மையும் பொறுமையும் இருக்கவேண்டும்.அது சங்கிலியன் போன்ற இளைஞர்களிடம் இருந்ததால்தான், அப்பாவி மக்கள் பலரின் உயிரைக் காப்பாற்றவும் அவர்களால் முடிந்தது.

"சங்கிலியன்! மூன்றாம், நான்காம் நாட்களில் இங்கே எப்படி நிலைமை இருந்தது?"

எங்களுடன் நிலைமைகளை அவதானித்துக் கொண்டு வந்த பொன் பூலோகசிங்கம், ஆவல் மிகுந்தவராக சங்கிலியனிடம் கேட்டார்.

"மொத்தமாக 279 குண்டுகளைப் போட்டவங்கள்.. முதல் நாள் 93 குண்டுகளும்,இரண்டாம் நாள் 78 குண்டுகளும், மூன்றாம் நாள் 69 குண்டுகளும், நான்காம் நாள் 39 குண்டுகளுமாக மொத்தமாக இந்த ஊரை அழிப்பதற்காக 279 குண்டுகள் போடப்பட்டன. இவற்றில் வெடிக்காதவை 24 குண்டுகள்."

அவரது பதிலுக்கு நீண்டநேரம் யோசிக்காமலேயே மனப்பாடம் செய்தது போல் சங்கிலியன் ஒப்புவித்துக் கொண்டிருந்தார்.

தனது சொந்த நாட்டின் பிரஜைகள் மீது இவ்வளவு மிலேச்சத்தனமாகக் குண்டுகளைப் பொழிந்து அந்த மக்களையே அழிக்க முனைந்தவர்களை எமது மக்கள் எப்படி மன்னிபபார்கள்?

இந்தச் சின்னஞ்சிறிய ஒரு நகரத்தில் அதுவும் குறித்த ஒரு வட்டத்திற்குள்ளேயே 279 குண்டுகளைப் போட்டு எவ்வளவு அனர்த்தங்களையும் அழிவுகளையும் ஏற்படுத்தி விட்டன.! இவற்றுள் 40 வரையான குண்டுகள், பெற்றோலும், ரப்பர்த் துண்டுகளும் போட்டு நிரப்பப்பட்ட எரிகுண்டுகள் என்றால் உலகம் நம்புமா?

மதவடியைக் கடந்து வந்ததும், சங்கிலியன் அவசரமாக யாழ்மாவட்ட அரச அதிபரைச் சந்திக்க யாழ்ப்பாணம் செல்ல இருப்பதாகக் கூறி எங்களிடம் இருந்து விடைபெற்றுச் சென்றுவிட்டார். நாங்கள் அப்படியே நடந்து வந்து, குண்டுவர்காடு ஒழுங்கை என்ற சிறிய ஒழுங்கைக்குள் திரும்பினோம்.

"அண்ணை! இந்த ஒழுங்கைக்குள்ளையும் ஒருக்கால் போய்ப் பாருங்கோ…ஒரு குண்டு விழுந்து வெடித்து, ஏழு வீடுகள் உடைந்து போய் இருக்குது."

அந்த சிறிய ஒழுங்கையின் முகப்பில், வீதியின் அருகாகப் போடப்பட்டிருந்த தென்னங் குற்றியில் குந்திக் கொண்டிருந்த கண்ணன் என்பவர், எங்களைப் பார்த்துக் கூறினார்.

அது ஒரு சிறிய ஒழுங்கை. ஒரே நேரத்தில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் கூடச் செல்லமுடியாத அளவுக்கு ஒடுக்கமாக இருந்தது… முன்னர் "குண்டுவர்காடு" என அழைக்கப்பட்டு வந்தது. இப்பொழுது, அது பெயர் மாற்றப்பட்டு "பாஸ்கரன் வீதி" என்று பெயர் மாற்றப்பட்டு, அந்தப் பெயர்ப் பலகைதான எங்களை வரவேற்றது. அந்தச் சந்தினுள் சுமார் பத்து வீடுகள் வரை இருக்கும். அந்த அளவுக்கு மிக நெருக்கமாகக் கட்டப்பட்டுள்ள அழகான கல்வீடுகள், ஒன்றுடன் ஒன்று தொடராக இருந்தன.

குண்டு விழுந்த வீட்டின் வாசலில் போய் நின்றேன். அப்பொழுது, அந்த வீட்டின் உரிமையாளரான, தில்லைநடராஜசிவம் ஜெயந்தி என்பவர் எங்களைப் பார்த்துச் சிறிது புன்முறுவலுடன் வந்தார். நாங்கள் வரும் பொழுது,அவரும்,அவருடைய தாயும் மற்றும் சிலரும் சேர்ந்து கட்டட இடிபாடுகளுக்கிடையில் இருந்து எதையோ தேடிக் கொண்டிருந்தார்கள்.

"வாருங்கோ மாஸ்ரர்...! என்னை நோக்கி வந்த ஜெயந்தி, சிரித்துக் கொண்டே, அந்த உடைந்த வீட்டீற்குள்ளே அழைத்துச் சென்றார்.

அந்த வீட்டின் ஒரு மூலையில், ஒரு வயோதிபர், குந்தி இருந்தபடியே தட்டுத் தடுமாறியபடி, எதையோ தேடிக் கொண்டிருந்தார்.

"அந்தத் தாத்தா என்ன செய்து கொண்டிருக்கினறார்..?" நான் சிரித்தபடியே என்னுடன் நின்ற ஜெயந்தியைப் பார்த்துக் கேட்டேன்... என்னைக் கண்டதும், அந்த முதியவர் தேடுவதை நிறுத்திவிட்டு, என்னையே கண்கொட்டாது பார்த்தபடி இருந்தார்.

"இவர் எங்கடை கொப்பாட்டன். கந்தசாமி... இவருக்கு இப்ப வயது தொண்ணூற்றி மூன்று வயதாயிற்றுது மாஸ்ரர். இவ்வளவு குண்டு வீச்சுக்குள்ளையும், எங்கடை குசினிக்குள்ளை இருக்கிற போறணைக்குக் கீழேயே இருந்திருக்கிறார்."

ஜெயந்தி, இப்படிக் கூறியதும், எனக்கு ஆச்சரியமாகத்தன் இருந்தது... அடுக்களையினுள் இருந்த போறணையின் கீழ்ப்பகுதியைத் தவிர, அந்த வீட்டின் ஏனைய பகுதிகள் எல்லாமே, இடிந்து தூள் தூளாகிகக கிடந்தன... தளபாடங்கள் உடைந்து சிதறிப்போய் இருந்தன. பிள்ளைகளின் பாடசாலைப் புத்தகங்கள், கொப்பிகள் எல்லாம் அங்குமிங்கும் பரவிக் கிடந்தன. நான் மெதுவாக அந்த வயோதிபருக்கு அருகில் போய் நின்றேன்.

"அப்பு!. என்ன செய்யிறியள்?" நான் கேட்டது,அவருக்கு விளங்கவில்லையோ என்னவோ, என்னுடைய முகத்தைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தார்

"மாஸ்ரர்!.. அவருக்குக் காது கேட்காது... கொஞ்சம் சத்தம் போட்டுப் பேசினால்தான் கேட்கும்.."

ஓம்!. அதுதான் அவராலை இத்தனை குண்டு வீச்சுக்களுக்கும் மத்தியிலும், எதுவுமே நடக்காதது போல் இருந்திருக்கின்றார். சாதாரண பட்டாசு வெடிக்கே காதைப் பொத்தியபடி அலறிக் கொண்டிருக்கின்ற போது, இவர் இத்தனை அதிர்வுகளுக்கும் மத்தியில் எந்தவித சலனமுமில்லாது இதற்குள் இருக்கின்றார் என்றால், அது கூட அவருக்குக் கடவுள் கொடுத்த கொடை என்றுான் கூறவேண்டும்... இந்த நாட்டிலை வாழ்கின்ற தமிழர்கள் எல்லோருமே கண் பார்வையற்றவர்களாகவோ, வாய் பேசாதவர்களாகவோ, அல்லது காது கேளாதவர்களாகவோ இருந்து

விட்டால் எங்களைச் சுற்றி என்ன நடக்கின்றது என்று தெரியாமலேயே நடைப் பிணங்களாக வாழ்ந்து விட்டுப் போயிருக்கலாமே... என்ன செய்வது, எங்களை உணர்வுள்ள மனிதர்களாக அல்லவா இறைவன் படைத்து விட்டான்..!

"அப்பு.! இந்தக் குண்டுச் சத்தத்திற்கை இருந்து, எப்பிடியோ தெய்வாதீனமாகத் தப்பிவிட்டியள். இப்ப இதிலை இருந்து என்னத்தைத் தேடிக் கொண்டிருக்கிறியள்..?" நான் அவருக்குஅருகில் மிக நெருக்கமாகச் சென்று சிறிது உரத்த குரலிலேயே கேட்டதும், நான் பேசுவதை அவர் விளங்கிக் கொண்டார் என்பதை அவரின் முகபாவனையின் மூலம் அறிந்து கொண்டேன்.

"என்ரை சாமான்கள் எல்லாம் சிதறிப்போய்க் கிடக்குது..... அதுதான் தேடிஎடுத்துக் கொண்டிருக்கிறன்"

கந்தசாமி தாத்தாவுக்குக் காதுகள் கேட்காது விட்டாலும், நல்ல கூர்மையான பார்வை இருந்தது.

"அப்பு!. இந்தக் குண்டு வீச்சுக்களுக்குள்ளை பயப்படாமல் எப்படி இருந்தனீங்கள்?" அடக்கமுடியாத ஆவல் ஒருபுறம், இதற்குள் இருந்து எந்தவித ஆபத்துமில்லாது தப்பி இருந்த வியப்பு மறுபுறமுமாக இருந்தது... அந்தப் பேராபத்தில் இருந்து தப்பிப பிழைத்ததும் அற்புதம்தான். நான் இப்படிக் கேட்டதும், அவரும் தன்னுடைய கதையைக் கூறத் தொடங்கினார்.

"தம்பிமாரே! பொம்மருகள் வருகுது எண்டு பிள்ளைகள் கத்திக் குளறிக் கொண்டு போகேக்கை என்னையும் கேட்டதுகள். முளங்கால் சில்லுக்குள்ளை ஒரு வாதக்குணம் இருந்ததாலை, என்னலை நடக்கமுடியாது என்று சொல்லிவிட்டு, நான் குசினிக்குள்ளை போய், அப்படியே போறணைக்குள்ளை குந்தி இருந்து கொண்டு எல்லாத்தையும் பார்த்துக் கொண்டு இருந்தனான். முதல் குண்டு இதிலை விழுந்தவுடனை, என்னை இரண்டு தரம் தூக்கி எறிஞ்சுபோட்டுது. அதனைத் தொடர்ந்து பொலபொலவென்று எல்லாம் கொட்டுப்பட்டது. அதுக்குப் பிறகும் குண்டுகள் விழ, மண்ணும்,கல்லும் எங்கையோ இருந்து விழுந்து தெறித்துக் கொண்டிருந்தது . அந்த மூன்று நாளும் இதுக்குள்ளைதான் பதுங்கி இருந்தனான் . எல்லாம் முடிஞ்சதுக்குப் பிறகு, சனம் வரத் தொடங்கியதும், மெதுவாகத் தவழ்ந்து தவழ்ந்து வந்து ஒழுங்கை வாசல் வரை வந்துவிட்டன். அங்கனேக்கை நின்ற பெடியங்களைக் கூப்பிட்டு, அவங்கடை உதவியோடை பொலிகண்டிக்குப் போய்விட்டன்.."

அந்தத் திகில் நிறைந்த நாட்களை அவர் எப்படிக் கழித்தார் என்பதைச் சாதாரணமாகக் கூறிக்கொண்டே, வெற்றிலையை உமிழ்ந்தபடி இருந்தார்.

அவருக்குக் காது கேட்காது இருந்தபடியால், அதிர்ஸ்டவசமாக, குண்டுத் தாக்கங்களின் பலமான ஓசைகளை அவர் உணரவில்லை.



"அப்புவுக்கு நாங்கள் ஓடிப்போகேக்கை, பிஸ்கற்றையும் தண்ணியையும் கொடுத்து, வெற்றிலைப் பெட்டியையும் பக்கத்திலை வைத்துவிட்டுத் தான் நாங்கள் ஓடிப்போனனாங்கள். அவராலை வரஏலாது என்றதாலைதான் அந்த அம்மாளாச்சியிலை பாரத்தைப் போட்டுவிட்டுப் போனனாங்கள்.


" அந்த 93வயது முதியவரின் நான்காவது தலைமுறையில் வந்த ஜெயந்தி சிரித்தபடி கூறிக்கொண்டே, அவரது கொள்ளுப்பாட்டனான கந்தசாமியின் தலையைத் தடவிக் கொண்டிருந்தார்.


"எங்கடை அப்புவுக்கு வெற்றிலை என்றால் போதும். வேறை ஒரு சாப்பாடும் தேவையிலலை. நாள் கணக்காக ஒன்றுமே சாப்பிடாமல் இருப்பார்."

ஜெயந்திக்கு அருகில் நின்ற அவளுடைய சகோதரன் பாலமுகுந்தன் வேடிக்கையாகக் கூறிக் கொண்டிருந்தான். அவர்களது உரையாடல்கள், அந்த முதியவருக்குப் புரிந்ததோ இல்லையோ, தன்னைப் பற்றித் தான் பேசுகின்றார்கள் என்பதை விளங்கியவராக அவரும் சேர்ந்து தன் பொக்கை வாயைக் காட்டிச் சிரித்துக் கொண்டிருந்தார்.

அழிந்த வல்வை நகரத்தின் சிதைவுகளைப் பார்க்கும் பொழுது, துயரம் வாட்டினாலும், இவைபோன்ற உறவுகள் ரீதியான சம்பவங்களையும், உரையாடல்களையும் பார்க்கும் பொழுது, மனதுக்கு ஒரு சுகத்தையும் கொடுத்தது.!



# 19. வல்வையை வதைத்த அரசு சாதித்தது என்ன...?

தொடர்ந்து மூன்று நாட்களாக வல்வெட்டித்துறையை வதைத்து வந்த கோரத்தனமான குண்டுவீச்சுக்களின் தாக்கம், நான்காவது நாளாகச் சிறிது குறைந்திருந்தாலும், அன்று காலை 6.30 மணியில் இருந்து, பிற்பகல் 12.40 மணிவரை, வல்வெட்டித்துறையைச் சுற்றிப் பரவலாகப் போடப்பட்ட குண்டுகளின் அதிர்வுகள் அந்த நகரத்தைக் கலக்கிக் கொண்டே இருந்தன.

நான்காவது நாள் போடப்பட்ட முதலாவது குண்டு,வல்வை சிவன் கோயிலுக்குசி சிறிது தள்ளி மேற்குப் புறமாக உள்ள இராஜேஸ்வரியின் வீட்டில் விழுந்து வெடித்துச் சிதறியது.டன்,அந்த அழகான கல் வீட்டை உடைத்துத் தரைமட்டமாக்கியது.அவரது கணவர் தபால் தந்தித் திணைக்களத்தில் வேலை பார்க்கும் சாதாரண அரசாங்க ஊழியர்.அந்த உடைந்த வீட்டின் சிதைவுகளுக்குள் இருந்து, வீட்டுப் பொருட்கள் ஏதாவது உருப்படியாக எஞ்சி இருக்குமா என்று தேடிக் கொண்டு இருந்தார

"இப்பிடி ஒரு வீட்டை இனிமேல் எங்கடை வாழ்நாளிலை கூடக் கட்டமுடியுமா? நாங்கள் எடுக்கிற சம்பளத்திலை வீட்டுச் சீவியமே மட்டுமட்டாகப் போகுது. ஆனால் எங்கடை வீட்டை உடைச்சுத் தரைமட்டமாக்கினதுக்காக, இனி என்ன சாகிறதோ...? ஏதோ ஓலைக் கொட்டிலைப் போட்டுத்தன்னும், இந்த இடத்திலைதானை வாழ வேண்டும் .! ஈவிரக்கம் இல்லாமல் எங்கடை வீட்டை இப்படித் தரைமட்டமாக்கிப் போட்டாங்கள்... எளிய நாய்கள், சேக், இவங்களோடை சேர்ந்து எப்படி ஒற்றுமையாய் வாழலாம்"

தனது உடைந்து போன வீட்டின் இழப்பினால் ஏற்பட்ட துயரத்தின் மத்தியிலும்,அவரின் உறுதி குலையாத அந்த வார்த்தைகள் என்னைப் புல்லரிகக வைத்தன ..அந்த வலியைத் தந்த சிங்கள பேரினவாத அரசின் மீது,தனது ஆத்திரத்தைக் கொட்டித் தீர்த்தார்.

சிவன்கோயிலுக்கு மேற்குப்புறமாகச் செல்லும் பூச்சி முத்தான், றோட் வழியாகப் போகும் பொழுது, அங்கிருந்து சுமார் 150 மீற்றர் தூரத்தில் சுப்பிரமணியம் மாஸ்ரர் நின்றார். இவர் வல்வெட்டித்துறை சிவகுரு வித்தியாசாலையில் உப அதிபராகக் கடமையாற்று கின்றார்.

"என்னுடைய இரண்டு வீடுகளும், பயிர் செய்து கொண்டிருந்த தோட்டமும் அப்படியெ நாசமாகிப் போட்டுது. இந்த இடத்திலை வந்து ஏன் குண்டைப் போட்டாங்களோ? இதிலை விழுந்த குண்டுச் சத்தத்தாலை,

ஏற்பட்ட அதிர்ச்சியாலை எனது மனைவிக்கு மாரடைப்பு வந்து, மந்திகை வைத்தியசாலையிலை விட்டிருக்கிறம்."

வல்வெட்டித்துறை சிவன் கோயிலை இலக்கு வைத்துப் போடப்பட்ட பல நூற்றுக்கணக்கான குண்டுகளின் இரண்டு தான் தவறுதலாக இவரது வீட்டின் மேல் விழுந்தது, என்பதை அவர் சிலவேளை அறியாதும் இருக்கலாம். சுப்பிரமணியம் மாஸ்ரரைத் தொடர்ந்து, அவருடைய மூன்று மகள்களும் வரிசையாக நின்றார்கள். நான்காம் நாள் பூச்சிமுத்தான் பகுதியில் போடப்பட்ட இரண்டு குண்டுகளில், ஒரு குண்டு விழுந்ததில் அவரது இரண்டு வீடுகளையும் நிர்மூலமாக்கிவிட்டிருந்தது. மற்றைய குண்டு அவரது வீடுகளுக்கு எதிர்ப்புறமாக இருந்த, வெங்காயத் தோட்டத்தில் விழுந்து வெடித்துச் சிதறியதில், அறுவடைக்குத் தயாரான நிலையில் இருந்த வெங்காயப் பயிர்கள் கருகிக் கிளறிய நிலையில், காணப்பட்டது.

சுப்பிரமணியம் மாஸ்ரரின் உடைந்த வீடுகளையும், அழிந்து போன பயிர்ச் செய்கை நிலத்தையும் பார்த்துவிட்டு, திரும்பி கம்பர்மலையை நோக்கி, நடந்து வரும் பொழுது, பூதத்தம்பி குமரகுரு எங்களை வழிமறித்து,

"மாஸ்ரர்!. எங்கடை வீட்டையும் ஒருக்காப் பார்த்துவிட்டுப போங்கோ." என்று கூறி என்னையும், என்னுடன் கூடவந்தவர்களையும் அழைத்தார். அவர் ன்னுடைய பள்ளித் தோழனாக இருந்ததாலோ என்னவோ என்னை உரிமையுடன் அழைத்ததும், அவருடைய வீட்டுக்குள் போவதற்குத் தயாரான போது, அங்கே நின்ற இன்னுமொரு வயதானவர்,

"ஐயா! போகேக்கை ஒருக்கால் எங்கடை வீட்டையும் பார்த்துப் பதிந்து பொட்டுப போங்கோ.." என்று கூறி அங்கே எங்களுக்கு அருகில் வந்து நின்றார்.

"ஐயா!. நாங்கள் நிவாரணம் ஏதும் கொடுக்கிறதுக்காக வரவில்லை, அது கச்சேரியாலை வந்து பதிவினம், இந்த அரசாங்கத்தின் கொடுமைகளைப் பார்தது சர்வதேசத்திற்குத் தெரியப்படுத்துகிறதுக்காகத் தான் பார்க்க வந்திருக்கிறம்." என்னுடன் கூட வந்த பொன்.பூலோகசிங்கம் சிரித்தபடி கூறிக்கொண்டே குமரகுருவின் வீட்டிற்குள் சென்றோம்.

ஒவ்வொரு தடவையும் இப்படி அரச பயங்கரவாதத்தினால் ஏற்படுத்தப்படுகின்ற அழவுகளைத் தொடர்ந்து, ஏதாவது நிவாரணமோ, நட்டஈடுகளோ கிடைக்காதா என்று, அலைந்து திரிந்து, எதுவுமே அரசாங்கத்தினாலோ அல்லது வடக்கு கிழக்கில் நிவாரணப்பணிகளைச் செய்வதாகக் கூறிகொள்ளும் அரசசார்பற்ற நிறுவனங்களாலோ, எந்த உதவிகளும் கிடைக்காது சலித்துப் போய் இருக்கும் மக்களின் மீது, மீண்டும் மீண்டும் சொத்து அழிப்புக்களினால் எதாவது நிவாரணங்கள் கிடைக்குமா என்று இலவு காத்த கிளிகள் போலக் காத்திருக்கும் அந்த மக்களில் ஒருவராக அவர் இருந்தார்.

"பரவாயில்லை ஐயா!. எங்கடை இழப்புகளுக்கு இவங்கள் எங்கை நட்டஈடுகள் தரப்போறாங்கள். எங்கடை ஆறதலுக்காகத் தன்னும் சும்மா வந்து பார்த்துப்போட்டுப போங்கோ."

குமரகுரு எங்களைப்பார்த்து இப்படிக்கூறியதிலும் ஒரு காரணம் இருந்தது என்பதை அவரது வீட்டிற்குள் போய்ப் பார்த்ததும் தான் புரிந்து கொண்டோம். அவரது வீட்டிற்குள் போனதுமே திகத்துப்போய்விட்டோம் . உண்மையிலேயே அவருடைய வீடு மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்தது. அதனை விட அவரது வீட்டின தொழுவத்தில் நின்ற நான்கு பசு மாடுகள் குண்டு வீச்சினால், வயிற்றுப்பகுதியில் காயம் ஏற்பட்டு குடல் வளியே வந்த நிலையில், இறந்து போய்க்கிடந்தன . அவற்றை ஆழமான குழிகள் எடுத்துப் புதைப்பதற்கே ஆயிரம் ரூபா கூலிகொடுத்ததாகக் கூறினார். அவரது வீட்டின் கிழக்குப் புறமாக விழுந்து வெடித்த குண்டின் தாக்கத்தினால், ஒரு பாரிய குழி ஏற்பட்டிருந்தது. அவருடைய வீட்டின் கொல்லைப் புறமாகச் சற்றுத் தள்ளி இறந்த பசுமாடுகளைப் புதைத்திருந்ததனால், மழைபெய்திருந்ததால், அந்தக் குழியில் இருந்து வந்த நாற்றம் வயிற்றைக் குமட்டிக் கொண்டு வந்ததால், எங்களுடைய கைக்குட்டைகளினால் வாயையும் மூக்கையும் மூடியபடியே அந்த இடத்தைப் பார்வையிட்டோம்.

"எங்கடை வீடு குண்டு போட்டு அழிந்ததிலையும் கவலைப்படவில்லை. நாங்கள் கடவுளுக்குச் சமமாக மதித்து, ஆசையோடு வளர்த்து வந்த நாலு பசுமாடுகளையும் அநியாயமாகக் கொன்றுபோட்டாங்கள். அதிலை ஒன்று கன்று ஈனுகிற மாதம், அது செத்துக் கிடக்கேக்கை, கன்றின்ரை தலைப்பகுதி வெளியே நீட்டிக் கொண்டிருந்ததைப் பார்கக எவ்வளவு வேதனையாக இருந்தது. இந்த அறுவான்கள் இப்படியெல்லாம் செய்து என்னத்தைச் சாதித்துப் போட்டாங்கள்? "

அவருடைய பசு மாடுகளை இழந்துவிட்ட அந்தத் துயரத்தின் வேதனையை அவர்வெளிக்காட்டிக் கொண்டிருந்தார். துயரத்தினால், அவருடைய கண்கள் கலங்கிக் கொண்டு வந்ததையும் அவதானித்தேன்.

எங்களுடைய மக்கள், மனிதர்களைப் போல், மிருகங்களையும் எவ்வாறு நேசிகிக்னறார்கள் என்பதை, அவருடைய அந்த உணர்வுகள் வெளிககாட்டிக் கொண்டிருந்தன.

"ஆம்!.. அவர் ஒரு இந்துவாக இருப்பதால், மாட்டையும் கூட சிவனின் அம்சமாக மதித்து வணங்கும், மன உணர்வைக் கொண்டிருக்கின்றார்." குமரகுரு இறந்து போன தனது மாடுகளுக்காகக் கண்ணீர் விட்டுக் கொண்டிருக்கின்ற இந்த நகரத்தில் சுமார் 38 இந்து ஆலயங்கள் இருந்ததபோதும், இந்து பண்பாடு, கலாசாரத்தையே சீரழிக்கும் வகையில்,

சுமார் 15 மாட்டுக் கொத்துரொட்டிக் கடைகள் காணப்படுகின்றன என்றால், இங்கே இந்துவாக வாழ்கின்ற மக்களின் பண்பாடு எங்கே போய்க் கொண்டிருக்கின்றது என்பது தான் புரியவில்லை. சிவனின் ஒரு அம்சமான மாடுகளை அவற்றை இடப வாகனங்களாகவும், இராசிகளாகவும் போற்றி வணங்கப்படுகின்ற நேரத்தில், அவற்றைக் கதறக்கதற அடித்துக் கொன்று அவற்றின் தசைகளையும் எலும்புகளையும் உண்டு ஏப்பம் விட்டுக் கொன்று சிவன்கோயிலுக்குச் சென்று தேவாரம் பாடுகின்ற, இந்துக்களை இங்குதான் பார்க்கலாம் என்றால், இவ்வளவு இந்து ஆலயங்கள் இருந்துதான் என்ன பயன்?

எங்களுடைய பண்பாடுகள், பழக்கவழக்கங்கள் எல்லாம் காற்றில் பறக்க விடப்படுவதை எண்ணி, எனக்குள் கவலைப்பட்டுக்கொண்டு, அவரது வீட்டில் இருந்தும் வெளியேறி, தீருவில் மாவீரர் நினைவுத் தூபியையும் கடந்து, அங்கிருந்து, மாவீரர் வீதியூடாக நடந்து சென்று, பிரதான வீதியை அடைந்தபொழுது, இடையில் எங்களுடன் வெங்கடேஸ் என்பவரும் சேர்ந்து கொண்டார். இவர் அப்பொழுது பருத்தித்துறை நகராட்சி மன்றத்தில எழுதுவினைஞராகக் கடமையாற்றிக் கொண்டிருந்தார்.

"வெங்கடேஸ்... இப்படியே போய், நடராஜா வீதியையும், கொத்தியாலையும் பார்த்துவிட்டுப் போவம் வாருங்கோ..." அவரையும் அழைத்துக் கொண்டு கொண்டல் கட்டை ஒழுங்கையினூடாகச் சென்று, நடராஜா வீதியை அடைந்தோம். அங்கே மூன்று குண்டுகள் வரை போடப்பட்டதாக அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள் தெரிவித்தனர்... அந்தத் தாக்கத்தினால் சுமார், பத்து வீடுகள் வரை சேதமடைந்திருந்தது..

அங்கே, அந்த வீதிவழியாகப் போய்க் கொண்டிருந்தபொழுது, ஆர்.எஸ்.வேலும்மயிலும் என்ற ஓய்வு பெற்ற தபால் அலுவலரைச் சந்தித்தோம். தனது உடைந்துபோன வீட்டில் இருந்து, ஒரு உரப்பையினுள் எடுக்கக்கூடிய பொருட்களைத் தேடித்தேடிப் பொறுக்கிக் கொண்டிருந்தார்.

"முதல்நாள், எங்கடை ஊரைச்சுற்றிக் குண்டு வீச்சு விமானங்கள் சுற்றிவந்ததைக் கண்டதும், நானும் என்னுடைய மகளும், இன்னுமொருவருமாக ஓடிப்போய்ப் பதுங்கு குழியினுள் போய் இருந்ததும் சிறிது நேரத்தில் நாங்கள் குந்தியிருந்த பதுங்கு குழியின் சுவர், பலமாக அதிர்ந்தது. அடுத்த கொஞ்ச நேரத்திற்குள்ளை என்னுடைய வீடும், பக்கத்தில் உள்ள வீடும், படபடவென்று சரிந்து விழுகின்ற சத்தம் கேட்டதும், எங்கடை பங்கரின் வாசல் பகுதி அப்படியே மூடப்பட்டு விட்டது. விமானங்கள் பறந்து கொண்டிருக்கிறதோ, அல்லது குண்டுகளைப் போட்டுக் கொண்டிருக்கிறதோ என்று கூட எங்களாலை உணர முடியவில்லை. எங்களைக் காப்பாற்றுங்கோ! காப்பாற்றுங்கோ என்று தொண்டை கிழியக் கத்திக் கூச்சலிட்டுக கொண்டிருந்தோம். ஆனால் அந்தச் சத்தம் வெளியே யாருக்கும் கேட்டதாகத் தெரியிவல்லை. பிறகு அரைமணிததியாலத்திற்குப் பிறகு,

பெடியயங்கள் வந்து,ஒரு சந்தேகத்திலை, எங்கடை பங்கரைத் தோண்டிப்பார்த்ததாலை நாங்கள் கத்திக் கொண்டிருந்ததைக் கண்டுவிட்டார்கள். உடனடியாக மண்ணையும் கல்லையும் தோண்டி எடுத்து எங்களை வெளியேற்றினார்கள்."

அவர் மூச்சு இரைக்க இரைக்கக் கூறிக் கொண்டிருந்தபொழுது, அவரை ஆச்சரியத்துடன் பார்த்தேன். வேலும் மயிலும், "பெடியன்கள்" என்று குறிபபிட்டது தமிழீழவிடுதலைப் புலிகள் இயக்கத்தின் போராளிகளைத் தான் என்பதை அங்கே நின்றவர்கள் உணர்ந்து கொண்டனர். குண்டுகள் போட்பபட்ட இடங்களில் உடனடியாக அந்த இட்டதிற்கு முதலுதவித் தொண்டர்கள், ஓடிச் சென்று உதவிகளைச் செய்து வந்ததால், பல உயிர்களைக் காப்பாற்றக்கூடியதாக இருந்தது.

"அண்ணை! உங்களையெல்லாம் இப்படிக் குண்டுகளை வீசி வீசியும், ஊரை விட்டு இடம்பெயரச் செய்தும் கொஞ்சம் கொஞ்சமாகப் பக்குவப்படுத்திக் கொண்டு வாறாங்கள்தானே?" நான் சிரித்துக் கொண்டே கூறியதும்,

"ஓம்! ஓம்!. இப்படிக் குண்டுகளை வீசி எங்கடை கட்டிடங்களை அழிக்கிறதாலை எங்களை எதுவும் செய்துவிடமுடியாது. அதுக்காக நாங்கள் எண்டைக்குமே சோரம் போகமாட்டோம்."

அவர், எங்களைப் பார்த்து ஒரு அர்த்தத்துடன் சிரித்துக் கொண்டார். அடுத்தடுத்து ஒருவருக்குத் துன்பத்தைக் கொடுத்துக் கொண்டிருந்தால், ஒரு நிலையைக் கடந்ததும், பொறுமையும் எல்லை கடந்த நிலையில், தன்னம்பிக்கையும் ஒரு ஆவேசமும் தோன்றும் பொழுது, பயங்கரமான விளைவுகளைச் சந்திக்கவேண்டிய நிலை ஏற்படலாம் என்பதை வேலும்மயிலும் அவர்களின் உறுதியான பதிலில் இருந்து தெரிந்து கொண்டேன். அவரது அந்த உறுதியான நிலைப்பாடு, எந்தத் துயரத்தையும், தாங்கிக் கொள்ளும் சக்தியை அவருக்குக் கொடுத்திருக்கின்றது.

அவரது வீட்டில் இருந்து, சுமார் 25 மீற்றர் தூரத்தில் உள்ள கடற்கரையோரமாக உள்ள வல்வை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையின் மீது, குண்டு போடப்பட்டதால், கட்டடத்தின் ஒரு பகுதி சேதமடைந்ததுடன், நூற்றுக்கணக்கான ஓடுகளும் உடைந்து நொருங்கிக் கிடந்தன. அங்கிருந்து கடற்கரை வழியாகவே சென்று, வேம்படி ஒழுங்கையை அடைந்தோம்.

வேம்படி ஒழுங்கையில் வை-12 விமானத்தில் இருந்து அடுத்தடுத்து மூன்று குண்டுகள் போடப்பட்டதில், ஆறு வீடுகள் உடைந்து சிதறிப்போய் இருந்தன. அங்கிருந்தபடியே "கப்டன் மோகனதாஸ்" அவர்களின் வீட்டைப் பார்த்துக்

கொண்டு நின்றேன். அந்தக் காலத்திலேயே மிகவும் நுணக்கமான முறையில், மரவேலைப்பாடு களினாலும், தரைகளுக்கு ரெராசோ பதித்தும் அழகுற அமைக்கப்பட்டிருந்தது. அந்த வீட்டின் பின்புறம் விழுந்து வெடித்த குண்டு, அந்த அழகான வீட்டை அலங்கோலப்படுத்தியதுடன், அதன் அருகில் இருந்த ஐந்து வீடுகளையும் சேதப்படுத்தியிருந்தது.

கப்டன் மோகனதாஸ்- ஒரு தலைசிறந்த கப்பல் தளபதியாக இருந்து, கப்பல்களின் மூலம், பல வெளிநாட்டு துறைமுகங்களுக்கெல்லாம் சென்று வந்திருக்கின்றார். தனது சுய உழைப்புடன்,பல இலட்சக்கணக்கான ரூபாக்களை வருமானமாகப் பெற்றாலும், அந்த உழைப்பை தான் பிறந்த மண்ணின் அபிவிருத்திக்காக அர்ப்பணித்தவர். கடற்றொழிலில், நவீன முறைகளைப் புகுத்துவதிலும், இங்குள்ள படித்த இளைஞர்களுக்கு, கடல்துறையில் - நாவாய்- (Navigation) பயிற்சி அளித்து, எதிர்காலத்தில் மீண்டும், கப்பல் கட்டும் தொழிலையும், கடலோடிப் பாரம்பரியத்தையும் உருவாக்க வேண்டும் என்ற ஆவலில், அயராது உழைததவர். ஆனால் அவரது கனவுகள் நிறைவேறுவதற்கு முன்னரேயே, 1985 ஆம் ஆண்டு, பருத்தித்துறையில் உள்ள விநாயக முதலியார் வீதியினூடாக வந்து கொண்டிருந்த பொழுது, ஸ்ரீலங்கா இராணுவத்தினரால், சுட்டுக் கொல்லப்பட்டார். அவரது அந்தப் படுகொலையுடன் கப்டன் மோகனதாஸ் அவர்களின் எதிர்பார்க்கைகள், அவரது மனிதவளம், கடுமையான உழைப்பு, மற்றும் அவரது கனவுகள், எதிர்பார்க்கைகள் எல்லாமே நிர்மூலமாகிப் போய்விட்டன.

காட்டுவளவினூடாகச் சென்று கொண்டிருக்கும் பொழுது, அங்கேயும் அதே மாதிரியாகவே வீடுகள் உடைத்து நொருக்கப்பட்டன. காட்டுவளவு ஒழுங்கையில் குமாரசிறிதரன் மாஸ்ரரின் வீடும் இருந்த இடம் தெரியாமலேயே உடைந்து நொருங்கிப்போய் இருந்தது. அவருடைய வீட்டின் முன் நின்றபடி ஸ்ரீதரன் மாஸ்ரரையே பார்த்துக் கொண்டு நின்றேன். அங்கே, பாலசுப்பிரமணியம் குமாரஸ்ரீதரன் மாஸ்ரர், தனது மனைவி, மகனுடன் உடைந்த கற்குவியல்களுக்குள் இருந்து, புதையல் எடுப்பது போல், எதைஎதையோ தேடி எடுத்துக் கொண்டிருந்தார்.

அவரது நான்கு வயது மகன், கற்குவியல்களுக்குள் கையை விட்டபடி, துளாவிக் கொண்டிருந்தான்.

"என்ன மாஸ்ரர்..! உங்கடை மகன் எதையோ தேடிக் கொண்டிருக்கிறார் போல இருக்குது?

"அவர் தன்னுடைய விளையாட்டுப் பொருட்களைத் தேடிக் கொண்டிருக்கிறாராக்கும்." குமார ஸ்ரீதரன் மாஸ்ரர் இதனைக் கூறிவிட்டு, தன்னுடைய மகனை எங்களுக்கு அருகில் கூப்பிட்டார்.

அந்தப் பிஞ்சுக் குழந்தையின் எதிர்பார்ப்புக்கள் , ஏக்கங்கள் கூட, அந்த இழந்து போன வீட்டுடன் நிர்மூலமாகி விட்டனவோ?

எங்கு பார்த்தாலும் ஒரே மாதிரியாகவே இடித்து, தரைமட்டமாக்கப்பட்ட வீடுகளே கண்ணுக்குத் தெரிந்தன!

மீண்டும், மீண்டும் எரிந்து... உடைந்து போன கட்டிடங்களைப் பார்க்கும் பொழுது, சிங்கள பேரினவாதிகளும், இந்திய ஏகாதிபத்திய வாதிகளும் கூட்டாகவே சேர்த்து. தமிழர்களுக்கு எதிராக நடத்தும் மிலேச்சத்தனமான போர் வெறியின் மீதி விளைவாக அவை வல்வெட்டித்துறையின் வீதியெங்கும் சிதறிக் கிடந்தன!

நல்ல நண்பன் என்று இங்கு வாழும் தமிழர்கள் இந்தியாவை நம்பி இருந்த வேளையில் "சிறிலங்காவுடன் சேர்த்து, இந்தியா எமக்குச் செய்த துரோகம் வரலாற்றில் என்றுமே அழிக்கப்பட முடியாது! உடைத்த வீடுகளிலும், எரிந்த வீடுகளிலும் உடையாமலும் எரியாமலும் இருக்கும் படங்களை பார்க்கிறோம்.

மகாத்மா காந்தி! சுபாஸ் சந்திரபோஸ்! நேரு!.... இந்திராகாந்தி!... சுவாமி விவேகானந்தர்!.. அறிஞர் அண்ணா! இவை எந்தளவுக்கு எமது மக்கள் இந்தியாவின் மீது பற்றுக் கொண்டுள்ளனர் என்பதையல்லவா காட்டுகின்றது!

வட இந்தியாவின் ஆரியர் பரம்பரை இங்கு வாழும் தமிழர்களுக்குச் சாதகமாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பதும் தவறு என்பதை அண்மைக் காலங்களில் பிரதமர்களாக வந்த ராஜிவ்காந்தி, சந்திரசேகர் ஆகியவர்களின் நடவடிக்கைகள் கூட எமக்குத் தெளிவுபடுத்துகின்றன.

ஆனால் எமது இனத்திற்காகத் தம்மையும் தமது அரசியல் செல்வாக்கையும் தியாகம் செய்கின்ற தமிழகத் தலைவர்களான நெடுமாறன், வீரமணி, வை.கோபாலசாமி ஆகியோரை நாம் மறந்துவிட முடியாது. கடந்தவருடம் நெடுமாறனுடன் வல்வைப் படுகொலை சம்பந்தமாக சென்னையில் பட இயக்குனர் வி.சி.குகுநாதன் வீட்டில் அவருடன் பேசிக் கொண்டிருந்த பொழுது ,

"ஈழத்தின் எமது உடன் பிறப்புக்கள் எமது படையினராலேயே கொடுமைப்படுத்தப்படும் பொழுது நாம் இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறோம். சிங்களப் படையால் கொடுமைப் படுத்தப்பட்டது போதாதென்று, நமது இந்தியப் படையும் சேர்த்தல்லவா கொடுமைப் படுத்துகின்றது. ஒரு முஸ்லீம் இனம் பாதிக்கப்பட்டால் முஸ்லீம் நாடுகள் இதுவரை பார்த்துக்கொண்டிருப்பார்களா?... தமிழனாகப்

பிறந்த குற்றத்திற்காக அங்கே வதைபடுகிறீர்கள். நாங்கள் எல்லாம் இங்கே வாய் கட்டிக்கொண்டு இருக்கிறோம்"

நெடுமாறன் உணர்ச்சி வசப்பட்ட நிலையில் கூறும் பொழுது, அவர் உதடுகள் ஆத்திரத்தால் துடித்தன. கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது.

வை.கோபாலசாமி இராஜிய சபை உறுப்பினராக இருந்தும் கூட, துணிச்சலான பயணம் ஒன்றின் மூலம் ஈழத்தில் தமிழர்படும் துயரையும், இந்திய இராணுவத்தினரின் கொடுமைகளையும் நேரில் பார்த்து அனுபவித்தவர் அவரது வீட்டின் சுவரில் இன்றும் கூட தலைவர் பிரபாகரன், பிரதித் தலைவர் மாத்தயா ஆகியோரின் பெரிய உருவப்படங்களே எம்மை வரவேற்கும் அவற்றுடன் 1989 ஆம் ஆண்டு குமரப்பா புலேந்திரன் ஆகியோரின் நினைவுத் தூபி திறப்பு விழா நினைவாக உதயன் பத்திரிகையில் எங்களால், வெளியிடப்பட்ட சிறப்பு அனுபந்தம் கூட பிரேம் போடப்பட்டுத் தொங்கிக் கொண்டிருந்தது.

தமிழனுக்கு என்று ஒரு நாடு உலகத்தில் எங்காவது இருந்தால் கூட ஈழத்தில் இப்படி இனக் கொலைகள் நடக்குமா?" ஒரு தடவை வை.கோபாலசாமி அவர்கள் தனது இல்லத்தில் என்னுடன் பேசிக் கொண்டிருக்கும் பொழுது அவர் திடீரெனக் கேட்டதும் ஒரு உண்மையை அவர் உணர்த்தினார்.

ஆம்! எதிர்காலத்தில் இந்தியாவில் கூட ஒரு தனித் தமிழ் நாடு" உருவாக வேண்டும் என்பதை அவர் மறைமுகமாக உணர்த்துவது போல் இருந்தது!.

காட்டுவளவையும் தாண்டி, நெடியகாட்டை நோக்கிப் போகும் பொழுது, அரசடியில் எதிரும் புதிருமாக நான்கு வீடுகள் உடைத்து போய் இருந்தன.

அங்கே உள்ள பெரிய நூற்றாண்டு கால அரச மரம் முறிந்து சிதறிப் போய் இருந்தது, முதல் தான் குண்டு போடும் பொழுது எதிர்பாராத விதமாக அங்கே வந்து கொண்டிருந்த கந்தசாமி என்ற 65 வயதுடைய ஓய்வு பெற்ற தபால் அதிபர் குண்டுவீச்சு விமானத்தைக் கண்டதும், அரச மரத்தின் பின்னால் போய் கதைத்துக் கொள்ளவும், அங்கே விழுந்த குண்டினால் அவர் அந்த இடத்திலேயே துடிதுடித்து மரணமாணார்.

இவ்வளவு குண்டுகளையும் நான்கு நாட்களுக்குள் வல்வெட்டித்துறையில் குறைந்தது 5000 மக்களையாவது கொன்று ஒழித்துவிட வேண்டும் என்றும் நினைத்த பிரேமதாசா அரசு , கோடிக் கணக்கான ரூபாக்களைக் கொட்டித் தனது வான் படைகளை ஏவிப் பத்து அப்பாவிப் பொது மக்களைத் துடிக்கத் துடிக்கக் கொன்று, 650 வீடுகளைத் தரைமட்டமாக்கி, பத்துக்கு மேற்பட்ட பசுமாடுகளைக் கொன்று ஒரு மாபெரும் வரலாற்றுச் சாதனையைப் படைத்து விட்டது!.

ஒரு சிறிய நகரத்தில் மடட்டும் நூற்றுக் கணக்கான ஆள் சொல்லிக் குண்டுகளைப் போட்டு ஊரையே நிர்மூலமாக்கிய போதும் சிங்கள அரசு எதிர்பார்த்தது போல் உயிழப்புக்கள். இரத்தக்களரிகள் ஏற்படவில்லை!.

வல்வையின் காவல் தெய்வங்களாக இருக்கும் வல்வை வைத்தீஸ்வரரும், முத்துமாரியம்மனும், நெடியகாட்டுப் பிள்ளையாரும் புனிதசெபஸ்தியாரும் தங்கள் தலையில் குண்டுகளை ஏந்தி எமது மக்களைக் காத்து அருள்பாலித்து. இந்த ஊரின் சிறப்பு மிக்க ஆலயங்களின் பெருமையின்றி வேறென்ன இருக்க முடியும்!.

இந்தச் சந்தர்ப்பத்தில் தவத்திற்கு குன்றக்குடி அடிகளாரின்

"வல்வெட்டித்துறையில் இந்த இரு ஆலயங்களும் இருக்கும் வரையில் இந்த ஊருக்கு என்றுமே குறைவராது" என்ற அவரது தேவவாக்கை நினைத்துப் பாஉத்தும், என் உடம்பு ஒரு கணம் சிலிர்த்தது...

ஆம்! ஆண்டவனின் அற்புதத் திருக்கோலத்தை மனதில் எண்ணிப் பூசித்தபடி நெடியகாட்டையும் கடந்து வல்வை மகளிர் மகாவித்தியாலயம் வரை சென்றேன்.

வல்வெட்டித்துறையில் நீண்ட காலமாக பெண்களுக்கான ஒரு கல்லூரி தேவை என்று அரசாங்கத்திடம் விண்ணப்பங்கள், அனுப்பி எதுவுமே கிடைக்காது பராளுமன்ற உறுப்பினர்களாலும், கல்வி அமைச்சினாலும் ஏமாற்றப்பட்ட நிலையில் முழுக்க முழுக்க ஊர்மக்களினதும் சில ஊர்ப் பெரியவர்களினதும் உதவிகள், அன்பளிப்புக்களைக் கொண்டு கட்டப்பட்ட ஒரு மகளிர் கல்லூரி தான் வல்வை மகளிர் மகா வித்தியாலயம்..!

அந்தப் பாடசாலை வல்வெட்டித்துறை நகரத்தின் ஒரு அந்தத்தில் அமைந்திருந்தும், கூட அது பாடசாலை என்று இனங்கண்ட பினனர் இரண்டு குண்டுகள் வீசப்பட்டன. அந்தப் பாடசாலையின் ஆயிரக்கணக்கான ஓடுகள் சிதறிக் காணப்பட்டதுடன், விஞ்ஞான ஆய்வு கூடம் அதிபர் அலுவலகம் என்பவையும் முற்றாகவே சேதமடைந்திருந்தன.

இவ்வளவு குண்டுகள் இங்கு போட்டுத் தள்ள வேண்டிய தேவை ஏன் ஏற்பட்டது?

ஈராக் ஜனாதிபதி சதாம் ஹ/சைனின் கிராமத்தை அழித்துவிட்டு வருமாறு அமெரிக்க ஜனாதிபதி ஜோஜ் புஸ் கூறியது போல், ஶ்ரீலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவும் தனது ஆற்றாக் கொடுமையினால் தலைவர் பிரபாகரனின் , பிறந்த ஊரை அழித்துவட்டு வருமாறு தனது வான் படைகளுக்குக் கட்டளையிட்டுள்ளாரா என்ற சந்தேகமே எமது மக்கள் மத்தியில் ஏற்பட்டது.

31.1.1991ல் பி.பி.சி செய்தி முகவர் கிறிஸ்தோபர் மொறிஸ் வல்வை நகருக்கு விஜயம் செய்த பின், பிபிசி வானொலியின் உலகசேவையின் செய்தி அறிக்கையில், கருத்துத் தெரிவிக்கையில்,

> "வல்வெட்டித்துறையில் குண்டுகளை வீசி அழித்த சந்தர்ப்பத்தில், அந்த இடங்களில் எல்ரிரிஈ போராளிகளோ அல்லது அவர்களின் முகாம்களோ இருக்கவில்லை. அப்படியிருந்தும் ஸ்ரீலங்கா அரசாங்கம் பொதுமக்களின் குடியிருப்புக்களை இலக்கு வைத்து, ஏன் இப்படி ஒரு மூர்க்கத்தனமான தாக்குதலைச் செய்தது என்பது ஆச்சரியமாக இருக்கின்றது."

என்று குறிப்பிட்டபொழுது அந்த நேரம் பாதுகாப்பு அமைச்சு, தனது கண்டனத்தை வெளியிட்டதுடன் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட அழிவுகளுக்கெல்லாம் நியாயம் கற்பிக்க முற்பட்டது.

ஸ்ரீலங்கா வான்படைகளினால் வல்வெட்டித்துறை மக்களின் வீடுகளும் கடைகளும் தொழில் உபகரணங்களும் அழிக்கப்பட்ட அந்தக் கோரக் காட்சியைக் கண்டு விரக்தியடைந்த நிலையில் இருந்த என்னால், சிதைந்து போன அந்த நகரத்தின் இடிபாடுகளை மேலும் மேலும் பார்க்கமுடியவில்லை.

அன்று காலையில் இருந்தே புகைப்படப் பிடிப்பாளர் தங்கவடிவேயையும் கூட்டிக் கொண்டு பருத்தித்துறை மந்திகை வைத்திய சாலையை நோக்கி சைக்கிளில் சென்று கொண்டிருந்தோம்.

வல்வெட்டித்துறையில் இருந்து சுமார் 7 கிலோ மீற்றர் தூரத்தில் கிழக்காக இந்த வைத்தியசாலை அமைந்திருந்தது! வடமராட்சி பிரதேச மக்களுக்கு மட்டுமல்லாது, தென்மராட்சியில் இருந்தும் வருகின்ற மக்களுக்குத் தனது வைத்திய சேவையை வழங்கி வருகின்றது. இந்த வைத்தியசாலை ஒன்று தான், சுமார் 10 கிலோ மீற்றர் சுற்றாடலில் வசிக்கும் மக்களுக்காக உள்ள ஒரே ஒரு ஆதார வைத்தியசாலையாக இருந்தும், முழுமையான வசதிகளை அரசு ஏற்படுத்திக் கொடுக்கவில்லை.

போதிய சிறப்புத் தேர்ச்சி பெற்ற வைத்திய நிபுணர்கள் இல்லை.!

தாதிகள் பற்றாக்குறை, பரா மருத்துவ சேவையாளர்களின் பற்றாக்குறை! உரிய மருந்துகள் கூட இல்லை.!

இந்த நிலையில்', இருக்கின்ற வசதிகளைக் கொண்டு இங்கு சேவையாற்றுகின்ற வைத்தியர்களும், அலுவலர்களும், ஏனைய மருத்துவ உத்தியோகத்தர்களும் தமது அர்ப்பணிப்பு மிக்க சேவைகளை ஆற்றி வருகின்றனர்.

மந்திகை வைத்திய சாலையினுள் சென்று அங்கே நுழைவாசலில் இருந்த ஊழியர் மூலம் தகவல்களைப் பெற்றுக் கொண்டு அவர் குறிப்பிட்டது போல்,

2ஆம் வாட்டை நோக்கி நடந்தோம். அந்த வாட்டில் தான், வல்வெட்டித்துறையில் குண்டு வீச்சினால் பாதிக்கப்பட்ட பல பெண்களும், சிறுமிகளும், வயோதிபர்களும் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டிருந்தனர்.

அந்த வாட்டின் நுழைவாசலில் 2 ஆம் இலக்கமிட்ட கட்டிலில், வனஜா சிவநேசன் என்ற ஆசிரியை நினைவிழந்த நிலையில் படுத்திருந்தார். வனஜா வல்வெட்டித்துறை சிவகுரு வித்தியாசாலையில் கணித ஆசிரியையாகக் கடமையாற்றுகின்றார். அவரது உருக்குலைந்து போன கோலத்தைக் கண்டதும் நான் அதிர்ந்து போய் விட்டேன்.. வலது கண்ணைச் சுற்றி பன்டேஜினால் பலமான கட்டுப் போடப்பட்டிருந்தது. வயிற்றுப் பகுதியில் தடித்த பன்டேஜினால் மூடிக்கட்டப் பட்டிருந்தது. அவரது இடது கால் முறிந்த நிலையில், கட்டுந்துணியினால் இறுக்கமாகக் கட்டப்பட்டு, தூக்கிக் கட்டிவிடப்பட்டிருந்தது. வனஜாவின் முன்பல் ஒன்று உடைந்து, உதடுகள் பொருமித் தடித்து, பார்க்கவே விகாரமான ஒரு தோற்றத்தைக் கொடுத்துக் கொண்டிருந்தது. அவரது உடல் முழுவதும் சிறுசிறு செல் துண்டுகள் குத்திக் கொண்டிருந்ததைப் பார்க்கும் பொழுது சந்நிதியானுக்கு முள்ளுக் காவடி எடுப்பவர்கள் உடல் முழுவதும், முட்களைக் குத்த நேர்த்திக் கடன்களை எடுப்பவர்களின் உடலைப் போல் அவரது உடலில் செல்துண்டுகள் நீட்டிக் கொண்டீருந்தன.

நாங்கள் சிறிது நேரம் அவரையே பார்த்துக் கொண்டு நிற்க, அப்பொழுது தான் மெதுவாகக் கண்விழித்த வனஜா ரீச்சர்,தன்னைச் சுற்றிவர நின்ற ஒவ்வொருவரையும், மாறி மாறிப் பார்த்து மிரண்டு கொண்டிருந்தார்.

என்னைக் கண்டதும்,அவர் விம்மி விம்மி அழத் தொடங்கிவிட்டார். வனஜா சிவநேசன் ஒரு ஆசிரியையாக இருந்தாலும், வல்வெட்டித்துறை கல்வி அபிவிருத்தியில் அக்கறை கொண்டு என்னுடன் நீண்டகாலமாக உழைத்து வரும் இராஜேந்திரா மாஸ்ரரின் சகோதரி என்ற வகையிலும் எங்கள் குடும்பத்துடன் மிக நெருக்கமாகப் பழகியிருந்தார்.

"ஐயோ!. அண்ணா.! என்ரை பிள்ளைகள் எங்கை என்று தெரிந்தால் சொல்லுங்கோ... அதுகளைத் தேடி ஓடிவரத்தான், என்னுடைய வீட்டு வாசலுக்கு முன்னுக்குக் குண்டு விழுந்து சிதறியது"

என்னைக் கண்டதும்,அதுவரை அடங்கியிருந்த துயரம்,பூகம்பமாக வெடித்துச் சிதறியது.. இயலாத நிலையிலும் ஈனஸ்வரத்தில் முனகிய அந்தப் பெண்ணின், பரிதாபகரமான வாழ்க்கையும், அவள் அனுபவிதது வருகின்ற துயரமும் யாரால் உணரமுடியும்.?

ஆம்... உறவு முறை பொருந்தாத ஒருவரைத் திருமணம் செய்து, இரண்டு வழிகளாலும், ஆதரவற்று வாழ்ந்து வந்த இந்தப் பெண்ணுக்கு, இப்போது

உறவுகள் என்று கூறிக் கொள்வதற்கே இன்று வல்வெட்டித்துறையில் எவரும் இல்லை. இரண்டு வழிகளாலும் ஆதரவற்று இருந்த அந்தப் பெண்ணுக்கு அடுத்தடுத்து மூன்று பெண்குழந்தைகள்.!

தாய், தந்தை இருவரும் இல்லை. சகோதரியோ இந்தியாவில் அண்ணன்மாரோ வெளிநாடுகளில் உத்தியோகம் பார்ப்பவர்கள். கணவன் வழியால் எந்த உறவுகளுமே உதவிக்கு இல்லை. இந்த நிலையில், அவரது கணவர் சிவநேசனும், அவரைக் கைவிட்டு இந்தியாவுக்குச் சென்றுவிட்டார்.

அனாதையாக்கப்பட்ட நிலையில், எவருமே கவனிப்பாரற்று, தனது வீட்டில், தனியாக இருந்து, மூன்று பெண்பிள்ளைகளையும் பார்த்து அவர்களைப் பாடசாலைக்கு அனுப்பிவிட்டுப் பின்னர் தானும் பாடசாலைக்குப் போய்வந்த வனஜா ரீச்சருக்கு இந்தக் கதி நேர்ந்து விட்டது ஒரு துர்ப்பாக்கியமான சம்பவம்தான்..!

வனஜா அனுமதிக்கப்பட்டிருந்த வாட்டினுள் செல்லும் பொழுது, அவரது தந்தை வழி உறவினரான வித்தியாசாகரம் மாஸ்ரரும், அவருடைய மனைவியும் கூட இருந்து வனஜாவுக்குத் தேவையான எல்லா உதவிகளையும் செய்து கொடுத்துக் கொண்டிருந்தனர். நான் பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயத்தில் அதிபராக இருந்த காலத்தில் அப்பொழுது, வித்தியாசாகரம் மாஸ்ரர் பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமையாற்றிக் கொண்டிருந்ததால், அன்று தொடக்கம், அவருடன் தொடர்புகள் இருந்தபடியால், என்னைக் கண்டதும் தலையை ஆட்டி வரவேற்றார்.

> "மாஸ்ரர்... எப்படியென்றாலும், வனஜாவின்ரை கணவன் சிவநேசனை இந்தியாவிலை இருந்து இங்கை கூப்பிடுவியுங்கோ... அவர் இங்கை வந்தால்தான், இந்தப் பிள்ளைக்கும் ஆறுதலாக இருக்கும்... இவவின்ரை பிள்ளைகளை இன்னும் எங்கையென்றுகூடத் ரெியவில்லை.... நாங்களும் இந்த வயசான நேரத்திலை எத்தனை நாள் தான் இப்பிடித் திரியமுடியும்.? என்னாலையும், இப்ப அதிக தூரத்திற்கு நடக்க முடியவில்லை.?"

வித்தியாசாகரம் மாஸ்ரருக்கும் இப்போ வயதானபடியால், அவரால் அதிக தூரம் நடந்து திரியமுடியாது இருப்பதாகக் கூறியதால், அந்தப் பிள்ளைக்கு வேண்டிய உதவிகளைச் செய்யமுடியாது போய்விட்டதை நினைத்தோ என்னவோ, அவருடைய கண்கள் கலங்கிக் கொண்டு வந்தன.

"அட கடவுளே!.. எல்லோரையும் ஒரே மாதிரி படைத்து ஏன் சிலருக்கு மட்டும், தொடர்ந்தும் இப்படித் துன்பத்தைக் கொடுத்துக்

கொண்டிருக்கின்றாய்?" கட்டிலில் படுத்திருந்தபடியே வேதனையில் துடித்துக் கொண்டிருந்த அந்தப் பெண்ணின் நிலையைக் கண்டு எனது இதயம் குருதிக் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தது.

அவர்களிடம் இருந்து, விடைபெற்றுக் கொண்டு அதே வார்ட்டில் சற்று தூரத்தில் உள்ள கட்டிலில், உணர்விழந்து பேச்சு, மூச்சின்றி முனகிக் கொண்டிருந்த சுமார் பன்னிரண்டு வயதே நிரம்பிய சிறுமியை நோக்கி நகர்ந்தேன்.

"ஐயோ!.அம்மா!. ஒன்றும் விளங்கேல்லை. திருப்பிச் சொல்லுங்கோ... என்ரை நோட்சைத் தா! படிக்கிறதுக்குக் கனக்கக் கிடக்கு." வலது புய நாளத்தினூடாக "சேலைன்" ஏற்றப்பட்டுக் கொண்டிருந்த நிலையில், அந்தச் சிறுமி,தன்னை அறியாமலேயே வாய் புலம்பிக் கொண்டிருந்தாள். அந்தச் சிறுமியின் தலை, இடது கன்னம், காது, கண் ஆகியவற்றைச் சுற்றி பன்டேஜினால் பலமான கட்டுப் போடப்பட்டிருந்தது. வலது கண் திறந்த நிலையிலேயே இருந்தாலும், அவள் உணர்விழந்த நிலையிலேயே கடந்த நான்கு நாட்களாகக் கட்டிலில் இருந்தபடியே துடித்துக் கொண்டிருந்தாள்...

மயூரேசமூர்த்தி மயூரி என்ற பதினாறு வயதான அந்தச் சிறுமி,வல்வை மகளிர் மகாவித்தியாலயத்தில், ஒன்பதாம் வகுப்பில் படித்துக் கொண்டிருக்கின்றாள். முதலாம் நாள் போட்ட குண்டின் தாக்கத்தினால், தலையில் பலமான காயம் ஏற்பட்டு உடனடியாகப் "பெடியங்கள்" கொண்டு வந்து மந்திகை வைத்தியசாலையில் சேர்த்ததாக அங்கிருந்த தாதி ஒருவர் மூலம் அறிந்து கொண்டேன். மயூரி படுத்திருந்த கட்டிலுக்கு அருகில், அவளுடைய தந்தை மயூரேசமூர்த்தியும், தாயும் அந்தச் சிறுமி துடித்துக் கொண்டிருப்பதைப் பார்த்தபடியே அழுது கொண்டு நின்றனர். அந்தச் சிறுமியின் தந்தையை ஏற்கனவே நன்கு தெரிந்ததால்,அவருடன் சிறிது பேச்சைக் கொடுத்தேன்.

"அண்ணை... மயூரிக்கு உண்மையாகவே என்ன நடந்தது? கல்வி மன்றத்திலே இருந்து நேரத்தோடையே வீட்டுக்குப் போய்விட்டா தானே ."

"ஓம்!..மாஸ்ரர்.. கல்வி மன்றத்திற்கு என்று போனவ, குண்டு போடத் தொடங்கியதும், மற்றப் பிள்ளையளோடை இவவும் வெளியேறிக் கொஞ்சதூரம் வந்துவிட்டா. பிறகு கெலிகொப்ரரைக் கண்டவுடனை பிள்ளை திரும்பவும் ஓடிவந்து மன்றத்திற்குள்ளை இருந்த பங்கருக்குள்ளை பதுங்குவதற்கு ஓடிவரவும், தெருவிலை வரேக்கை, கெலியிலை இருந்து வந்த சூடு, மயூரியின்ரை காதுப்பக்கத்தைத் தாக்கியவுடனை அப்படியே மயங்கிப் போய்விட்டா. நல்லவேளையாக முதலுதவி செய்யிற பெடியள்,வந்து தூக்கிக் கொண்டு இங்கை மந்திகை ஆஸ்பத்திரியிலை

அனுமதித்திருக்கினம். இவதான் பாருங்கோ என்ரை மூத்த மகள். அம்மாளாச்சி இந்தப் பிள்ளையை எனக்குச் சுகமாக்கித் தரவேணும்."

அவர் இதனைச் சொல்லிக் கொண்டிருக்கும் பொழுதே, தொண்டை அடைத்துக் கொண்டு வந்ததால், அதற்கு மேல் அவரால் பேசமுடியவில்லை... அப்படியே வாயைப் பொத்தியபடி அழுது கொண்டிருந்தார்.

"அண்ணை!.. எல்லாப் பிள்ளைகளும் கல்வி மன்றத்தை விட்டு வெளியேறினாப் பிறகு தான் நாங்கள் எல்லோரும்,அந்த இடத்தை விட்டு வெளியேறினனாங்கள். இந்தப் பிள்ளை திரும்பவும் இங்காலை வரப்போய், அநியாயமாகக் காயப்பட்டுப் போச்சுது."

அந்தப் பிள்ளையின் பரிதாபகரமான தோற்றமும், அவளுடைய பெற்றோரின் துடிப்பும், என்னை ஒரு கணம் நிலைகுலைய வைத்துவிட்டது... ஒரு புறம் நினைத்துப் பார்க்கும் பொழுது, இந்தப் பிள்ளை அன்றைக்கு கல்வி மன்றத்திற்குப படிக்கவரப் போய்த்தானே காயப்பட வேண்டி வந்தது என்ற ஒரு குற்ற உணர்வும் என்னை வாட்டியது.

"இந்தப் பிள்ளையை நினைத்து நீங்கள் மனதைத் தளரவிடாதேங்கோ. ஆண்டவன் உங்கடை பிள்ளையைச் சுகமாக்கித் தருவான் என்று நம்பிக்கை வையுங்கோ. நாங்களும் கடவுளை வேண்டுகின்றம். இந்த நேரத்திலை எங்களுக்கு எப்பொழுதும் கடவுள் தான் துணையாக இருப்பார்."

"ஓம்! மாஸ்ரர்!. நாங்களும் ஒவ்வொரு நேரமும் கடவுளைத்தான் கும்பிட்டுக கொண்டிருக்கிறம். அதற்கு மேல் எங்களாலை என்ன, யாரால் கூட என்ன செய்யமுடியும்..? நீங்கள் எங்கடை ஊர்ப் பிள்ளைகளுக்குச் செய்து வருகிற கல்விச் சேவைகளைத்தான் பாருங்கோ நாங்களும் நினைத்துப் பாரக்கிறம்... வல்லைக்கல்வி மன்றத்திற்கு மேலாலை இவ்வளவு பெரிய குண்டைப் போட்டவுடனை அந்தக் மாடிக்கட்டடம் உடைந்து நொருங்கியிருந்த போதும், அதற்குள்ளை நின்ற நூற்றுக்கணக்கான பிள்ளைகளிலை, ஒரு பிள்ளைக்குக் கூட ஒரு சிறிய காயம் கூடவராமல் தப்பியிட்டுதுகள். எங்கடை கஸ்டகாலத்திற்கு எங்கடை பிள்ளை திரும்பவும் தெருவாலை வரப்போய்த்தானை இப்பிடிக் காயப்பட்டுப் போனது."

அவருடைய மகளுக்கு பாரதூரமான காயம் ஏற்பட்ட நிலையிலும் கூட, எனக்கு ஆறுதல் கூறுவது போல், மன உறுதியோடும், நிதானமாகவும், இருந்ததைப் பார்க்கும் பொழுது, எங்களுக்குப் பெருமையாக இருந்தது.

இத்தனைக்கும், நான்கு நாட்களாக அப்பாவிப் பொது மக்களை வெளியேற விடாது, வான் வியூகம் அமைத்துத் தாக்குதலை மேற்கொண்ட ஶ்ரீலங்காவின் விமானப் படையினர், பாரிய குண்டுகளை வீசித் தாக்குதல்களை மேற்கொண்ட பிரதேசங்களில் தமிழீழ விடுதலைப் புலிகளின் முகாம்களோ அல்லது, அவர்களது ஆயுதக் களஞ்சியங்களோ இல்லாததுடன், அவர்களுக்கு எதிரான வான் தாக்குதல்களோ இடம் பெறவில்லை என்பது மட்டும் உண்மையாக இருக்கும் பொழுது,

> "வல்வெட்டித்துறையில் மேற்கொள்ளப்பட்ட சிறிய அளவிலான விமானத் தாக்குதல்கள் மூலம், அங்கிருந்த புலிகளின் முகாம்கள் மட்டுமே நிர்மூலமாக்கப்பட்டன. சாதாரண பொது மக்களின் குடியிருப்புக்கள் மீதோ அல்லது, இந்து ஆலயங்கள் மீதோ எமது படையினர் தாக்குதல்கள் எதனையும் மேற்கொள்ளவில்லை..."

என்று 1991 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24 ஆம் திகதி, கொழும்பில் இடம்பெற்ற பத்திரிகையாளர் மகா நாட்டில்,அப்போது பாதுகாப்பு இணைஅமைச்சராக இருந்த, ரஞ்சன் விஜயரட்ணா அப்பட்டமான ஒரு பொய்யை ஊடகங்களுக்கு அவிழ்த்து விட்டார்.

ஆனால் ஜனவரி மாதம் 20,21,22,23 ஆம் திகதிகளில் வல்வெட்டித்துறையில் இடம் பெற்ற தொடர் குண்டுவீச்சுக்களைத் தொடர்ந்து, யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்த, சுவீடன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் பீற்றர் சால்க், (Prof. Peter Salk of Sweden University) வல்வெட்டித்துறைக்கும் வருகை தந்திருந்தார். வல்வெட்டித்துறை மீது, ஶ்ரீலங்கா அரசாங்கத்தின், வான்படைகள் நான்கு நாட்களாகத் தொடர்ச்சியாக புயல் வேகத்தில் மேற்கொள்ளப்பட்ட விமானக் குண்டு வீச்சுக்களினால், சேதமடைந்து அழிக்கப்பட்ட வல்வெட்டித்துறை நகரைப் பார்வையிட்டு, அதிர்ச்சியடைந்தார். அங்கு சேதத்திற்குள்ளான இடங்களைப் பார்வையிட்டதுடன் வல்வெட்டித்துறை பிரஜைகள் குழுவினரையும், பொது மக்களையும் சந்தித்துக் கலந்துரையாடியுமுள்ளார்.

போர் விமானங்களின் குண்டுத் தாக்குதல்கள் இடம்பெற்ற பகுதிகளில் இருந்து, சுமார் 450 மீற்றர் தூரத்தில் உள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் பயிற்சி முகாமையும் சென்று பார்வையிட்ட பேராசிரியர் பீற்றர் சால்க் அவர்களுடனும் பேசியிருக்கின்றார்.

அங்கே இருந்த விடுதலைப் புலிகளின் முகாம் மீது எவ்வித குண்டுத் தாக்குதல்களும் மேற்கொள்ளப் படவில்லை. அதற்கு அருகாமையில் உள்ள வீடுகள் கூட, எவ்வித சேதத்திற்கும் உள்ளாகவில்லை. அங்கே, அந்த முகாமில் நின்ற ஒரு போராளியிடம்,

“உங்களுடைய முகாம் மீது,விமானக் குண்டுவீச்சுத் தாக்குதல்கள் எதுவும் மேற்கொள்ளப்பட வில்லையா? என்று பீற்றர் சால்க் ஆச்சரியத்துடன் கேட்டார்.

“சீ! அவங்களாவது குண்டுகளைப் போடுறதாவது... எங்கடை முகாம் மீது அவங்கள் குண்டுகளைப் போடவுமில்லை .. எங்கடை காம்ப் இருக்குது என்றும் அவங்களுக்குத் தெரிஞ்சதாலை, இந்தப் பக்கமே வரவுமில்லை..” அவன் கேலியாகச் சிரித்துக்கொண்டே, கூறியதும், பேராசிரியருக்கும் சிரிப்பு வந்துவிட்டது.

“தன்னுடைய சொந்தப் பிரஜைகள் மீதே, இப்படி அநாகரிகமான முறையில், குண்டுகளை வீசிக் கொன்று குவித்தும், கட்டடங்களையும், சொத்துக்களையும் அழித்தும் கொடுமைப்படுத்தும் ஒரு அரசாங்கத்தை உலகின் எந்த ஒரு நாட்டிலும் பார்க்கவில்லை.....” தனது எரிச்சலையும்,கோபத்தையும் வார்த்தைகளால் கொட்டித் தீர்த்துக் கொண்ட அந்த சுவீடன் நாட்டுப் பேராசிரியரின் கண்கள் கூட ஒரு சந்தர்ப்பத்தில் கலங்கிக் கொண்டு வந்தன....!

“பௌத்த மதத்திற்கும், ஸ்ரீலங்கா அரசுக்கும் உள்ள தொடர்பு” என்ற நூலை எழுதி வெளியிட்டதன் மூலம், ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் மீது அதீத செல்வாக்கையும், அதிகாரத்தையும் செலுத்தும் அமுக்கக் குழுக்களாகச் செயற்படும், பௌத்த மத பீடாதிபதிகளின் முரட்டுத் தனமான போக்கைப்பற்றி, அவர் இந்த நூலில் விபரித்திருந்தார். அதனால் பீற்றர் சால்க் இலங்கைக்குள் வரக்கூடாது என்று இலங்கை அரசாங்கம் தடை விதித்திருந்தது.. இப்பொழுது, அவர் எப்படியோ வந்து போய்விட்டார்.

உலகின் சீரழிந்து போய்க் கொண்டிருக்கும் சமுதாயத்திற்கு நன்னெறியையும், தர்மத்தையும் போதிப்பதற்காக தனது அரசியல் அதிகாரத்தையே துறந்து துறவியாகி ஞானோதயம் பெற்ற ஒரு இந்து இளவரசனான “சித்தார்த்தன்“ என்ற கௌதம புத்தரால் தோற்றுவிக்கப்பட்ட பௌத்த மதக் கோட்பாடானது, இன்று இலங்கையில் தொடர்ந்தும் ஆட்சிக்கு வரும் பௌத்த சிங்கள அரசாங்கங்களினால் அவமதிப்புக்குள்ளாக்கப்பட்டு வருகின்றது. தர்மத்தைப் போதிக்கவேண்டிய புத்த பிக்குகள் சில அரசியல் கட்சிகளைச் சார்ந்து, வன்முறைகளிலும், பாலியல் வக்கிரத்திலும், கொள்ளைகளிலும் ஈடுபட்டு வருவதனை இன்னும் இலங்கை அரசு ஏன் புரிந்து கொள்ளவில்லை?

சிங்கள அரசியல் தலைவர்கள்,தமது அரசியல் இருப்புக்கான ஒரு துருப்புச் சீட்டாகவும் பௌத்த பிக்குகளைப் பாவிப்பது, காலப்போக்கில் பௌத்த மதக் கோட்பாடுகளின் மீது, கொண்டிருக்கும் நம்பிக்கையைச் சிதறடித்துவிடும்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் அவர்கள் இந்தியாவில் இருந்து வெளிவரும் பிரபல ஆங்கிலச் சஞ்சிகையான "சன்டே" (SunDay) என்ற சஞ்சிகையின் அலுவலக நிருபருக்கு வழங்கிய பேட்டியொன்றில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்.

"ஸ்ரீலங்கா ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா உண்மையான ஒரு பௌத்தராக இருந்திருந்தால், நான் ஆயுதம் ஏந்த வேண்டிய சூழ்நிலையே ஏற்பட்டிருக்காது." அந்தத் தீர்க்கதரிசனமுள்ள ஒரு தலைவனின் கூற்றுக்கள், எந்தளவுக்கு நிதர்சனமாகிக் கொண்டு வருகின்றது என்பதை இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஒவ்வொரு சம்பவங்களும், காலக்கண்ணாடி.!

பௌத்த தர்மத்தைப் பற்றி, உலகளாவிய ரீதியில் பல கோடிக்கணக்கான ரூபாக்களைச் செலவழித்து, பிரசாரம் செய்து வரும் ஸ்ரீலங்கா அரசு, இங்கே எமது மண்ணில், காலங்காலமாக மத கலாசாரத்திலும், ஒழுக்கநெறிகளிலும் நம்பிக்கை வைத்துள்ள மற்றைய மதங்களைப் பின்பற்றும் மக்களைக் கொன்று குவித்து வருகின்றது..!

பல நூற்றுக் கணக்கான இந்துக் கோயில்களையும், கிறிஸ்தவ தேவாலயங்களையும், முஸ்லிம் பள்ளி வாசல்களையும் எரித்தும், இடித்தும், குண்டுகளை வீசியும் நிர்மூலமாக்கிக் கொண்டிருக்கின்றது.. இதில் புத்த பிக்குகளும் சம்பந்தப்பட்டிருப்பதைப் பார்க்கும் பொழுது, புனிதமான பௌத்த மதம் இலங்கையில் களங்கப்படுத்தப்பட்டு வருகின்றது என்பதை உலகமே கூறும் பொழுது, இலங்கையர் என்று சொல்வதற்கே வெட்கப்பட வேண்டும். ஏனைய மத நிறுவனங்கள் தாக்கப்பட்டு வருவது போல், நாட்டில் எங்காவது ஒரு மூலையில் "பன்சல" என்று அவர்களால் அழைக்கப்படுகின்ற பௌத்த கோயில்கள் தாக்கப்பட்டிருக் கின்றனவா?

ஆனால்... பௌத்த மதத்தின் பெயரால், ஒரு சிறுபான்மை இனம் அடக்கி ஒடுக்கப்படும் பொழுது, நாளை என்றோ ஒருநாள், அத்தகைய அரசுகள் அதே இன மக்களாலேயே நிர்மூலமாக்கப்பட்டு விடும் என்பது வரலாறு காட்டும் உண்மைகளாகும்.அப்பொழுது, ஒடுக்கப்படும் இனம், தன் இழந்த தாயகத்தை மீட்டு தனக்கென ஒரு தனி அரசை அமைத்துக் கொள்ளவேண்டுமென்று கோருவதையும், எந்த சக்தியாலும் தடுத்து நிறுத்தமுடியாது போய்விடும்....

# 20. ஸ்ரீலங்கா விமானப்படைகளினால் ஏற்படுத்தப்பட்ட இழப்புக்களின் விபரங்கள்

1991 ஜனவரி 20 ஆம் திகதி தொடக்கம் 24 ஆம் திகதி வரை ஸ்ரீலங்கா அரச படைகளின் தொடர் குண்டுத் தாக்கதலில் கொல்லப்பட்டவர்கள்

01. தி.நவரத்தினம் (வயது 32) தச்சுவேலை
02. தவராசா (வயது 46), ஆதிகோயிலடி
03. சிங்காரம் தில்லையம்பலம் (வயது 60) வாடி ஒழுங்கை
04. இராஜேந்திரம் அன்பழகன் (வயது 40), ஆதிகோயிலடி
05. திருமதி.தங்கவேலாயுதம் நவரத்தினம் (வயது 65), ஆதிகோயிலடி,
06. செல்வி.சிவனேந்திரம் அன்புக்கரசி (வயது 8) ஆதிகோயிலடி
07. பா.கஜனி (2மாதக் குழந்தை -தாய் ரமணி) வாடி ஒழுங்கை
08. எஸ்.கந்தசாமி (வயது70) இளைப்பாறிய தபால்அதிபர்,நெடியகாடு,
09. திருமேனிப்பிள்ளை காஞ்சனாதேவி (வயது 24)அம்மன் கோயிலடி,
10. தண்டாயுதபாணி மகேஸ் (வயது26), வேம்படி, வல்வெட்டித்துறை

குண்டு வீச்சினால் படு காயமடைந்தோர் விபரம் :

01. செல்வி.மயூரேசமூர்த்தி கௌரி (வயது 16) மாணவி
02. திருமதி.வனஜாசிவனேசன் (வயது31) ஆசிரியை, அம்மன் கோயிலடி,
03. பொன்னுச்சாமி பாலசுப்பிரமணியம் (வயது 69), இளைப்பாறிய சித்திர ஆசிரியர்,
04. ச.ஞானவேல் (வயது 51) நிர்வாக அதிகாரி, நெல்லியடி அபிவிருத்திச் சபை அலுவலகம், காங்கேசன்துறை வீதி
05. சுப்பிரமணியராசா சண்முகராஜா (வயது 48) ஊரிக்காடு
06. திருமதி.மகோற்கடமூர்த்தி பரமேஸ்வரி (வயது 54), தெணியம்பை,
07. நடனசிகாமணி புவனேஸ்வரராஜா (நாகேஸ் வயது 26), தெணியம்பை
08. உத்தமசீலன் செல்வகுமார் (வயது 23), ஊறணி
09. திருமதி.தங்கராணி ஜெயராணி (வயது 28), ஆதிகோயிலடி
10. திருமதி.கந்தசாமி இராஜேஸ்வரி (வயது 48), கொத்தியால்,
11. கந்தசாமி சிவசுப்பிரமணியம் (வயது 26), ஆதிகோயிலடி,

## பாதிக்கப்பட்ட அதிபர், ஆசிரியர்கள்

01. பா.குமார ஸ்ரீதரன், ஆசிரியர்

02 சு.சக்திவடிவேல், ஆசிரியர்

03. திருமதி.வனஜா சிவனேசன், ஆசிரியை

04. செ.யோகச்சந்திரன், அதிபர்

## வணக்கத் தலங்கள் :

01. வல்வை வைத்தீஸ்வரர் கோயில்

02. வல்வை முத்துமாரியம்மன் கோயில்

03. ஆதி வைரவர் கோயில்

04. புட்கரணிப் பிள்ளையார் கோயில்

05. கப்பலுடையவர் கோயில்

06. வயலூர் முருகன் கோயில்

07. புனித செபஸ்தியார் தேவாலயம்

## கல்விக் கூடங்கள் :

01. வல்வை சிவகுரு வித்தியாலயம்

02. வல்வை மகளிர் மகாவித்தியாலயம்

03. வல்வை சிதம்பரக் கல்லூரி

04. வல்வெட்டித்துறை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை

05. வல்வெட்டித்துறை அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலை

06. வல்வைக்கல்வி மன்றம்

## அரச அலுவலகக் கட்டிடங்கள்:

01. வல்வை நகராட்சி மன்றக் கட்டடம்

02. வல்வெட்டித்துறை பொது நூலகம்

03. அஞ்சல் அலுவலகம்

04. வல்வெட்டித்துறை தெற்கு கிராம சேவகர் அலுவலகம், வீட்டுடன்

## உசாத்துணைகள் :

01. Re opening of Northern Port – Muthukumarasamy-P (1958)
02. வல்வைப் படுகொலைகள் அனந்தராஜ்.ந. (1989)
03. The SunDay Times (1991)
04. வல்வெட்டித்துறையின் கடலோடிப் பாரம்பரியம் - தேவகி சுரேஸ்குமார் (2003)

## இந் நூலாசிரியரின் ஏனைய நூல்கள்:

வல்வைக் கப்பலின் அமெரிக்கப் பயணம்- 1974 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற 4 வது உலகத் தமிழாராயச்சி மகாநாட்டில் வெளிநாட்டு பிரதிநிதிகளுக்கு வழங்கப்பட்ட வல்வை சனசமுக சேவா நிலைய வெளியீடு

வல்வைப் படுகொலைகள் -(தமிழில்) -1989
**India's Mylai – Valvettiturai Massacre** (ஆங்கிலத்தில்) -1989
அறிவியல் உண்மைகள் (மூன்று பதிப்புக்கள்) -1993,2003,2014
உதிரம் உறைந்த மண் விவரணச் சித்திரம்) -1997
பொது விவேகம் (கல்வி அமைச்சு வெளியீடு)-1998
முகாமைத்துவ நுட்பங்கள்(4 பதிப்புக்கள்) சாகித்திய விருது பெற்ற நூல்-1998
வடபுல நாட்டார் வழக்கு (இரண்டு பதிப்புக்கள்) -2002
பாதசரம் - சிறுகதைத் தொகுதி-சர்வதேச ரீதியாகவும் உள்நாட்டிலும் பரிசு பெற்ற சிறுகதைகள் - 2002
சந்நிதிச் செல்வம் -2002 (விருது பெற்ற நூல்)
ஈழத்து இலக்கியத்தில் அறிவியல் நூல்கள்(ஆய்வு நூல்)-2003
நீரலைகள் (குறு நாவல்) -2003
தேசியத்தை நோக்கிய கல்வி – 2005
கூழ் நியாயங்கள் (பாரிஸ்ரர் கூழின் கதை)-2005
பாடசாலை முகாமைத்துவம் -(குமரன் வெளியீடு)- 2006
நூலக அபிவிருத்தி முகாமைத்துவம் - 2014
சமர் கண்ட முல்லைத்தீவு -2015
வல்வையின் முதுசொம் -2015 (அச்சில்)

சங்க காலத்தில் இருந்து வாழ்ந்த அரசர்களினதும், சாதாரண பாமர மக்களினதும் வாழ்க்கை முறைகள் எவ்வாறு இருந்தன, அவர்களிடையே இருந்துவந்த, காதல் உணர்வுகளையும் வீரத்தின் வெளிப்பாட்டையும் இன்று எத்தனையோ ஆண்டுகளின் பின்னர், நாம் அறிந்து கொள்ளவும், எமது இனத்தின் வரலாறைத் தெரிந்து கொள்ளவும், அக்காலத்தில் வாழ்ந்த புலவர்களும் எழுத்தாளர்களும் அன்றைய வாழ்க்கை முறையை ஆவணப்படுத்தியமையினால், இன்றைய சந்ததியினரால், அவற்றை அறிந்து எமது பண்டைய இலக்கியப் பாரம்பரியத்தைத் தெரிந்து கொள்ள முடிகின்றது. அந்த வகையில் தமிழர் தாயகத்தில் கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக இலங்கை, இந்திய இராணுவத்தினரால், ஏற்படுத்தப்பட்ட கொடூர நிகழ்வுகளில் பல நெஞ்சை அதிரவைக்கும் நிகழ்வுகளாக இருந்து, அவற்றை நேரில் கண்டு பதைபதைத்த எமது மனங்களில் இன்றும் மாறாத வடுக்களாக இருக்கின்றன. அவற்றுள் ஒன்றான, 1991 ஆம் ஆண்டு எமது மண்ணில் இடம் பெற்ற துன்பமான வரலாறுகள் தான் வீரம் விளைவதற்கான ஒரு பாதையையும் வகுத்துக் கொடுத்தது. வல்வெட்டித்துறையில், ஸ்ரீலங்கா அரச படைகளினால் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகளைச் சித்தரிக்கும், வகையில் எழுதப்பட்ட “வல்வைப்புயல்” என்ற இந்த நூலின் மூலம், நிலைத்து நின்று, எதிர்காலத்தில் தமிழர்களின் வரலாறுகளை ஆவணப்படுத்த விரும்பும், படைப்பாளிகளுக்கும், தமிழர் வரலாற்றை அறிய விரும்புவோருக்குமான ஒரு வழிகாட்டி நூலாகத் திகழ வேண்டும்.

- வல்வை ஆனந்தன்

வெளியீடு

eகுருவி

ekuruvi.com